# 2025

# வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பித்தல்









## 2024/2025

## முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்திட்டங்கள்

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය.**

**பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும்**
**உள்ளூராட்சி அமைச்சு.**

**Ministry of Public Administration, Provincial Councils & Local Government**

| | රාජ්‍ය පරිපාලන අංශය | ස්වදේශ කටයුතු අංශය | පළාත් සභා සහ<br>පළාත් පාලන අංශය |
|---|---|---|---|
| | නිදහස් චතුරස්‍රය,<br>කොළඹ 07,<br>ශ්‍රී ලංකාව<br><br>சுதந்திர சதுக்கம்,<br>கொழும்பு 07,<br>இலங்கை<br><br>Independence Aqure,<br>Colombo 07,<br>Sri Lanka | “නිල මැදුර” ඇල්විටිගල මාවත<br>නාරාහේන්පිට<br>කොළඹ 05,<br>ශ්‍රී ලංකාව<br><br>"நில மெதுர",<br>எல்விடிகல மாவத்தை,<br>நாரஹென்பிட,<br>கொழும் 05,<br>இலங்கை<br><br>“Nila Madura”<br>Elvitigala Mawatha,<br>Narahenpita<br>Colombo 05, Sri Lanka | අංක 330<br>ආචාර්ය කොල්වින් ආර්.ද<br>සිල්වා මාවත<br>(යුනියන් පෙදෙස )<br>කොළඹ 02<br>ශ්‍රී ලංකාව<br><br>இல. 330,<br>டாக்டர். கொல்வின் ஆர்.டி.<br>சில்வா மாவத்தை (யூனியன்<br>பிளேஸ்),<br>கொழும்பு - 02, இலங்கை<br><br>No. 330,<br>Dr. Colvin R.de.Silva<br>Mawatha<br>( Union Place)<br>Colombo – 02<br>Sri Lanka |
| | 011- 2 696 211/13<br>011- 2 166 000 | 011-2 050 450 | 011-2 305326/327<br>011- 2 303 280 |
| | 011-2 695 279 | 011- 2 551 071 | 011- 2 699 720 |
| | information@pubad.gov.lk | info@moha.gov.lk | info@pclg.gov.lk |
| | www.pubad.gov.lk | www.moha.gov.lk | www.mpclg.gov.lk |

# வருடாந்த முன்னேற்ற அறிக்கைக்கு கௌரவ அமைச்சர் வழங்கிய ஆசிச் செய்தி



2024 ஆம் ஆண்டு இந்நாட்டின் அரசியலிலும் பொருளாதார மற்றும் சமூகப் பின்னணியிலும் தெளிவான மாற்றங்கள் நிகழ்ந்த ஓர் ஆண்டாகும். அதில் அரச சேவை முக்கிய பங்களிப்புச் செய்துள்ளது. அவர்களுடன் இணைந்து கடந்த வருடத்தில் பரந்த பொருளாதார மற்றும் சமூக அடைவை உருவாக்குவதற்காக பொது நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு ஆற்றிய பங்களிப்பு விசேடமானதாகும்.

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால், 2024 ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களின் பொறுப்புக்களையும் கடமைகளையும் சிறப்பாகப் புரிந்துகொண்டு முறையான பொறிமுறையொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான அடித்தளத்தை இட முடிந்துள்ளது. புதிய தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை உருவாக்குவதற்காக, நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய விதத்தில் பொது மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. அதன் மூலம் கட்டியெழுப்பப்படவுள்ள திட்டங்கள், அரச சேவை தொடர்பில் மக்களிடம் காணப்படும் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவியாக அமையும் என்பது நம்பிக்கையாகும்.

ஒரு அமைச்சு என்ற வகையில் சிறப்பான முன்னேற்றத்தை அடைவதற்காக உள்நாட்டலுவல்கள் பிரிவும் உள்ளூராட்சிப் பிரிவும் ஆற்றிய சேவைகள் போற்றத்தக்கவையாகும். அவை உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்க சேவையையும் ஒழுங்குபடுத்துவது புதிய அரசாங்கத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். "வினைத்திறனமிக்க அரச சேவை - திறன்களை மையமாகக் கொண்ட தொழில்வாண்மை" என்ற தொனிப்பொருளின் கீழ் அரசின் கொள்கைகளுக்கு இணங்கிய முறையில் அரச சேவையைப் பலப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது, பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உள்ளிட்ட ஒட்டுமொத்த அரச பொறி முறையினதும் கடமையாகும் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். குறிப்பாக, அரச பொறிமுறையை டிஜிட்டல்மயப்படுத்தி இருதடவைச் செயற்பாடுகளும் தாமதமும் இன்றி பொது மக்களுக்குச் சேவைகளை வழங்குவதே அமைச்சின் குறிக்கோளாகும். அதற்காக ஏற்கனவே அரச துறை மனித வள முகாமைக்கான தகவல் தொழில்நுட்ப முறையொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. அதன் மூலம் அரச சேவைக்கான கொள்கைக்கு இணங்க சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றை திருத்துவதன் மூலம் சக்திவாய்ந்த அரச சேவையொன்றை உருவாக்க முடியும்.

இந்த ஒட்டுமொத்த அரச சேவைச் செயன்முறையில் நாட்டின் பொது மக்களே சேவை பெறுநர்களாக அல்லது பயனாளிகளாக உள்ளனர். அதன் போது அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுவதற்குப் பங்களிப்புச் செய்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் திரு. பிரபா ருவன் செனரத் அவர்களுக்கும் ஒட்டுமொத்த அரச சேவைக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மலர்ந்துள்ள 2025 ஆம் ஆண்டில் அரசின் கொள்கைகளுக்கு இணக்கமான முறையில் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் ஒரு செலவந்த நாட்டை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். அது உங்களுக்கும், எனக்கும், எங்கள் அனைவருக்கும் ஒரு அழகான வாழ்க்கை உதயமாவதற்குக் காரணமாக அமையும்.

**ஏ.எச்.எம்.எச்.அபயரத்ன**
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி**



இலங்கை மக்களின் வாழ்வாதாரத்திற்காக உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் பொதுமக்களுக்கு பரந்த அளவிலான குறிப்பிடத்தக்க பல சேவைகள் வழங்கப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்கள் பொதுமக்களுக்கு பரந்த அளவிலான சேவைகளை வழங்குவதோடு, வருமானம் மற்றும் சொத்துக்களை உருவாக்குவதன் மூலம் பொதுமக்கள் சேவைகளை கொண்டுநடாத்துவதற்கு பாடுபடுகின்றன. அந்த நிறுவனங்களின் வருமான வழிகளை மேலும் நெறிப்படுத்தி விரிவுபடுத்துவதற்கும் பொது உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிப்பதற்கும் பொதுப் பயன்பாட்டு சேவைகளை வழங்குவதற்கும் நவீன தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து, திறன்களை விருத்தி செய்து மக்களுக்கு நெருக்கமான மற்றும் வெளிப்படையான சேவைகளை வழங்கும் நிறுவனங்களாகச் செயற்படுவதற்குத் தேவையான வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் பேணிவர வேண்டியது எமது பொறுப்பாகும்.

"சுத்தமான இலங்கை" (ஊடநயெ ளுசை டுயமெய) கருத்திட்டத்தை நனவாக்குவதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பாரிய பங்கு உண்டு. அதற்கமைய, டிஜிட்டல் மயமாக்கலுக்கான வாய்ப்புகளை உருவாக்கி வருமான உழைப்பு மற்றும் சேவை வழங்கலை வெளிப்படைத்தன்மையுடனும் வினைத்திறனுடனும் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நல்வாழ்வை உறுதி செய்யும் வகையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் தங்கள் பணிகளைச் செய்வதை உறுதி செய்வதே எமது நோக்கமாகும். உள்ளூராட்சி மன்றங்களின் கழிவு முகாமைத்துவம், கிராமிய வீதிகள், சமூக நீர் வழங்கல் மற்றும் ஏனைய உள்ளூராட்சி சேவைகள் தொடர்பான உட்கட்டமைப்பை நிலையான முறையில் பராமரிக்கும் மற்றும் மக்களுக்கு நெருங்கிய அவர்களின் பங்கேற்புடன் எதிர்கால அபிவிருத்திகள் பற்றிய தீர்மானங்களை எடுக்கும் ஒரு சகாப்தத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் நுழைந்துள்ளன.

அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களும் தற்போது மக்கள் பிரதிநிதிகள் இன்றி இயங்கிய போதிலும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து உத்தியோகத்தர்களும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களைத் தொடர்ந்தும் நிறைவேற்றுவதற்கு வழங்கிவரும் அயராத ஒத்துழைப்பை பாராட்டுகின்றேன். அவ்வாறே எமது அமைச்சின் அனைத்து நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக முன்னெடுப்பதன் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அமைச்சின் செயலாளர் தலைமையிலான மொத்த ஆளணியும் எனக்கும், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்கும் வழங்கிய ஒத்துழைப்பை மெச்சுகின்றேன்.

**ருவன் செனரத்**

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர**

# பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி



பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படும் இச்சந்தர்ப்பத்தில், எமது நாடு பொருளாதார ரீதியில் மிகவும் சவால்மிக்க ஒரு காலப் பகுதியில் உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு, ஊழலை ஒழித்து, தேவையற்ற செலவுகளை மட்டுப்படுத்தி, கடுமையான நிதிசார் ஒழுக்கத்துடன் அரச செலவுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சூழலில், இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் பொறுப்புக்களையும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்திற்கும் அரசாங்கத்தினால் காலத்துக் காலம் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கும் இணங்க முன்னுரிமைப்படுத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். கடந்த ஆண்டின் பின் அரைப் பகுதியில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தமையினால் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை உருவாகி எதிர்காலத்திற்கான நேர்மறையான பாதையொன்று உருவாகியுள்ளது. மேலும், ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் மக்களும் அரச ஊழியர்களும்

பிரசைகள் என்ற வகையில் அரசாங்க நிர்வாகத்தின் மூலம் எதிர்பார்த்த மாற்றம் தொடர்பான அபிலாஷைகளை சிறப்பாகப் புரிந்துகொண்டு நடவடிக்கை எடுப்பது முக்கியமானது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்த நிதியாண்டுக்காக பொதுத் திறைசேரியால் இந்த அமைச்சுக்கு வழங்கப்படும் நிதிகள் கடுமையான நிதிசார் ஒழுக்கத்துடன் பயனுறுதிவாயந்த முறையிலும் வினைத்திறன்மிக்க முறையிலும் இந்த அமைச்சின் பணிகளுக்காகவும் கடமைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மனித வள அபிவிருத்தித் திட்டமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை, அரசகரும மொழிக் கொள்கையொன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்தமை, அமைச்சின் செயற்பாடுகளை டிஜிட்டல்மயப்படுத்துவதற்குத் திட்டமிட்டமை, அரச அலுவலகங்களுக்கு அத்தியவசியமாகத் தேவைப்பட்ட நாடளாவிய மற்றும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தமை, உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுகளுக்கான நேர்முகப் பரீட்சைகளை நடாத்தியமை, தொலைக் கல்வி நிலையத்தின் ஊடாக ஒரு புதிய போக்கில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குத் தேவையான பயிற்சி நெறிகளைப் பயில்வதற்கான புதிய திட்டமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை, அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை வழங்குதல் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளை வெளியிடுதல் மூலம் அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தமை, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரசைகளுக்கான ஓய்வூதியங்களை தொடர்ச்சியாகச் செலுத்தியமை, அவர்களின் நலனோம்பல் தொடர்பில் நடவடிக்கை எடுத்தமை, மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக பொது மக்களின் நலனோம்பலுடன் தொடர்புடைய செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தமை என்பன 2024 ஆம் ஆண்டில் அமைச்சினால் செய்யப்பட்ட செயற்பாடுகளில் சிலவாகும்.

பொது நிருவாக அமைச்சின் மேலே குறிப்பிட்ட பணிகளைச் சிறப்பாகவும் பயனுறுதிவாயந்த முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கியமைக்காகவும் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ ஏ.எச்.எம்.எச்.அபயரத்ன அவர்களுக்கும் எங்களுக்குச் சரியான வழிகாட்டல்களை வழங்குகின்ற மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் கௌரவ பி. ருவன் செனரத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் அமைச்சின் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மேலதிக செயலாளர்கள், பணிப்பாளர் நாயகங்கள், சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், பிரதான நிதி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த ஊழியர் குழாத்திற்கும் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற திணைக்களங்களினதும், கூட்டுத்தாபனங்களினதும் நியதிச் சட்ட நிறுவனங்களினதும் பிரதானிகளுக்கும் அவற்றின் ஊழியர் குழாத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அமைச்சின் பணிகளை எதிர்காலத்திலும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு ஒட்டுமொத்த ஊழியர் குழாத்தினதும் ஒத்துழைப்பையும் அர்ப்பணிப்பையும் எதிர்பார்த்தவனாக எனது ஆசிச் செய்தியை வழங்கிறேன்.

**எஸ்.ஆலோகபண்டார**
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# பொது நிர்வாகப்பிரிவு

## உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 01 - 02 |
| 2. விடயப் பரப்பு அபிவிருத்தி வள மனித - | 03 - 16 |
| 3. விடயப் பரப்பு கொள்கை - | 16 17 |
| 4. விடயப் பரப்பு வழங்குதல் வாய்ப்புக்களை வசதி - | 18 - 19 |
| 5. விடயப் பரப்பு சேவைகள் ஆதரவுச் - | 20 - 30 |
| 6. விடயப் பரப்பு ஓய்வூதியம் - | 30 - 31 |
| 7. ஓய்வூதியத் திணைக்களம் | 32 - 39 |
| 8. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 39 - 43 |
| 9. மனித வள விருத்திக்கான இலங்கையின் தேசிய சபை | 43 - 45 |
| 10. தொலைக் கல்வி நிலையம் | 46 - 47 |


## படக் குறிப்பு விவரத்திரட்டு


| | | |
|---|---|---|
| படக் குறிப்பு 1.1 | - பொது நிருவாகப் பிரிவினால் கவனம் குவிக்கப்பட்ட முக்கிய துறைகள் | 02 |
| படக் குறிப்பு 2.1 | - நாடளாவிய சேவைகளில் ஆண் பெண் உத்தியோகத்தர்களின் பிரதிநிதித்துவம் | 06 |
| படக் குறிப்பு 2.2 | - அமைச்சின் கீழ் நிரவகிக்கப்படும் நாடளாவிய சேவைகளின் ஒட்டுமொத்த பெண் மற்றும் ஆண் உத்தியோகத்தர்களின் பரம்பல் | 06 |
| படக் குறிப்பு 5.1 | - நீர் இணையத்தள மற்றும் தொலைபேசி ,மின்சாரம் , திகதி ஆந் 2024.11.30 வழங்குவதற்காக வசதிகளை செலவுக ஏற்கப்பட்ட அமைச்சினால் வரைள் | 21 |
| படக் குறிப்பு 5.2 | - 2024.12.3 கட்டிடப் அமைச்சின் வரை திகதி ஆந் 1 ஏற்கப்பட்ட பாதுகாப்புக்காக மற்றும் பராமரிப்பு செலவுகள் | 21 |
| படக் குறிப்பு 5.3 | - மூலதன செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடும் , செலவுகளும் உண்மையான திகதிக்கு ஆந் 2024.12.31 | 22 |
| படக் குறிப்பு 5.4 | - மீண்டுவரும் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடும் , திகதிக்கு ஆந் 2024.12.31உண்மையான செலவுகளும் | 22 |
| படக் குறிப்பு 6.1 | - ஒழுக்காற்றுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோப்புக்கள் | 31 |
| படக் குறிப்பு 7.1 | - முனைப்பாக்கம் செய்யப்பட்டுள்ள புதிய ஓய்வூதியர்களின் எண்ணிக்கை (திசெம்பர் - ஜனவரி ) | 36 |
| படக் குறிப்பு 7.2 | - பங்களிப்புத் தொகை மீள செலுத்துதல் - ஜனவரி ) (திசெம்பர் | 37 |

## அட்டவணை விவரத்திரட்டு


| | | | |
|---|---|---|---|
| அட்டவணை 2.1 | - | இணைந்த மற்றும் நாடளாவிய சேவைகளில் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் | 03 |
| அட்டவணை 2.2 | - | நாடளாவிய சேவைகளின் தாபன நடவடிக்கைகள் | 04 |
| அட்டவணை 2.3 | - | இணைந்த சேவைகளின் தாபன நடவடிக்கைகள் | 05 |
| அட்டவணை 2.4 | - | அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சித் திட்டங்கள் பற்றிய சுருக்கம் | 06 |
| அட்டவணை 2.5 | - | சேவைத் துவக்கப் பயிற்சிகளை வழங்குதல் | 06 |
| அட்டவணை 2.6 | - | நிருவாக பொது வரை திகதி ஆந் 2024.12.31 சேவையினதும் அரச ஒட்டுமொத்த படி சுற்றறிக்கையின் விடுமுறைகளைப் சம்பளமற்ற வெளிநாட்டு / உள்நாட்டு தகவல் உத்தியோகத்தர்களின் பெற்றுக்கொண்டுள்ள | 09 |
| அட்டவணை 2.7 | - | வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்தல் | 09 |
| அட்டவணை 2.8 | - | புதிய ஆட்சேர்ப்புக்கள் | 11 |
| அட்டவணை 2.9 | | தமிழ் மொழிப் பயிற்சி | 13 |
| அட்டவணை 2.10 | - | எதிர்வரும் பயிற்சி வேலைத் திட்டம் | 14 |
| அட்டவணை 2.11 | | அபிவிருத்திப் வள மனித திகதிக்கு ஆந் 2024.12.31 முன்னேற்றம் நிதியியல் பிரிவின் | 14 |
| அட்டவணை 3.1 | - | அரச சேவையில் கொள்கை ரீதியான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு குறித்த ஒட்டுமொத்த மீளாய்வு | 16 |
| அட்டவணை 5.1 | - | தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் தொடர்பான சுருக்க அறிக்கை | 21 |
| அட்டவணை 5.2 | - | பொழிப்பு மதிப்பீடுகளின் திட்ட செலவுத் வரவு 2025 | 23 |
| அட்டவணை 5.3 | - | மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு வினவல்கள் மற்றும் விசேட கணக்காய்வுகள் | 26 |
| அட்டவணை 6.1 | - | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியச் சங்கங்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரச்சினைகளுடன் கூடிய கடிதங்கள் குறித்த முன்னேற்றம் | 31 |
| அட்டவணை 6.2 | - | ஓய்வூதியப் பிரிவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் , அமைச்சரவைக் மற்றும் விஞ்ஞாபனங்கள் அமைச்சரவை குறிப்புகள் | 31 |
| அட்டவணை 7.1 | - | மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் எண்ணிக்கை ) (திசெம்பர் - ஜனவரி | 36 |
| அட்டவணை 7.2 | - | பணிக்கொடை செலுத்துகை (திசெம்பர் -ஜனவரி) | 36 |
| அட்டவணை 7.3 | - | அக்ரஹார காப்புறுதி நிதியத்திற்கு அறவிடல் - ஜனவரி) (திசெம்பர் | 36 |
| அட்டவணை 7.4 | - | ரூபா செலுத்துகை கொடுப்பனவு மாதாந்த 5000 . | 36 |

| | | | |
|---|---|---|---|
| | | (திசெம்பர் -ஜனவரி) | |
| அட்டவணை 7.5 | - | ரூபா கொடுப்பனவை முற்பணக் விசேட இனை 3000 . செலுத்துதல் | 37 |
| அட்டவணை 7.6 | - | ஓய்வூதிய மோசடிகள் மற்றும் திருத்தம் -ஜனவரி) (திசெம்பர் | 37 |
| அட்டவணை 7.7 | - | முனைப்பான சேவையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் உயிர் பிரியும் அல்லது அங்கவீனமுறும் முப்படை இராணுவம் மற்றும் பொலிஸ் சேவையின் அங்கத்தவர்களுக்கான இழப்பீட்டுத் தொகை மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல் - ஜனவரி 2024) (வரை திசெம்பர் | 37 |
| அட்டவணை 7.8 | - | அரச ஊழியர் சேமலாப நிதிய கிடைப்பனவுகள் மற்றும் செலுத்துகைகள் (திசெம்பர் - ஜனவரி ) | 37 |
| அட்டவணை 7.9 | - | அரச ஊழியர் சேமலாப நிதியத்தில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை (திசெம்பர் - ஜனவரி) | 38 |
| அட்டவணை 7.10 | - | அ மற்றும் உள்நாட்டு கீழ் இன் 2022/14 .சு.நி. பெற்றுள்ள விடுமுறைகளைப் வெளிநாட்டு அறவிடப்பட்ட இருந்து உத்தியோகத்தர்களிடம் அளவு தொகை பங்களிப்புத் தபுதாரர்கள் / விதவைகள் | 38 |
| அட்டவணை 7.11 | - | வருமானம் சேகரித்தல் (திசெம்பர் - ஜனவரி) | 38 |
| அட்டவணை7.12 | - | மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள் | 38 |
| அட்டவணை 8.1 | - | திகதி ஆந்2024.12.31 தொடக்கம் 2024.01.01 மூலம் பிரிவு பரீட்சைப் காலத்தினுள் வரையான தகவல் தொடர்பான பரீட்சைகள் நடாத்தப்பட்ட | 40 |
| அட்டவணை 8.2 | - | பயிற்சித் செயற்படுத்தப்பட்ட ஆண்டில் ஆம் 2024 திட்டங்கள் | 42 |
| அட்டவணை 8.3 | - | அரைவாசியில் முதல் ஆண்டின் ஆம் 2025 பரீட்சைகள் நடாத்தப்படவுள்ள | 42 |
| அட்டவணை 9.1 | - | நிதியியற் செயற்பாடுகள் 2024 - | 45 |
| அட்டவணை 10.1 | - | முன்னேற்றம் நிதியியல் திகதிக்கான ஆந் 31-12-2024 | 46 |
| அட்டவணை 10.2 | - | நடைமுறைப்படுத்தப்பட்ட திகதிக்கு ஆந் 2024.121.31 முன்னேற்றம் திட்டங்களின் | 46 |

# 1. அறிமுகம்

சிவில் நிர்வாகத்தின் கேந்திர நிலையமாக விளங்கி மக்களை மையப்படுத்திய அரச சேவைக்கான பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, அரச பொறிமுறையினுள் முதன்மையான பணிகள் இங்கு இடம்பெறுகின்றன. அதன்போது அரச கொள்கைகளை வகுத்தல், மனித வள முகாமைத்துவம், நிறுவனம் சார் அபிவிருத்திகளை முன்னிருத்தி செயற்பட்டு வருகின்ற பரந்த வியடப்பரப்பெல்லையைக் கொண்டுள்ள அளப்பரிய பணிகளை நிறைவேற்றுகின்ற அமைச்சாக பொது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நாடளாவிய ரீதியான சேவைகள் மற்றும் ஒட்டுமொத்த இணைந்த சேவைகளின் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றி அரச சேவையினுள் மனித வளத்தினை உயர் உற்பத்தித்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்வதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

பொதுமக்களுக்கு திருப்திகரமான அரச சேவையை வழங்குவதற்காக நியாயத் தன்மை, ஒருமைப்பாடு மற்றும் வினைத்திறனின் பால் விஷேட கவனம் செலுத்தி நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை தயாரித்தல் இவ்வமைச்சின் மீதுள்ள அடிப்படைப் பொறுப்பாகும். அதற்கிணங்க தாபன விதிக்கோவை மற்றும் அதனுடன் தொடர்புடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளை தயாரித்தல், திருத்தியமைத்தல், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அதனுடைன் தொடர்புடைய அவதானங்களை பெற்றுக் கொடுக்குமெ் செயற்பாடும் இடம்பெறுகின்றன. அரசாங்க நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் கொள்கைகளை தயாரித்தல், பொருள்கோடல் மற்றும் அதனுடன் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல் என்பன இவ்வமைச்சின் மூலம் நிறைவேற்றப்படும் இன்னுமொரு அதிவிஷேட பணியாகும். அதனூடாக மிகவும் உற்பத்திதிறன் வாய்ந்த சேவையொன்றினை பெற்றுக் கொடுக்க முடியுமான வகையில் ஒட்டுமொத்த அரச சேவையினதும் செயற்பாடுகளை கட்டியெழுப்புதல் மற்றும் நிர்வாகம் இதனூடாக இடம்பெறுகின்றது. அரச சேவையின் பணிக்குழாத்தின் திறமையை மேம்படுத்துவதற்காக அவசியப்படும் பயிற்சிகளை வழங்கும் செயற்பாடும் இந்த அமைச்சின் விசேட செயற்பாடுகளில் ஒன்றாகக் காணப்படுகிறது.

**தொலைநோக்கு**

**"தேசத்திற்கான சிறந்ததோர் அரச சேவை"**

**பணிக்கூற்று**

**"சிறந்த நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றுக்கூடாக ஆற்றல் கொண்ட மனித வளங்களுடன் உன்னத அரச சேவையினை உறுதிப்படுத்தல்"**

**நோக்கம்**

- அரசாங்க சேவையின் மனித வள முகாமையில் ஆட்சேர்ப்பு , ஊதியம் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகள் தொடர்பில் பயனுறுதி வாய்ந்த அரச கொள்கையொன்றை உருவாக்குதல்.
- பொது மக்களின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் போது தற்போது அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணங்களையும் எதிர்பார்ப்புக்களையும் ஒரு புதிய திசையை நோக்கி வழிநடாத்துதல்.
- அரசாங்க சேவையின் பயனுறுதியையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காகப் புதிய முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- பயன்தகு அமைப்பை நிறுவி பகிர்ந்து கொள்ளல் (விளைவு சார்ந்த மனப்பாங்கு, வகைகூறல், வளங்களை பகுத்தறிவுடன் பயன்படுத்தல், பக்கச்சார்பின்மை, வெளிப்படைத்தன்மை ஆகியவற்றினை உள்ளடக்கி)
- அரச துறையில் பயிற்சித் தேவைகளை கண்டறிதல் மற்றும் பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை வழங்குதல்.
- ஓய்வூதியத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஓய்வூதிய நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.
- அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளையும், முன்னுரிமைகளையும் நிறைவேற்றும் ஆற்றல் கொண்டதாக அரசாங்கத் துறையின் நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதற்கான சட்டகமொன்றினைத் தயாரித்தல்.
- சேவை வழங்கலின் பயனுறுதித் தன்மையையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காக தகவல், தொடர்பாடல்

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலும் , அதனை ஊக்குவித்தலும்.

- அரசாங்க சேவையின் பதவியணியின் தேர்ச்சி மட்டங்களை மேம்படுத்துதல்.
- மாற்றமடைந்து வரும் நிலைமைகளுக்கு ஏற்பச் செயற்படுவதற்காக முறைமைகளை இலகுபடுத்தி நடைமுறைகளை மீள உருவாக்குவதற்கான வழிகாட்டல்களை மேம்படுத்தி விருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்தலும்.

## முக்கிய நிகழ்வுகள்

- **புதிய ஆட்சேர்ப்புக்கள்**
  - 2024 ஆம் ஆண்டில் இலங்கை விஞ்ஞான சேவைக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய உத்தியோகத்தர்கள் 51 பேருக்கு 2024.08.15 ஆந் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.



**வழங்குதல்**

  - இலங்கை திட்டமிடல் சேவையின் III ஆந் தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 08 உத்தியோகத்தர்களுக்கு 2024.07.15 ஆந் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.
  - இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள 08உத்தியோகத்தர்கள் 2024.09.18 ஆந் திகதி நியமனக் கடிதங்களை வழங்கப்பட்டன.
- இலங்கை விஞ்ஞான சேவையின் உத்தியோகத்தர்களுக்கு விஞ்ஞான ஆராய்ச்சி ஆய்வறிக்கை அல்லது ஆவணமொன்றை தயாரிப்பது தொடர்பிலான இரண்டு பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அவர்களின் வெளியீடுகளை பிரசுரிப்பதற்காக இணையவழி ஜேர்னல் சஞ்சிகையை ஆரம்பித்தல்

- இலங்கை திட்டமிடல் சேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 43 உத்தியோகத்தர்களுக்கு 2024.10.14 ஆந் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதோடு அவ்வுத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




இலங்கை திட்டமிடல் சேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 43 உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப் பயிற்சி வழங்குதல்

## அமைச்சினால் கவனம் குவிக்கப்பட்ட முக்கிய துறைகள்

**படக் குறிப்பு 1.1 - பொது நிருவாகப் பிரிவினால் கவனம் குவிக்கப்பட்ட முக்கிய துறைகள்**



அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள விடயப் பரப்பின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகளை கவனத்திற் கொண்டு பிரதான விடயத் துறைகள் 04 இன் கீழ் அவை கோப்பிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக மேற்படி முக்கிய துறைகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் துணைச் சேவைகளின் கீழ் மேலும் ஆறு பிரிவுகளினால் சேவை வழங்கும் நடவடிக்கை இடம்பெறுகின்றன.

அவ்வந்த பணிகளை நிறைவேற்றுகின்ற குறித்த பிரிவுகளும் அவ்விடயத் துறைகளின் கீழ் கொண்டு வரப்பட்டு அமைச்சினால் அடையப் பெற்றுள்ள முன்னேற்றம் அதனூடாக மேற்பார்வை செய்யப்படுகின்றது.

## 2. விடயப் பரப்பு - மனித வள அபிவிருத்தி

அரச நிர்வாகப் பிரிவின் கீழ், முக்கியமாக நாடளாவிய சேவைகளுக்கான மற்றும் சகல இணைந்த சேவைகளுக்குமான புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தலைப் போன்றே மனித வளத்தை உரிய வகையில் நிர்வாகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தலின் ஊடாக பிரிவு ரீதியான செயற்திறன் குறிகாட்டிகளை அடைந்து கொள்கின்ற இலக்குகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சகல பிரிவுகளும் இவ்விடயப்பரப்பின் கீழ்க் கொள்ளப்படும்.

**அட்டவணை 2.1 - இணைந்த மற்றும் நாடளாவிய சேவைகளில் மேற்கொள்ளப்படும்**

| சேவைப் பிரிவு | வருடாந்த ஆட்சேர்ப்புக்களின் அளவு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| **நாடளாவிய சேவை** | | | | | | |
| **இலங்கை நிர்வாக சேவை** | 221 | - | 253 | 01 | - | 62 |
| **இலங்கை விஞ்ஞான சேவை** | 36 | - | 32 | - | - | 61 |
| **இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை** | - | 1 | - | 10 | - | 08 |
| **இலங்கை கணக்காளர் சேவை** | 233 | - | 133 | - | - | 20 |
| **இலங்கை திட்டமிடல் சேவை** | 106 | - | - | - | - | 50 |
| **இலங்கை பொறியியலாளர் சேவை** | 34 | 30 | 223 | 71 | - | - |
| **இணைந்த சேவை** | | | | | | |
| **முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை** | 09 | - | - | - | 932 | - |
| **மொழிபெயர்ப்பாளர் சேவை** | - | - | - | - | 95 | - |
| **நூலகர் சேவை** | 13 | - | - | - | 22 | 38 |
| **தகவல் தொழில்நுட்ப சேவை** | 503 | 211 | - | - | 31 | 97 |
| **அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை** | - | 58,227 | 10,270 | 22,940 | - | 324 |
| **அலுவலக உதவியாளர் சேவை** | 986 | 1,249 | 431 | - | 112 | 599 |
| **சாரதிச் சேவை** | 209 | 175 | 86 | - | - | 83 |
| **வருடாந்த ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கை** | **2,350** | **59,893** | **11,428** | **23,022** | **1,192** | **1,342** |

மேற்குறிப்பிட்ட சகல சேவைகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள் மனித வளத்தை மிகவும் பயனுறுதி வாய்ந்த வகையில் முகாமைத்துவம் செய்வதனை நோக்கமாகக் கொண்டு தாபன நடவடிக்கைகளின் ஒட்டுமொத்தப் பொழிப்பு நாடளாவிய மற்றும் இணைந்த சேவை மட்டத்தில் பின்வரும் வகையில் காட்ட முடியும்.

## நாடளாவிய சேவை

அமைச்சின் கீழ் நிர்வாகிக்கப்படும் நாடளாவிய சேவைகள் ஆறும் 2024.12.31 ஆந் திகதி வரை தாபன நடவடிக்கைகள் பின்வருமாறு அமையும்.

**அட்டவணை 2.2 – நாடளாவிய சேவைகளின் தாபன நடவடிக்கைகள்**

| பணிகள் | நாடளாவிய சேவைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இ.க.சே. | இ.தி.சே. | இ.பொ.சே. | இ. நி. சே. | இ. வி. சே. | இ. க. க. சே. | இ.தொ.சே. |
| **பணியாட்தொகுதியினர்** | | | | | | | இலங்கை தொழில்நுட்ப சேவைக்கான ஆட்சேர்ப்பு மற்றும் தாபன நடவடிக்கைகள் அவற்றுக்குரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படும் என்பதோடு, கொள்கைத் தீர்மானங்களை எடுத்தலும் இவ்வமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும். |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 2,065 | 1,299 | 1.527 | 3,231 | 649 | 69 | |
| உண்மையான பதவியணியினர் | 1.572 | 986 | 1,083 | 2,486 | 472 | 56 | |
| புதிய ஆட்சேர்ப்புக்கள் | 20 | 50 | - | 62 | 61 | 08 | |
| நிரந்தரப்படுத்தல் | 56 | 24 | 44 | 131 | 31 | 05 | |
| **தரமுயர்த்தல்** | | | | | | | |
| III இலிருந்து II இற்கு | 65 | 26 | 49 | 19 | 23 | 03 | |
| II இலிருந்து I இற்கு | 16 | 88* | 43 | 279 | 18 | 02 | |
| I இலிருந்து விசேட / அதிஉயர் தரத்திற்கு | 24 | 05 | 14 | 75 | 04 | - | |
| ஓய்வு பெறச் செய்தல் | 35 | 58 | 34 | 68 | 09 | 02 | |
| வருடாந்தமல்லாத இடமாற்றங்கள் | 174 | 74 | 13 | 486 | 05 | 01 | |
| வருடாந்த இடமாற்றங்கள் | 21 | 11 | - | 39** | - | - | |
| விடுவிப்புக்கள் | 22 | 04 | 04 | 81 | - | - | |
| **ஒழுக்காற்று நடவடிக்கைகள்** | | | | | | | |
| ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை | 40 | 04 | 07 | 110 | 03 | - | |
| குற்றச்சாட்டுச் சாட்டுப் பத்திரங்களை வழங்குதல் / விளக்கம் கோரல் | 17 | 05 | 06 | 20 | - | - | |
| ஒழுக்காற்றுக் கட்டளைகள் வழங்குதல் | 20 | 01 | 07 | 14 | 01 | - | |
| சேவையை விட்டு விலகிச் செல்லும் அறிவித்தல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட | 02 | - | 07 | 01 | 01 | - | |

| மேன்முறையீடுகள் |
|---|
| **** அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் படி இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களை I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தல் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.*** **அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் படி கடமை ஆற்றுவவதற்காக I ஆந் தரத்தின் பதவிகள் 88 இனை அடிப்படையாகக் கொண்டு 88 உத்தியோகத்தர்களுக்கு தற்போது தகுதியின் அடிப்படையில் முழு நேர கடமை ஆற்றுதல் என்ற அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.** <br>***2025 ஆம் ஆண்டுக்கு உரித்தாக வருடாந்த இடமாற்றம் சுழற்சி 39 இன் கீழ் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள தினங்களைத் தவிர 2025.03.02 ஆந் திகதி முதல் இடமாற்றங்கள் நடைமுறைப்படும்.* |

**அட்டவணை 2.3 – இணைந்த சேவைகளின் தாபன நடவடிக்கைகள்**

| செயற்பாடுகள் | மாழிபெயர்ப்பாளர் சேவை | நூலகர் சேவை | முகாமைத்துவ (அதிஉயர்) தரம் | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை | சாரதிச் சேவை | அலுவலக உதவியாளர் சேவை | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை 1 ஆம் வகுப்பு | 2 ஆம் வகுப்பு | 3 ஆம் வகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பணியாட்தொகுதியினர்** | | | | | | | | | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 636 | 618 | | ** | 29,785 | 9,443 | 17,218 | 130 | 524 | 2,766 |
| உண்மையான பதவியணியினர் | 295 | 136 | | 79,443 | 24,629 | 8,521 | 15,035 | 90 | 279 | 1,549 |
| புதிய ஆட்சேர்ப்புக்கள் | - | 38 | | - | - | 83 | 599 | 09 | 88 | 227 |
| நிரந்தரப்படுத்தல் | 01 | 15 | | 2,089 | 1,035 | 184 | 846 | - | 16 | 57 |
| **தரமுயர்த்தல்** | | | | | | | | | | |
| III இலிருந்து II இற்கு | - | 08 | | 12,100 | 1,589 | 259 | 428 | 01 | - | 31 |
| II இலிருந்து I இற்கு | - | 02 | | 70 | 319 | 42 | 153 | 02 | - | 39 |
| I இலிருந்து விசேட தரத்துக்கு/ அதிஉயர் தரத்திற்கு | - | - | | - | 170 | 62 | 379 | 01 | - | - |
| ஓய்வு பெறுதல் | 03 | 10 | | 55 | 518 | 158 | 237 | 06 | 02 | 13 |
| வருடாந்தமல்லாத இடமாற்றங்கள் | 15 | 05 | | 1,806 | 1,223 | 300 | 312 | - | 16 | 51 |
| வருடாந்த இடமாற்றங்கள் | 09 | 03 | | 1,621 | 3,433 | 235 | 978 | - | 21 | 176 |
| விடுவிப்புக்கள் | 07 | 01 | | 527 | 210 | 02 | 250 | 01 | 08 | 24 |
| **ஒழுக்காற்று நடவடிக்கைகள்** | | | | | | | | | | |
| ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 01 | - | 04 | 54 | 27 | 17 | 33 | - | 02 | - |
| குற்றச்சாட்டுப் பத்திரங்கள் வழங்கல் / விளக்கம் கோரல் | 01 | - | 02 | 32 | 24 | 08 | 07 | - | 02 | - |
| ஒழுக்காற்றுக் கட்டளைகள் வழங்குதல் | - | - | | 35 | 11 | 15 | 18 | - | - | - |
| சேவையை விட்டு விலகிச் செல்லும் அறிவித்தல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகள் | 01 | - | - | 51 | 21 | 10 | 33 | - | 02 | - |

** * முகாமைத்துவ சேவை திணைக்களம் அங்கீகரித்துள்ளது.*

நாடளாவிய சேவைகளுக்கு ஆட் சேர்ப்புச் செய்யும் போது பெண் /ஆண் இரு பாலாருக்கும் சமனான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, பெண் /ஆண் நிலையின் படி உத்தியோகத்தர்களின் பரம்பல் பின்வருமாறு வரைபில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**படக் குறிப்பு 2.1 - நாடளாவிய சேவைகளில் ஆண் பெண் உத்தியோகத்தர்களின் பிரதிநிதித்துவம்**




**படக் குறிப்பு 2.2 - அமைச்சின் கீழ் நிரவகிக்கப்படும் நாடளாவிய சேவைகளின் ஒட்டுமொத்த பெண் மற்றும் ஆண் உத்தியோகத்தர்களின் பரம்பல்**




**2024 ஆம் ஆண்டின் முக்கிய செயலாற்றுகைகள்**

- **அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**

மனித வள அபிவிருத்திப் பிரிவினால் அமைச்சில் உள்ள எல்லா உத்தியோகத்தர்களினதும் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை சேவை வகுதிக்கு ஏற்ப முக்கியத்துவம் வழங்கி பௌதீக முறைமையின் ஊடாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.4 - அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சித் திட்டங்கள் பற்றிய சுருக்கம்**

| சேவை வகுதி | உள்நாட்டு பயிற்சிப் பாடநெறிகள் | | வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகள் | |
|---|---|---|---|---|
| | குறுகிய கால | நீண்ட கால | குறுகிய கால | நீண்ட கால |
| முகாமைத்துவ நிலை | 11 | 06 | 11 | - |
| முகாமைத்துவமற்ற நிலை | 72 | - | - | - |

**அட்டவணை 2.5 - சேவைத் துவக்கப் பயிற்சியை**

| சேவை | சேவைத் துவக்கப் பயிற்சிகளை வழங்குதல் |
|---|---|
| **இணைந்த சேவை** | |
| **நூலகர் சேவை** | III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சியை மே மாதத்தில் வழங்கப்பட்டுள்ளது. |
| **முகாமைத் துவ நிலை சேவை உத்தியோகத்தர் சேவை** | மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அதி உயர் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு பெப்ரவரி மாதத்தில் சேவைத் துவக்கப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.<br>மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள 729 உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப் பயிற்சியை வழங்கப்பட்டுள்ளது. |
| **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை** | 2 (II) ஆந் தரத்தில் உள்ள 88 உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப் பயிற்சியை எதிர்வரும் மாதங்களினுள் நடாத்தப்படவுள்ளது. |

♦ **அமைச்சுக்கு வெளியே அமைந்த உத்தியோகத்தர்களுக்கான இயலளவு விருத்தி**

– 2024 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை 1 ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைத் தேவையில் இருந்து விடுவிப்பதற்காக நடாத்தப்பட்ட 10 நாட்களைக் கொண்ட பயிற்சிப் பாடநெறியை நடாத்துவதற்கான நிதி ஒதுக்கீட்டினைக் கோரியுள்ள மாவட்ட செயலகங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் அதன் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பதுள்ளை, கம்பஹ, திருகோணமலை, கேகாலை, குருணாகல், புத்தளம், மொனராகல, மட்டக்களப்பு, காலி (மாத்தறை), இரத்தினபுரி, அநுராதபுரம், கிளிநொச்சி, கொழும்பு, அம்பாறை, மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு தற்சமயம் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள மாவட்டங்களாகும்.

– அரச சேவையில் மனித வளம் பற்றிய அறிவை மேம்படுத்த மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் பயிற்சித் திட்டத் தொடரில் கொழும்பு, கம்பஹ, களுத்துறை, குருணாகல், புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, பதுள்ளை, மொனராகல ஆகிய மாவட்டங்களில் 05 நிகழ்ச்சித்திட்டங்களை தற்சமயம் நடாத்தியுள்ளதோடு, 1012 உத்தியோகத்தர்கள் அப்பயிற்சித் திட்டத்தில் கலந்து பயனடைந்துள்ளார்கள்.

♦ **வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை நடாத்துதல்**

அமைச்சின் திணைக்கள ரீதியான பதவிகளைக் கொண்ட ஆரம்ப நிலை மட்டம், களைஞர் சேவை வகுதியில் இயங்காநிலை புகைப்படக் களைஞர் பதவிக்கான இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

♦ **ஊழல் எதிர்ப்புப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் நேர்மைத் திறன் மிகு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

மாகாணங்கள் ஒன்பதும் மற்றும் நிரல் அமைச்சுக்களை உள்ளக்கி நாடு பூராகவும் ஊழல் எதிர்ப்பு பயிற்சியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான 10 வதிவிடப் பயிற்சித் திட்டங்களும், நேர்மைத் திறன் மிகு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கும் ஒரு நாள் பயிற்சித் திட்டங்கள் 10 உம் மனித வள அபிவிருத்திப் பிரிவின் ஒருங்கிணைப்பு உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டுள்ளது.

2025-2029 ஆம் ஆண்டுக்கான புதிய தேசிய செயற்திட்டமொன்றினைத் வகுப்பதற்காக, ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய பொதுமக்களின் கருத்துகளையும் பரிந்துரைகளையும் பெறுவதற்காக ஆகஸ்ட் மாதம் முழுவதும் தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

♦ **பயிற்சிகளுக்காக உள்நாட்டு / வெளிநாட்டு ரீதியாக எட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்**

– **இலங்கை மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கோவிட்-19 தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக- பொருளாதார மீள்திறனை வலுப்படுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் - (KOICA)**

இந்தத் திட்டம் நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா, வலப்பனை, ஹங்குரன்கெத, கொத்மலை மற்றும் அம்பன்கமுவ பிரதேச செயலகப் பிரிவுகளிலும், பதுளை மாவட்டத்தின் மஹியங்கனை, ரிதீமாலியந்த, ஹால்துமுல்ல, பதுளை, பண்டாரவளை மற்றும் வெலிமட பிரதேச செயலகப் பிரிவுகளிலும்

செயல்படுத்தப்படுகிறது. அதன்மூலம் நிலைபேறான பாதுகாப்பான குடிநீருக்கான அணுகலை மேம்படுத்துதல், போதுமான சுகாதார வசதிகளை வழங்குதல், நீர், சுகாதாரம் மற்றும் சுகாதாரம் தொடர்பான நோய்களைக் குறைத்தல், தனிப்பட்ட சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் நடைமுறைகளை மேம்படுத்துதல், தடுப்பு மற்றும் குணப்படுத்தும் ஆரம்ப சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், நல்ல விவசாய வசதிகள் மற்றும் செயற்திட்ட சேவைகளை மேம்படுத்துதல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் வீட்டு வருமானத்தை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்செயற்திட்டம் 2024.11.30 ஆந் திகதிக்கான முன்னேற்றம் 65% ஆகும்.

- **அரச பிரிவில் ஊழியர்களுக்கிடையே பிணக்குகளை தீர்ப்பதற்கான மத்தியஸ்த பொறிமுறையை அறிமுகம் செய்தல்**

சேவை நிலையங்களை புனரமைப்பதன் மூலம் இலங்கையில் உயர்தரமான அரச சேவையைக் கட்டியெழுப்புவதற்காக, இந்த அமைச்சும், சர்வதேச தொழிலாளர் அமைப்பும் (ILO) இணைந்து அரச துறையில் பணியாளர் தகராறுகளைத் தீர்ப்பதற்கான ஒரு நடுவர் பொறிமுறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனுடன் தொடர்புடைய திட்ட அறிக்கையில் 2024.04.30 ஆந் திகதியன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு, அரச நிறுவனங்களில் சேவை நிலைய மன்றங்கள் மற்றும் துறைசார் மன்றங்களை நிறுவுவதற்கும், அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமான பணிகள் நடந்து வருகின்றன. மேலும், மாகாண மத்தியஸ்த சபையை நிறுவும் நடவடிக்கை மற்றும் தேசிய மத்தியஸ்தக் குழுவை நிறுவுவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

- **அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுவதில் முன்னேற்றம்**

இலங்கையின் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் சமூக-பொருளாதார மீள்தன்மையை வலுப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக UN Habitat தயாரித்த செயல் திட்டத்தின் (2022-2025) படி, 2022 செப்டம்பர் மாதம் 23 ஆந் திகதிய மற்றும் அமை/22/1049/605/7 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, இதுவரை 65% முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

அமை/23/2138/65/068 ஆம் இலக்க மற்றும் 2023 நவம்பர் மாதம் 20 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி , அரச சேவையில் உள்ள தகராறுகளைத் தடுப்பதற்கும் தீர்ப்பதற்கும் ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்துவதன் கீழ் பொது நிர்வாக சுற்றறிக்கை 05/2024 வெளியிடப்பட்டுள்ளது, அதன்படி, 05 பிரிவுகளுக்கான சேவை நிலைய மன்றங்களை நிறுவுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொது நிருவாகப் பிரிவில் சேவை நிலைய மன்றமும் பிரிவு ரீதியான மன்றமும் நிறுவப்பட்டுள்ளன.

அமை/24/2087/816/003 மற்றும் 2024 திசெம்பர் மாதம் 02 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி " நாடளாவிய சேவைகளுக்கு உரித்தான நிறைவேற்று தர உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக இலங்கை குடியரசு சார்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் மற்றும் இந்திய குடியரசு சார்பாக நல்லாட்சிக்கான தேசிய நிறுவனத்துக்கிடையில் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்" அதற்காக பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின்

செயலாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, அதற்கமைய மேற்படி ஒப்பந்தம் 2024 திசெம்பர் மாதம் 10 ஆந் திகதியன்று கொழும்பில் நடைபெற்றது.

- **பொது நிருவாக சுற்றறிக்கை நடைமுறைப்படுத்துவததில் முன்னேற்றம்**

பொது நிருவாக சுற்றறிக்கை : 14/2022 மற்றும் 14/2022(II) இலக்கத்தில் சேவை மூப்புநிலை மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பில்லாத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு / வெளிநாட்டு சம்பளமற்ற லீவுகளை வழங்குவது தொடர்பில் அமைச்சின் உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளை குழு பரிந்துரை வழங்குதல்.

பொது நிருவாக சுற்றறிக்கை : 02/2018 மற்றும் 02/2018 (1) சுற்றறிக்கைக்கு ஏற்ப மனித வள அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரிப்பதற்கு அவசியப்படும் விழிப்புணர்வை வழங்குவதற்கு குறித்த பயிற்சித் திட்டங்கள் தெற்கு, மேற்கு, வயம்ப, வடமத்திய, சப்ரகமுவ, மேல் மாகாண சபை ஆகிய மாகாணங்களில் 923 உத்தியோகத்தர்களுக்கு நடாத்துதல்.

பொது நிருவாக சுற்றறிக்கை 05/2014 இற்கமைய 05 பிரிவுகளுக்கு (சுகாதாரம், போக்குவரத்து, கல்வி , மின்சாரம் மற்றும் எரிசக்தி, துறைமுகம் மற்றும் விமான சேவைகள்) சேவை நிலைய மன்றங்களை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொது நிருவாகப் பிரிவில் சேவை நிலைய மன்றமும் பிரிவு ரீதியான மன்றமும் நிறுவப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.6 – 2024.12.31 ஆந் திகதி வரை பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2022 இன் படி ஒட்டுமொத்த அரச சேவையிலும் இருந்து உள்நாட்டு / வெளிநாட்டு சம்பளமற்ற லீவுகளை பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் தகவல்**

| விடுமுறை வகைகள் | விடுமுறை பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| **உள்நாட்டு சம்பளமற்ற விடுமுறைகள்** | 3,460 |
| **வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறைகள்** | 7,673 |

- **வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை நடாத்துதல்**

**அட்டவணை 2.7 – வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை நடாத்துதல்**

| சேவைகள் | முன்னேற்றம் |
|---|---|
| **இலங்கை நிர்வாக சேவை** | முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I) மற்றும் 2020 (II) பரீட்சை அறிவித்தல் அவதானங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2024.04.08 ஆந் திகதி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| **இலங்கை திட்டமிடல் சேவை** | |
| **இலங்கை பொறியியலாளர் சேவை** | |
| **இலங்கை விஞ்ஞான மற்றும் கட்டிடக் கலைஞர் சேவை** | |

| | | |
|---|---|---|
| **இலங்கை கணக்காளர் சேவை** | – | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பின்வருமாறு அமையப்பெற்றுள்ளது.<br>I ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2023.12.03, 2023.12.09 மற்றும 2023.12.10<br>IIஆம் வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2023.12.02 மற்றும் 2023.12.03 |
| **இலங்கை தொழில்நுட்ப சேவை** | –<br>–<br>–<br>–<br>– | 2018 (II) மற்றும் 2018 (III) தரங்களுக்கு நடாத்தப்பட்ட வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பெறுபேறுகள் 2024 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதம் வெளியிடப்பட்டுள்ளது.<br>(2019 (III) மற்றும் 2019 (II)ஆந் தரத்திற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2025 சனவரி மாதம் நடாத்தப்படவுள்ளது.<br>I தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு III ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பரீட்சை - 7 குழுக்களுக்கு 2024 செப்டம்பர் மாதம் நடாத்தப்பட்டுள்ளது.<br>I ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு விசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2020 இன் பெறுபேறுகள் 2024 பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டுள்ளது.<br>I ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களை விசேட தரத்துக்கு பதவியுயர்த்தும் போட்டிப் பரீட்சை 2020/2022/2023 இல் நடாத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. |
| **இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவை 1 ,2 மற்றும் 3 ஆம் வகுப்பு** | – | " **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பரீட்சை 2019 (I) 2023**" பரீட்சை அறிவித்தல்கள் அவதானங்கள் 2024.09.04 ஆந் திகதி கிடைக்கப்பெற்றுள்ளதோடு, 2024.10.19 ஆந் திகதி முதல் 2024.10.27 ஆந் திகதி வரை நடாத்தப்படவுள்ளது. |
| **நூலகர் சேவை (I, II )மற்றும் (III )ஆந் தரங்கள்** | – | ( II )மற்றும்( III) ஆந் தரங்களுக்கான "**வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2018(II)2022**"இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஊடாக நடாத்துவதற்கு அரச நூலகர் சேவையின் சேவைப் பிரமாண திருத்தியமைப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| **மொழிபெயர்ப்பாளர் சேவை 1 ஆம் வகுப்பு** | – | "**வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2016 (2024)** " செப்டம்பர் மாதம் நடாத்தப்படவுள்ளது. |
| **முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை (I) ஆந் தரம்** | – | " **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பரீட்சை 2024**" 2024.07.27 ஆந் திகதியன்று நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் (II) ஆந் தரம்**<br><br>**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் (III) ஆந் தரம்** | – (II) மற்றும் (III) ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு **"வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2024"** பரீட்சைக்குரிய பரீட்சை அறிவித்தல் அவதானங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2024.06.11 ஆந் திகதி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| **அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை** | – **" வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பரீட்சை 2" - 2024"** 2024.06.30 ஆந் திகதியன்று நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளது. |

♦ **2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய ஆட்சேர்ப்புக்கள்**

**அட்டவணை 2.8 - புதிய ஆட்சேர்ப்புக்கள்**

| சேவைகள் | புதிய ஆட்சேர்ப்புக்கள் தொடர்பான தகவல் |
|---|---|
| **இலங்கை விஞ்ஞான மற்றும் கட்டிடக் கலைஞர் சேவை** | – அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் I ஆந் தரத்துடைய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றினை நடாத்தல்.<br>– இணைத்துக் கொள்வதற்கான நடைமுறையை திருத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கான கலந்துரையாடலை நடடாத்துதல். |
| **இலங்கை கணக்காளர் சேவை** | – |
| **இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவை** | – 2 ஆம் வகுப்பின II ஆந் தரத்துக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப் பயிற்சியை நடாத்தல்<br>– இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் மூன்று மாதங்களினுள் வெளியடப்படவுள்ளதால், அதற்குரித்தான நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள். |
| **முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை** | – மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அதிஉயர் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்குதல் மற்றும் சேவைத் துவக்கப் பயிற்சி நடாத்தல். |
| **இலங்கை அரசின் நூலகர் சேவை** | – |
| **இலங்கை பொறியியலாளர் சேவை** | – மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 226 உத்தியோகத்தர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட36 உத்தியோகத்தர்கள் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல். |

♦ **சேவைத் துவக்கப் பயிற்சி நடாத்தல்**

- இலங்கை அரச நூலகர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சியை மே மாதத்தில் நடாத்தப்பட்டுள்ளது.

- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சியை ஆகஸ்ட் மாதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

_ இலங்கை திட்டமிடல் சேவைக்கு 2024.07.15 ஆந் திகதி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள 17 உத்தியோகத்தர்களுக்கு மற்றும் 2024.10.14 ஆந் திகதி முதல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்கள் 43 பேருக்கு சேவைத் துவக்கப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

-- இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைக்கு திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 98 உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப் பயிற்சி நடாத்துதல்.




**சேவைத் துவக்கப் பயிற்சி நடாத்தல்**

**2024 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற தனித்துவமான இலக்குகள் மற்றும் சாதனைகள்**

♦ இலங்கை திட்டமிடல் சேவை III ஆந் தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்காக 2018.04.08 ஆந் திகதி நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 08 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பிற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பதோடு, அதில் ஒரு உத்தியோகத்தர் கலந்து கொள்ளவில்லை, 07 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் 2024.07.15 ஆந் திகதி ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வுத்தியோகத்தர்களின் சேவைத் துவக்கப் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

♦ திட்டமிடல் சேவைப் பிரமாணத்தின் பிரகாரம் 2013 மற்றும் 2015 ஆம் குழுக்களின் II தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு 60 நாட்களைக் கொண்ட சேவைத் துவக்கப் பயிற்சி வழங்கும் நிகழ்வு 2024.09.06 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

♦ ஏற்றுமதி விவசாயம் திணைக்களத்தின் இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு நடைபெற்ற இலங்கைவிஞ்ஞான சேவையின் I தரத்துடைய பதவிகள் மற்றும் விசேட தரத்துடைய பதவிகளை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சையை நடாத்துதல்.

♦ இலங்கை விஞ்ஞான சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நடைமுறை ஒழுங்கினை திருத்தியமைப்பது தொடர்பில் செயலமர்வு ஒன்று நடை பெற்றது.

- 2024 ஆம் ஆண்டில் இலங்கை விஞ்ஞான சேவையின் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள 51 உத்தியோகத்தர்களுக்கு 2024.08.15 ஆந் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.
- 2024 ஆம் ஆண்டினுள் இலங்கை விஞ்ஞான சேவையின் உத்தியோகத்தர்களுக்கு விஞ்ஞான ரீதியான கலாச்சாரமொன்றினை ஊக்குவிப்பதற்கான பயிற்சித் திட்டம் 2024 ஆகஸ்ட் மாதத்தில் நடாத்துதல்.
- இலங்கை விஞ்ஞான சேவையின் உத்தியோகத்தர்களுக்கு விஞ்ஞான ஆராய்ச்சி ஆய்வறிக்கை அல்லது ஆவணமொன்றை தயாரிப்பது தொடர்பிலான இரண்டு பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அவர்களின் வெளியீடுகளை பிரசுரிப்பதற்காக இணையவழி ஜேர்னல் சஞ்சிகையை ஆரம்பித்தல்.
- 2024 ஆம் ஆண்டில் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள 08 உத்தியோகத்தர்களுக்கு 2024.09.18 ஆந் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.
- இலங்கை பொறியியலாளர் சேவையின் I ஆந் தரத்துக்கு தகுதி பெற்ற உத்தியோகத்தர்கள், அந்த சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்காக முறைசார்ந்த நேர்முகப் பரீட்சையை 2023..04.30 ஆந் திகதி நடாத்தப்பட்டுள்ளதோடு, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் படி 02 உத்தியோகத்தர்களுக்கு 2022.07.01 ஆந் திகதிக்கு மற்றும் 16 உத்தியோகத்தர்களுக்கு 2023.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இலங்கை பொறியியலாளர் சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளது.
- **MISCO தரவுத் தளத்தை மேம்படுத்தல்**

  இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களின் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை, ஆட்சேர்ப்பு, இணைத்துக் கொள்ளல், நிறுவனத்தில் இணைத்தல், வேலை பொறுப்பேற்றல், பதவியுயர்த்தல், நிரந்தரப்படுத்தல் மற்றும் ஓய்வு பெறச் செய்தல் தொடர்பான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது MISCO தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தியாகும்.
- **தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறி**

  அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை அரசகரும மொழிகள் திணைக்களத்தின் வளவாளர்களினால் முக்கிய பயிற்சித் திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

**அட்டவணை 2.9 – தமிழ் மொழிப் பயிற்சி**

| சேவை மட்டம் | பயிற்சிப் பாடநெறிகள் | பங்குபற்றிய உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **மூன்றாம் நிலை மட்டம்** | 200 மணித்தியால பாடநெறித் தேர்ச்சி | 02 |
| **இரண்டாம் நிலை மட்டம்** | 150 மணித்தியால பாடநெறித் தேர்ச்சி | 163 |
| **ஆரம்ப நிலை மட்டம்** | 150 மணித்தியால பாடநெறித் தேர்ச்சி | 88 |

- **எதிர்வரும் பயிற்சித் திட்டங்கள்**

**அட்டவணை 2.10 – எதிர்வரும் பயிற்சி வேலைத் திட்டம்**

| சேவை வகுதி | நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| **முகாமைத்துவ நிலை** | 09 |
| **முகாமைத்துவமற்ற நிலை** | 12 |
| **சகல சேவை வகுதிகளும்** | 23 |

**அட்டவணை 2.11 – 2024.12.31 ஆந் திகதிக்கு மனித வள அபிவிருத்திப் பிரிவின் நிதியியல் முன்னேற்றம்**

| பயிற்சித் திட்டம் | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | உண்மையான செலவு ( ரூபா. மில்.) |
|---|---|---|
| **உள்நாட்டு** | 7375 | 6.97 |
| **வெளிநாட்டு** | 15 | 1.92 |

**2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் செற்பாடுகள்**

- இலங்கை விஞ்ஞான சேவையின் உத்தியோகத்தர்களின் அறிவை மேம்படுத்தல் மற்றும் இற்றைப்படுத்துவதற்காக விஞ்ஞான ரீதியான கலாச்சாரமொன்றினை ஊக்குவிப்பதற்கான பயிற்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடாத்துதல்.
- இலங்கை தொழில்நுட்ப சேவையின் I தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை (முகாமைத்துவம் தொடர்பான மூன்றுமாத சான்றிதழ் பாடநெறியை) நடாத்துதல்
- இலங்கை விஞ்ஞான சேவையின் மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் உத்தியோகத்தர்களின் பிரத்தியேகக் கோவைகளுக்கு உரித்தான ( நிரந்தரப்படுத்தல், தரமுயர்த்தல், வினைத்திறன் தடை தாண்டல், ஓய்வு பெறச் செய்தல் போன்ற) நடவடிக்கைகள் தொடர்பிலான முன்னேற்றம் குறித்து தற்போதைய நிலைமையை அவர்களின் தொலைபேசிக்கு குறுந் தகவல் மூலம் (SMS) அறியப்படுத்தல்.
- இலங்கை விஞ்ஞான சேவையினதும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையினதும் உத்தியோகத்தர்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவுத் தளத்தை நிறுவுதல்.
- இலங்கை திட்டமிடல் சேவை III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப் பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- 2025.01.01 ஆந் திகதிக்கு மற்றும் 2025.07.01 ஆந் திகதிக்கு இலங்கை திட்டமிடல் சேவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை பொறியியலாளர் சேவை உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு பதவியுயர்த்தல்.
- இலங்கை பொறியியலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்கள் 64 பேருக்கு மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப் பயிற்சிகளை வழங்குதல்.
- ஆரச சேவை பயிற்சி நிறுவனம் மனித வளம் அபிவிருத்தி பிரிவின் கீழ் தனியான ஒரு அலகாக மீளவும் உருவாக்குதல்.

- மனித வள அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பது தொடர்பிலான விழிப்புணர்வு வழங்கும் பயிற்சித் திட்டத்தினை மாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்தல்.

- மாவட்ட மட்டத்தில் இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் வலுப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான முறைமையினையும் தயாரித்தல்.

- அரச சேவையில் ஏற்படும் தகராறுகளைத் தடுப்பதற்கும் தீர்ப்பதற்கும் ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்துவதன் கீழ், அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள போக்குவரத்து, சுகாதாரம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து மற்றும் கல்வி ஆகிய துறைகளில் சேவை நிலைய மன்றங்கள், பிரிவு ரீதியான சபைகள் மற்றும் அமைச்சு மட்டத்திலான அலகுகளை (Cell) நிறுவுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல், தேசிய அரசாங்க உரையாடல் மன்றத்தை நிறுவுதல், மாகாண மட்டத்தில் சமரச சபைகள் மற்றும் தேசிய மத்தியஸ்த மன்றங்களை நிறுவுதல், அரச சேவை தகராறுகள் குறித்து அறிக்கையிடுவதற்கு ஒரு தரவுத்தளத்தை உருவாக்குதல், இந்த பொறிமுறையுடன் தொடர்புடையதாக தாபன விதிக்கோவையில் திருத்தங்களைச் சேர்த்தல் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு சட்ட விதிகளை வகுப்பது தொடர்பான சட்ட கட்டமைப்பை உருவாக்குதல்.

- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA) மற்றும் இந்தியாவின் நல்லாட்சிக்கான தேசிய நிலையம் (NCGG) இற்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் நாடளாவிய சேவைகளுக்கு உரித்தான நிறைவேற்று உத்தியோகத்தர்களின் இயலளவு விருத்திக்காக வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்கு இணைப்பது தொடர்பான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- " Clean Sri Lanka" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் செழிப்பான நாடு மற்றும் வளமான வாழ்க்கையை அமைப்பதற்கு வெளியிடப்பட்டுள்ள 2024.12.30 ஆந் திகதிய இலக்கம் : 22/2024 இனையுடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை தொடர்பாக இந்த அமைச்சின் சகல உத்தியோகத்தர்கள் அறிந்து கொள்வதற்கான பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

- 2024 ஆம் ஆண்டில் மனித வள அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளைக் குறிப்பிட்டு சிறிய சஞ்சிகை யை வெளியிடல்.

- இலங்கை திட்டமிடல் சேவை III ஆந் தரத்திற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள 139 உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப் பயிற்சிகளை வழங்குதல்.

- இலங்கை தொழில்நுட்பச் சேவையின் I, II மற்றும் III ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை நடாத்துதல்.

- இலங்கை தகவல் தொழில்நுட்பச சேவையின் 2 ஆம் வகுப்பின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சியை வழங்குதல்.

இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின்

பெறுபேறுகளை வெளியிடல் மற்றும் அதற்குரித்தான நேர்முகப் பரீட்சை நடாத்துதல் மற்றும் ஆட்சேர்ப்புச் செய்தல்.



விஞ்ஞான சேவையின் மற்றும் கட்டடக் கலைஞர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப்

## 3. விடயப் பரப்பு - கொள்கை

### தாபனப் பிரிவு

அரச ஊழியர்கள் தொடர்பாகவும், அரச சேவையின் இருப்பினை சான்றுப்படுத்தும் வகையிலும் அதற்குரித்தான கொள்கைகளை வகுப்பதற்கு, அரசுக்கு உதவுவது தாபனப் பிரிவின் முக்கிய பணியாகும் என்பதால், அதற்குரித்தான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதும், அதிகாரங்களைப் பயன்படுத்தும் போதும் தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகள், பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை கடிதங்கள் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**2024 ஆம் ஆண்டின் முக்கிய செயலாற்றுகைகள்**

- **அட்டவணை 3.1 - அரச சேவையில் கொள்கை ரீதியான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு குறித்த ஒட்டுமொத்த மீளாய்வு**

| மேற்கொள்ளப்பட்ட பணிகள் | எண்ணிக்கை |
| --- | --- |
| வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் எண்ணிக்கை | 12 |
| வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக் கடிதங்களின் எண்ணிக்கை | 00 |
| சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை | 13 |
| அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக தயாரிக்கப்பட்ட அவதானங்களின் எண்ணிக்கை | 173 |
| சேவைப் பிரமாணத்திற்காக வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் எண்ணிக்கை | 08 |
| 03. | கிராம அலுவலர்களின் பதவி உயர்வு | 95% | மாவட்டச் செயலாளரின் பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதிகளைப் பூர்த்தி செய்த பின்னர் பதவி உயர்வு கடிதங்களை வழங்குதல். |
| 04. | கிராம அலுவலர்களின் ஓய்வுபெறுகை | 95% | மாவட்ட செயலாளரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் ஓய்வூதிய கடிதங்களை வழங்குதல். |
| 05. | கிராம அலுவலர் நாட்குறிப்பு | 100% | 2024 ஆம் ஆண்டிற்கான புதிய கிராம அலுவலர்களுக்கான நாட்குறிப்புகளை அச்சிட அரசாங்க அச்சகத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது, மேலும் 2025 நாட்குறிப்பில் திருத்தங்கள் தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. |
| 06. | கிராம அலுவலர் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடத்துதல் I, II, III | 100% | 2024.06.29 ஆம் திகதி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை நடாத்தப்பட்டுள்ளது. |
| 07. | கிராம அலுவலர் அலுவலகங்கள் மற்றும் பணிகளை ஆய்வு செய்தல். | 75% | 2024 ஆம் ஆண்டுக்கான கிராம அலுவலர் அலுவலகம் மற்றும் கடமைகள் ஆய்வு பிரதேச மட்டத்தில் நிறைவடைந்துள்ளது. |

## 2.3. அபிவிருத்திப் பிரிவு

### i. விடயப் பரப்பு மற்றும் செயற்பாடுகள்

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை பயனுள்ள மற்றும் வினைத்திறன்மிக்கதாக மேம்படுத்துவதை உறுதி செய்வதும், பொதுமக்களுக்கு தரமான சேவைகளை வழங்கும் பொருட்டு ஊழியர்களுக்கு ஆற்றலை வழங்குவதும் ஆளணியினரின் ஊக்கத்தை அதிகரிக்கும் காரணிகளாகும். அதன் மூலம் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே நட்புமிகு பயனுள்ள சேவை வழங்கும் சூழலை உருவாக்குவதற்கு வசதியளித்து அதன் மூலம் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

- உள்நாட்டலுவல்கள் பிரிவுடன் தொடர்புடைய கட்டிடங்கள் மற்றும் பிற நிர்மாணங்கள் தொடர்பான கொள்முதல் முகாமைத்துவம்.
- நிர்மாணம் தொடர்பான மூலதனச் செலவினத் தலைப்புக்கான வருடாந்த கொள்முதல் திட்டம் மற்றும் செயல் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அந்தத் திட்டத்தின்படி மாவட்டச் செயலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்.
- நிர்மாண செலவினத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்படும் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் இந்தத் திட்டங்களின் முன்னேற்றத்தை பின்னூட்டம் செய்தல், தேவையான இடங்களில் தேவையான வழிகாட்டுதலை வழங்குதல்.
- நிர்மாணம் அல்லாத ஏனைய அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விசாரித்தல்.
- மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் கட்டிட நிர்மாணம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு அந்த ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் ஒதுக்கப்பட்ட நிதி மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.
- மொத்த செலவு மதிப்பீடு ரூ.400 மில்லியனுக்கும் அதிகமான நிர்மாண ஒப்பந்தங்களுக்கான சரியான நேரத்தில் மற்றும் தரமான கொள்முதல் நடவடிக்கைகளை செயல்படுத்துதல், பணத்திற்கான மதிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொது கொள்முதல் நடைமுறைகளுக்கு இணங்குதல் உள்ளிட்ட கொள்முதல் கொள்கைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்தல்.
- அபிவிருத்திப் பிரிவு மற்றும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களால் நேரடியாக செயல்படுத்தப்படும் அல்லது நிர்வகிக்கப்படும் நிர்மாண மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள், கொள்முதல் அறிக்கைகள் மற்றும் பிற தகவல்களை திறைசேரி, நிதி அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் போன்ற தொடர்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
- கொள்முதல் நடவடிக்கைகள் மற்றும் நிதி ஒதுக்கீட்டைத் திட்டமிடும்போது கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் உள்கட்டமைப்பு மேம்பாடு தொடர்பான நிர்மாணத் தேவைகளைப் பெறுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- பிரதேச செயலகப் பிரிவுகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- புதிய கிராமம், புதிய நாடு எனும் தேசிய ஒருங்கிணைந்த பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாவட்டச் செயலாளர்களின் செயல்திறன் ஒப்பந்தம் தொடர்பான வருடாந்த முன்னேற்றத்தை

புதிய கிராமம், புதிய நாடு எனும் தேசிய ஒருங்கிணைந்த பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

- உணவு கொள்கை குழுவில் பங்கேற்றல்.
- கௌரவ இராஜாங்க அமைச்சரின் கடமைகளைக் கையாளுதல்
- அனைத்து காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் (மாவட்ட செயலகங்கள்/ பிரதேச செயலகங்கள்/ கிராம அலுவலர் அலுவலகங்கள்/ சேவா பியச)
- உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு சொந்தமான சுற்றுலா பங்களாக்கள் நிறுவப்பட்டுள்ள காணிகளை கையகப்படுத்துதல்.
- நில செவன திட்டத்தின் நிர்மாணத்தை செயல்படுத்துதல் மற்றும் அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
- மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் நடைபெறும் அபிவிருத்திக் குழுக்களின் கொள்கை நடவடிக்கைகள்
- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களால் எடுக்கப்படும் முடிவுகளை செயல்படுத்த தேவையான வசதி திட்டத்தைத் தயாரித்தல்.
- "பிபிதெமு பொலன்னறுவை" நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் அதன் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்..
- பொது சேவை வீட்டுவசதி மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட வீட்டுவசதிகளின் ஒதுக்கீடு, நீட்டிப்பு மற்றும் புனரமைப்புப் உள்ளிட்ட அரசாங்க வீட்டுவசதிகளைக் கையாளுதல்.
- மாவட்ட செயலகங்களுக்குச் சொந்தமான அரசாங்க வீடுகளுக்கான பொருளாதார வாடகை வசூல் தொடர்பான விடயங்கள்
- பிரதேச செயலகங்களில் உள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பான விடயங்களைக் கையாளுதல்.
- உள்நாட்டலுவல்கள் பிரிவின் மேற்பார்வையின் கீழ் அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் தீவு முழுவதும் செயல்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் இயக்குதல், மதிப்பீடு செய்தல், அறிக்கையிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

## ii. சவால்கள்

- தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 05/2019 இன் பிரகாரம் புதிய திட்டங்களைத் ஆரம்பிக்க இயலாமை காரணமாக புதிய நிர்மாணிப்புக்களை மேற்கொள்ள முடியவில்லை.
- மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேசச் செயலக அலுவலகங்களில் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகளுக்குக் கோரப்பட்ட வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய நிதி போதுமானதாக இல்லாமை.
- நில செவன அலுவலகங்களில் முடிக்க வேண்டிய அத்தியாவசிய பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு இல்லாமை.

## iii. விசேட அடைவுகள்

•முந்தலம் பிரதேச செயலகத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவுசெய்து அங்கு உத்தியோகபூர்வ கடமைகளை ஆரம்பித்தல். (2024.03.12).

2.1.படம் :- முந்தலம் பிரதேச செயலகத்தின் மூன்று மாடி கட்டிடத்தின் கட்டுமானம்



- மட்டக்களப்பு மாவட்ட செயலக நிர்வாக வளாகத்தைத் திறந்து வைத்து அதன் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை ஆரம்பித்தல். (2024.06.22)

- 2.2.படம் :- மட்டக்களப்பு மாவட்ட செயலக நிர்வாக வளாகம் திறப்பு விழா



ஹோமாகம பிரதேச செயலகத்தின் நான்கு மாடிக் கட்டிடம் திறப்பு விழா.

2.3.படம் :- ஹோமாகம பிரதேச செயலகத்தின் நான்கு மாடிக் கட்டிடம் திறப்பு விழா.



- இரண்டு மாடிகளைக் கொண்ட மகாவிலச்சிய பிரதேச செயலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவுசெய்து அங்கு உத்தியோகபூர்வ கடமைகளை ஆரம்பித்தல். (2024.06.15)

2.4.படம் :- மகாவிலச்சிய பிரதேச செயலகத்தின் இரண்டு மாடி கட்டிடத்தின் கட்டுமானம்



- ஜா-எல பிரதேச செயலகத்தின் ஐந்து மாடிக் கட்டிடத்தைத் திறந்து வைத்து அங்கு உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை ஆரம்பித்தல். (2024.07.22)

2.5.படம் :- ஜா-எல பிரதேச செயலகத்தின் ஐந்து மாடிக் கட்டிடம் திறப்பு



- மஹியங்கனை பிரதேச செயலகத்தின் இரண்டு மாடிக் கட்டிடம். (2024.11.11)

2.6.படம் மஹியங்கனை பிரதேச -: செயலகத்தின் இரண்டு மாடிக் கட்டிடத்தைத் திறந்து வைத்து அங்கு உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.



- லுணுகம்வெஹெர பிரதேச செயலகத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவுசெய்து அங்கு உத்தியோகபூர்வ பணிகளை ஆரம்பித்தல். (2024.06.29)

2.7.படம் :- லுணுகம்வெஹெர பிரதேச செயலகத்தின் மூன்று மாடி கட்டிடத்தின் கட்டுமானம்



**iv. எதிர்கால இலக்குகள்**

**அட்டவ ணை 2.10. :** பின்வரும் புதிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட உள்ளன.

| கருத்திட்டம் | மொத்த செலவு மதிப்பீடு (ரூ.மில்) |
|---|---|
| மாதம்பகம பிரதேச செயலகம் - பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல் | 433.40 |
| குளியாப்பிட்டி மேற்கு பிரதேச செயலகம் - புதிய மூன்று மாடி கட்டிடம் கட்டுதல் | 242.00 |
| குளியாப்பிட்டி கிழக்கு பிரதேச செயலகம் - புதிய மூன்று மாடி கட்டிடம் கட்டுதல் | 248.00 |
| ஆராச்சிகட்டுவ பிரதேச செயலகம் - புதிய மூன்று மாடி கட்டிடம் கட்டுதல் | 307.00 |
| அனுராதபுரம் மாவட்ட செயலக நிர்வாக வளாகத்தின் கட்டுமானம் | 1,991.00 |
| தெஹிவளை பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டிடம் கட்டுதல் | 1,150.00 |
| முல்லைத்தீவு மாவட்ட செயலக கட்டிட நிர்மாணம் - இரண்டாம் கட்டம் | 328.00 |
| கிளிநொச்சி மாவட்ட செயலக கட்டிட நிர்மாணம் - இரண்டாம் கட்டம் | 565.00 |
| **மொத்தம்** | **5,264.40** |

**அட்டவணை 2.11. : அபிவிருத்திப் பிரிவு - உத்தேச வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் 2024 (சாராம்சம்)**

| # | கருத்திட்டத்தின் பெயர் | மதிப்பீடுசெய்யப்பட்ட மொத்தச் செலவு (ரூ.மில்) | 2025 வரவுசெலவுத்திட்டதினால் உத்தேச ஒதுக்கீடு (ரூ.மில்) |
|---|---|---|---|
| 01. | கொழும்பு மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 82.22 | 82.22 |
| 02. | நுவரெலியா மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 11.20 | 11.20 |
| 03. | காலி மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 23.25 | 23.25 |
| 04. | மாத்தறை மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 95.20 | 95.20 |
| 05. | முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்குரிய பிரதேசச் செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 70.40 | 70.40 |
| 06. | புத்தளம் மாவட்ட செயலகத்திற்குரிய உட்பட்ட பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 15.61 | 15.61 |
| 07. | மொனராகலை மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 83.16 | 83.16 |
| 08. | அனுராதபுரம் மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 103.48 | 103.487 |
| 09. | இரத்தினபுரி மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 159.14 | 159.14 |
| 10. | பதுளை மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 65.75 | 65.75 |
| 11. | குருநாகல் மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் புனரமைப்புப் பணிகளுக்காக | 137.65 | 137.65 |
| 12. | நில செவன அலுவலகங்களில் மீதமுள்ள பணிகளை முடிப்பதற்கும், சேவை அலுவலகங்களை புதுப்பிப்பதற்கும் | 1,846.25 | 1,846.25 |
| 13. | பிபிதெமு பொலன்னறுவை அபிவிருத்தி திட்டங்களின் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு | 708.17 | 708.17 |
| **மொத்தம்** | | **3,263.88** | **3,263.88** |

**v. பிரிவின் முன்னேற்றம்**

**அட்டவணை 2.12. அபிவிருத்திப் பிரிவு - நிதி முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

**(ரூ.மில்) 50.00**

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கப்பட்ட நிதி | | | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஆரம்ப ஒதுக்கீடு (ரூ.மில்) | இறுதி ஒதுக்கீடு (ரூ.மில்) | |
| மூலதனம் | கட்டிடம் பழுதுபார்ப்பு - 2001 | 50.00 | 29.83 | 59.66% |
| | **மொத்தம்** | **50.00** | **29.83** | |

**அட்டவணை 2.13. அபிவிருத்திப் பிரிவு - பௌதீக முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

| விசேட குறிகாட்டிகள் | உத்தேச வெளியீடு சதவீதமாக % | | |
|---|---|---|---|
| | 100%- 90% | 75%-89% | 50%- 74% |
| கட்டிடம் பழுதுபார்ப்பு - 2001 | √ | | |

## 2.4. நிதிப்பிரிவு

### i. நோக்கம் மற்றும் செயல்பாடுகள்

நிதி ஒழுங்குமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் தொடர்புடைய அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் கணக்கீட்டு முறையை முறையாகப் பராமரிப்பதே நிதிப் பிரிவின் முக்கிய நோக்கமாகும். நிதிப் பிரிவினுள் நிதி முகமைத்துவம், மாவட்டக் கணக்குகள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் பெறுகை நடைமுறை

- வலுவான நிதி அறிக்கை முறையை பராமரித்தல்
- திறமையான மற்றும் பொறுப்பான கொடுப்பனவு முறையைப் பராமரித்தல்
- பெறுகை நடைமுறைகளை வெளிப்படைத்தன்மை மற்றும் திறமையான முறையில் பராமரித்தல்.
- சொத்து முகாமைத்துவம் செயல்பாடுகளை திறமையாக பராமரித்தல்
- நிதி முகாமைத்துவம் தொடர்பான செயல்பாடுகளை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- நிதிப்பிரிவில் அனைத்து நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒழுங்கான முறையில் பராமரித்தல்.

### ii. முன்னுரிமை வரம்புகள்

- வரவு செலவுத் திட்ட முகாமைத்துவம்
- நிதி அறிக்கையிடல்
- சம்பளம் மற்றும் கட்டணங்களின் முகமைத்துவம்
- பெறுகை முகமைத்துவம்
- சொத்து முகமைத்துவம்
- மாவட்ட செயலகங்களின் மேற்பார்வை மற்றும் தேவையான வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குதல்

### iii. விசேட அடைவுகள், சவால்கள், எதிர்கால இலக்குகள்

| விசேட அடைவுகள் | சவால்கள் | எதிர்கால இலக்குகள் |
|---|---|---|
| செயல்பட்டு செலவினக் குறைப்பு மற்றும் எதிர்கால வளர்ச்சியை அதிகரிக்கச் செய்வதற்கான செயல்திறனைப் பதிவுசெய்தல் | சில கணிப்பு அளவீடுகள் நிதி அறிக்கையிடலுக்கு ஏற்றதாக இல்லை. | சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அனைத்து நிலைகளுக்கும் பயனுள்ள, பொறுப்பு மற்றும் வெளிப்படையான வெளியீட்டை வழங்கல் |
| | சில கணிப்பு அளவீடுகள் நிதி அறிக்கையிடலுக்கு ஏற்றதாக இல்லை. | |
| அமைச்சினால் முன்மொழியப்பட்ட நிதி கட்டுப்பாட்டு விதிகள் | முறையான கொடுப்பனவு முறைக்கு போதுமான நிதியைப் பெறுவதில் தாமதம் | திறமையான மற்றும் பயனுள்ள கொடுப்பனவு முறையை மேம்படுத்துதல் |
| | பணம் செலுத்தும் செயல்முறைக்கான தேவைகள் முழுமையடையவில்லை. | |
| நிறுவனத்தின் திறமையான சேவையை உறுதி செய்வதற்காக தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை சரியான தரம் மற்றும் அளவுடன் சரியான நேரத்தில் வழங்குதல் | வரையறுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு | பிரிவு/நிறுவனத்தின் கொள்முதல் செயல்முறையின் மிகவும் வலுவான மற்றும் திறமையான பயன்பாடு |
| | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுப் பிரதிநிதிகளின் கூட்டங்கள் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது | |
| | திணைக்களங்களில் இருந்து பெறப்படும் அவசர கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சிக்கல் நிலைகள் | |

**iv. நிறுவனத்தின் முன்னேற்றம் (2024.01.01-2024.12.31வரை)**

**அட்டவணை 2.14 : மீண்டுவரும் செலவினங்கள்**

| கருத்திட்டம் | நிகழ்ச்சித்திட்டத்தின் இல. | வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ. மில்லியன்) | மீண்டுவரும் செலவினங்கள் (ரூ. மில்லியன்) | ஒதுக்கீட்டின் மீதி (ரூ. மில்லியன்) | செலவினத்தின் முன்னேற்றம் % இல் |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டலுவல்கள் | 130-01-16 | 965 | 756.75 | 208.25 | 78% |
| **மொத்தம்** | | **965** | **756.75** | **208.25** | **78%** |

**வரை படம் 2.3. : தொடர்செலவுகள்**




**அட்டவணை 2.15 : மூலதனச் செலவினங்கள்**

| கருத்திட்டம் | நிகழ்ச்சித்திட்டத்தின் இல. | வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ. மில்லியன்) | மூலதனச் செலவினங்கள் (ரூ. மில்லியன்) | ஒதுக்கீட்டின் மீதி (ரூ. மில்லியன்) | செலவினத்தின் முன்னேற்றம் % இல் |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டலுவல்கள் | 130-01-16 | 140 | 124.43 | 72 | 49% |
| உள்நாட்டலுவல்கள் - அபிவிருத்திச்செயறபாடுகள் | 130-02-20 | 1,215 | 117.42 | 1,186 | 2% |
| **மொத்தம்** | | **1,355** | **98** | **1,257** | **7%** |

**வரை படம் 2.4 : மூலதனச் செலவினங்கள்**



### v. நிறுவனத்தின் முன்னேற்றம்

**அட்டவணை 2.16 : நிறுவன பொதுப்பணிகளின் முன்னேற்றம்**

| செயற்பாடுகள் | **2024.12.31** வரை முன்னேற்றம் |
|---|---|
| வருடாந்த நிதி கூற்றினைத் தயாரித்தல் மற்றும் உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்பித்தல் | 100% |
| சொத்து முகாமைத்துவம் மற்றும் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு செயற்பாடுகளை உரிய திகதியில் செயற்படுத்தல் | |
| பயனுள்ள மற்றும் செயல்திறன்மிக்க நிதி அறிக்கையிடல் முறைமையை பேணுதல் | |

### vi. செயல்பாட்டு மூலதன நிதி திட்டங்களின் முன்னேற்றம்

**அட்டவணை 2.17 : அமைச்சின் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களினது வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டின் பயன்பாடு**

| நிகழ்ச்சித்திட்டம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ. மில்லியன்) | மொத்த செலவினம் (ரூ. மில்லியன்) | செலவினத்தின் முன்னேற்றம் % இல் |
|---|---|---|---|
| 130-01-16 | 140 | 124.43 | 89% |
| 130-02-20 | 1,215 | 117.42 | 10% |
| මුළු එකතුව | **1,355** | **98** | **7%** |

**வரை படம் 2.5 செயல்பாட்டு மூலதன நிதி செலவு**



## 2.5. புலனாய்வு பிரிவு

### i. நோக்கம் மற்றும் செயல்பாடு

அரச சேவையில் நல்லாட்சிக்கு அவசியமான குணாம்சங்களுடன் கூடிய மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக கட்டமைப்புக்களை பேணுவதை உறுதிப்படுத்துவதாற்காக ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராக செயற்படல், ஆலோசனைகளை வழங்குதல், முன்மொழிவுகளை முன்னிலைப்படுத்தல் மற்றும் நெறிப்படுத்துதல்.

- 1905 பொதுமக்கள் முறைப்பாடுகள் பிரிவிற்கு கிடைக்கப்பெறும் பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு மாவட்ட செயலகங்கள்/ பிரதேச செயலகங்கள் ஊடாக அறிக்கைகளைக் கோரி பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.
- எவரேனும் ஒரு உத்தியோகத்தர் முறைகேடுகளில் ஈடுபட்டிருப்பின் ஆரம்ப விசாரணைகளை நடாத்துதல்.
- முறையான ஒழுக்காற்று விசாரணைகளில் புலனாய்வு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல்.
- முறையான ஒழுக்காற்று விசாரணைகளில் சாட்சி வழங்கும் பொருட்டு புலனாய்வு உத்தியோகத்தர்களை முன்னிலைப்படுத்துதல்.
- அலுவலக விசாரணைகளை நடாத்துதல் மற்றும் மேற்பார்வை (அமைச்சின் விடயப் பரப்பிற்குரித்தான நிறுவனங்கள்)
- குற்றச்சாட்டுகளின்றி, வினைத்திறனுடன் கடமைச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் மாவட்ட மட்டத்தில் "Road Map for Better Service Delivery" எனும் பெயரில் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல்.

### ii. விசேடமான அடைவுகள்

- பொதுமக்கள் முறைப்பாடுகளை முகாமை செய்வதற்காக 1905 பொது மக்கள் முறைப்பாட்டு அலகு ஒன்றை அறிமுகம் செய்தல்.
- புலனாய்வுப் பிரிவின் நாளாந்த தபால் தரவுகளை முறைமையினுள் உள்ளீடு செய்தல்.
- பிரிவினுள் விசாரணை சார் தரவுகளை சேகரிப்பதற்காக முறையான கணிணித் தரவு முறைமை ஒன்றை பராமரித்து பேணுதல்.
- பிரிவினுள் நலன்புரிச் சங்கம் ஒன்றை ஆரம்பிப்பதனூடாக உத்தியோகத்தர்களது பிறந்த நாள், இறுதிச் சடங்குகள், சுற்றுலாக்கள் போன்ற செயற்பாடுகளை வலுவூட்டுதல்.
- உற்பத்தித் திறன் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக பிரிவின் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்.
- பிரிவிற்குரித்தான ஆவணங்கள், கோவைகளைப் பேணுவதற்காக பதிவுக் கூடம் ஒன்றைப் பராமரித்தல்.
- பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களது அறிவு, உள நலம் போன்றனவற்றை மேம்படுத்துவதற்காக நூலகம் ஒன்றை நடாத்துதல்.
- முதலுதவி அலகொன்றை பிரிவினுள் நடாத்திச் செல்லல்.

### iv. சவால்கள்

- பிரிவில் பணியாற்றிய குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை பெற்றுச் சென்றுள்ள காரணத்தால் புலனாய்வு உத்தியோகத்தர்களது பற்றாக்குறை நிலவுகின்றது.
- மாவட்ட செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள புலனாய்வு அலகுகளின் செயற்பாடுகள் செயலிழந்துள்ள காரணத்தினால் அமைச்சிற்கு நேரடியாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்திருத்தல்.

- விசாரணைகளை மேற்கொள்ளும் போது உத்தியோகத்தர்களது இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதில் உள்ள சவால்கள்
- ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படக்கூடிய தடைகள்
  உ+ம்: ஸ்ரீ லங்கா பொலிஸ், இலஞ்சம் மற்றும் ஊழல் முறைப்பாடுகள் விசாரணை ஆணைக்குழு
- தமிழ் மொழி மூலமான முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படும் போது மொழி பெயர்ப்பில் சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றது.
- புலனாய்வுப் பணிகளுக்காக தூரப் பிரதேசங்களில் அமைந்துள்ள மாவட்டங்களுக்கு செல்வதற்கு அவசியமான போக்குவரத்து வசதிகள் போதியளவில் கிடைக்காமை.
- ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடும் போது புலனாய்வுப் பிரிவினுள் அன்றாடம் அதிக எண்ணிக்கையிலான ஆவணங்கள் சார்ந்த கடமைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் போது, விசாரணை அறிக்கைகளின் நகல் பிரதிகள் மற்றும் மென் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்படுவதால், பிரிவினுள் உள்ள அச்சு இயந்திரம் மற்றும் நகல் பிரதியெடுக்கும் இயந்திரம் ஆகியனவற்றை நித்தமும் பயன்படுத்த வேண்டியேற்படுகின்றது. இருப்பினும், தற்போதளவில் அக் கருவிகளுக்கு அவசியமான டோனர் வசதிகள் இல்லாமை காரணமாக பிரிவின் அன்றாட செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன.

### v. எதிர்கால இலக்குகள்

- மனித மற்றும் பௌதீக வளங்களை விரிவுபடுத்துதல்.
- உத்தியோகத்தர்களது சேவைத் திருப்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்.
- அலுவலகத்தின் விசாரணைகளை விரிவுபடுத்துதல்.
- மாவட்ட புலனாய்வு அலகுகளை வலுவூட்டுதல்.
- ஒட்டுமொத்த பணிக்குழுவினருக்கும் தொடர்ச்சியான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் அவர்களுக்குரிய உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்குதல்.
- முறைப்பாடுகளை நெறிப்படுத்துதல் மற்றும் சாட்சி வழங்கும் செயற்பாடுகளின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை வகுத்தல்.
- மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக கட்டமைப்புக்குரித்தான அரச நிறுவனங்னகளில் மோசடி மற்றும் ஊழலை தடுப்பதாற்கான பொறிமுறை ஒன்றை அறிமுகம் செய்தல்.
- தொலைபேசி மூலமாக முன்வைக்கப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் ஏனைய முறைப்பாடுகளைப் பின் தொடரும் செயன்முறை ஒன்றை அறிமுகம் செய்தல்.

**அட்டவணை 2.18 : 2025 வருடத்திற்கான உத்தேச வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் (சாராம்சமாக)**

| # | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டு செய்யப்பட்டுள்ள மொத்த செலவு (ரூ. மில்லியன்) | 2025ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக உத்தேசிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|
| 01. | புலனாயவு உத்தியோகத்தர்களுக்கான திட்டமிடல் பயிற்சி | 01 | 01 |
| 02. | மாவட்ட மட்டத்தில் பிரதேச நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டுள்ள பதவி நிலை உத்தியோகத்தர்களை அறியப்படுத்துவதற்கான பயிற்சி செயலமர்வு ("Road | 02 | 02 |

| # | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டு செய்யப்பட்டுள் ள மொத்த செலவு (ரூ. மில்லியன்) | 2025ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக உத்தேசிக்கப்பட்டுள் ள ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|
| | Map for Better Service Delivery) | | |
| 03. | குற்றம் சாட்டப்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பிலான கற்கை ஆய்வொன்றை நடாத்துதல். | 01 | 01 |
| 04. | அலுவலக விசாரணை செயற்பாடுகள் | 01 | 01 |
| 05. | சேவை நிலையத்திற்கு வெளியே புலனாய்வு உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் பயிற்சிகள் (Out Bound Training for investigation officers) | 1.5 | 1.5 |
| 06. | Laptop | 04 | 04 |
| 07. | புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கான பயணப் பைகள் (Bags) | 01 | 01 |
| **மொத்தம்** | | **11.5** | **11.5** |

### vii. நிறுவனத்தின் முன்னேற்றம்

**அட்டவணை 2.19 : நிறுவனத்தின் வழமையான செயற்பாடுகளின் முன்னேற்றம் ( 2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

| # | அடிப்படைச் செயற்பாடுகள் | முன்னேற்றம் | விபரம் |
|---|---|---|---|
| 01. | கிடைக்கப்பெற்றுள்ள பொதுமக்களின் முறைப்பாடுகளின் எண்ணிக்கை (தபால், மின்னஞ்சல், தொலைநகல், 1905 தொலைபேசி முறைப்பாடு மூலம்) | 484 | 2024/01/01 முதல் 2024/12/31 வரை |
| 02. | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை<br>i. **ஆரம்ப விசாரணை மூலம்**<br>• நிறைவு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை - 28<br>• இரத்துச் செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை - 02<br>• வேறு பிரிவுகளுக்கு கையளிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை - 02<br>• ஆரம்பிக்கப்பட்டு, நடாத்திச் செல்லப்பட்டு, அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும், அறிக்கை தொடர்பில் தீர்மானம் வழங்கப்பட வேண்டிய விசாரணைகளின் எண்ணிக்கை - 79<br>• விசாரணைகளின் எண்ணிக்கை தொடங்கப்படவில்லை - 23 | 134 | 2024/01/01 முதல் 2024/12/31 வரை |

| # | அடிப்படைச் செயற்பாடுகள் | முன்னேற்றம் | விபரம் |
|---|---|---|---|
| | **ii. விடயக் கோவைகள் மூலம்**<br>• இரத்துச் செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை - 05<br>• வேறு பிரிவுகளுக்கு கையளிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை - 03<br>• பிரதேச செயலகம் அல்லது மாவட்ட செயலகங்களிலிருந்து அறிக்கை கோரப்பட்டவைகளின் எண்ணிக்கை - 109<br>• நிறைவு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை - 90 | 207 | |
| | **iii. 1905 பொதுமக்கள் முறைப்பாட்டு அலகின் மூலம்**<br>• நடைபெற்றுக் கொண்டிருக்கும் - 30<br>• நிறைவு செய்யப்பட்ட - 10 | 135 | |
| 03. | வழங்கப்பட்ட குற்றப் பத்திரிகைகளின் எண்ணிக்கை | 35 | 2024/01/01 முதல் 2024/12/31 வரை |
| 04. | "Road Map for Better Service Delivery" அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். | 7 | 2024/01/01 முதல் 2024/12/31 வரை |
| 05. | அலுவலக ஆய்வுகளை நடாத்துதல். | 03 | 2024/01/01 முதல் 2024/12/31 வரை |

## 2.6. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

### i. நோக்கம் மற்றும் செயல்பாடு

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40வது பிரிவின்படி நிறுவப்பட்ட பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளக கணக்காய்வுப்பிரிவு, பிரதான கணக்காய்வாளர் மற்றும் நிர்வாகத்தின் பிரதான கணக்காய்வாளர் மற்றும் பிரிவு 40(3) மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. கணக்காய்வு பிரிவு சுற்றறிக்கை எண். DMA/01/2019 மற்றும் FR. 134(1) இன் படி, பிரதான கணக்கீட்டு அதிகாரியாக அமைச்சின் செயலாளரிடம் நேரடியாக அறிக்கையிடுவதற்கு பிரதான உள்ளக கணக்காய்வாளர் பொறுப்பாவார் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ சுற்றறிக்கை இல. DMA/01/2019 (03) இன்படி திணைக்களத்தின் அனைத்து நிதி மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் அமைச்சின் செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது

- வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் படி உள்ளக கணக்காய்வுகளை நடத்துவதற்கும் குறைபாடுகள் மற்றும் பரிந்துரைகளைப்பற்றி விவாதிப்பதற்கும் ஒரு பொறிமுறையாக முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல. DMA/01/2019 மற்றும் இல. 5.3 இல் உள்ள அறிவுறுத்தல்களின் படி கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டங்களை நடத்தவும்

- முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல. DMA/01/2019 பந்தி இல.5.3ல் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி 25 மாவட்டச் செயலக அலுவலகங்கள் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் காலாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் 104 கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் உறுப்பினராக பங்கேற்பதும்.

- மாவட்டச்செயலகம் மற்றும் அமைச்சின் ஒவ்வொரு திணைக்களத்திற்கும் பொருத்தமான நிதிக் கணக்காய்வு, செயல்திறன் கணக்காய்வு, பணத்திற்கான பெறுமதி, முறைமை கணக்காய்வு போன்ற உள்ளக கணக்காய்வுகளை நடாத்தி கணகாய்வு விசாரணைகளை வழங்குதல்.

- 25 மாவட்டச் செயலகங்களின் பிரதான உள்ளக கணக்காய்வாளர்களின் கணக்காய்வு அறிக்கைகளைப் பின் தொடர்ந்து அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துதல்.

- மாவட்டச் செயலகங்களின் பிரதான உள்ளக கணக்காய்வாளர்களின் காலாண்டு அறிக்கைகளின் அடிப்படையில் அமைச்சுக்களின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் அறிக்கையை காலாண்டு அடிப்படையில் தயாரித்து திறைசேரிக்கு அனுப்புதல்.

### ii. விசேட அடைவுகள்

25 மாவட்டச் செயலகங்கள் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் காலாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் 104 கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் உறுப்பினராக பங்கேற்பது.

### iv. சவால்கள்

- உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துதல்.

### v. எதிர்கால இலக்குகள்

- பொதுக் கணக்குக் குழுவுக்குப் பரிந்துரைக்கப்படும் கணக்காய்வு வினாக்கள் அல்லது குறைக்கப்பட்ட கணக்காய்வு வினவல்கள் இல்லாமல் அமைச்சினை மிகவும் வலுவான உள்ளக கட்டுப்பாட்டாக மாற்றுதல்.

## 2.7. பொறியியல் பிரிவு

### i. நோக்கம் மற்றும் செயல்பாடு

பொறியியல் துறையின் முக்கிய பொறுப்பாக, மாநில நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கள் (உள்நாட்டு அலுவல்கள் பிரிவு) விதிகளின் கீழ் நடைபெறும் அனைத்து கட்டுமானங்களும் வட்ட நிர்மாணத் திட்டங்கள் தொடர்பான பணிகள், உள்ளூர் மட்டத்தில் கட்டுமானப் பழுதுபார்ப்பு, பிற மாநிலங்கள் கட்டிடம் தொடர்பான கட்டடக்கலை மற்றும் பொறியியல் வடிவமைப்புகளை மேற்கொள்வது நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான கட்டுமானம்,அந்த அனைத்து திட்டங்களின் கட்டுமான நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப மேற்பார்வை மற்றும் ஆலோசனை. மேலும்"நில மெதுர" கட்டிடத்தில் செயல்பாடுகள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு மேற்பார்வை இணைக்கப்பட்ட நடவடிக்கைகள் செய்யப்படுகின்றன.

- பொறியியல் மற்றும் பராமரிப்பு துறை அதிகாரிகளின் பணியை மேற்பார்வையிடுதல் மற்றும் கட்டுப்படுத்துதல்
- உள்நாட்டலுல்கள் பிரிவினால் செயல்படுத்தப்படும் கட்டுமானத் திட்டங்களின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையை வழங்குவதற்கு ஆலோசனை நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.
- உள்நாட்டலுல்கள் பிரிவினால் ஒதுக்கப்பட்ட மொத்த செலவு மதிப்பீடு ரூ.200 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் கட்டுமானத் திட்டங்கள் தொடர்பான வடிவமைப்பு மதிப்பீடுகள் மற்றும் மாறுபாடு அறிக்கைகளை பரிந்துரை செய்தல்.
- உள்ளூர் மட்டத்தில் கட்டுமான பழுதுபார்ப்புகளை மேற்பார்வையிடுதல்
- கட்டுமானம் தொடர்பான திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கேட்டறிதல்
- மாவட்ட செயலக கட்டிடங்கள்/ பிரதேச செயலக கட்டிடங்கள் நிர்மாணித்தல்.
- மாவட்டப் பொறியாளர், கட்டிடக் கலைஞர், தொழில்நுட்ப அலுவலர் மற்றும் தொழில்நுட்ப உதவி அலுவலர்களின் தொழில்முறைப் பணியின் மேற்பார்வை
- அமைச்சு/மாவட்ட பொறியாளர்களின் பதவி உயர்வு மற்றும் பட்டயத் தகுதித் தரவுகளைப் பெறுதல் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களின் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- கட்டுமான தீர்வு செயல்முறைக்கு அமைச்சக செயலாளருக்கு தேவையான பொறியியல் ஆலோசனைகளை வழங்குதல்
- பரவலாக்கப்பட்ட வரவு செலவு தொடர்பான திட்டங்கள், பிற அமைச்சகங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் அவ்வப்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் பொறியியல் ஆலோசனைப் பணிகளை நடத்துதல்.
- உள்நாட்டு விவகாரத் துறையைச் சேர்ந்த அனைத்து சுற்றுலா விடுதிகளின் கட்டுமானத் திட்டங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செயல்படுத்துவது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.
- “நில மெதுர" நிர்வாக வளாகத்தின் நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல்

### ii. முன்னணி வரம்புகள்

- பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் (உள்நாட்டு அலுவல்கள் பிரிவு) அமைச்சின் விதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிர்மாணத் திட்ட மேற்பார்வை நடவடிக்கைகளின் முகாமைத்துவம்.
- உள்ளூர் மட்டத்தில் கட்டுமான பழுதுபார்ப்புகளை மேற்பார்வையிடுதல்
- கட்டுமானம் தொடர்பான திட்டங்களின் முன்னேற்ற மதிப்பாய்வு
- "நில மெதுர" கட்டிடத்தின் செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகளை மேற்பார்வையிடுதல்

### iii. சவால்கள்

- தகுதிவாய்ந்த போட்டி ஆலோசனை நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கத் தவறுதல் (அதன் மூலம் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு வரம்பை மீறிச் செலவுகள் ஏற்படும்)
- ஒப்பந்த காலத்திற்கு அப்பால் திட்ட கட்டுமான பணிகள்
- திட்டங்களைக் கட்டுப்படுத்தும் கட்டுமான மேலாண்மை பாடத்தில் வல்லுநர்கள் அல்லாத காரணத்தால் பல தன்னிச்சையான கட்டுமானங்களால் சிக்கல்கள் எழுகின்றன.
- வாடிக்கையாளரின் அடிப்படைத் தேவைகளை சரியாகக் கண்டறியாதது –
- கருத்துருவாக்கம் மற்றும் சாத்தியக்கூறு (Conceptualization and feasibility, Cost Benefit Analysis, Return on Investment, Payback Period, செலவுப் பலன் பகுப்பாய்வு, முதலீட்டின் மீதான வருவாய், திருப்பிச் செலுத்தும் காலம் போன்றவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.)
- மாவட்ட செயலகங்களில் முதல் தர பொறியியலாளர்கள் இல்லாமை மற்றும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் அளவு தாள்களை சரிபார்த்தல், பரிந்துரைத்தல் மற்றும் அங்கீகரிப்பதற்கு தகுதியான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாததால்.
- கட்டுமானத் திட்டங்களுக்கு தொழில்நுட்ப தணிக்கை மற்றும் தொழில்நுட்ப உள்ளகக் கணக்காய்வு குழுக்களைப் பயன்படுத்துவதில்லை
- பணியாளர்கள் பற்றாக்குறை
- கட்டுமானத் தொழிலில் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக, கட்டுமானத் தொழிலின் முன்னேற்றம் பின்தங்கியுள்ளது
- பொருளாதார நெருக்கடியால் கட்டுமானப் பொருட்களின் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் காரணமாக, கட்டுமானத் தொழில் கடுமையாகச் சவாலுக்கு உள்ளாகியுள்ளது.
- மின் மற்றும் இயந்திர உபகரணங்களின் பற்றாக்குறை மற்றும் நிதி ஓட்டம் இல்லாமை மற்றும் "நில மெதுர" கட்டிடத்தின் செயல்பாடுகள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகளுக்கான கட்டணம் செலுத்துவதில் தாமதம். தாமதமாகப் பணம் செலுத்தியதால் மற்ற தரப்பினருடன் நம்பிக்கையின்மை பிரச்சனை.
- மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் முறையான ஆய்வுகள் இன்றி ஒரு வருடத்தில் பெருமளவிலான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதால் பல வேலைத்திட்டங்கள் முறையான ஆய்வுகள் இன்றி ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது.

### iv. சிறப்பு அணுகுமுறைகள்

- கட்டுமானத் தொழில்கள் தொடர்பாக பொறியியல் துறையின் செயல்பாட்டை செயல்படுத்துதல்.
- இந்த ஆண்டு பல கட்டுமான திட்டங்களை முடிக்க நடவடிக்கை எடுத்தல்.
- "நில மெதுர" கட்டிடத்தின் செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு தொடர்பான செயல்பாடுகளை சீரமைப்பதன் மூலம், கட்டிடத்தின் பராமரிப்பு பணிகளை ஒழுங்கான முறையில் மேற்கொள்ள முடியும்.
- மாவட்ட அளவில் கட்டிட நிர்மாணத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் கருத்தில் கொள்ள வேண்டிய கட்டுமான முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளை அறிமுகப்படுத்த முடியும்.

### iv. எதிர்கால இலக்குகள்

- திருப்திகரமான பொதுச் சேவை வழங்குதல் மற்றும் வாடிக்கையாளர்/பயனர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பதிலளிக்கக்கூடிய வகையில் அலுவலகக் கட்டமைப்பை உருவாக்குதல்.
- அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலக நிர்மாண திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளின் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் மேற்பார்வையை வழங்குதல்.
- இந்த அமைச்சகத்தின் உள்நாட்டலுவல்கள் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து சுற்றுலாப்

விடுதிகளின் கட்டுமானத் திட்டங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செயல்படுத்துவது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

- இந்த அமைச்சின் உள்துறைப் பிரிவினால் ஒதுக்கப்படும் கட்டுமானத் திட்டங்களுக்கான பொறியியல் பணிகள் மற்றும் அரசு விழாக்களுக்கு மற்ற அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- மாவட்ட பொறியாளர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்களின் பதவி உயர்வுக்கு வசதி செய்தல், தொழில்முறை தகுதிகளைப் பெறுவதற்கும் பட்டய அந்தஸ்தைப் பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது, தொழில்நுட்ப ஊழியர்களின் பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் அவர்களுக்கு தேவையான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து நடத்துதல்.
- சிவில் சேவை அதிகாரிகள் தங்கள் ஓய்வு நேரத்தை திருப்திகரமாக செலவிட சுற்றுலா பங்களாக்களின் வசதிகளை மேம்படுத்துதல்.

**அட்டவணை 2.20: பொறியியல் பிரிவு - 2025 ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் (சுருக்கமாக)**

| # | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ.மீ) | 2025 வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடுகள்(ரூ. மீ) |
|---|---|---|---|
| 01. | செயல்பாடுகள் "நிலா மதுரா, பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு சேவை செயல்பாடுகள் | 51.37 | 51.37 |
| 02. | முக்கிய உபகரணங்கள்/அமைப்பு முறிவுகள் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் | 22.66 | 22.66 |
| 03. | நிலா மதுரா"கட்டிடத்தில் மின்சாரம் ஜனக இயந்திரங்கள் எரிபொருள் தேவை | 3.19 | 3.19 |
| 04. | கள ஆய்வு செலவுகள் | 2.36 | 2.36 |
| 05. | நடுவர் மன்றம் | 2.36 | 2.36 |
| 06. | பயிற்சி | 1.77 | 1.77 |
| | **மொத்தம்** | **83.71** | **83.71** |

**vi. பிரிவின் நிதி முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

**தொடர் செலவுகள்** - ""நிலா மெதுரா" கட்டிடத்தின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வது - ரூ.மீ 43.25
**மூலதன செலவு** - இல்லை

**v. முன்னேற்றம்பிரிவின்**

**நிறுவனத்தின் பொதுப் பணிகளின் முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

- "நிலா மெதுர" கட்டிடத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் (CEBC) மற்றும் தொடர்புடைய சப்ளையர்களை ஒருங்கிணைத்து தொடர்புடைய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

.

## 2.8.திட்டமிடல்பிரிவு

### i.நோக்கம்மற்றும்செயல்பாடு

- அமைச்சு தொடர்பான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, காலாண்டு முன்னேற்ற மீளாய்வை நடைமுறைப்படுத்துகின்றது
- பரிந்துரைக்கப்பட்ட திகதியின்படி அமைச்சகத்தின் வருடாந்த செயல்திறன் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- வருடாந்தம் வரவு செலவுத் திட்ட வாசிப்பு தொடர்பான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்.
- தேசிய அளவிலான தரவு செயல்பாட்டு அமைப்பு மற்றும் ஆதார விவரத்தை உருவாக்குதல்.
- சிறப்பு மற்றும் அவசர சிக்கல்கள் மற்றும் கேள்விகளுக்கான திட்டக் கருத்துத் தாள்களைத் தயாரித்தல்.
- நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான திட்டங்கள் மற்றும் திட்டங்களின் ஒருங்கிணைப்பு.
- இணைய வழியிலான தகவல் அமைப்பை நிறுவுதல் மற்றும் புதுப்பித்தல், இதனால் தேவைப்படும் போது துல்லியமான தகவல்களை உடனடியாக வழங்க முடியும்.

### ii. சவால்கள்

- மிகக் குறுகிய காலத்தில் வெளி நிறுவனங்களால் கோரப்பட்ட அறிக்கைகளை உடனடியாக தயாரித்து சமர்ப்பித்தல்.
- மிகக் குறைந்த அளவிலான அதிகாரிகள் குழுவால் அலுவலகப் பணிகளை மேற்கொள்வது.

### iii. எதிர்கால குறிக்கோள்கள்

- பிராந்திய மற்றும் மாவட்ட அளவில் நீண்டகால அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்கி, தேசிய வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் இருந்து திட்டத்திற்கு ஏற்ப ஒதுக்கீடுகளை வெளியிடுவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல் மற்றும் அதன் செயலாக்கத்தின் போது முன்னேற்றக் கட்டுப்பாடு மற்றும் மதிப்பீட்டில் தேவையான பணிகளை வழங்குதல்.

### iv. விசேட சாதனைகள்

**வழமையான செயற்பாடுகளின் முன்னேற்றம்**
**( 2024.01.01 முதல் 2024.12.31வரை)**

- இலங்கை முழுவத்தையும் உள்ளடக்கிய அனைத்து துறைகளின் புதுப்பித்த தரவுகளை வழங்கும் ஒரு பரவலாக்கப்பட்ட வள சுயவிவரத்தை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல் அமைச்சகத்தின் வருடாந்திர செயலாற்று அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நான்காம் காலாண்டு வரையிலான முன்னேற்ற ஆய்வு அறிக்கை நிறைவடைந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டுக்கான அமைச்சகத்தின் வருடாந்த செயற்திறன் அறிக்கை, உரிய தேதிக்குள் அச்சிடப்பட்ட பிரதிகளுக்குக் கோரப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- மாவட்ட மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தை எடுத்து அவற்றை அமைச்சின் செயலாளரிடம் மாதாந்தம் சமர்ப்பித்தல்.
- 2024/2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை வாசிப்பது தொடர்பான முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 2.9. பிராந்திய நிர்வாக மறுசீரமைப்புப் பிரிவு

### நோக்கம்

தேசிய கொள்கை கட்டமைப்பில் கூறப்பட்டுள்ள நோக்கங்களை அடையும் வகையில், நாட்டில் உள்ள உள்ளூர் நிர்வாக அமைப்பால் (மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள்) மேற்கொள்ளப்படும் பொதுமக்களுக்கான சேவை வழங்கும் பொறிமுறையை மேம்படுத்துதல்.

- அடிப்படைத் தகவல்கள், செயல்முறைகள் மற்றும் வளங்களை சிறப்பாக ஒருங்கிணைப்பதற்கு முன்னுரிமை அளித்து, பிரதேச மற்றும் மாவட்ட நிர்வாகம் தொடர்பான செயற்பாடுகளை மீளாய்வு செய்தல்.
- பொதுமக்களுக்கு உகந்த முறையில் பணி நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் பிரஜைகள் பட்டயத்தை மீளாய்வு செய்தல்.
- மாவட்ட, பிரதேச மற்றும் கிராம அலுவலர் பிரிவு மட்டங்களில் திறன் மேம்பாடு மற்றும் மனப்பான்மை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குதல்.
- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் முன்னேற்றத்துடன் தொடர்புடைய மிகவும் உகந்த சேவைகளை வழங்குவது தொடர்பான தலையீடுகள்.

### i.செயல்பாடு

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 'இகிராம அலுவலர்-' (eGN) திட்டம் மற்றும் இன்குபேட்டர்கள் முடுக்கிகளுக்கான வணிக/ நிலைத்தை நிறுவி செயற்படுத்தும் திட்டத்திற்கான மூலோபாய, கொள்முதல் மற்றும் கருத்திட்ட முகாமை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- நிறுவன மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட தலைமையின் கீழ், பிரதேச மற்றும் மாவட்ட நிர்வாகம் தொடர்பான செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். குறிப்பாக பொது நட்பு முறையில் பணி நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் பிரஜைகள் பட்டயத்தை மீளாய்வு செய்தல்.
- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளில் சேவை வழங்கல் மற்றும் உள்ளக வள முகாமை செயல்பாடுகளுக்கு தேவையான தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாடுகளை அறிமுகப்படுத்துதல்.
- வள முகாமை உட்பட, துறையின் நோக்கத்துடன் தொடர்புடைய செயல்பாடுகளை ஒருங்கிணைக்க அரச மற்றும் அரசசாரா பங்குதாரர்களுடன் பயனுள்ள ஒத்துழைப்புகளை உருவாக்குதல் வள முகாமைத்துவம் உட்பட துறையின் நோக்கம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க அரசு மற்றும் அரசு சாரா பங்குதாரர்களுடன் பயனுள்ள ஒத்துழைப்பை உருவாக்குதல்.

✓ **'இ-கிராம அலுவலர்' (eGN) கருத்திட்டத்தை செயற்படுத்தல்.**

பிரஜைகளுக்கு மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பயன்படுத்த இலகுவான முறையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வீட்டு அடிப்படையிலான தரவுத்தள அடிப்படையிலான தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப அமைப்பின் (வன்பொருள், மும்மொழி மென்பொருள் மற்றும் இணைய இணைப்பு உட்பட) மூலம் தேவையான பொதுமக்கள் சேவைகளை வழங்குதல் மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கு 14,022 பேர் கொண்ட கிராம அலுவலர் சமூகத்தை வலுப்படுத்தும் நோக்கில் உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து, டிஜிட்டல் உள்கட்டமைப்புக்கு பொறுப்பான முன்னைய அமைச்சினால் இந்தத் திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. வீட்டு அடிப்படையிலான அடிமட்ட தகவல்களைக் கொண்ட அரசாங்கத்தின் மிகவும் நம்பகமான தகவல் ஆதாரமாக, இது பிற ஒழுங்குமுறை

மற்றும் அபிவிருத்தி நோக்கங்களுக்காகவும் சிறப்பாக பயன்படுத்த முடியும்

**2.1.படங்கள்:-** இ- கிராம அலுவலர் (eGN) கருத்திட்டம் - வீட்டு அலகுகள் மட்டத்தில் தரவுகளை சேகரிக்கும் நடவடிக்கைகள்





**2.2.படங்கள்:-** களுத்துறை மாவட்டத்தில் வீட்டு பிரஜைகள் தரவு மாதிரிப் படிவங்கள் வருடி எடுத்தல்





**2.3.** புத்தளம் மாவட்டத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை கணினி பயிற்சி திட்டங்கள்





✓ இன்கியுபேட்டர் / எக்சலரேடருக்கு வியாபார நிலையமொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டு நடைமுறைப்படுத்தும் கருத்திட்டத்தை செயற்படுத்தல்

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணப் பகுதியில் ஒரு வணிக மையத்தை நிறுவி பராமரிப்பதற்காக, தகவல் தொழில்நுட்பம் உட்பட பல வணிகத் துறைகளை, குறிப்பாக புத்தாக்க மற்றும் இளம் தொழில்முனைவோரை இலக்காகக் கொண்டு, இந்தத் திட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துடன் இணைந்து திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது.

### ii. விசேட அடைவுகள்

- நிலையான பிரஜைகள் சேவை வழங்கல் அமைப்பிற்கு விரிவான, நம்பகமான ஒருங்கிணைந்த வீட்டு மற்றும் பிரஜைகள் தரவுத்தளத்தின் அவசியத்தை அரசாங்க நிறுவனங்கள் புரிந்துகொள்ளச் செய்தல். இந்தத் தேவை 'இ-கிராம அலுவலர்' (eGN) கருத்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது, மேலும் இந்தக் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டம், முன்னோடி கட்டத்தின் அனுபவங்களின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்றது.

  ✓ களுத்துறை, கொழும்பு, மன்னார், புத்தளம், ஹம்பாந்தோட்டை, காலி மற்றும் கம்பஹா மாவட்டங்களில் மாவட்ட செயலக மட்டத்தில் தரவு சேகரிப்பு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் களுத்துறை மற்றும் மன்னார் மாவட்டங்களில் தரவு சேகரிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும்

களுத்துறை மாவட்டத்திலும் தரவு சேகரிப்பு தாள்களை ஸ்கேன் செய்யும் நடவடிக்கையும் நிறைவடைந்துள்ளது. ஏனைய மாவட்டங்களிலும் தரவு சேகரிப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ✓ கருத்திட்டத்தின் பயனாளிகளை இலக்காகக் கொண்டு விளம்பரம் மற்றும் தகவல்தொடர்புக்காக வெளிப்புற வடிவமைப்பாளர்களால் பூர்த்தி செய்யப்பட்ட விளம்பரங்கள், பயனர் கையேடுகள் மற்றும் பிற படைப்புப் பொருட்களைப் பயன்படுத்தி விளம்பரம் மற்றும் தகவல்தொடர்புக்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

### iii. சவால்கள்

**• <u>இ-கிராம அலுவலர் (eGN) திட்டம்</u>**

- ✓ கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய டேப் கணினிகள் மற்றும் கணினி அச்சுப்பொறிகளை வழங்குவதற்கான கொள்முதல் முறை தொடர்பாக அமைச்சரவை முடிவின் பிரகாரம் அரசாங்க நிதி நிலைமையில் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவின் அறிக்கையின்படி முன்மொழியப்பட்ட மிகவும் பயனுள்ள மாற்று முறைகளை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படல்.
- ✓ கருத்திட்டத்தின் கொள்முதல் செயல்முறைகளில் எதிர்பாராத தாமதங்கள். வெளிப்புற பங்குதாரர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒத்துழைப்பை சரியான நேரத்தில் பெறத் தவறியதால் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்படுத்தலில் தாமதம் ஏற்படல்.
- ✓ அரசாங்க முன்னுரிமை கருத்திட்டங்கள் காரணமாக தரவு சேகரிப்பு நடவடிக்கைகளை இலக்கிடப்பட்ட காலக்கெடுவிற்குள் நிறைவுசெய்ய முடியவில்லை

- **<u>யாழ்ப்பாணப் பகுதியில் இன்குபேட்டர்கள்/முடுக்கிகளுக்கான வணிக மையத்தை நிறுவி இயக்குதல்.</u>**
  - ✓ யாழ்ப்பாண நகரில் இன்குபேட்டர்களை இயக்க போதுமான இடவசதி உள்ள கட்டிடங்களை அடையாளம் காண்பது கடினம், மேலும் அதற்காக நீண்ட காலம் எடுத்தல்.
  - ✓ நிதி உதவி பெறுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலத்தை நீடிப்பதற்கு இந்திய அரசாங்கம் எதிர்பாராத காலம் எடுத்தல்.
  - ✓ பொருத்தமான ஆலோசனை நிறுவனத்தைக் கண்டுபிடிப்பதில் சிரமம் காணப்பட்டமை.

### iv. எதிர்கால இலக்குகள்

- பல்வேறு நிலைகளில் அரசாங்க நிறுவனங்களினால் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் சரியான மற்றும் விரைவான முடிவெடுப்பதற்காக துல்லியமான மற்றும் புதுப்பித்த தகவல்களை வழங்குவதற்காக சமூக அடிப்படையிலான வீடு மற்றும் பிரஜைகள் தரவுத்தளத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டின் ஒவ்வொரு வீட்டு அலகுக்கும் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் ஒரு வீட்டுப் பதிவேட்டைத் தொகுத்தல். (Household Registry)
- மேற்கண்ட பணிகளுக்கு இணையாக, ஒவ்வொரு வீட்டு அலகுக்கும் (அமைச்சரவை முடிவுகளின்படி) ஒரு நிலையான மற்றும் தனித்துவமான வீட்டு எண்ணை ஒதுக்குவதற்கான ஒரு அமைப்பை உருவாக்குதல்.
- மேற்கூறிய தரவுத்தளத்தின் சேவைகளை பிற நிறுவனங்களுடன் அதிகாரப்பூர்வ நோக்கங்களுக்காகப் பகிர்ந்து கொள்வதன்

மூலமும், தேவைப்படும்போது அவற்றுக்கான விலையை நிர்ணயிப்பதன் மூலமும் கருத்திட்டச் செலவுகளை ஈடுசெய்வதற்கு ஒரு வணிக மாதிரியை அறிமுகப்படுத்துதல்.

- கிராம அலுவலர்களுக்கு கணினி கல்வியறிவு மற்றும் தொழில்நுட்பத்தை வழங்கி, அடிமட்டத்திலிருந்து அரசாங்கத்தின் டிஜிட்டல் மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு உதவுதல்.
- பிரதேச/கிராம மட்டத்தில், எளிமையான அணுகுமுறைகளிலிருந்து சிக்கலான அணுகுமுறைகள் வரை, பொருத்தமான நிர்வாக சீர்திருத்தங்களை சிறப்பாக ஒருங்கிணைத்தல்.
- மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள முக்கிய உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு பதவிக்கும் தனித்துவமான கையடக்க தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்தல்
- பிரதேச செயலகங்களில் பல்வேறு சேவைகளுக்கான நடவடிக்கைகளை மீளாய்வு செய்து தரப்படுத்தல் மற்றும் அதற்கான வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்தல்.
- ஆலோசனை, அமைப்பு வடிவமைப்பு மற்றும் வள உதவிக்காக பல்வேறு அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களுடன் கூட்டாண்மை மற்றும் நிலைத்தன்மையைப் பேணிவரல்.
- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளில் சேவை வழங்கல் மற்றும் உள்ளக வள முகாமைத்துவ செயற்பாடுகளுக்குத் தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பயன்பாடுகளின் நிலையான பயன்பாட்டுக்கு உதவுதல்.

**அட்டவணை 2.21 : பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு - உத்தேச வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு 2025 (சாராம்சம்)**

| # | கருத்திட்டத்தின்பெயர் | மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு (ரூ.மில்) | 2025 வரவுசெலவுத்தினால் உத்தேச ஒதுக்கீடு (ரூ.மில்) |
|---|---|---|---|
| 01. | 'இ - கிராம அலுவலர்' கருத்திட்டம் (eGN) | 3,900.00* | 990.80 |
| 02. | யாழ்ப்பாணத்தில் இன்குபேட்டர்கள்/முடுக்கிகளுக்கான வணிக மையத்தை நிறுவி இயக்குவதற்கான கருத்திட்டம். | 307.00 | 225.14 |

(* தற்போது ரூ.மில். 1,689.22 முழுமையான செலவு மதிப்பீட்டுக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.)

### v. பிரிவின் நிதி முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)

- இ-கிராம அலுவலர்' கருத்திட்டத்திற்கு 1,150,00 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளுக்குள் 29.26 மில்லியன் ரூபா நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாணத்தில் இன்குபேட்டர்/ஆக்ஸிலரேட்டருக்கான வணிக மையத்தை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல், இந்தக் கருத்திட்டத்திற்காக 65.00 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் முதல் மூன்று காலாண்டுகளில் கருத்திட்டத்தில் எந்த நிதி முன்னேற்றமும் ஏற்படவில்லை.

### vi. பிரிவின் முன்னேற்றம்

- இ - கிராம அலுவலர் கருத்திட்டம்

  ✓ அமைச்சரவையின் முடிவின் பிரகாரம் கிராம அலுவலர்களுக்கான 2 இல் 1 கணினிகள் கொள்முதல் மற்றும் ஏனைய கருத்திட்ட நடவடிக்கைகள்

தொடர்பாக பொது நிதியில் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்காக மாற்று முன்மொழிவுகளை செயல்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிக்க கொள்முதல் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- ✓ மென்பொருளில் மேம்பாடுகள் மற்றும் தேவையான திருத்தங்கள் குறித்து மென்பொருள் உருவாக்குநருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் முதல் கட்டம் ஒப்புக்கொள்ளப்பட்ட விலையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ✓ வீட்டு மக்கள் தொகை தரவுகளை சேகரிக்கும் செயல்முறை தற்போது மாவட்ட மட்டத்தில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. மேலும் களுத்துறை மற்றும் மன்னார் மாவட்டங்களில் தரவு சேகரிப்பு செயல்முறை முழுமையாக நிறைவடைந்துள்ளது.
- ✓ வீட்டுத் தரவுத் தாள்களை ஸ்கேன் செய்வதற்கான ஒப்பந்தத்தை வழங்கிய நிறுவனம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள அனைத்து தரவுத் தாள்களையும் ஸ்கேன் செய்யும் பணியை நிறைவுசெய்துள்ளது.
- ✓ களுத்துறை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் உள்ள அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் உள்ளடக்கிய கிராம அலுவலர்களுக்கான அடிப்படை கணினி பயிற்சி நிறைவுசெய்யப்பட்டுள்ளது.மேலும் இந்தப் பயிற்சியின் ஒருங்கிணைப்பு மற்ற மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன.

- **<u>வடக்கு பிரதேசத்தில் இன்கியுபிலேட்டர் / எக்சலேட்டருக்கான வணிக மையமொன்றை நிறுவும் கருத்திட்டம்</u>**.

  - ✓ இந்திய அரசின் உதவித் தொகையான 250 மில்லியன் ரூபாவை செயல்படுத்த தேவையான ஆரம்ப அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு மிகவும் பொருத்தமான ஆலோசனை நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
  - ✓ யாழ்ப்பாண நகரில் முன்மொழியப்பட்ட மையத்திற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு அரச அல்லது தனியார் கட்டிடத்தைக் அடையாளம் காணுமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்றாம் அத்தியாயம்

# 03. மாவட்ட மட்டத்தில் மொத்த விரிவான முன்னேற்ற சாரம்சம்

## 3.1. கொழும்பு மாவட்டம்

### i. அறிமுகம்

### பின்னணி

699 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட கொழும்பு மாவட்டம், 15 தேர்தல் பிரிவுகளையும், 13 பிரதேச செயலகப் பிரிவுகளையும், 557 கிராம அலுவலர் பிரிவுகளையும், 2,477,922 மக்கள்தொகையையும் கொண்டுள்ளது.

**மாவட்டத்தின் பிரதான பகுதிகள்**

**பிரதான பரப்பெல்லை**

- நிர்வாக, நிறுவன விடயங்கள் மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகள்
- நிதி முகாமைத்துவம்
- சமூக நலன்
- பொது சேவைகளை வழங்குதல்
- மாவட்ட பொருளாதார மேம்பாடு
- மானிய முகாமைத்துவம்
- அவசர இடர் நிலமை முகாமைத்துவம்

### நோக்கம்

- பிரதேச செயலகங்கள் 13 மற்றும் மாவட்ட செயலக நிர்வாக மற்றும் தாபன நடவடிக்கைகள்
- பொதுமக்களிடமிருந்தோ அல்லது நிறுவனங்களிடமிருந்தோ பெறப்படும் முறைப்பாடுகளை விசாரித்து உரிய நடவடிக்கை எடுத்தல்.
- மாவட்ட செயலகம் மற்றும் நிரல் அமைச்சக நிதிகளை திறம்பட பயன்படுத்தி வெளிப்படையான நிதி நிர்வாகத்தை பராமரித்தல்.
- ஓய்வூதியம், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு பிரதேச செயலகங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின் அளவீடுகள் மற்றும் தரநிலைகளைப் பராமரித்தல்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள்
- துப்பாக்கி மற்றும் வெடிபொருட்களுக்கான உரிமங்களை வழங்குதல்
- பல்வேறு அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும் திட்டங்களை செயல்படுத்துதல்.
- அஸ்வெசும பயனாளிகளுக்கு மானியங்களை வழங்குதல்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள்.
- பல்வேறு பேரிடர் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தைத் தணிக்க நிவாரணம் வழங்குதல்.

### மாவட்ட அளவில் சிறப்பு நடவடிக்கைகள்

- ஹோமாகம பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் முதல் கட்டப் பணிகள் நிறைவு.
- 2024 மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்புக்கு அமைய கட்டிடங்களை பட்டியல் படுத்தலை நிறைவு செய்தல்.
- திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவின் கிருள கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள 0.7335 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள ஹத்போதிய வத்த என்ற காணியில் சட்டவிரோதமாக வசிக்கும் 237 குடும்பங்களை, நகர அபிவிருத்திக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புகளில் படிப்படியாக மீள்குடியேற்றம் செய்தல். கடுமையான காற்று பேரழிவுகளுக்கு

தொடர்ந்து ஆளான குடும்பங்களுக்கு இது உதவும். ஏழைகளுக்கு பாதுகாப்பான வீடுகளை வழங்கவும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அதிக வணிக மதிப்புள்ள நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்தவும் இது உதவும்.

- வேகந்த வீட்டுவசதித் திட்டத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் உள்ள 57 குடும்பங்களுக்கு மாற்று வீடுகளை வழங்குவதன் மூலம் அவர்களின் உயிர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- கொலன்னாவை நகரசபைக்குச் சொந்தமான 49 பேர்ச்சர்ஸ் காணியில் அமைந்துள்ள ஆபத்தான மற்றும் பாழடைந்த அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதியான மஜீத் வீட்டுத் தொகுதியில் வசிக்கும் 47 குடும்பங்களுக்கு மாற்று வீடுகளை வழங்குவதன் மூலம் அவர்களின் உயிர் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- மற்றும் தினமும் ஏராளமான வாகனங்கள் மற்றும் பயணிகளால் பயன்படுத்தப்படு வெள்ளவத்தை கால்வாய்ப் பாதையையும் பாழடைந்த நிலையில் உள்ள தெஹிவளை பண்டாரநாயக்க மாவத்தையையும் இணைக்கும் பாலத்தின் புனரமைப்புப் பணிகளை தெஹிவளை கல்கிஸ்ஸை நகர சபையிடம் ஒப்படைப்பதன் மூலம் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்..
- வெளிநாட்டுக் கடன் உதவியின் கீழ் செயல்படுத்தப்பட்ட, ஒருகொடவத்தையிலிருந்து கடுவெல அதிவேக நெடுஞ்சாலை வரையிலான பழைய நீர் குழாய்களை அகற்றி புதிய நீர் குழாய்களை அமைக்கும் திட்டம், காணி கையகப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களால் தாமதமானது. கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்களான வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, தபால் திணைக்களம் மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் போன்ற தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து திட்டத்தை முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- கழிவுநீர் அகற்றல் அமைப்பில் உள்ள பலவீனங்களுக்கு தீர்வுகளை வழங்குவதன் மூலம் பனாகொட இராணுவ முகாமில் ஐந்து கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிகளை வழங்குவதை ஒருங்கிணைத்தல். இது இராணுவ முகாமிலிருந்து கழிவுநீரை வெளியேற்றுவதை நெறிப்படுத்தும் மற்றும் முகாமைச் சுற்றியுள்ள நெல் வயல்களுக்கு ஏற்படும் சுற்றுச்சூழல் சேதத்தைக் குறைக்கும்.

**சவால்கள்**

- குறைந்த வருமானம் கொண்ட மக்களை பொருளாதார பெறுமதியுள்ள உற்பத்தித் துறைகளில் ஈடுபடுத்துதல்.
- நகர்ப்புற தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு சுகாதார வசதிகளை உறுதி செய்தல்.
- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தயாரிப்புகளை ஏற்றுமதி தரத்திற்கு மேம்படுத்துதல்.
- அவ்வப்போது ஏற்படும் தொற்றுநோய் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்துதல்
- சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்து மாவட்ட மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிலச்சரிவுகள் மற்றும் தீ விபத்துகள் போன்ற பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாற்று வீடு மற்றும் காணிகளை வழங்குதல்.

**எதிர்கால இலக்குகள்**

- ஹோமாகம பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவு.
- தற்போதுள்ள குறைந்த வருமானம் கொண்ட மக்களில் குறைந்தது 25% பேரை உற்பத்திப் பொருளாதாரத்திற்கு வழிநடத்துதல்.

- முடிந்தவரை சமூகத்தை பயிரிட ஊக்குவித்தல்.
- நகர்ப்புற வீட்டுத் தோட்டங்களை ஊக்குவித்தல்

**அட்டவணை 3.1 2025வருடத்தில் உத்தேசிக்கும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு**

| # | கருத்திட்டத்தின் பெயர் | மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு (ரூ.) 2025 | 2025 வரவுசெலவுத்திட்ட உத்தேச ஒதுக்கீடு (ரூ) |
|---|---|---|---|
| 01. | ஹோமாகம பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவுசெய்தல். | 96.00 | 96.00 |

**ii. நிறுவனத்தின் நிதி முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

மீண்டுவரும் செலவினம் - ரூமில். 2,527.34
மூலதனச் செலவினம் - ரூமில். 238.00

**iii. நிறுவனத்தின் பௌதீக முன்னேற்றம்**

**அட்டவணை 3.2 : நடைமுறைப்படுத்தப்படும் மூலதனக் கருத்திட்டத்தின் முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

| # | விடயம் | நிதி மூலம் | நிகழ்ச்சித்திட்டங்கள் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டுச் செலவு (ரூ.மில்) | செலவு (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|---|
| 01. | பிரவேச வீதிகள் | உள்நாட்டு | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம், கொழும்பு மாவட்டத்தில் பல மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல், கிராமப்புற வீதி மேம்பாட்டுத் திட்டம் | 604 | 771.07 | 738.28 |
| 02. | கிராமப்புற பாலங்கள் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம், கொழும்பு மாவட்டத்தில் பல மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் | - | 0.00 | 0.00 |
| 03. | கிராமப்புற மின்சார நீட்டிப்புகள் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் | 2 | 1.55 | 1.46 |
| 04. | சுகாதார வசதிகள் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம், கொழும்பு மாவட்டத்தில் பல மேம்பாட்டுத் திட்டங்களை | 27 | 23.57 | 22.27 |

| # | விடயம் | நிதி மூலம் | நிகழ்ச்சித்திட்டங்கள் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டுச் செலவு (ரூ.மில்) | செலவு (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | செயல்படுத்துதல் | | | |
| 05. | விளையாட்டு மைதானங்கள் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் | 32 | 33.64 | 31.93 |
| 06. | சிறு நீர்ப்பாசனம் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் | 7 | 5.60 | 5.29 |
| 07. | கிராமப்புற பொருளாதார உள்கட்டமைப்பு | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் | 1 | 0.59 | 0.59 |
| 08. | மத நிலையங்களின் அபிவிருத்தி | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம், பிரிவேனா கல்வி மேம்பாட்டுத் திட்டம், கொழும்பு மாவட்டத்தில் பல மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல். | 328 | 205.02 | 202.08 |
| 09. | சமூக நலன் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம், கொழும்பு மாவட்டத்தில் பல மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் | 598 | 305.51 | 275.28 |
| 10. | வீட்டுவசதி அபிவிருத்தி | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் | - | 0.00 | 0.00 |
| 11. | சூரிய மின்கலங்கள் / மின்சாரம் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம், கொழும்பு மாவட்டத்தில் பல மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் | 52 | 94.20 | 93.73 |
| 12. | கிராமப்புற நீர் விநியோகம் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் | 2 | 0.52 | 0.52 |
| 13. | உத்தியோகப்பூர்வ விடுதிகள் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் | 27 | 28.25 | 27.37 |
| 14. | பிற உள்கட்டமைப்பு வசதிகள் | දේශීය | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம், கொழும்பு மாவட்டத்தில் பல மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் | 207 | 155.43 | 153.33 |
| மொத்தம் | | | | **1,887** | **1,624.95** | **1,552.13** |

**படங்கள் 3.1 கொழும்பு மாவட்டத்தில் திட்டங்கள் மற்றும் திட்டங்கள்**




கருத்திட்டத்தின் பெயர் வெலிக்கடை மேற்குப் - பிரிவில் உள்ள ஹீன் எலா சாலையில், உத்யான மாவத்தையில் உள்ள வீட்டின் இல 31/1 இன் பின்புறத்தில் முதலை வேலி அமைத்தல்.
இடம் வெலிக்கடை - ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே - மேற்கு பிரிவு
மொத்த செலவு .ரூ -0.95 (0.95)
செலவு .ரூ -0.92 (0.92)
ஆரம்பிக்கப்பட்ட திகதி -2024.07.29
நிறைவடையும் திகதி -2024.08.09



திட்டத்தின் பெயர் சங்கமித்தா பெண்கள் - பாடசாலையில் மரதானை பகுதியில் உள்ள சுவர் மற்றும் வாயிலைப் புதுப்பித்தல்.
இடம் வடக்கு பொரளை - திம்பிரிகஸ்யாய - பிரிவு
மொத்த செலவு 1 .ரூ -. 00மணி
செலவு 0 .ரூ -. 91(0.91)
தொடக்க தேதி 2024 -.03.28
நிறைவு தேதி 2024 -.04.22

**vi. அரச வருமான உழைப்புக் கருத்திட்டங்கள்**

**அட்டவணை 3.3 : கொழும்பு மாவட்டம் – வருவாய் 2024.01.01 முதல் 2024.12.31 வரை**

| வருமானத் தலைப்பு | வருமானம் ரூ.மில். |
|---|---|
| பரீட்சைகள் மற்றும் ஏனைய குத்தகைக்கூலி | 0.06 |
| கட்டிட வாடகை | 1.74 |
| வேறு வருமானம் | 16.10 |
| **மொத்தம்** | **17.90** |

## 3.1.2. கம்பஹா மாவட்டம்

### i. அறிமுகம்

#### பின்னணி

இலங்கையின் மொத்த நிலப்பரப்பின் 2.1% ஆக இருக்கின்ற கம்பஹா மாவட்டத்தின் முழு நிலப்பரப்பு சுமார் 1,387 சதுர கிலோ மீற்றர் ஆகும். கம்பஹா மாவட்டத்தின் சனத்தொகை சுமார் 2,638,733 ஆகும். மாவட்டத்தின் சனச்செறிவு அடர்த்தி கிலோ மீற்றருக்கு 1,902 ஆகும். இங்கு சுமார் 604,009 குடும்பங்கள் வாழ்கின்றன. உள்ளூராட்சி நிறுவன அடிப்படையில் நோக்குகின்றபொழுது இரண்டு மாநகர சபைகள், ஐந்து நகர சபைகள், பன்னிரண்டு பிரதேச சபைகள் காணப்படுகின்றன. 13 பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்ட இம்மாவட்டம் 1,177 கிராம அலுவலர் களங்களையும் 1,774 கிராமங்களையும் கொண்டுள்ளது.

#### மாவட்டத்தின் முக்கிய பணிகள்

#### முக்கிய பகுதிகள்

- 13 பிரதேச செயலகப் பிரிவுகள் தொடர்பான நிருவாகப் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மாவட்ட செயலகப் பணிகளை முறையாக நடாத்திச் செல்லல், மனித வள முகாமைத்துவம், பௌதிக வளங்களை மேம்படுத்தல், சுடுகலன் அனுமதிப் பத்திரங்கள் வழங்கல், சுடுகலன் அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக விதப்புரை வழங்கல், இடர் முகாமைத்துவம் மற்றும் டெங்கு நோய் பரவுதலை கட்டுப்படுத்தல்.
- உணவு உற்பத்தி, உணவு பாதுகாப்பு, போதைப் பொருள் நிவாரணம், சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
- விலைக்கட்டுப்பாடு, சிறுவர்த்தக அபிவிருத்தி, விளைதிறன் வேலைத்திட்டங்கள் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பாக பணியாற்றுதல்.
- கலாச்சாரம் மற்றும் சமயங்கள் தொடர்பான விழாக்களை ஒழுங்கு செய்தலும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதலும்.
- மாவட்ட செயலாளரால் அங்கீகரிக்கப் பட்ட செயற்திட்டங்களை முகாமைத்துவம் செய்தல்.
- செலவினத் தலைப்பு 256 இன் கீழ் நிதி முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகளை நடாத்திச் செல்லல்.
- ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி வரையறைக்குள் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஏற்பாடுகள் செய்தல் மற்றும் மானியங்கள் தொடர்பான முன்னேற்றம்.

#### விஷேட அடைவுகள்

- கம்பஹா மாவட்ட செயலகத்திற்கான நவீன நிருவாகக் கட்டிடத் தொகுதியை அமைத்தல்.
- ஜா எலை பிரதேச செலகத்திற்கான நவீன கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்தல்.

#### சவால்கள்

- வறுமை நிலையை இழிவளவாக்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- கழிவு முகாமைத்துவம்
- இடர்

#### எதிர்கால இலக்குகள்

- மாவட்ட மக்களுக்கு மிகச் சிறந்த வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்க அரச சேவையினை வழங்கல்.
- கிராமியப் பொருளாதாரத்தை வலுவூட்டி பல்வேறு வகையான வறுமை நிலைகளால் வாடுகின்ற அனைத்து வயது மட்டங்களையும் சார்ந்த ஆண், பெண் மற்றும் சிறுவர் போன்றோரின் வறுமை நிலையை அரைவாசியாக குறைத்தல்.
- மாவட்டத்திற்குள் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல்.
- அனைத்து பொதுமக்களுக்கும் சுத்தமான குடிநீரை வழங்கல்.

- குணநலம் பொருந்திய அதி நம்பிக்கை உள்ள நிலையான மற்றும் இடர் நிலைமைகளை தாங்கக் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை மாவட்டத்தினுள் அபிவிருத்தி செய்தல்.
- கால நிலை தொடர்பான இடர் விபத்துக்கள், தொற்று நோய்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தல், அனர்த்த நிலைகளின் போது மன உறுதியுடன் தளராமல் செயற்படும் மன ஆற்றலை வலுவூட்டல்.
- பொருந்திய பிரவேமொன்றுக்கு தேவையான நடவடிக்கைகளை தயார்படுத்தல்.

**ii நிறுவன நிதி முன்னேற்றம் (2024.01.01- 2024.12.31 வரை)**

மீண்டெழும் செலவுகள் - ரூ. மி. 2,640.41

மூலதனச் செலவுகள் - ரூ. மி. 558.21

**அட்டவணை 3.4: 2025 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு - செலவு முன்மொழிவுகள் (சுருக்கம்)**

| # | செயற்திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ரூ. (மி) | 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு ரூ. (மி) |
|---|---|---|---|
| 01 | புதிய மாவட்ட செயலக கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பு | 3940.04 | 200.00 |
| 02 | ஜா எலை பிரதேச செயலகத்திற்கு புதிய சூரிய மின்கலத் தொகுதியொன்றை பொருத்துதல் | 7.50 | 7.50 |
| 03 | மீரிகமை பிரதேச செயலகத்திற்கு புதிய சூரிய மின்கலத் தொகுதியொன்றை பொருத்துதல் | 3.00 | 3.00 |
| 04 | மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டிடத் தெகுதியொன்றை நிர்மாணித்தல் | 80.79 | 28.72 |
| | **மொத்தம்** | **4,031.29** | **239.22** |

**படங்கள் 3.2 : கம்பஹா மாவட்டத்தின் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்**



மஹர பிரதேச செயலகப் பிரிவு செயல் திட்டத்தின் பெயர் -தோன்கஹ வத்தை 1 ஆம் ஒழுங்கை சுதத் அவர்களின்

உத்தேச செலவு - ரூ.மில்.மி. 0.80

செலவு - ரூ.மில் 0.72



கட்டான பிரதேச செயலகப் பிரிவு

செயற் திட்டத்தின் பெயர்:- வடக்கு கிம்புலாப்பிட்டிய கம்பு ஆலை அருகே.

உத்தேச செலவு - ரூ.மில். 0.50

செலவு - ரூ.மில். 0.39

iii நிறுவன பௌதிக முன்னேற்றம்) ( **2024.01.01 இருந்து 2024.12.31 வரை** )

**அட்டவணை 3.5: செயற்பட்ட மூலதன நிதிசார் செயற்திட்டங்களின் முன்னேற்றம்**

| # | பணிகள் | நிதி மூலங்கள் | வேலைத்திட்டங்கள் | செயற்திட்ட எண்ணிக்கை | முழச் செலவு (மில்) ரூபாய் | செலவு (மில்) ரூபாய் |
|---|---|---|---|---|---|---|
| 01 | உட்பிரவேச விதிகள் | சமாந்திர அமைச்சுகள்ள (உள்நாட்டு நிதி) | பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டு வேலைத்திட்டம் / பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டம் / கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் / விசேட செயற்திட்டம் | 1175 | 1004.36 | 949.30 |
| 02 | கிராமிய பாலங்கள் | | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு வேலைத்திட்டம் / விசேட செயற்திட்டம் | | | |
| 03 | கிராமிய மின்சாரம் | | | 16 | 7.48 | 6.88 |
| 04 | சுத்திகரிப்பு சுகாதாரம் | | | 11 | 4.40 | 4.10 |
| 05 | விளையாட்டு மைதானங்கள் | | | 46 | 39.27 | 35.45 |
| 06 | சிறு நீர்ப்பாசனம் | | | 28 | 19.60 | 17.98 |
| 07 | கிராமிய பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி | | சௌபாக்யா வேலைத்திட்டம் / பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட வேலைத்திட்டம் / பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டம் | 30 | 23.40 | 20.49 |
| 08 | மத வழிபாட்டுத் தல அபிவிருத்தி | | பிரிவேனாக் கல்வி வலுவூட்டல் அபிவிருத்தி வேலைத்திட்டம் / பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி வேலைத்திட்டம் / பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டம் / விசேட வேலைத்திட்டம் | 317 | 241.60 | 223.31 |
| 09 | சமூக நலன்புரிகள் | | பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம்/மண்டல அபிவிருத்தித்திட்டம் | 627 | 303.63 | 278.65 |
| 10 | வீடமைப்பு அபிவிருத்தி | | | | | |
| 11 | சூரிய மின்கல தொகுதி / மின்சாரம் | | | 6 | 1.71 | 1.57 |
| 12 | கிராமிய நீர் விநியோகம் | | | 11 | 4.15 | 3.74 |
| 13 | அரச வாசஸ்தலங்கள் | | | 3 | 1.20 | 1.17 |
| 14 | ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் | | | 242 | 250.80 | 233.94 |
| **மொத்தம்** | | | | **2512** | **1901.60** | **1776.58** |

## 3.3. களுத்துறை மாவட்டம்

### i. அறிமுகம்

### பின்னணி

பரப்பளவு- 1598.0 சதுர கிலோமீற்றர்களை உள்ளடக்கிய களுத்துறை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்கள், 14 பிரதேச செயலகப் பிரிவுகள், 762 கிராம உத்தியோகத்தர் களங்கள், 2524 கிராமங்கள் மற்றும் 1,296,003 மக்கள் வசிக்கின்றனர்.

### மாவட்டத்தின் முக்கிய கூறுகள்

#### முக்கிய பகுதிகள்

- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் வறுமையிலிருந்து விடுபடுதல்
- நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல்,
- தொற்றக்கூடிய மற்றும் தொற்றாத நோய்களைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான மக்கள் சமூகத்தை உருவாக்குதல்.
- அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வசதிகளை அணுகுதல், மாவட்டத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரித்தல், பேரழிவுகளை எதிர்க்கும் வலிமையான கிராமப்புற சாலை அமைப்பை உருவாக்குதல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளுக்கு எதிராக செயல்படுதல்.

#### சிறப்புசாதனை

- மாவட்டத்தில் அலுவலக கட்டிடங்களின் வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் மக்களுக்கு உயர் சேவையை வழங்குதல். மாவட்டத்தில் உள்ள உரிமையற்ற காணிகளுக்கு பட்டா வழங்குவதன் மூலம் மக்களின் நிலவுடைமை பிரச்சனைகளை குறைத்தல்.

#### சவால்கள்

- வெள்ளம், சூறாவளி, நிலச்சரிவு, நகர்ப்புற வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற பேரிடர் சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது, மாவட்ட மக்களின் நில உடைமை பிரச்சனை, மாவட்ட கிராமப்புற மக்களை உற்பத்தித் துறைக்கு வழிநடத்துகிறது.

#### எதிர்கால இலக்குகள்

- காணி ஒதுக்கீட்டை அதிகரிப்பதன் மூலம் காணி உரிமையாளர் பிரச்சினைகளை குறைத்தல் மற்றும் நாட்டிற்கு பங்களிப்பு செய்யும் மாவட்டத்தில் கிராமப்புற மக்களின் சதவீதத்தை அதிகரிப்பது மற்றும் உற்பத்தித் துறைக்கு திரும்புவதன் மூலம் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்தல்.

### ii. நிறுவனத்தின் நிதி முன்னேற்றம்

(2024.01.01 இருந்து 2024.12.31 வரை)

தொடர் செலவுகள் - ரூ.மில் 2.701.74

மூலதன செலவு - ரூ.மில் 34,729,297.88

**அட்டவணை 3.6: 2025 ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் வரவு செலவுத் திட்டங்கள்.**
(சுருக்கமாக)

| # | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மீ) | 2025 பட்ஜெட்டில் எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடு ரூ. (மில்) |
|---|---|---|---|
| 1 | **கட்டிட பழுது**<br>**i. மாவட்ட செயலகம்**<br>**ii.பிரதேச செயலக அலுவலகங்கள்** | 40.000<br>93.216 | 40.000<br>93.216 |
| 2. | **கட்டிடம் மற்றும் கட்டுமானம் (கையகப்படுத்துதல்)**<br>**i. மாவட்ட செயலகம்**<br>**ii.பிரதேச செயலக அலுவலகங்கள்** | 295.4<br>10.0 | 295.4<br>10.0 |

iii. **நிறுவனத்தின் பௌதீக முன்னேற்றம் (2024.01.01 இருந்து 2024.12.31 வரை)**
**அட்டவணை 3.7: நடைபெறும் மூலதன நிதியளிப்பு திட்டங்களின் முன்னேற்றம்**

| # | கூறு | நிதி ஆதாரம் | திட்டம் | திட்டங்களின் | மொத்த செலவு | செலவு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 01 | கிராமப்புற உள்கட்டமைப்பு, வாழ்வாதார மேம்பாடு, | 001 | பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 773 | 547.12 | 190.888 |
| 02. | பத்து சிறப்பு ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி. | 2506 | மலையக தசாப்த அபிவிருத்தி | 249 | 425.210 | 54.751 |
| 03. | கிராமப்புற வாழ்வாதார மேம்பாடு | 2202 | செழிப்பு தயாரிப்பு கிராம திட்டம் | 13 | 20.978 | 9.204 |
| 04 | கிராமப்புற சாலைகள் | 2104 | கிராமப்புற வீதி அபிவிருத்தித்திட்டம் | 86 | 110.11 | 14.36 |
| 05 | மத மையங்களின் அபிவிருத்தி | 18-2205 | கிறிஸ்தவ மத நடவடிக்கைகள் | 2 | 2.403 | - |
| 06 | ஞாயிறு பள்ளி அபிவிருத்தி | 2205 | அபிவிருத்தியடையாத தம்ம பாடசாலைகளின் | 16 | 5.00 | - |
| 07 | மத மையங்களின் அபிவிருத்தி | 8-2205 | புத்தசாசன மத மற்றும் கலாச்சார விவகாரத்திட்டங்கள் | 30 | 15.225 | - |
| 08 | மத மையங்களின் அபிவிருத்தி | 2205 | பிரிவின் கல்வி வலுவூட்டும் திட்டம் | 10 | 3.75 | - |
| 09 | சுற்றுலா தொழில் அபிவிருத்தி | 122 | சுற்றுலா அபிவிருத்தி திட்டம் | 4 | 16.18 | - |
| 10 | பெருந்தோட்ட வலயத்தில் தோட்ட உட்கட்டமைப்பு | 022-2509 | நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு | 17 | 30.5 | - |
| 11 | பாடசாலை விளையாட்டு அபிவிருத்தி | 194-2-7-009-2509 | கிரிக்கட் அபிவிருத்தி திட்டம் | 15 | 20.451 | 18.348 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | பேரிடர் தணிப்பு திட்டம் | 103-02-17-02-2509 | பேரிடர் தணிப்பு திட்டம் | 02 | 30.65 | 23.96 |
| 13 | பாடசாலை அபிவிருத்தி | 001-02-06-023-2509 | மடால பாடசாலைக்க்கட்ட டத்தின் அபிவிருத்தி | 01 | 44.7 | 16.914 |
| **மொத்தம்** | | | | **420** | **1295.44** | **1057.80** |

பெண்கள், குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் செழுமை மேம்பாட்டு பணியகத்தின் கீழ், செழுமை உற்பத்தி கிராமத் திட்டம் 21 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு 2024 ஆம் ஆண்டில் ரூ. திரு. 20,978 முதலீடு செய்து 13 புதிய திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டங்களின் பயனாளிகளின் எண்ணிக்கை சுமார் 1900 மற்றும் சுமார் 1000 நேரடி மற்றும் மறைமுக வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**படங்கள் 3.3 : களுத்துறை மாவட்டத்தில் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்**





**களுத்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பொத்துப்பிட்டி கோக் தொழிற்சாலை தயாரிப்புகள்**




**பாலிந்தநுவர கித்துள் உற்பத்தி கிராமங்கள்**



**பாலிந்தநுவர கித்துள் உற்பத்திக்கிராமங்கள்**



தொடங்கொட பிரைவேட். இரத்தம் கோ. வசன்ஹேன வீதி (ஆலதுவ தமிழ் ஆரம்பப் பள்ளி வீதிக்கு எதிரே- 799 A ஆலாடுவ ரூ.4.0



பொம்புவல விதானவத்த வீதியின் அபிவிருத்தி ரூபா 3.0 மில்லியன்



தொடங்கொட தலேமுல்ல வீதி கொங்கிறீட் அமைத்தல். 3.0 மில்லியன் ரூ

## 3.4. கண்டி மாவட்டம்

### i. அறிமுகம்

**பின்னணி**

கண்டி மாவட்டமானது 1940சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளதுடன்13 தேர்தல் வட்டாரங்களையும் 20பிரதேச செயலகப் பிரிவுகளையும்,1188 கிராம அலுவலகர் பிரிவுகளைக் கொண்டிருப்பதோடு மக்கள் தொகையானது 1,499,168 ஆகவும் காணப்படுகிறது.

### மாவட்டத்தின் முக்கிய கூறுகள்
### முன்னுரிமை வரம்பு

- மாவட்டத்தின் பிரதான நிர்வாக அலகாக பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு தேவையான சேவைகளை வழங்குதல் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்

### நோக்கம்

- சட்டப்பூர்வமாக அங்ககரிக்கப்பட்ட அலுவல்கள் உட்பட அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவதோடு பிற அரசு நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நிகழ்ச்சி திட்டங்களை செயற்படுத்துதல்.

**செயற்பாடுகள்**

- மாவட்ட செயலகம் உட்பட பிரதேச செயலகங்கள் 20 மூலமாக நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளல், அபிவிருத்தி மற்றும் சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்,அபிவிருத்தித்திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல், கணக்காய்வு நடவடிக்கை மூலம் உள்ளக நிர்வாகத்தை வலுப்படுத்துதல், நிதி முகாமைத்துவம்

**விசேட சாதனைகள்**

- கோதுமை மாவின் பயன்பாட்டை குறைத்து கண்டி வலயத்தில் காணப்படும் 10 பாடசாலைகளின் சிற்றுண்டிச் சாலையில் தரமானதும் போசனை மிக்கதுமான உணவுகளை அறிமுகப்படுத்தல்.
- சுவையூட்டிகள், நிறமூட்டிகள் குறைந்த தரமான பிஸ்கட் வகைகளை அறிமுகப்படுத்தல். (முருங்கை இலையைப் பயன்படுத்தி வெங்காய மற்றும் வெள்ளைப்பூண்டு சுவையில் )
- புதிதாக வணிக உலகிற்கு பிரவேசிக்கும் வியாபாரங்களுக்காக 12 நாட்களைக் கொண்ட வதிவிட பயிற்ச்சி வழங்கல் கண்டி சிட்டி சென்டரில் 30 வியாபாரிகளுக்காக Hand Tech விற்பனைக் கூடங்களை நிறுவுதல்
- தொலை தூர பிரதேச நோயாளிகளுக்காக டெலி மெடிசின் நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல். (நோயாளி, நிபுணத்துவ வைத்தியர், சமூக சேவை உத்தியோகத்தர், தாதிகள் ஆகியோருடன் ஒருங்கிணைப்பு செய்து)
- சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முறைமைக்கு சேர்த்துக்கொள்வதில் தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தைப் பெறல்.

**சவால்கள்**

- உணவு உற்பத்திக்கான மூலப்பொருளின் விலை
- மூலப்பொருள் பெற்றுக் கொள்வதில் சிரமம்.
- போட்டிச் சந்தை
- இணைய தொடர்புகளில் காணப்படும் சிரமம்.
- நபர்களின் பொருளாதார அசௌகரியங்கள்.

## எதிர்கால இலக்குகள்

- இதனை கண்டி மாவட்டத்தில் பிரதேசச் செயலகங்கள் 20 ற்குள் 10 பாடசாலைகள் வீதம் 200 பாடசாலைகளில் பிரபலப்படுத்தல். சுவையூட்டிகள் மற்றும் நிறமூட்டிகள் அற்ற உணவுப்பண்டங்களை அறிமுகப்படுத்தல்
- சுவையூட்டிகள் மற்றும் நிறமூட்டிகள் அற்ற உணவுப்பண்டங்களை அறிமுகப்படுத்தல்..
- மாவட்டம் பூராகவும் 565 வியாபாரங்களை ஆரம்பித்தல்.
- வியாபார திட்டங்களை தயாரித்து நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கிராமிய அபிவிருத்தி வங்கியுடன் ஒருங்கிணைத்தல்
- இவ் வைத்திய சேவையை போக்குவரத்து சிரமம் காணப்படும் அனைத்து கிராமங்களிலும் நடாத்துதல்.
- சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முறைமைக்கு 3500 சேர்த்துக் கொள்ளும் இவ் வருட இலக்கைப் பூரணப்படுத்தல்.

**ii. நிறுவனத்தின் நிதி முன்னேற்றம் (204 01.01. முதல் 2024.12 31.வரை)**

**மீண்டுவரும் செலவு** - ரூ.மில். 3,307.18

**மூலதன செலவு** - ரூ.மில். 225.38

iii. **நிறுவனத்தின் நிதி முன்னேற்றம் (2024.01.01 இருந்து 2024.12.31 வரை)**

**அட்டவணை 3.8: செயற்பாட்டு மூலதன நிதி திட்டங்களின் முன்னேற்றம் (2024.01.01 இருந்து 2024.12.31 வரை)**

| # | கூறுகள் | நிதி ஆதாரம் | திட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த செலவுகள் ரூ மில்லியன் | செலவுகள் ரூ. மில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தொடர்ச்சியான திட்டங்கள் | உள்நாட்டு | பன்முகப்படுத்தப்பட்ட | 99 | 41.92 | 753.81 |
| 2 | சுற்றுலா | | | 02 | 0.99 | |
| 3 | நீர் வழங்கல் | | | 24 | 8.32 | |
| 4 | கிராமிய மின்சார நீடிப்பு | | | 02 | 0.98 | |
| 5 | பிரவேசிக்கும் வீதி | | | 879 | 383.77 | |
| 6 | சந்தை அபிவிருத்தி | | | 06 | 1.40 | |
| 7 | கல்வி மற்றும் சுகாதாரம் | | | 92 | 44.85 | |
| 8 | விளையாட்டு மைதானம் மற்றும் வாசிகசாலை | | | 18 | 6.20 | |
| 9 | சிறு நீர்ப்பாசனம் | | | 36 | 13.73 | |
| 10 | விவசாய அபிவிருத்தி | | | 11 | 6.48 | |
| 11 | சமூக விருத்தி | | | 958 | 108.96 | |
| 12 | சமய மற்றும் கலாச்சார அபிவிருத்தி | | | 465 | 115.39 | |
| 13 | சமூக பாதுகாப்பு | | | 03 | 0.80 | |
| 14 | வறிய குடும்பங்களை வலுப்படுத்தல் | | | 00 | 0.00 | |
| 15 | வியாபார அபிவிருத்தி | | | 17 | 5.15 | |
| 16 | அனர்த்த முகாமைத்துவம் | | | 06 | 4.31 | |
| 17 | கிராமிய பொருளாதார அபிவிருத்தி | | | 01 | 30.50 | |
| 18 | ஏனைய அபிவிருத்தி | | | 04 | 0.50 | |
| 19 | வாழ்வாதார மற்றும் உணவு பாதுகாப்பு | | மலையக தசாப்த அபிவிருத்தி வேலைத் | 134 | 38.21 | |
| 20 | கல்வி | | | 306 | 258.75 | 1844.69 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | நீர் வழங்கல் | | திட்டம் | 85 | 72.90 | |
| 22 | பிரவேசிக்கும் வீதி | | | 2217 | 1355.69 | |
| 23 | விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் | | | 191 | 104.29 | |
| 24 | மின்சாரம் | | | 209 | 101.98 | |
| 25 | தொலைபேசி மற்றும் இணைய வசதிகள் | | | 04 | 0.02 | |
| 26 | சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு | | | 106 | 70.86 | |
| 27 | சூழல் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவம் | | | 27 | 9.35 | |
| 28 | வீடமைப்பு வசதிகள் வழங்கள் | | | 224 | 69.44 | |
| 29 | விளையாட்டுத் திடல்கள் அமைத்தல் | | | 01 | 20 | 99.8 |
| 30 | ஓட்ட நிரல் 8 உடன் கூடிய ஓட்டத்திடல் | | | 01 | 44 | |
| 31 | சிறு மதில்கள் | | | 01 | 35 | |
| 32 | கிராமிய வீதிகள் | | கிராமிய வீதிகள் அபிவிருத்தி வேலைத் திட்டம் | 214 | 137.99 | 78.28 |
| 33 | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | | ஜனாதிபதி அலுவலகம் - விசேட அனுமதிப்பத்திர வேலைத் திட்டம் | 488 | 247.45 | 247 |
| 34 | பாடசாலை விளையாட்டு திடல்கள் அபிவிருத்தி | | விளையாட்டு திடல்கள் அபிவிருத்தி வேலைத் திட்டம் | 13 | 19.5 | 19 |
| 35 | விளையாட்டு விக்கட் | | விளையாட்டு திடல்கள் அபிவிருத்தி வேலைத் திட்டம் | 37 | 53.92 | 53 |

**அட்டவணை 3.9: 2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரையிலான அரச வரிமானம் ஈட்டும் திட்டங்கள்**

| வருமானத் தலைப்பு | வருமானம் (ரூ.மில்) |
|---|---|
| முத்திரைக் கட்டணம் | 0.089 |
| அரச கட்டிடங்களின் கூலி | 7.44 |
| துப்பாக்கி மற்றும் வெடி பொருள் கட்டணம் | 1.52 |
| தனியாள் மரப் போக்குவரத்து கட்டணம் | 1.70 |
| பரீட்சைக் கட்டணம் | 0.017 |
| மோட்டார் வாகான வருமானம் | 23.41 |
| ஆட்கள் பதிவு செய்யும் கட்டணம் | 35.47 |
| ஏனைய அனுமதிப் பத்திரக் கட்டணம் | 18.18 |
| விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய கட்டணம் | 132.83 |

**படங்கள் 3.4: கண்டி மாவட்டத்தில் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள்**



இடம் - 270 அம்பிட்டிய உடகம தெற்கு
மொத்த செலவீனம் - ரூ.மில்0.60
செலவு - ரூ.மில் 0.58
ஆரம்பித்த திகதி - 2024.08.14
நிறைவடைந்த திகதி - 2024.08.16



இடம் – 282 பஹல ஈரியகம
மொத்த செலவீனம் - ரூ.மில் 1.00
செலவு - ரூ.மில் 0.97
ஆரம்பித்த திகதி -2024.07.21
நிறைவடைந்த திகதி - 2024.08.11

## 3.5. மாத்தளை மாவட்டம்

### i. அறிமுகம்

### பின்னணி

இலங்கையின் மத்திய பிரதேசமாக கருதப்படும் மாத்தளை மாவட்டமானது 1993 அடி பரப்பளவைக் கொண்டமைந்துள்ளதுடன் 11 பிரதேச செயலகப் பிரிவுகளையும் 4 தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கியுள்ளன. அதேப்போல் 539 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ள இவ் மாவட்டத்தில் 1483 கிராமங்கள் வியாபித்துள்ளன. இங்கு மக்களடர்த்தி 530184 ஆவதுடன் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய பிரதான 3 பல்லினத்தவர்கள் வாழ்கின்ற மாவட்டமாகும்.

### மாவட்டத்தின் பிரதான கூறுகள்

### மாவட்டத்தின் முன்னணி வரம்புகள்

- சிறு ஏற்றுமதி உற்பத்தி அபிவிருத்தி
- சுற்றுலாத்துறை அபிவிருத்தி
- மரக்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியினை ஊக்குவித்தல்
- களிய வளங்கள்
- மனிதவள அபிவிருத்தி

### நிறுவனத்தின் நோக்கம்

- மாவட்ட நிர்வாகம்
- அபிவிருத்தி செயற்பாடுளை வழிநடாத்துதல்
- விவசாய அபிவிருத்தி
- காணி மற்றும் நிறுவன அபிவிருத்தி
- அனர்த்த முகாமைத்துவம்
- சிறு வியாபார அபிவிருத்தி
- காணி உபயோகத்தினை திட்டமிடல்
- சமூர்த்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி
- நிதி செயல்முறையினை கையாளுதல்
- பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்
- உள்ளக கணக்காய்வு

### வெயற்பாட்டு முறைமை

- மாவட்ட செயலாளரின் நிர்வாகத்தின் கீழ் 11 பிரதேச செயலாளர்கள் ஊடாக கீழ் மட்டம் வரை வியாபித்துச் செல்லும் பொறிமுறை இருப்பதுடன் மாவட்ட செயலகத்தினுள் நிர்வாகம், திட்டமிடல், அபிவிருத்தி, விவசாயம், சிறு வியாபாரம், காணி கையகப்படுத்தல், பயிற்சி, அனர்த்தம், உள்ளக கணக்காய்வு, காணி மற்றும் கணக்கு ஆகிய பிரிவுகளாக பிரிவுத் தலைவர்கள் ஊடாக மாவட்ட செயலகம் செயற்பட்டு வருகின்றது.

### சிறப்புமிக்க முன்னேற்றங்கள்

- கோவிட் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் வீழ்ச்சியினை சரிசெய்தல் மற்றும் விரைவாக பழைய நிலைமையினை அடைதல்
- சுற்றுலாத்துறை அபிவிருத்தியினை உயர்த்துதல்
- விவசாய ரீதியான வருவாயினை உயர்த்துதல்
- மாவட்டத்தின் கல்வி மட்டத்தினை உயர்த்துதல்
- விளையாட்டுத் துறையில் வெற்றிகள்

### சவால்கள்

- விவசாய உற்பத்திகளுக்கு வனவிலங்குகளினால் ஏற்படும் பாதிப்புக்கள்
- மாவட்டத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் குறைந்த மட்டத்தில் இருத்தல்
- விவசாய உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் பிரச்சினைகள்
- நகர திட்டமிடல் முறையாக இல்லாமை
- காட்டு யானைகளினால் ஏற்படும் பிரச்சினைகள்
- போதைப்பொருள் பாவனை
- தொற்றா நோய்கள் விரைவாக பரவுதல்
- சிறுநீரகநோய்கள்
- சிறுவர்களின் ஊட்டச்சத்துக் குறைப்பாடு
- டெங்கு மற்றும் தொற்று நோய்கள் பரவல்
- கல்வியில் மனித மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறை

**எதிர்கால இலக்குகள்**

- விவசாய ஏற்றுமதிளை உயர்த்துதல்
- சுற்றுலாத்துறையினை மேம்படுத்துதல்
- நீடித்து நிலைத்த அபிவிருத்தியினை அடைதல்
- விவசாய மற்றும் தொழில்நுட்பத்திற்கான முறையான சந்தைப்படுத்தலினை அபிவிருத்திச் செய்தல்
- உணவு பாதுகாப்பினை உருவாக்குதல்
- உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திச் செய்தல்
- கல்வி மற்றும் சுகாதார வசதிகளை அபிவிருத்திச் செய்தல்
- ஊட்டச்சத்துக் குறைப்பாட்டினை குறைத்தல்
- தொற்றும் மற்றும் தொற்றாநோய்களை கட்டுப்படுத்துதல்

**ii. நிறுவனத்தின் நிதி முன்னேற்றம்) 2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை(**

தொடர் செலவுகள் - ரூ. 3402.868 மூலதன செலவுகள் -ரூ. 2216.048

**அட்டவணை 3.10: 2025 ஆம் ஆண்டிற்கான எதிர்ப்பார்க்கப்படும் வரவுசெலவு திட்ட முன்மொழிவுகள் (சுருக்கம்)**

| # | கருதிட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட மொத்த செலவு மி.ரூ | 2025 வரவுசெலவு திட்டத்தில் எதிர்ப்பார்க்கப்படும் ஒதுக்கீடு மி. ரூ |
|---|---|---|---|
| | புதிய உத்தியோகபூர்வ குடியிருப்பு வளாகத்தின் மீதமுள்ள கட்டுமான பணியினை நிறைவு செய்தல் - படி 2 | 50.00 | 50.00 |
| **மொத்தம்** | | **50.00** | **50.00** |

**iii. நிறுவனத்தின் முன்னேற்றம்**

**அட்டவணை 3.11: நடைமுறை மூலதன நிதி கருதிட்டங்களின் முன்னேற்றம்) 2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை( உ-:ம்+**

| # | விடயம் | நிதி ஆதாரம் | நிகழ்ச்சித்திட்டம் | கருதிட்டங் களின்எ+ கை | மொ. மதிப்பீடு மி. ரூ | செலவு மி. ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | சுற்றுலாத்து றை அபிவிருத்தி | ஜனாதிபதி செயலகம் | பன்முகப்படுத்தல் | 3 | 1.8 | 0.38 |
| 2 | குடிநீ வசதிகள் | ஐ.செ/நகர அபி மற்றும் வீட.அமை/ நீர்வழங்கல் மற்றும் தோ.உட.அமை | பன்முகப்படுத்தல்/ மலையக தசா / பிர.அபி,நிகழ்ச்சித்திட் டம்/பவுசர் மூலம் நீரினை வழங்கும் நிகழ். | 33 | 38.92 | 35.38 |
| 3 | மின்சாரம் | ஐ.செ/நகர அபி மற்றும் வீட.அமை/ சுகாதார அமைச்சு | பன்முகப்படுத்தல்/ மலையக தசா / பிர.அபி,நிகழ்ச்சித்திட் டம்/ நீர் மீள்சுழற்சி வடிகால் அமைப்புக்களின் மின்சார கட்டணங்களை செலுத்துதல் | 84 | 32.19 | 50.59 |
| 4 | கிராமிய வீதிகள் | ஐ.செ/நகர அபி மற்றும் வீட.அமை/ போக்குவரத்து மற்றும் | பன்முகப்படுத்தல்/ மலையக தசா / பிர.அபி,நிகழ்ச்சித்திட் டம்/ கிராமிய வீதிகள் நிகழ்/ தோட்ட | 684.0 | 592.37 | 550.71 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வீதி.அமை/ நீர்வழங்கல் மற்றும் தோ.உட.அமைச்சு | உட்கட்டமைப்பு | | | |
| 5 | சந்தை அபிவிருத்தி | ஜனாதிபதி செயலகம் | பன்முகப்படுத்தல் | 1 | 8.5 | 8.4 |
| 6 | கல்வி மற்றும் சுகாதாரம் | ஐ.செ/நகர அபி மற்றும் வீட.அமை/ நீர்வழங்கல் மற்றும் தோ.உட.அமை | பன்முகப்படுத்தல்/ மலையக தசா / பிர.அபி,நிகழ்ச்சித்திட்டம்/ தோட்ட உட்கட்டமைப்பு | 223 | 459.17 | 388.21 |
| 7 | கிராமிய விளையாட்டு மைதானம் | ஜனாதிபதி செயலகம் | பன்முகப்படுத்தல்/ பிர.அபி,நிகழ்ச்சித்திட்டம் | 22 | 24.92 | 23.76 |
| 8 | சிறிய நீர்பாசனம் | ஐ.செ/நகர அபி மற்றும் வீட.அமைச்சு | பன்முகப்படுத்தல்/ மலையக தசா/ பிர.அபி,நிகழ்ச்சித்திட்டம் | 70 | 82.78 | 73.98 |
| 9 | விவசாய அபிவிருத்தி | ஜனாதிபதி செயலகம் | பன்முகப்படுத்தல்/ பிர.அபி,நிகழ்ச்சித்திட்டம் | 7 | 1.4 | 1.77 |
| 10 | பொது வசதிகள் அபிவிருத்தி | ஐ.செ/நகர அபி மற்றும் வீட.அமை/ நீர்வழங்கல் மற்றும் தோ.உட.அமை | பன்முகப்படுத்தல்/ மலையக தசா/ பிர.அபி,நிகழ்ச்சித்திட்டம் | 7 | 61.35 | 49.79 |
| 11 | மத மற்றும் காலாச்சார அபிவிருத்தி | ஐ.செ/ நீர்வழங்கல் மற்றும் தோ.உட.அமைச்சு | பன்முகப்படுத்தல்/ பிர.அபி,நிகழ்ச்சித்திட்டம்/ தோட்ட உட்கட்டமைப்பு/கோவில் அபி. நிகழ். | 343 | 109.12 | 97.69 |
| 12 | வறிய குடும்பங்களின் அபிவிருத்தி | ஐ.செ/ நகர அபி மற்றும் வீட.அமைச்சு | பன்முகப்படுத்தல்/ மலையக தசா / பிர.அபி,நிகழ்ச்சித்திட்டம் | 14 | 21.49 | 20.28 |
| 13 | தொழில்முனைவோர் தொடர்பான அபிவிருத்தி | ஜனாதிபதி செயலகம் | பன்முகப்படுத்தல் | 1072 | 121.95 | 104.7 |
| 14 | இயற்கை அனர்த்தங்கள் | நகர அபி மற்றும் வீடமைப்பு அமைச்சு | மலையக தசாப்தம் | 6 | 10.36 | 9.99 |
| 15 | கிராமிய பொருளாதாரம் | ஐ.செ/மகளிர்,சிறுவர் அலு. மற்றும் சமூக வலு அமைச்சு | பன்முகப்படுத்தல்/செளபாக்கிய உற்.நிகழ். | 8 | 3.22 | 1.65 |
| 16 | வீடமைப்பு அபிவிருத்தி | நகர அபி மற்றும் வீட.அமை/ நீர்வழங்கல் மற்றும் தோ.உட.அமைச்சு | மலையக தசா/ தோட்ட உட்கட்டமைப்பு/ கம்பெரலிய கூரைத் தகடுகள் நிகழ் | 7 | 5.58 | 5.29 |
| 17 | வேறு | ஜனாதிபதி செயலகம் | பன்முகப்படுத்தல்/ பிர.அபி,நிகழ்ச்சித்திட்டம் | 14 | 8.75 | 5.16 |
| **மொத்தம்** | | | | **2598** | **1583.87** | **1427.73** |

## படங்கள் 3.5: மாத்தளை மாவட்டத்தில் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்

### 2024 – 2033 மலையக தசாப்தம் விசேட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்







கருத்திட்டத்தின் பெயர்:- பம்பரகஹவத்த கனிஷ்ட வித்தியாலயத்தின் புதிய கட்டடத்தினை கட்டுமானம் செய்தல்
இடம் :- பம்பரகஹவத்த
மொத்த மதிப்பீடு :- ரூ.மில் 8.00
செலவு :- ரூ.மில் 6.375
ஆரம்பித்த திகதி :-2024.06.05
முடிவுற்ற திகதி :- 2024.07.29

### பன்முகப்படுத்தல் வரவசெலவு நிகழ்ச்சித்திட்டம் - 2024







கருத்திட்டத்தின் பெயர்:- நாவுல தொடம்அத்தாவல ஸ்ரீ போதிமலு விகாரையின் சங்காவாச கட்டடத்தினை புனரமைத்தல்
இடம் :- தொடம்அத்தாவல
மொத்த மதிப்பீடு :- ரூ.மில் 8.00
செலவு :- ரூ.மில் 1.6672
ஆரம்பித்த திகதி :- 2023.07.26
முடிவுற்ற திகதி :- 2023.08.05

### vi. அரசின் வருவாய் ஈட்டும் திட்டங்கள்

**அட்டவணை 3.12: 2024.01.01 தொடக்கம் 2023.12.31 வரை அரச வருமானம் ஈட்டும் கருதிட்டங்கள் (வரைப்படங்கள்அட்டவணைகள் ,,புள்ளி விபரங்களாக வழங்கலாம்.)**

| வருமானத் தலைப்பு | வருமானம்(ரூ.மில்) | வருமானத் தலைப்பு | வருமானம்(ரூ.மில்) |
|---|---|---|---|
| வருமானத் தலைப்பு | 0.76 | அரசாங்க வருமானம் | 13.69 |
| மரப்போக்குவரத்து கட்டணம் | 0.62 | காணி ஆணையாளர் திணைக்களத்தின் கீழ் அறவிடப்பட்ட கட்டணங்கள் | 1.15 |
| பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுப் பத்திரங்களின் கட்டணங்கள் | 0.99 | நபர்களை பதிவு செய்யும் சட்டத்தின் கீழ்பெறப்பட்ட கட்டணங்கள் | 11.43 |
| உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் அறவிடப்பட்ட கட்டணங்கள் | 6.30 | விதவை மற்றும் தபுதாரர் சந்தாப் பணம் | 68.34 |
| உத்தியோக குடியிருப்பு வாடகைகள் | 30.00 | பொருள் ஏல விற்பனை தொகை | 0.16 |
| காணி மற்றும் பிற வரி | 0.021 | அபராத கட்டணங்கள் | 0.043 |
| பரீட்சை கட்டணங்கள் | 8.64 | பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச்செய்தலுக்கான கட்டணங்கள் | 0.034 |
| மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட கட்டணங்கள் | 0.84 | முத்திரைக் கட்டணம் | 0.012 |
| **மொத்த தொகை** | | | **113.088** |

## 3.6. நுவரெலியா மாவட்டம்

### i. அறிமுகம்

**பின்னணி**

05 பிரதேச செயலகங்களையும், 491 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் கொண்டுள்ள நுவரேலியா மாவட்டத்தின் பிரதான பொருளாதார அலுவல்களாக விவசாயம் மற்றும் வர்த்தக ரீதியிலான தேயிலை செய்கையை அறிமுகப்படுத்த முடியும்.

மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகங்கள் முக்கிய கூறுகளாக அமைகின்றன. மாவட்டத்தினட முதன்நிலை வீச்சாக மாவட்டத்தினுள் அரச, மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள்,தனியார் நிறுவனங்ள் ஆகியவற்றை தொடர்புபடுத்துவதன் மூலம் அரச கொள்கைளை நடைமுறைப்படுத்தல், அரசாங்கத்திற்கான வருமானங்களை சேகரித்தல் மற்றும் பன்மிகப்படுத்தப்பட்ட மற்றும் ஏனைய நிதி மூலங்கள் மூலம் கிடைக்கப்பெறும் நிதியைப் பயன்டுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி மூலம் அரச சேவையின் உற்பத்தி திறனை மேம்படுத்தல் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும்.

### மாவட்டத்தின் முக்கிய கூறுகள்

**பிரதான கூறுகள்**

- மாவட்ட செயலகம் மற்றும் அலுவலக குழாயின் உள்ளக நிர்வாக அலுவலடகளையும், 05 பிரதேச செயலகங்களுக்குரிய நுர்வாக அலுவல்களை நெறியாளல்.
- அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமறைப்படுத்தல்.
- வினைத்திறனான மனித வள முகாமைத்துவமொன்றினை முன்னிட்டு அலுவலர் குழாயினருக்கான பயிற்சி.

**சவால்கள்**

- மாவட்டத்தினுள் வசிப்பதற்கு பொருத்தமான காணிகள் பற்றாக்குறை இயற்கை அனர்த்தங்கள்.
- இயற்கை அனதைதங்கள்.
- மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அழிவுகள் மற்றும் நீரேந்து பிரசேங்கள் அழிவடைதல்.
- மாவட்ட மற்றும் பிரதேச கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான நல்ல நிலைமையில் உள்ள வாகனங்களின் பற்றாக்குறை.
- அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு தேவையான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் (தொழில்நுட்ப) பற்றாக்குறை.

**எதிர்கால இலக்குகள்**

- மாவட்டத்தினுள் கோப்பி செய்கையை பிரபல்யப்படுத்தி அந்நிய செலாவணியை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கல்..
- மாவட்டத்தினுள் சுற்றுலா சந்தர்ப்பங்களை விரிவுப்படுத்துவதற்காக வழிகாட்டல கோவையொன்றை வெளியிடல்.
- புதிய தொழில் முயலுநர்களை உருவாக்குதல்.
- நுவரெலியா மாவட்டத்தில் போசாக்குக் குறைபாடு உயர் மட்டத்தில் உள்ளதால் மக்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்தல்.
- நுவரெலியாவிற்கு வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தை 2025 ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தை அண்மிக்க மக்கள் மகிழ்ச்சியாக வாழும் மாவட்டமாக அமைத்தல்.

### ii. நிறுவனத்தின் நிதிசார் முன்னேற்றம் (2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31ஆம் திகதி வரை

மீண்டுவரும் செலவினம்- ரூ.மில். 1,795.64

மூலதன செலவினம் - ரூ.மில். 41.45

**அட்டவணை 3.13: 2025 ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்**

| செயற்திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூ.மி.) | எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மி.) |
|---|---|---|
| வேறு மூலதனச் செலவுகள் | 106.8 | 106.8 |
| மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தின் மீண்டெழும் செலவுகள் | 1560.4 | 1560.4 |
| **மொத்தம்** | **1,667.2** | **1,667.2** |

iii. **நிறுவனத்தின் முன்னேற்றம்**

நிறுவனத்தின் பொதுவான பணிகளின் முன்னேற்றம் :-

2024 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் உரிய திகதிக்கு முன்னதாக வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.14: நடைமறைப்படுத்தப்படுகின்ற மூலதன நிதி செயற்திட்டங்களின் முன்னேற்றம்**

| | ஆக்கக்கூறு | செயற்திட்ட எண்ணிக்கை | மொத்த ஆகுசெலவு (ரூ.மி) | மொத்த ஆகுசெலவு (ரூ.மி) |
|---|---|---|---|---|
| 1 | பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 1,733 | 610.60 | 538.12 |
| 2 | கிராமப்புற வீதிகள் | 10 | 34.55 | 30.05 |
| 3 | மலைநாட்டு உள்கட்டமைப்பு | 98 | 112 | 42 |
| 4 | மத மற்றும் கலாச்சார அபிவிருத்தி | 56 | 33.19 | 31.02 |
| 5 | மலை தசாப்தம் | 617 | 538.64 | 472.79 |
| 6 | சுற்றுலா மற்றும் காணி அமைச்சு | 6 | 39.22 | 32.90 |
| 7 | சௌபாக்கியா | 1 | 0.60 | 0.55 |
| | மொத்தம் | **2,777** | **2,521** | **1,368.80** |

**அட்டவணை 3.15:2024.01.01ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான வருமானம் ஈட்டிக்கொள்ளும் செயற்திட்டங்கள்**

| # | **விபரம்** | **வருமான குறியீடு** | **தேறிய வருமானம் (ரூ.மி)** |
|---|---|---|---|
| 01 | தனியார் மர போக்குவரத்து | 1003-07-03 | 0.39 |
| 02 | அரச கட்டிடங்களின் வாடகை | 2002-01-01 | 11.18 |
| 03 | 1968 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்யும் சட்டத்தின் கீழ் கட்டணம் | 2003-02-03 | 18.94 |
| 04 | மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணங்கள் மற்றும் ஏனைய | 2003-02-14 | 1.87 |

**படங்கள் 3.6:நுவரெலியா மாவட்டத்தில் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்**



வெத்தலாவ களத்தில் பபேஹின்ன வீதியின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்தல்
மதிப்பிடப்பட்ட தொகை - ரூ. 0.6
செலவு - ரூ. மில் 0.51
தொடக்க தேதி - 2024-03-12
நிறைவு நாள்- 2024-06-01



திஸ்பனே கந்த டொமைனின் பிரதான வீதியிலிருந்து சீனாமலை நோக்கிய அணுகல் வீதியின் ஆரம்பப் பகுதியின் அபிவிருத்தி
மதிப்பிடப்பட்ட தொகை - ரூ. 0.6
செலவு - ரூ.578,347.52
தொடக்க தேதி -2024-03-12
நிறைவு தேதி-2024-03.27



சோமர்செட் தமிழ் கல்லூரியில் கழிப்பறை வசதிகள் அமைத்தல், தண்ணீர் வசதி செய்தல் மற்றும் வடிகால் அமைப்பை சீரமைத்தல் ஆகியவை
தோராயமான தொகை - ரூ. மில்.1.5
செலவு - ரூ. மில் 1.455
தொடக்க தேதி - 2024-03-12
நிறைவு நாள்- 2024-08-11

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப்பெறுகைகள் | | |
| 05. | அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனையவை | 1003-07-99 | 7.012 |
| 06. | அரச சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் - ஏனைவை | 2002-02-99 | 5.65 |
| 07. | விற்பனை மற்றும் பல்வேறு கட்டணங்கள் | 2003-02-99 | 112.28 |
| 08. | ஏனைய கிடைக்கப்பெறுகைகள் | 2003-99-00 | 5.28 |
| 09. | முத்திரைக் கட்டணம் | 1002-07-00 | 0.029 |
| 10. | மத்திய அரசாங்கம் | 2004.01.00 | 46.15 |
| 11. | அரச பாதுகாப்பு அமைச்சுக்குரிய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1003-07-05 | 0.37 |
| 12. | மூலதன சொத்துக்களின் விற்பனை | 2006-02-02 | 0.078 |
| 13. | பரீட்சைகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் | 2003-02-13 | 0.0005 |
| மொத்தம் | | | **209.280** |



உடமகுருப்பா
திட்டத்தின் பெயர் - மஹாபிட்டிய வீதி அபிவிருத்தி
மதிப்பிடப்பட்ட தொகை - ரூ. மில் 2
செலவு - ரூ. மில். 1.87
தொடக்க தேதி -2024-03-29
நிறைவு நாள்- 2024-05-20

# 3.7. காலி மாவட்டம்

## i. அறிமுகம்

### பின்னணி

காலி மாவட்டம் 1,651.6 சதுர கிலோமீற்றர் நிலப் பரப்பினைக் கொண்டதுடன், தேர்தல் பிரிவுகளின் எண்ணிக்கை 10ம், பிரதேச செயலாளர் பிரிவுகள் 22ம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 895ம் கொண்டதுடன், மக்கள் தொகைப் 1,138,686 ஆகும். பெந்தொட்ட முதல் கொவியாபான வரை 73 கி.மீ. சுற்றுலா ரீதியாக கவர்ச்சிகரமான எழில்மிகு கடற்கரை உள்ளது.

### மாவட்டத்தின் பிரதான கூறுகள்

### முன்னணி வரம்புகள்

- மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக அலுவல்களை ஒழுங்குபாடு செய்தல்
- சமுதாயச் சார்ந்த அபிவிருத்தி மற்றும் நலன்புரி வேலைகள் முன்னறிவித்தல். திட்டமிடல், நடைமுறைப்படுத்தல்,
- பின் விபரிப்பதற்கான முகாமைத்துவ விவகாரங்கள்
- அனரத்த முகாமைத்துவ விவகாரங்கள்
- மாவட்டத்தின் மொத்த அபிவிருத்தி முன்னேற்றத்தை ஒருங்கிணைத்தல்.

### நிறுவனத்தின் நோக்கம்

- மாவட்டத்தின் நிர்வாக விவகாரங்கள்
- பிரதேச மற்றும் மாவட்ட மட்ட அபிவிருத்தி விவகாரங்கள்
- சமுதாயம் சார்ந்த நலன்புரி வேலைகள்
- பொதுமக்களின் தேவைகளை நிறைவுபெறும் வகையில் அபிவிருத்தி மற்றும் நலன்புரி விவகாரங்களை வழிநடத்துதலும் முகாமைத்துவம் செய்தலும்
- சிறுவர் மற்றும் மகளிர் நலன்புரி விவகாரங்கள்
- சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைநாட்ட தேவையான ஒருங்கிணைப்பு
- சுற்றுச்சூழல் ஒழுங்குபாடு மற்றும் அனர்த்த முகாமைத்துவம்.

### செயற்பாடுகள்

- பிரதேச செயலகங்கள் 22 ன் மூலம் நிர்வாக, அபிவிருத்தி மற்றும் நலன்புரி வேலைளை நிறவேற்றுதல்

### மாவட்ட ரீதியிலான விசேட சாதனைகள்

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தால் நிகழ்த்தப்பட்ட மிகச் சிறந்த பயன்களுக்கான ஆய்வு அட்டைகளை வெளியிடும் போது “ நிலைத்து நிற்கும் வாழ்வாதாரத்திற்கான நிலைத்து நிற்கும் தொழில்முனைவு” கரும்பொருளாக்கிக்கொண்டு மனித திறன்களை ஊட்டச்சத்து செய்தல் பிரிவினால் முன்வைக்கப்பட்ட மாவட்ட தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மூன்றாம் இடத்தை வென்றது.
- பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்சித்திட்டத்தின் கீழ் 516 ரூபா மில்லியன் ஒதுக்கீட்டுகளுக்கேற்ப நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் 1576இல் 91% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துக்கொள்ளல்..
- மலைநாடு தசாப்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 400 ரூபா மில்லியன் ஒதுக்கீட்டுகளுக்கேற்ப நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் 559இல் 78%பௌதீக முன்னேற்றத்தை அடைந்துக்கொள்ளல்.

### சவால்கள்

- மாவட்டத்தின் அனைத்து மக்களினதும் வாழ்வாதார வழி முறையைப் பாதுகாத்தல்
- பிராந்திய உற்பத்திகள் மற்றும் தொழில் முனைவை முன்னேற்றுவதற்கு சந்தை வாய்ப்புக்களை உருவாக்குதல்
- போதை பொருளுக்கு அடிமையாவதை தடுத்தல்
- சுற்றுலாத்துறையுடன் தொடர்பான உட்கட்டமைப்புகள் வழங்குதல்.

**எதிர்கால இலக்குகள்**

- ஒன்றிணைந்த அணுகு முறையினூடாக மாவட்டத்தில் சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முனைவு மேம்படுத்தல்
- குறைந்த வருமானம் பெறுபவரின் அடிப்படைத் தேவைகளை வழங்கிக்கொண்டு அவர்களால் தேசிய பொருளாதரத்திற்கு வழங்கும் பங்களிப்பை மேம்படுத்த செயலாற்றுதல
- அனைத்து பொருளாதார அலகுகளையும் மேம்படுத்தி தேசிய பொருளாதாரத்திற்கு மாவட்டத்தின் பங்களிப்பை அதிகரித்தல்.

### ii. நிறுவனத்தின் நிதி முன்னேற்றம்

**(2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)**

மீண்டெழும் செலவினம் - ரூ.மி 3,604

மூலதன செலவினம் - ரூ.மி 99.4

### iii. நிறுவனத்தின் முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)

**அட்டவணை 3.16: செயற்படும் மூலதன நிதி கருத்திட்டங்களின் முன்னேற்றம்**

| # | கூறுகள் | நிதி மூலாதாரம் | நிகழ்ச்சித் திட்டங்கள் | கருத்திட்ட எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டு செலவு .ரூ.மி | செலவு மி.ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | அணுகல் சாலைகள் | உள்ளூர் | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவு /மலை நாட்டு/கிராமத்து வீதிகள்/ பன்முகப்படுத்தப்பட்ட (விசேட ) பிரிவேனா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்/கைத்தொழில் அமைச்சகத்தின் மூலம் நடைமுறைப் படுத்தும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் | 1180 | 706.77 | 687.99 |
| 2 | கிராமிய பாலங்கள் | | | 10 | 34.42 | 33.60 |
| 3 | கிராமிய மின்சார விரிவாக்கம் | | | 2 | 0.11 | 0.05 |
| 4 | சுகாதார வசதிகள் | | | 21 | 6.87 | 6.63 |
| 5 | விளையாட்டு மைதானம் | | | 31 | 44.22 | 35.73 |
| 6 | சிறு நீர்பாசனம் | | | 18 | 10.49 | 9.93 |
| 7 | கிராமிய பொருளாதார உட்கட்டமைப்பு | | | 53 | 24.45 | 23.23 |
| 8 | சமய மத்திய நிலையங்களை அபிவிருத்தி செய்தல் | | | 282 | 79.17 | 73.09 |
| 9 | சமூக நலன்புரிகள் | | | 936 | 163.99 | 157.59 |
| 10 | வீடு அபிவிருத்தி | | | 4 | 11.64 | 11.49 |
| 11 | சூரிய கலம்/ மின்சாரம் | | | 22 | 6.26 | 5.94 |
| 12 | கிராமிய நீர் விநியோகம் | | | 91 | 40.41 | 40.05 |

**படங்கள் 3.7: காலி மாவட்டத்தில் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்**



வாடுவெளிவிட்டி தெற்கு சணச அருகிலிருந்து கெக்குலன்வில வீதியில் மின்தகை கல் விறித்தல்
இடம்; வெலிவிட்டி திவித்துரை
மொத்த செலவு ;0.58 ரூ.மி
செலவு ; 0.56 ரூ.மி
2024.05.13-2024.06.25
2024.06.25



அமுந்தர ஓடையை டக்கரன்வத்த கால்வாயி அருகிலிருந்து ஓமத்து ஓடை வரை சீர்திருத்தல்
இடம் ; எல்பிட்டி
மொத்த செலவு; 0.58 ரூ.மி
செலவு ; 0.55 ரூ.மி
2024.04.26-2024.05.16

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | நில செவன | | | 112 | 144.63 | 118.99 |
| 14 | ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் | | | 1180 | 706.77 | 687.99 |
| | **மொத்தம்** | | | **2,762** | **1,273.43** | **1,204.32** |



லலித் விக்கிரமசிங்ஹ மாவத்தையில் ஒபவத்த பகுதி வாய்க்கால் தொகுப்பை சீர்திருத்தல்
இடம் ; ஹிக்கடுவ
மொத்த செலவு; 0.92 ரூ.மி
செலவு ; 0.87 ரூ.மி
2024.06.12-2024.06.20

**அட்டவணை 3.17: 2024.01.01 முதல் 2024.12.31 வரை வருமானம் ஈன்றெடுக்கும் கருத்திட்டங்கள்**

| வருமானத் தலைப்பு | | வருமானம் (ரூபா) |
|---|---|---|
| 10.02.07.00 | முத்திரைக் கட்டணம் | 14,300.00 |
| 10.03.07.03 | தனிப்பட்ட மரப்போக்குவரத்துக் கட்டணம் | 476,050.00 |
| 10.03.07.05 | பொது மக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றி அனுமதிப்பத்திரங்கள் | 438,460.00 |
| 10.03.07.09 | காபன் வரி | 176,294.74 |
| 10.03.07.99 | ஏனைய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 7,358,162.89 |
| 20.02.01.01 | கட்டட வாடகைகள் | 2,244,695.24 |
| 20.02.02.99 | வட்டி ஏனைய | 10,575,536.52 |
| 20.03.02.03 | ஆட்கள் பதிவுசெய்யும் சட்டத்தின் கீழ் கட்டணங்கள் | 15,871,390.00 |
| 20.03.02.13 | பரீட்சை மற்றும் ஏனைய கட்டணங்கள் | 2,800.00 |
| 20.03.02.14 | மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் கட்டணங்கள் | 6,549,305.00 |
| 20.03.02.99 | பல்வேறு | 387,988.77 |
| 20.03.99.00 | ஏனைய வரவுகள் | 47,420,319.55 |
| 20.04.01.00 | சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் | 83,665,688.88 |
| 20.06.02.02 | மூலதன சொத்துக்களை விற்றல் (ஏனைய) | 320,880.00 |
| மொத்தம் | | **430.094** |



பின்னதூவ ஹெல உணவகத்தை அபிவிருத்திச் செய்தல்( பூமியை தயார்செய்தல்/ நீர் தாங்கி மற்றும் தாங்கியை கட்டமைத்தல்/நிறப் பூசுதல்/முற்றத்தில் கற்களைப் பிடித்தல்
இடம் ; அக்மீமண
மொத்த செலவு; 4.0 ரூ.மி
செலவு ; 4.0 ரூ.மி
2024.03.20 -2024.07.15

## 3.8. மாத்தறை மாவட்டம்,

### i. அறிமுகம்

### பின்னணி

தென் இலங்கை நில்வலா கங்கை ஓரத்தில் கடலின் எல்லையில் அமைந்துள்ள, பெருமை மிக்க வரலாற்று மரபினைக் கொண்ட மாத்தறை மாவட்டம், காலி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு இடையில் அமைந்துள்ள 128,300 சதுர ஹெக்ரேயர் அளவினைக் கொண்ட மாத்தறை மாவட்டம், 16 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மற்றும் 650 கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்டுள்ளதோடு, 2023 ஆம் ஆண்டில் மொத்த சனத்தொகை 919,983 ஆகும். மாத்தறை மாவட்டத்தில் கடற்றொழில், விவசாயம், சிறு ஏற்றுமதிப் பயிர்களாகிய தேயிலை, தேங்காய் மற்றும் கறுவாப் பயிர்ச் செய்கை பிரதான வாழ்வாதாரமாக சுட்டிக்காட்டப்படுகிறது

**மாவட்டத்தின் முக்கிய கூறுகள்**
**முன்னணி வரம்புகள்**

- திறமையான மற்றும் பயனுள்ள மாவட்ட நிர்வாக அமைப்பை பராமரித்தல்.
- பொறுப்புடனும் விவேகத்துடனும் வளங்களைப் பயன்படுத்தி பொதுச் சேவையில் பாரபட்சமற்ற தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை போன்ற மதிப்பு அமைப்புகளை அரச துறையில் உருவாக்குதல்.

**நிறுவனத்தின் நோக்கம்**

- மாவட்டத் தலைவராகச் செயற்பட்டு, மாவட்ட அதிகார வரம்பில் வாழும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட்டு, பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், மற்றும் மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளராகச் செயற்படுதல்.

**செயற்பாடுகள்**

- 16 பிரதேச செயலகங்களை ஒருங்கிணைத்து, பாரபட்சமற்ற தன்மையைப் பேணுவதற்கும் மக்களின் திருப்தியை அதிகரிப்பதற்கும் வளங்களை விவேகத்துடன் பயன்படுத்துதல்.
- மாவட்ட அதிகார வரம்பிற்குள் உள்ள அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் நிர்வாகத் தலைவராகச் செயல்படுதல் மற்றும் அந்த நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல், இதன் மூலம் குறிக்கோள்கள் மற்றும் பணிகள் நிறைவேற்றுதல்.
- மாவட்டத்தில் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

**சவால்கள்**

- மாவட்டத்தில் வேலையின்மை மற்றும் வறுமையைக் குறைத்தல்

**எதிர்கால இலக்குகள்**

- மாவட்ட சமூகம், விவசாய மற்றும் உற்பத்திப் பொருளாதார முறைகளை நோக்கிய நோக்குநிலை மூலம் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல் மற்றும் வேலையின்மையைக் குறைத்தல்.
- மனித வளங்களை திறம்பட கையாள்வதன் மூலம் மாவட்ட சமூகத்திற்கு உடனடி மற்றும் உகந்த சேவையை வழங்குதல்.

**ii. நிறுவனத்தின் நிதி முன்னேற்றம்**
(2024.01.31 முதல் 2024.12.31 வரை)

தொடர் செலவு:- 94.65 மி. ரூபா

மூலதனச் செலவு:- 68.03 மி. ரூபா

**அட்டவணை 3.18: செயற்படுத்தப்படும் பிரதான மூலதன நிதித் திட்டங்களின் முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

| # | திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட மொத்த செலவு | 2025 வரவுசெலவுத் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடுகள் (ரூ.மில்) |
|---|---|---|---|
| 01. | பிட்டபெத்தறை பிரதேச செயலாளர் பிரிவு நிர்மாணம் | 530.40 | 200.00 |
| 02. | மாலிம்படை பிரதேச செயலாளர் பிரிவு மிகுதிப் பணி | 29.67 | 29.67 |
| 03. | திக்குவெள்ளை பிரதேச செயலாளர் பிரிவின் இரண்டு கட்டிடங்களை ஒன்றிணைத்தல் மற்றும் எல்லைச் சுவர் நிர்மாணம் | 35.19 | 35.19 |
| 04. | அக்குரஸ்ஸை பிரதேச செயலாளர் பிரிவின் கட்டிட நிர்மாணம் | 439.40 | 439.40 |
| 05. | ஹக்மனை பிரதேச செயலாளர் பிரிவின் கட்டிட நிர்மாணம் | 383.00 | 383.00 |
| 06. | மாலிம்படை, திக்குவெள்ளை, திஹகொடை பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு மின் தூக்கி அமைத்தல் | 22.50 | 22.50 |
| 07. | மாவட்ட செயலாளர் அலுவலகத்திற்கு மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் 16 இற்கு சூரிய கலன்களை நிருவுதல் | 49.70 | 49.70 |
| 08. | மிரிஸ்ஸ சுற்றுலா நகரத்திற்கு வெள்ளம் ஏற்படுவதை தடுப்பதற்காக தயாரிக்கப்படும் செயற்திட்டம் | 25.00 | 25.00 |
| 09. | ஹிரிகெட்டிய சுற்றுலா வலயத்தில் நடத்தப்பட வேண்டிய அத்தியவசிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக | 25.00 | 25.00 |
| | **மொத்தம்** | **1,539.86** | **1,209.46** |

**iii. நிறுவனத்தின் முன்னேற்றம்**

**அட்டவணை 3.19: நிறுவனத்தின் பொதுப் பணிகளின முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

| # | சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | அனுமதியில்லாத காணிகளுக்கு முறையான அனுமதிப் பத்திரம் வழங்கல் | 1,080 |
| 02. | பின் உரிமை குறிப்பிடப்படாத அனுமதிப்பத்திரங்களுக்கு உறுதி உரிமையை வழங்கல் | 905 |
| 03. | வியாபாரப் பெயர் அனுமதிப் பத்திரம் வழங்கல் | 2,981 |
| 04. | தேசிய அடையாள அட்டை விண்ணப்பப்பத்திரங்களை ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்புதல் | 26,942 |

**அட்டவணை 3.20: செயற்படுத்தப்படும் பிரதான மூலதன நிதித் திட்டங்களின் முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

| # | கூறுகள் | நிதி ஆதாரம் | திட்டம் | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூ. (மீ) | செலவு ரூ. (மீ) |
|---|---|---|---|---|---|
| 01. | வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல் | 118-2-3-80-2202 | வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதற்காக வீடுகளில் ஆடுகளை வளர்த்தல் | 4.93 | 4.3 |
| 02. | ஜனாதிபதி செயலகம் | 001-2-06-023-2509 | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | 401.95 | 327.95 |
| 03. | வீடு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 123-02-15-82-2506 | மலைநாட்டு தசாப்தம் | 500 | 481.62 |

| # | கூறுகள் | நிதி ஆதாரம் | திட்டம் | மொத்த மதிப்பிடப் பட்ட செலவு ரூ. (மீ) | செலவு ரூ. (மீ) |
|---|---|---|---|---|---|
| 04. | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 117-2-4-61-2104 | கிராமிய வீதி அபிவிருத்தி திட்டம் | 77.10 | 59.28 |
| 05. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 201-2-02-008-2205 | குறை அபிவிருத்தி மதப் பாடசாலைகள் | 1.7 | 1.65 |
| 06. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 101-2-6-8-2205 | இடரகளுக்கு உள்ளான விஹாரைகளை புணர்நிரமாணம் செய்தல் | 1.39 | 1.38 |
| 07. | கல்வி அமைச்சு | 126-02-05-02-2205(11) | கல்வி அமைச்சின் பிரிவெனாக்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்தல் | 13.70 | 13.07 |
| 08. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 101-2-6-1-2205 | விஹாரஸ்தானங்களுக்காக வழங்கும் ஏனைய ஒதுக்கீடுகள் | 5.5 | 5.49 |
| 09. | விவசாய மற்றும் தோட்டத்தொழில் அமைச்சு | 118-2-29-4-2507 | வெலிகாமம் தேங்காயிலை வாடும் நோயை கட்டுப்படுத்துவதற்கான திட்டம் | 12.37 | 12.32 |
| 10. | சுற்றாடல்,வனசீவர ாசிகள், வனவளங்கள், நீர்ப்பாசன, தோட்ட மற்றும் சமூக உட்டகட்டமைப்பு வசதிகள் அமைச்சு | 001-02-06-022-2509 | தோட்ட உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படத்தல் | 0.7 | 0.67 |
| 11. | நீதி அமைச்சின் தேசிய ஒறுமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்க ான அலுவலகம் | 110-1-2-30-2202 | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் | 1.87 | 1.84 |
| **மொத்தம்** | | | | **1021.21** | **909.57** |

**படங்கள் 3.8: மாத்தறை மாவட்டத்தில் உள்ள திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள்**



போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கிராமிய வீதி அபிவிருத்தி திட்டம்
மொத்த செலவு 77.10
செலவினம் :- 59.28
தொடக்க திகதி – 2024.01.30

**vi. அரசின் வருமானம் ஈட்டும் திட்டங்கள்**

**அட்டவணை 3.21: 2024.01.01 முதல் 2024.12.31 வரை அரச வருவாய் ஈட்டும் திட்டங்கள்**

| வருவாய் குறியீடு | வருவாய் குறியீட்டின் விளக்கம் | சேர்க்கப்பட்ட வருமானம்(ரூ.மில்) |
|---|---|---|
| 1002.07.000 | முத்திரைக் கட்டணம் | 0.031 |
| 2002.01.01.0 | அரச கட்டிடங்களின் வாடகை | 2.45 |
| 1003.07.0.99.0 | வேறு | 11.06 |
| 2003.0.99.00.0 | ஏனைய | 33.00 |
| 2003.02.13.0 | பரீட்சை மற்றும் வேறு கட்டணங்கள் | 0.006 |

## 3.9. ஹம்பந்தொட்டை மாவட்டம்

### i. அறிமுகம்

#### பின்னணி

இலங்கையின் தென் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள ஹம்பந்தொட்டை மாவட்டம் பரப்பளவில் 2609 கி.மீ ஆகும். இது தீவின் மொத்த பரப்பளவில் சுமார் கி.மீ 1/25 ஆகும் அத்துடன் மாவட்டத்தின் அதிக பட்ச நீளம் கி.மீ 106 உம், அதிக பட்ச அகலம் கி.மீ 39 உம் ஆகும். மாவட்டத்தின் கடலோரப் பகுதியின் நீளம் கி.மீ. 151 உம் ஆகும்.

ஹம்பந்தொட்டை மாவட்டத்தின முழு நிலப்பரப்பானது வ.கி.மீ 11.5 அளவில் உள்நாட்டு நீர்தேக்கங்களினால் மூடப்பட்டுள்ளது. அட்சரேகை மற்றும் தீர்க்கரேகையின் படி வடக்கு அட்சரேகை 6.0 தொடக்கம் 6.5 வரையும், கிழக்கு தீர்க்கரேகை 80.6 தொடக்கம் 81.7 வரையும் பரவியுள்ளது. வடக்கு பக்கமாக மொனராகலை, இரத்தினபுரி மற்றும் அம்பாரை மாவட்டத்தினாலும் மேற்கு பக்கமாக மாத்தறை மாவட்டத்தினையும் தெற்கு மற்றும் கிழக்கு பக்கமாக இந்தியப் பெருங்கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

| மக்கள் தொகை | மக்கள் தொகை 1வ.கி.மீ | குடும்பங்களின் எண்ணிக்கை | தேர்தல் பிரிவுகளின் எண்ணிக்கை | பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை | கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 738,890 | 283 | 209,418 | 04 | 12 | 576 |

#### மாவட்டத்தின் முக்கிய கூறுகள்

#### முக்கிய பகுதிகள்

- கிராமப்புற வீதி அபிவிருத்திகள்.
- குடி நீர் வசதிகளை மேம்படுத்தல்.
- சிறு மற்றும் நடுத்தர தொழில்களை ஊக்குவித்தல்.
- விவசாயத்திற்கு விலங்குகளால் ஏற்படுகின்ற சேதத்தினை குறைத்தல். (யானை, மயில் போன்றவை.
- அறுவடைக்கு பின் ஏற்படும் விரயத்தை குறைத்தல்.
- சுகாதார வசதிகளை மேம்படுத்தல்.
- போதைப் பொருள் அச்சுறுத்தலை இல்லாதொழித்தல்.
- கோளி வளர்ப்பினை பராமரிக்க தேவையான விதி முறைகளை உருவாக்குதல்.
- மேலதிக பயிர் செய்கையினை ஊக்குவித்தல்.
- முறையான கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் மின்னனு கழிவுகளை (E waste) அகற்றுதல்.

#### நோக்கம்

- அரச கொள்கைகளை நடை முறைப்படுத்துவதனூடாக மாவட்ட நிருவாக செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

#### செயற்பாடுகள்

- அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் மற்றும் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பும்.
- வறுமை ஒழிப்பு மற்றும் நிவாரண பணிகள் தொடர்பான திட்டங்களை செயற்படுத்தல்.
- விவசாய ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் பிரச்சினைகளை தீர்த்தல்.
- இடர் முகாமைத்துவம் மற்றும் இடர் மீட்பு பணிகள்.
- மாவட்டத்தில் நில பயன்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் பயன்படுத்தப்படாத நிலத்தினை அபிவிருத்தி செய்தல்.
- சமூக நலன்களுக்கு தகுதியுடையவர்களை கண்டறிந்து நலன்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மத மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
- சமூக நலன் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளுதல்./குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான நலன்புரி நடவடிக்கை.
- அனைத்து விளையாட்டுக்களையும் ஊக்குவித்தல் மற்றும் திறமையான

வீரர்களை மாவட்ட மட்டத்தில் இருந்து தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்லல்.

- பொருளாதாரம், சமூகம் மற்றும் புவியியல் தகவல்களை சேகரித்தல் மற்றும் கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்த தகவல்களை வழங்குதல்.
- ஆரம்ப சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைளை ஒருங்கிணைத்தல் மற்றும் தொற்று நோய் கட்டுப்பாட்டிற்கு உதவுதல்.
- பொது மக்களின் முறைப்பாடு தொடர்பான விடயங்களை விசாரித்து பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.
- கிராமப்புற மற்றும் பிரதேச நிருவாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
- இளைஞர் விவசாய மேம்பாடு மற்றும் தொழில் முறை திறன்களை வளர்க்க நடவடிக்கை எடுத்தல்.

## சிறப்பான சாதனைகள்

- 2022/2023 பருவத்தில் 15,000 மெட்ரிக் டன் நெல் அளவு ரூ. 1,800 விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு, இலங்கையின் 07 மாவட்டங்களில் உள்ள வளமான மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு சிறு ஆலை உரிமையாளர்களால் விநியோகிக்கப்பட்டது. காலி சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்திற்கு வெற்றிகரமாக அரிசி விநியோகிக்கப்பட்டது ஹம்பாந்தோட்டை மாவட்ட மக்களுக்கும் மில் உரிமையாளர்களுக்கும் விசேட நிவாரணத்தை வழங்கியது..
### செயற்பாடுகள்

- அரசின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை கையால்தல், மேற்பார்வை செய்தல், பின் தொடர்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு.
- கிராமீய மற்றும் பிரதேச நிர்வாக நடவடிக்க்களின் மேற்பார்வை மற்றும் வழிநடத்துதல்
- மாவட்டத்தினுல் இருக்கின்ற அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு
- காணிப் பயன்பாட்டிற்காக முறையான திட்டமிடலொன்றை தயாரித்தல் மற்றும் குறை விளைச்சலுள்ள நிலங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
- நுகர்வோர் பாதுகாப்பு சபையுடன் இணைந்து மாவட்டத்தினுல் நுகர்வோர் பாதுகாப்பு செயன்முறையொன்றை நடைமுறைப்படுத்துதல்
- தோட்டத் தொழிலாளர் சமூகத்திற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துதல்.
- ஆண் பெண் சமூகத் தன்மையை பெற்றுக்கொள்வதற்காக உதவுதல் மற்றும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வழுவூட்டுதல்
- போதைப் பொருள் ஒழிப்பு போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களுக்கு புணர்வாழ்வளித்தல், மகளிர் துன்புறுத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றை குறைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.
- மத மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்திறகுத் தேவையான நடவடிக்கைகளை
- கேகாலை மாவட்டத்தை சுற்றுலா இலக்குள்ள இடமாக அபிவிருத்தி செய்தல்

- அனைத்து விளையாட்டுக்களுக்குமான வசதிகளை மேம்படுத்துதலினூடாக தேசீய மற்றும் சர்வதேச மட்டத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்குதல்.

### சவால்கள்

- விவசாயத்துடன் தொடர்பாக குரங்குகள், பன்றிகள், முள்ளம் பன்றி மற்றும் மர அனில் போன்ற விளங்குகளால் ஏற்படும் சேதங்கள்
- மலைச்சாரல்களுடனான நிலங்கள் காணப்படுவதனால் மண்சரிவு நிலமைகள் மற்றும் தாழ் நிலங்களின் வெள்ள நிலமைகள் காரணமாக மாவட்டத்தில் அணர்த்த அபாயங்கள் அதிகரிக்கின்றமை.
- குடிநீர் வசதிகள் மற்றும் பயிர்ச்செய்கைகளுக்கு நீர் வசதிகள் போதுமானதாக இன்மை.
- பாடசாலைகளை விட்டுச் சென்ற உயர் கல்வி கிடைக்காதவர்கள் தகுந்த தொழில்களில் ஈடுபடாமை.
- கைத்தொழில் பிரிவின் வெற்றி போதுமானதாக காணப்படாமை
- கிராமிய பிரதேசங்களில் உற்கட்டமைப்பு வசதிகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றமை.
- மலை சார்ந்த நிலங்கள் என்பதனால் நீர் வசதிகள் போதுமாக இன்மையால் நெற் பயிர்ச்செய்கை உற்பட உணவுப் பயிர்கள் செயகை நிலங்களின் அளவு குறைந்தமையினால் மாவட்டத்தில் உணவு பாதுகாப்பு குறைந்மை
- நன்நீர் மீன் கைத்தொழில் மேம்பாட்டிற்காக இருக்கின்ற நீர்த்தேக்கங்களின் அளவு போதுமானதாக இன்மை
- மாவட்டத்தின் வறுமையுடன் இணைந்த சிறுவர் போஷாக்குக் குறை
- தோட்ட மக்களின் வசதிகள் குறைவாக இருப்பது

### இலக்குகள்

- உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல், அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும்' சுகாதார வசதிகளை வழங்குதல் மற்றும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட விவசாயக் கருத்திட்டங்கள் மற்றும் கைத்தொழில் மேம்பாட்டினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திதல்

**அட்டவணை 3.66 : 2025 வருடத்திற்காக எதிர்பார்க்கப்படும் வரவுசெலவுத் திட்ட முன்மொழிதல்கள் (சுருக்கம்)**

| # | முன்மொழிதல் | மதிப்பீடு மற்றும் மொத்த செலவினம் (.ரூபா மில்) |
|---|---|---|
| 1 | மாவட்ட செயலக உத்தியோகபூர்வ விடுதித் திருத்தம் | 39.67 |
| 2 | பிரதேச செயலகம் மற்றும் வீடுகளை திருத்தம் செய்தல் | 117.67 |

### ii. நிறுவனத்தின் நிதிமுன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை

மீண்டெழும் செலவினங்கள் – **ரூ.மில்.** 740.62
மூலதனச் செலவினம் - **ரூ.மில்.** 67.78

**iii. நிறுவனத்தின் முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

**அட்டவணை 3.67 : செயற்படுத்தப்படுகின்ற மூலதன நிதி கருத்திட்டங்களின் முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)**

| # | பயணி | நிதி மூலம் | நிகழ்ச்சித் திட்டம் | கருத்திட்ட எண்ணிக்கை | மொத்த கிரயம் ரூ (மில்) | செலவு (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைக் கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டம் | உள்நாடு | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 2681 | 446.19 | 446.19 |
| 2 | மலைநாட்டு தசாப்தம் இடம் - நிகழ்ச்சித்திட்டம் | உள்நாடு | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 2502 | 969.48 | 969.48 |
| 3 | பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | உள்நாடு | பிரதேச அபிவிருத்தி விஷேட நிகழ்ச்சித் திட்டம் | 437 | 44.25 | 44.25 |
| 4 | வீதி அபிவிருத்தி | உள்நாடு | கிராமிய வீது அபிவிருத்தி | 289 | 184.56 | 184.56 |
| 5 | சுற்றுவா நிகழ்ச்சித்திட்டம் | உள்நாடு | சுற்றுலாக் கவர்ச்சியுள்ள இடங்களின் அபிவிருத்தி மற்றும் உற்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 21 | 49.29 | 49.29 |
| 6 | விஷேட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | உள்நாடு | கேகாலை மாவட்ட அபிவிருத்தி முன்மொழிதல்களை செயற்படுத்துதல் | 475 | 316.078 | 316.078 |
| 7 | தோட்ட சமூகத்தின் உற்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | உள்நாடு | தோட்ட உற்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்துதல் | 74 | 35.69 | 35.69 |
| 8 | விவசாயம் | உள்நாடு | 12 ஏக்கர் வர்த்தக தூரியன்பழ பயிர்ச்செய்கை செய்தல் | 560 தூரியன் பழக் கன்றுகள் | 0.218 | 0.218 |
| | **மொத்தம்** | | | | | |

**படங்கள் 3.25 கேகாலை மாவட்டத்தின் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்**



இடம் – அரணாயக்க பிரதேச செயலாளர் பிரிவு
ஜம்புகஸ்ஸ்மட கிரம உத்தியோகத்தர் பிரிவு
கருத்திட்டத்தின் பெயர் – ஜம்.புகஸ்மட புத்தர் சிலை அருகிலிருந்து மொரட்டிய சந்தி வரையில் கம்மெத )மாற்று (வீதி,
அபிவிருத்தி செய்யப்பட்ட மொத்த செலவு 970000.00,
கருத்திட்ட ஆரம்ப திகதி – 2024.07.10
கருத்திட்ட முடிவுத் திகதி – 2024.07.24



வரகாபொல பிரதேச செயலாளர் பிரிவு
கி.உ .பிரிவு – மாம்பிட்ட
கருத்திட்டத்தின் பெயர் – கொண்டகல கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தினை சுய தொழில் பயிற்சி நிலையமொன்றாக அபிவிருத்தி செய்தல்
செலவு – ரூ.மில் 1.0
ஆரம்பிக்கப்பட்ட திகதி – 2024.07.17
முடிக்கப்பட்ட திகதி – 2024.09.25



இடம் தரணிகலை பிரதேச செயலாளர் பிரிவு.
இடம் – தெஹிகஸ்தெனிய
கருத்திட்டத்தின் பெயர் – கைவிடப்பட்ட வயல் நிலங்களில் கீறைச் பயிர்ச்செய்கை கருத்திட்டம்
செலவு – ரூபா 0.15
ஆரம்பிக்கப்பட்ட திகதி -2024.03.21
முடிக்கப்பட்ட திகதி – 2024.12.05

**vi. 2024.01.01முதல் 2024.12. 31வரையில் வருமானம் ஈட்டும் கருத்திட்டங்கள்**

**3.68 : 2024.01.01 முதல் 2024.12.31 வரையிலான பரவலாக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம்**

| | தலைப்பு | வருமானம் (ரூ..மில்) |
|---|---|---|
| 1 | முத்திரைக் கட்டணம் | 0.096 |
| 2 | பரீட்சை மற்றும் ஏனைய கட்டணங்கள் | 0.011, |
| 3 | கட்டிட வாடகை | 2.78 |
| 4 | ஏனைய வருமானங்கள் | 57.33 |
| 5 | காணி மற்றும் ஏனைய வரி வருமானங்கள் | 0.0008 |
| | **மொத்தம்** | **60.2178** |

# நான்காவது அத்தியாயம்

# 04.பதிவாளர் நாயகம் திணைக்களம்

## நிறுவன விபரத்திரட்டு

### 1.1. அறிமுகம்

தற்போது பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற பதிவாளர் நாயகம் திணைக்களம், காணிகளைப் பதிவுசெய்யும் நோக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு முதலில் 1864 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அதன் தலைமை அலுவலகம் கொழும்பிலும், கிளை அலுவலகங்கள் அதாவது காணிப் பதிவு அலுவலகங்கள் பிரதான நகரங்களிலும் நிறுவனப்பட்டன. இவ்வலுவலகங்கள் பொதுமக்களின் காணிகள் தொடர்பான உரிமையை பதிவுசெய்யும் எதிர்பார்ப்புடன் நிறுவப்பட்டன. உரித்துப் பதிவுகளை மேற்கொள்வதற்கு பல வருடங்கள் எடுப்பதால். இடைக்கால நடவடிக்கையாக முதலில் காணிகள் தொடர்பான சட்டரீதியான ஆவணங்களைப் பதிவுசெய்யும் முறைமையை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1998 ஆம் ஆண்டில் காணிகளின் உரிமைகளை முறையாக பதிவுசெய்யும் நோக்கில் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க காணி உரித்துப் பதிவுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் மூலம் கணனிகளை சார்ந்த வகையில் உரித்துகளைப் பதிவுசெய்யும் அலுவல்கள் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. நிலஅளவைகள் திணைக்களம், காணி உரித்து நிர்ணயத் திணைக்களம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் ஆகியன ஒருங்கிணைந்து ஆரம்பித்த இச்செயற்பாட்டில் திணைக்களத்தின் கடமை பொறுப்புகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட காணிப் பதிவு அலுவலகங்களை சார்ந்த வகையில் உரித்துப் பதிவு அலுவலகங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

சிவில் பதிவுசெய்யும் அலுவல்கள் அதாவது, பிறப்பு, விவாகம், மரணப் பதிவுத் திணைக்களத்திற்கு 1867 ஆம் ஆண்டிலேயே கையளிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் இலங்கையில் பிறப்புகளைப் பதிவு செய்தல் தொடர்பில் அதிகமாக கவனம் செலுத்தப்படவில்லை. 1895 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவு செய்தல் தொடர்பான கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதையடுத்து திணைக்களத்தின் பிறப்புகள் மற்றும் இறப்புகளைப் பதிவுசெய்யும் பணிகள் விரிவாக்கப்பட்டதுடன், தற்போது இலங்கை மக்களின் சிவில் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் பிறப்புகள், விவாகங்கள், மரணங்கள் மற்றும் சொத்துகளுக்குரிய சட்டரீதியான ஆவணங்களைப் பதிவுசெய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1992 ஆம் ஆண்டில், காணிகள் மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களை ஒருங்கிணைத்து நிலவிய மாவட்டப் பதிவாளர் பிரிவு பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்திற்கு பன்முகப்படுப்பத்தப்பட்டது. அதன்போது அலுவலகத்திற்கு பொறுப்பாக பதிவாளர் நாயகத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய மேலதிக மாவட்டப் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அத்துடன், திணைக்கள அலுவல்களை இலகுப்படுத்தும் பொருட்டு பிரதேச செயலாளருக்கு மாவட்டப் பதிவாளராகவும், உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளருக்கு மேலதிக பதிவாளர் நாயகமாகவும் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டன.

## 1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று



### தொலைநோக்கு

பொதுமக்களின் சிவில் உரிமைகள், அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் சட்டரீதியான உரிமைகளை உறுதிப்படுத்தும் காகித ஆவணங்களைப் பதிவுசெய்யும், பாதுகாக்கும் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிக்கும் மக்களை மையமாகக் கொண்ட சேவைகளை வழங்குவதில் முன்னிலையில் பயணிப்பவராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.



### செயற்பணி

அசையா மற்றும் அசையும் சொத்துக்களுக்குரிய சட்டரீதியான ஆவணங்களைப் பதிவுசெய்தல் மற்றும் இலங்கையில் காணி உரித்துக்களைப் பதிவுசெய்தல் மற்றும் மக்கள் வாழ்க்கையில் முக்கியமான சந்தர்ப்பங்களான விவாகம், பிறப்பு மற்றும் இறப்பினைப் பதிவு செய்தல், அவ் ஆவணங்களைப் பாதுகாத்தல் மற்றும் விண்ணப்பங்களின் அடிப்படையில் அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகித்தல் மற்றும் அதன்மூலம் மக்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கல்.

### 1.3 முதன்மை வீச்சு

- நிர்வாகத்தின் பொருட்டு மனிதவள முகாமைத்துவம் (நிர்வாகம்.்.பயிற்சி)
- வினைத்திறனான மற்றும் உற்பத்தித்திறனான நிர்வாகத்தின் பொருட்டு தொடர்ச்சியாக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல் (நிர்வாகம்.்.பயிற்சி)
- நிர்வாகத்திற்கான வெளிப்படைத்தன்மையான நிதி முகாமைத்துவம் (கணக்குகள்)
- பல் பிரிவுகள் அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல். (அபிவிருத்தி)
- சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தல். (சிவில்)
- அசையா மற்றும் அசையும் சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்தல். (நொத்தாரிசு)
- புதிய தொழில்நுட்பத்தினுள் பொதுமக்கள் சேவையை விரிவுப்படுத்தல். (தொழில்நுட்பம்)
- நிதிக் கணக்காய்வு (உள்ளகக் கணக்காய்வு)
- அபிவிருத்தி சுட்டிக்காக தரவுகளையும் தகவல்களையும் வழங்கல். (புள்ளிவிபரவியல்)

### 1.4. நிறுவனத்தின் நோக்கு எல்லை

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதான பணிகள் மூன்றாகும்.

- அசையா மற்றும் அசையும் சொத்துக்களுக்குரிய ஆவணங்கள், அற்றோணித் தத்துவப்பததிரங்கள், அசையா சொத்துக்களுக்குரிய உரித்துகள் மற்றும் சிவில் பதிவுகளை செய்தல்.
- பொறுப்பு மற்றும் ஆவணப் பாதுகாப்பு
- சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகித்தல்.

## 2. செயல்பாடு

2.1 ஆவணங்களைப் பதிவுசெய்தல்

- அசையா காணி சொத்துக்களுக்குரிய ஆவணங்களைப் பதிவுசெய்தல்.
- அசையும் சொத்துக்களுக்குரிய ஆவணங்களைப் பதிவுசெய்தல்.
- அற்றோணித் தத்துவபத்திரங்களை பதிவுசெய்தல்.

2.2 உரித்துகளைப் பதிவுசெய்தல்

- அசையா சொத்துக்களுக்குரிய உரித்துகளைப் பதிவுசெய்தல்.

2.3 சிவில் பதிவுகள்

- இலங்கையினுள் நிகழும் அனைத்து விவாகங்கள், பிறப்புகள் மற்றும் இறப்புகளையும், வெளிநாடுகளில் நிகழும் இலங்கையர்களின் விவாகங்கள், பிறப்புகள் மற்றும் இறப்புகளைப் பதிவுசெய்தல்.
- பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்க்கும் நீதிமன்ற கட்டளைகளைப் பதிவுசெய்தல் மற்றும் அப்பிள்ளைகளின் பிறப்புகளை மீள பதிவுசெய்தல். கண்டிய திருமணம் மற்றும் விவாகரத்துளை கோரிக்கைகளின் அடிப்படையில் தீர்மானித்தல்.
- கண்டிய திருமணம் மற்றும் விவாகரத்துகளைப் பதிவுசெய்தல்.

2 கட்டுக்கோப்பு மற்றும் ஆவணங்களைப் பாதுகாத்தல்.

- சிவில் மற்றும் காணிகள் மற்றும் ஆவணங்களைப் பதிவுசெய்வதற்குரிய ஆவணங்கள், நொத்தாரிசு உறுதி இணைப் பிரதிகள் மற்றும் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய ஏனைய எழுத்தாவணங்கள் மற்றும் ஆவணங்களின் நம்பிக்கைப் கட்டுக்கோப்பு மற்றும் பாதுகாத்தல்.

3 சான்றிதழ்களை விநியோகித்தல்.

- சான்றிதழ்கள் விநியோகிக்கப்படுகின்ற அனைத்து ஆவணங்களினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை, அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுள்ள நபர்களுக்கு விநியோகித்தல்.

**இடைநேர்விளைவான செயல்பாடுகள்**

- விவாக, பிறப்பு மற்றும் மரணப் பதிவாளர்களை நியமித்தல் மற்றும் நிர்வாகம்
- நொத்தாரிசுமார்களை நியமித்தல் மற்றும் அவர்களின் தனிநபர் கோவைகளைப் பேணல்.
- உறுதி அடிப்படையில் மற்றும் ஏனைய ஆவணங்கள் அடிப்படையில் உரிய முத்திரைக் கட்டணங்கள் செலுத்தப்படுகின்றதென்பதை உறுதி செய்தல்.
- சான்றிதழ் பிரதிகளின் மொழிபெயர்ப்புகளை விநியோகித்தல்.
- திருத்தங்களை மேற்கொள்ளல்.
- வாழ்வியல் புள்ளிவிபர அறிக்கைகளை வெளியிடல்.

**2 விசேட அடைவுகள்**

- சுஹுருபாய வளாகத்தில் கன்சியுலர் பிரிவினை அமைத்தல்.
- இ-காணி செயற்றிட்டத்திற்குரிய 2024 ஆம் ஆண்டின் முதலாவது கட்டத்தை மேலும் 10 அலுவலகங்களிலும், இரண்டாம் கட்டத்தை பரீட்சார்த்த அலுவலகங்களிலும் நிறுவுதல்.
- இ-சனத்தொகை செயற்றிட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலகத்திலும் தேசிய பிறப்புச்

சான்றிதழ்களை விநியோகிக்கும் பணிகளை ஆரம்பித்தல்.

## 3 சவால்கள்

இ-காணி செயற்றிட்டம்

- காணிப் பதிவாளர் அலுவலகங்களில் கருமபீடங்களில் மற்றும் ஏனைய பிரிவுகளில் மென்பொருளை சரியாக பொருத்துவதற்கு உரிய முறையில் தயாரித்துக்கொள்ளல்.
- காணிப் பதிவாளர் அலுவலகங்களில் அனைத்திலும் சரியான முறையில் LGN இணைப்பினை அமைத்துக்கொள்ளல்.
- காணிப் பதிவாளர் அலுவலகங்களை உரிய முறையில் வலைபயமைப்புப்படுத்தல்.
- காணிப் பதிவாளர் அலுவலகங்களில் அடிப்படை தரவுகளை தயாரித்துக்கொள்ளல்.
- மென்பொருளின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களை நிறுவுவதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கல்.
- மென்பொருளை நிறுவுவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.

இ-சனத்தொகை செயற்றிட்டம்

- தற்போது கையில் எழுதி விநியோகிக்கும் பிறப்புச் சான்றிதழுக்கு பதிலாக இ-சனத்தெைாக ஆவண செயற்றிட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற பிறப்புச் சான்றிதழை அனைத்து நபர்களுக்கும் விநியோகிக்கக் கூடிய வகையிலான முறைமை ஒன்றை தயாரித்தல்.
- அனைத்து பிரதேச செயலகங்களிலும் நிறுவப்பட்டுள்ள மாவட்டப் பதிவாளர் பிரிவுகளுக்கு தேவையான பௌதீக வளத்தை தேவையான குறைந்தபட்ச மட்டதிலாயினும் பூர்த்தி செய்தல்.
- தகவல் தொழில்நுட்பத்திற்குரியதாக பயன்படுத்தப்படுகின்ற வலையமைப்பு (LGN தொடர்பு) தொடர்பில் பிரச்சினைகள் இருத்தல்.
- திணைக்களத்திற்காக Data backup and DR Site தயாரித்தல்.
- பிரதேச செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாவட்டப் பதவாளர் பிரிவுகளில் மேலதிக மாவட்டப் பதிவாளர்களது வெற்றிடங்கள் காணப்படுதல்.

இ-பி.வி.இ. செயற்றிட்டம்

- நிகழ்நிலை ஊடாக பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ்களை விண்ணப்பிக்கும் செயற்பாட்டை பொது மக்கள் மத்தியில் மேலும் பிரபலப்படுத்தல்.
- பரீட்சார்த்த செயற்றிட்டம் ஒன்றாக வெளிநாட்டு தூதுவராலயங்கள் 7 இல் பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ்களை விண்ணப்பிக்கும் தரவு தொகுதியினை நிறுவுவதன் மூலம் குறித்த நாட்டிலேயே இலங்கை மக்களுக்கு தமது பிறப்பு, விவாக மற்றும் இறப்புச் சான்றிதழ்களை விண்ணப்பிக்கக் கூடிய வாய்ப்பினை பெற்றுக்கொடுத்தல்.

## 1 எதிர்கால இலக்கு

இ-காணி செயற்றிட்டம

- மென்பொருளின் முதற் கட்டம் நிறுவப்பட்டுள்ள 9 காணிப் பதிவகங்களிலும் மென்பொருளின் இரண்டாம் கட்டத்தை நிறுவுதல்.
- 41 காணி பதிவாளர் அலுவலகங்களில் முதலாவது மற்றும் இரண்டவது கட்டத்தை நிறுவுதல்.
- 2025 ஆம் ஆண்டில் மென்பொருளின் 3 ஆம் கட்டத்தை தயாரித்து பூர்த்தி செய்துகொள்ளல்.
- மென்பொருளை நிறுவுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.

இ-சனத்தொகை செயற்றிட்டம்

- தற்போது பரீட்சார்த்த செயற்றிட்டம் மூலம் செயற்படுத்தப்படுகின்ற தேசிய பிறப்புச் சான்றிதழ்களை விநியோகிக்கும் செயற்பாட்டை முழு இலங்கைக்குமே செயற்படுத்தல்.
- இ-சனத்தொகை திட்டத்தின் கீழ் தரவு தொகுதியினூடாக இறப்புகளை பதிவு செய்து அதன் மூலம் இறப்புச் சான்றிதழ்களை விநியோகித்தல்.
- முதலாவது கட்டமாக விவாகங்களைப் பதிவு செய்வதற்குரிய செயற்பாடுகளை இ-சனத்தொகை ஆவணத் திட்ட தரவு அமைப்பின் ஊடாக மேற்கொள்ளல்.
- சனத்தொகை ஆவணமொன்றை அமைத்து அதன் ஊடாக இற்றைப்படுத்தப்பட்ட பிரஜைகள் தரவு பரிமாற்ற முறைமையொன்றை தயாரித்தல்.

<u>காணி மற்றும் ஆவணங்கள் பதிவு அலுவல்கள்</u>

- புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி ஆவணப் பதிவு அலுவல்களை வினைத்திறனாக்கல்.
- நொத்தாரிசு தரவுத் தொகுதியை இற்றைப்படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு சட்டரீதியான நொத்தாரிசு ஒருவரை அடையாளம் காண்பதற்கு உதவுதல்.

<u>சிவில் பதிவு அலுவல்கள்</u>

- செயல்பாட்டு கடமையில் ஈடுபட்டிருக்கையில் மரணமடைந்த இராணுவ அங்கத்தவர்களின் மரணப் பதிவு ஆவணங்கள் தற்போது வருடு செய்யும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு வருடு செய்யும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட 19900 சான்றிதழ்களை தரவுத் தொகுதியில் உள்ளிட்டு பிரதேச செயலகங்கள் மூலம் மரணச் சான்றிதழ்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
- அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் தேசிய பிறப்புச் சான்றிதழ் விநியோகத்தை ஆரம்பித்து, பிரதேச செயலகங்கள் மூலம் விநியோகிப்பதற்கான திட்டத்தை வகுத்தல்.
- பதிவாளர் நாயகத்தின் கைந்நூலில் சிவில் பதிவுகளுக்குரிய தொகுதிகளின் திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால், தமிழ் மொழிபெயர்ப்பின் இறுதி இரண்டு அத்தியாயங்களும் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அச்சிட்டு வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- பதிவாளர்களின் தனிநபர் கோப்பு தொடர்பிலான படிமுறைகளை நிகழ்நிலை முறைமையினூடாக மேற்கொள்வதற்கான மென்பொருளைத் தயாரித்தல்.
- விவாகம், பிறப்பு மற்றும் மரணச் சான்றிதழ்களை மொழிபெயர்ப்பதற்கான மென்பொருளைத் தயாரித்தல்.
- பதிவாளர் நாயகத்தின் கைந்நூலில் சிவில் பதிவுகளுக்குரிய தொகுதிகள் மும் மொழிகளிலும் இ-புத்தகமாக திணைக்கள இணையத்தளத்திற்கு விடுவித்தல்.
- அனைத்து பதிவேட்டறைகளையும் தன்னியக்க தொகுதியின் கீழ் செயற்படுத்துவதற்கு தேவையான முறைமைகளைத் தயாரித்தல்.
- சிவில் பதிவிற்குரிய ஏனைய சட்டங்களை திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

I. 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்புகள் மற்றும் மரணங்களைப் பதிவுசெய்யும் சட்டம்
II. 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பொது விவாகம் பதிவுசெய்யும் கட்டளைச் சட்டம்
III. 1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்
IV. 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்
V. 1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சிறுவர் மகவேற்புச் கட்டளைச் சட்டம்
VI. 1981 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க காவற்தூது பணிகள் சட்டம்
VII. 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மரணங்களைப் பதிவுசெய்யும் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

**கட்டிடங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் புனரமைத்தல்.**

## 2 திரண்ட நிதிசார் முன்னேற்றம் மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகளின் முன்னேற்றம் - 2024.12.31 ஆம் திகதிக்கு




| விபரம் | ரூ.மி. | % |
|---|---|---|
| **தேறிய நிதி ஒதுக்கீடுகள் (01, 02)** | 3,890 | |
| மொத்த செலவு 2024.08.31 | 3,65 | 94% |
| எஞ்சிய நிதி ஒதுக்கீடு | 238 | 14% |




| விபரம் | ரூ.மி. | % |
|---|---|---|
| **தேறிய நிதி ஒதுக்கீடுகள் (01, 02)** | 415 | |
| **மொத்த செலவு 2024.08.31** | 313 | 76% |
| **எஞ்சிய நிதி ஒதுக்கீடு** | 102 | 24% |

**2** பௌதீக முன்னேற்றம

### a. நிர்வாகப் பிரிவு

#### i. அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலகு

தலைமை அலுவலகத்தின் சாரதியர் ஓய்வறையை நிர்மாணித்தல், மின்சார தொகுதியை திருத்தியமைத்தல், இராக்கைகளை பொருத்துதல் மற்றும் உட்பகுதியை துணைப் பிரிவுகளாகப் பிரித்தல், தலைமை அலுவலகத்திலுள்ள விநியோகப் பிரிவில் காணப்படுகின்ற அறைகளை பிரித்தல் மற்றும் இராக்கைகளை பொருத்துதல், ஐந்தாம் மாடியில் இருந்து நீர் தாங்கியை சுத்தப்படுத்துவதற்காக சுவர் ஏணியொன்றினை அமைத்தல், கணக்கு பிரிவின் இராக்கைகளை பொருத்துதல், ஆறாவது மாடியில் உட்பகுதியை துணைப் பிரிவுகளாகப் பிரித்தல், ஆறாவது மாடியில் யன்னல்களை மூடி சட்டகம் அமைத்தல், சாரதியர் ஓய்வறைக்கு அருகாமையில் Interlock பொருத்துதல்.



தலைமை அலுவலகத்தின் உட்பகுதியை துணைப் பிரிவுகளாகப் பிரிக்கும் நடவடிக்கைகள்

- சுஹுருபாய வளாகத்தில் மத்திய பதிவேட்டறையில் கன்சியுலர் பிரிவை அமைத்தல



சுஹுருபாய வளாகத்தில் மத்திய பதிவேட்டறையில் கன்சியுலர் பிரிவை அமைத்தல்.



எல்பிட்டிய காணிப் பதிவகத்தின் திருத்தியமைத்தல் நடவடிக்கைகள்.

- மட்டக்களப்பு காணிப் பதிவகத்தின் உட்பகுதியை துணைப் பிரிவுகளாகப் பிரித்தல், இராக்கைகளை பொருத்துதல்.
- வட மாகாண பதிவேட்டறையை ஸ்தாபித்தல்.
- நீர்கொழும்பு காணிப் பதிவகத்தின் கூரையை திருத்தியமைத்தல், சேவைபெறுநர் தங்கியிருக்கக்கூடியவாறு சூழலை அமைத்தல், காசு கருமபீடத்திலிருந்து விறாந்தையின் இறுதி வரையில் மழை மறைப்பொன்றை அமைத்தல், சுற்று மதிலில் இரண்டு பக்கங்களை முழுமையாக சீரமைத்தல



மட்டக்களப்பு காணிப் பதிவகத்தின் உட்பகுதியை துணைப் பிரிவுகளாகப்



*தலைமை அலுவலக ஓய்வுஅறை*

வடமேற்கு வடமத்திய வலய அலுவலகத்தின் இராக்

- வடமேற்கு வடமத்திய வலய அலுவலகத்தின் இராக்கைகளை அமைத்தல், இராக்கைகளை புனரமைத்தல்.
- களுத்துரை காணிப் பதிவகத்தின் ஜன்னல்களில் பழுதாகியுள்ள பூட்டுகளை பழுதுபார்த்தல் மற்றும்
- மாளிகாவத்தை மத்திய பதிவேட்டறையில் கைவேலிகளை அமைத்தல்
- பொலன்னறுவை காணிப் பதிவகத்தின் உட்பகுதியை துணைப் பிரிவுகளாகப் பிரித்தல். அத்தனகல்ல காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இடவதிசகைள அதிகரித்துக்கொள்ளல்.
- மத்திய வலய அலுவலகத்தில், புத்தளம் காணிப் பதிவகத்தில் மற்றும் மாத்தளை மாவட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் திரைசீலைகளை இடல்.
- பதுளை உ.ப.நா. அலுவலகத்தின் மற்றும் காலி உதவி பதிவாளர் நாயகம் அலுவலகத்தின் திருத்தியமைத்தல் நடவடிக்கைகள்.
- கம்பளை காணிப் பதிவகத்தின் சுவர்களை சீரமைத்தல் உரித்துப் பிரிவின் உக்கிபோயுள்ள ஜன்னல் தூண்களை சீரமைத்தல்
- மாளிகாவத்தை மத்திய பதிவேட்டறையில் கைவேலிகளை அமைத்தல்.
- பானத்துறை காணிப் பதிவகத்தின் பிற்பக்க மதிலுக்கு பாதுகாப்பு வேலியொன்றை அமைத்தல்.
- பானத்துறை காணிப் பதிவகத்தின் பிற்பக்க மதிலுக்கு பாதுகாப்பு வேலியொன்றை அமைத்தல்.

**ஊழியர் பயிற்சி மற்றும் திறன் விருத்தி**

- அற்றோணித் தத்துவப்பத்திரங்களைப் பதிவுசெய்தல், காணியுறுதியொன்றினை எழுதி கையொப்பமிடும் போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் காணிச் சட்டம், கொன்சியுலர் சட்டம் (வெளிநாட்டு பிறப்புகள்/ விவாகங்கள்/ மரணங்கள்) பதிவு செய்தல், சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம் மற்றும் மீள பதிவு செய்தல




கொள்முதல் குறித்த இரண்டு நாள் பயிற்சித் திட்டம்

- பதிவாளர்களுக்கான, அவர்கள் அறிந்திருக்க வேண்டிய நியதிச்சட்ட விடயங்கள் பற்றிய பயிற்சி திட்டம் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடும் நிகழ்ச்சித்திட்டம்.

- காணாமற்போன ஆட்களின் மரணங்களைப் பதிவு செய்தல், காணாமற்போன ஆட்களின் மரணங்களைப் பதிவு செய்தல் மற்றும் தத்தெடுப்பு (தமிழ் மொழி மூலம்) மரணங்களைப் பதிவு செய்தல் பற்றிய பயிற்சி திட்டங்கள்.
- காலம் பிந்திய பிறப்புகளை பதிவு செய்தல் தொடர்பான பயிற்சி திட்டம்.
- விஷேட அற்றோணித் தத்துவப்பத்திரங்களை பதிவு செய்தல், பிறப்புகள் இறப்புகள் கட்டளைச் சட்டம், ஆவணங்களைப் பதிவு செய்தல், நொத்தாரிசு கட்டளைச் சட்டம், விவாகங்களைப் பதிவு செய்தல் மற்றும் தத்தெடுத்து வளர்த்தல் மற்றும் இருமடித்தாள்களை மீள அமைத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - தமிழ் மொழி மூலம். கம்பஹ உ.ப.நா. அலுவலகத்தின் நீர், மின்சாரம் மற்றும் மலசலகூடங்களை திருத்தியமைத்த
- மேல் மாகாண ஆவண பதிவு செய்தலில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஆவண முன்னேற்றம் மற்றும் திட்டங்கள் 2024/2025 உதவியாளர் உத்தியோகத்தர்களுக்கான நியதிச்சட்ட விடயங்கள் பற்றிய பயிற்சி-கட்டம் 01.
- தகவல் தொழில்நுட்ப அங்கத்துவ நிறுவனத்தினால் நடத்தப்பட்ட கணினி தொழில்நுட்பம் மற்றும் திறன் அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டத்திற்கான திறன் மட்டத்தை தீர்மானிக்கும் பரீட்சை.
- பதிவாளர்களை நியமித்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்ட
- ஆவணங்களை பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 35 ஆவது பிரிவு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- 150 மணித்தியால தமிழ் மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
- கொள்முதல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - 1 ஆம் கட்டம்,2 ஆம் கட்டம்
- நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 31 ஆவது பிரிவு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - 1 ஆம் கட்டம், 2 ஆம் கட்டம்
- மேல் மாகாண ஆவணகளைப் பதிவு செய்தலில் ஈடுபட்டுள்ளஅபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஆவண உதவியாளர் உத்தியோகத்தர்களுக்கான நியதிச்சட்ட விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 02.




வடமேற்கு வடமத்திய மாகாண உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

- செயலாளர் பரிச்சயம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்புத்தகம் கட்டுபவர்களுக்கான இரண்டு நாட்களை கொண்ட சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 1 ஆம் கட்டம் , 2 ஆம் கட்டம்
- பட்டபின் படிப்பு கற்கைநெறி நிகழ்ச்சித்திட்டங்கள்.

- ஆவணங்களை பதிவு செய்தல் கட்டளைச் சட்டம் 36 -39 பிரிவுகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
- ஊவா மாகாண பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டம் கட்டம் 1, கட்டம் 2.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாண உத்தியோகத்தர்களுக்கான இ-விபிம தரவு தொகுதி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - தமிழ் மொழி மூலமான
- வடக்கு மாகாணத்தின் ஆவண பதிவு கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான நியதிச்சட்ட விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - தமிழ் மொழி மூலமான தென் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் ஊவா சபரகமுவ வலயத்தின் உத்தியோகத்தர்களுக்கான இ-விபிம தரவு தொகுதி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
- வடமேல் மாகாணத்தின் பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கட்டம் 1, கட்டம் 2.
- சபரகமுவா மாகாண பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்கள்) கட்டம் 01
- கிராமிய பதிவாளர்களை இணைத்துக்கொள்வது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- வடமேல் மாகாண பயிற்சி வேலைத்திட்டம். (புத்தளம் மாவட்டம்) கட்டம் 1, கட்டம் 2.
- எம்பிலிபிட்டிய காணிப்பதிவகத்தில் கணக்காய்வு தகவல்களை மீளாய்வு செய்தல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- கருமபீட அலுவல்களை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கட்டம் 1,2
- வடமத்திய மாகாண பயிற்சி வேலைத்திட்டம் கட்டம் 01, கட்டம் 02
- ICTA நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் கணினி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம
- கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட உத்தியோகத்தர்களுக்கான உள்ளக கணக்காய்வு மீளாய்வு பரிசோதனை பற்றிய பயிற்சி – தமிழ் மொழி மூலம்.
- NAITA நிறுவனம் மூலம் புத்தகம் கட்டுபவர்களுக்கு நடத்தும் பரீட்சை - NVQ 03
- திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் கட்டம் 01, கட்டம் 02
- STFL நிறுவனத்தினால் நடத்தப்படும் கொள்முதல் நிகழ்ச்சித்திட்டம்
- கருமபீடங்களில் செயலாற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (சிங்களம்/தமிழ் மொழி மூலம்)
- ஆவணப் பதிவு மற்றும் முன்னுரிமை, கண்டிய விவாகச் சட்டம், உரித்து சட்டம், சாதாரண விவாகப் பதிவுச் சட்டம், பிள்ளைகளை மகவேற்புச் சட்டம், பிறப்பு, விவாகம் இறப்பு திருத்தங்கள், உரித்து சட்டம் தமிழ் மொழி மூலம், முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம், ஆவணப் பதிவு செய்யும் மற்றும் நொத்தாரிசு கட்டளைச் சட்டம் - தமிழ் மொழி மூலம், கன்சியுலர் சட்டம் (வெளிநாட்டு பிறப்புகள்/ விவாகங்கள்/ இறப்புகள்) பதிவு செய்தல்
- ஆவணங்களைப் பதிவு செய்தல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- ஆவணங்களைப் பதிவு செய்தல் சட்டம் மற்றும் பிரச்சினைகளை கலந்துரையாடல்.
- மத்திய மாகாண பயிற்சி வேலைத்திட்டம் - கட்டம் 01, கட்டம் 02, கட்டம் ¾





ஆவணங்களைப் பதிவு செய்தல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.

- தென் மாகாண பயிற்சி வேலைத்திட்டம் - கட்டம் 01, கட்டம் 02
- அலுவலக பணியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கட்டம் 01, கட்டம் 02
- Computer Society of Sri Lanka நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட தகவல் தொழில் நுட்ப கருத்தரங்கு
- தகவல் தொழில் நுட்பத்திற்கான பொருட் பெறுகை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- ஊவா மாகாண வேலைத்திட்டம்- கட்டம் 03
- கொழும்பு, புத்தளம், இரத்தினபுரி மற்றும் குருணாகலை மாவட்ட உத்தியோகத்தர்களுக்கான இ-சனத்தொகை தொகுதி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்Computer Society of Sri Lanka
- மாவட்ட உத்தியோகத்தர்களுக்கான இ-சனத்தொகை தொகுதி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.





மத்திய மாகாண உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

- தாபன விதிக்கோவை மற்றும் பெறுகை, ஆவணப்படுத்தல், பொருட் கணக்கெடுப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- உரித்து பயிற்சி மத்திய / சபரகமுவா மற்றும் ஊவா மாகாண பயிற்சி நிகழ்ச்சித்திட்டம
- எம்பிலிபிட்டிய தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பதிவாளர் நாயகம் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான நியதிச்சட்ட விடயங்கள் மற்றும் திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

## 7.2 தகவல் தொழில்நுட்ப அலகு

- **ICTA Cloud வெளியினுள் நிறுவப்பட்டுள்ள அனைத்து தரவுத் தொகுதிகளை திணைக்களத்தினுள் ஸ்தாபித்தல். (Data Center for DR Site)**

| | |
|---|---|
| **பௌதீக முன்னேற்றம்** | **தற்போது நிறுவன தெரிவு நிறைவு பெற்றுள்ளமையினால், ஜனவரி மாதத்திற்குள் சுஹுூருபாய இல் Data center இனை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.** |
| **நிதிசார் முன்னேற்றம்** | 50 மி.ரூபாய் (இது வரையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை.) |

- **இணையத்தளத்தை மறுசீரமைத்தல்**

| | |
|---|---|
| **பௌதீக முன்னேற்றம்** | இணையத்தளத்தில் புதிய அபிவிருத்தி செயற்திட்டத்தில் முதலாம் கட்டமான முகப்பு பக்க ஆரம்ப மாதிரி (Home page Prototype) பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. குறித்த ஆரம்ப மாதிரி மற்றும் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **நிதிசார் முன்னேற்றம்** | ஒரு மி.ரூபாய் (இது வரையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை.) |

- **EBMD மென்பொருள் அபிவிருத்தி**

| | |
|---|---|
| **பௌதீக முன்னேற்றம்** | **செயற்றிட்டத்தின் மேம்பாட்டு முன்மொழிவுகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன.** |
| **நிதிசார் முன்னேற்றம்** | - |

- E-POP, EBMD, eTitle, eLand செயற்றிட்டங்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் காலத்தின் தேவைக்கேற்ப அதற்குரிய புதிய மேம்பாடுகளை மேற்கொள்ளும் பணிகள் சந்தர்ப்பத்திற்கேற்ப தகவல் தொழில்நுட்ப அலகினால் மேற்கொள்ளப்படும்

| | |
|---|---|
| **செயற்றிட்டத்தின் பெயர்** | **EBMD** |
| **இடம்** | **பதிவாளர் நாயகம் திணைக்களம்** |
| **ஆரம்பிக்கப்பட்ட திகதி** | **ஒக்டோபர் 2020** |
| **பூர்த்தி செய்யப்பட்ட திகதி** | **டிசெம்பர் 2020** |

**<u>எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள்</u>**

- பொதுமக்களுக்கு துரிதமாக மற்றும் இலகுவாக பிறப்பு, மரணம் மற்றும் விவாகச் சான்றிதழ் பிரதிகளைப் வழங்கும் முறைமையொன்றை உருவாக்கல்.
- பிறப்பு, மரணம் மற்றும் விவாக ஆவணங்களைப் பாதுகாத்து பேணும் பொருட்டு தரவுத் தொகுதியொன்றை உருவாக்கல்.

**<u>e-BMD Revamp செயற்றிட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தப்பட்ட புதிய பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ்களை விநியோகிக்கும் தரவுத் தொகுதி</u>**






## eBMD செயற்றிட்டத்தின் முன்னேற்றம்

- 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட eBMD ஒரு நாள் சேவை மற்றும் Online eBMD சேவைகள் தற்போது அனைத்து பிரதேச செயலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
- 2021 ஆம் ஆண்டில் புதிய தரவுத் தொகுதி மற்றும் மென்பொருள் அமைக்கப்பட்டதையடுத்து, பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களை நாட்டில் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.
- eBMD தொகுதி மூலம் விண்ணப்பங்களை பூரணப்படுத்தாது நபர்களின் விபரங்களை உள்ளிட்டு பிரதிகளை விநியோகிக்கும் சேவையும் தற்போது பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
- பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்கையில் விநியோகிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கு (A86) பதிலாக, SMS செய்தியை அனுப்புவதன் மூலம் கையடக்கத் தொலைபேசிக்கு FDF படிவத்திற்கு A86 படிவத்தை அனுப்பும் வசதி 2023 ஆம் ஆண்டில் தரவுத் தொகுதியினூடாக நிறுவப்பட்டது. தற்போது அதற்குரிய பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வருட இறுதியளவில் அனைத்து பிரதேச செயலகங்கள் மூலமும் A86 க்கு பதிலாக Digital Receipt விநியோகித்தல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- Online eBMD வேலைத்திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு தமது கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி online முறைமையில் பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் வசதிகளை வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது அது அனைத்து பிரதேச செயலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
- eBMD தரவுத் தொகுதிக்காக API வசதிகள் உள்ளடக்கப்பட்டிருப்பதன் மூலம் பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்ளும் வசதிகள் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. (உதா: குடிவரவு குடியகழ்வுத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், இலங்கை பொலிஸ், புலனாய்வுப் பிரிவு, ஓய்வூதியத் திணைக்களம், தொழில் திணைக்களம்)
- பொதுமக்களுக்கு மிகவும் வசதியான முறையில் திணைக்கள சேவையை வழங்குவதற்கும், சேவையை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்வதற்கும், காகிதப்பொருட்களின் செலவினைக் குறைப்பதன் மூலம் அரசாங்கத்தின் செலவினைக் குறைக்கும் நோக்கில் மேற்குறிப்பிட்ட சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- **நொத்தாரிஸ் பிரிவு**
- **<u>2024 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற முன்னேற்றம்</u>**
  - உறுதிகள் பதிவு செய்தல் கைந்நூல் தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
  - கேவியட் அறிவித்தல்களை பதிவு செய்தல் தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
  - உடன்பாட்டு சுற்றறிக்கை வரைவுப்படுத்தப்பட்டுள்ளது.

**நிதிசார் முன்னேற்றம் (2024.01.01. முதல் 2024.12.31 வரை)**

| | விடயம் | எண்ணிக்கை | வருமானம் (ரூ) |
|---|---|---|---|
| 01 | நொத்தாரிசு புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்கல். | 577 | 1,731,000 |
| 02 | நொத்தாரிசு மேலதிக மொழிகள் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல். | 352 | 1,056,000 |
| 03 | நொத்தாரிசு வலயங்களை மாற்றுதல். | 190 | 570,000 |
| 04 | அற்றோணித் தத்துவப் பத்திரங்களை இரத்து செய்தல். | 413 | 248,000 |
| 05 | அற்றோணி பரீட்சிக்கும் கட்டணங்கள் | 26 | 15,600 |
| 06 | பிரித்தெடுப்பு சான்றிதழ் பிரதிகளை விநியோகித்தல் (சாதாரண)<br>(ஒரு நாள்) | 157<br>659 | 93,850<br>659,000 |
| 07 | பிரித்தெடுப்பு பிரதிகளை விநியோகித்தல் (சாதாரண)<br>(ஒரு நாள்) | 87<br>398 | 51,800<br>398,000 |
| 08 | அசையும் சொத்துக்களைப் பதிவு செய்தல். | 256 | 337,860 |
| | மொத்தம் | | 5,161,110 |

**50 காணிப் பதிவகங்களில் ஆவணப் பதிவு செய்தல் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் (2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை))**

| தொ.இல | பிரதான அலுவல்கள் | சாதாரணச் சேவை | | ஒரு நாள் சேவை | |
|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட வருமானம் (ரூ) | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட வருமானம் (ரூ) |
| 01 | ஆவணப் பதிவு | 915,438 | 105,541,914.00 | 160,297 | 134,780,300.00 |
| 02 | இருமடித்தாள் (சுருக்கப்பிரதி) விநியோகம் | 189,027 | 45,450,560.00 | 1,613,853 | 513,123,381.00 |
| 03 | காணி உறுதி பிரதிகளை விநியோகித்தல் | 82,689 | 54,125,419.00 | 141,806 | 153,897,185.00 |

**மாவட்ட அலுவலகங்கள் 14 இனதும் வருமானங்கள் (2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)**

| தொ.இல | பிரதான அலுவல்கள் | சாதாரணச் சேவை | | ஒரு நாள் சேவை | |
|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட வருமானம் (ரூ) | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட வருமானம் (ரூ) |
| 01 | அற்றோணித்தத்துவப் பத்திரங்களை பதிவு செய்தல் | 28,929 | 52,699,909.00 | 27,249 | 67,810,636.00 |
| 02 | இருமடித்தாள் (சுருக்கப்பிரதி) விநியோகம் | 1,197 | 720,654.00 | 5,108 | 5,102,181.00 |
| 03 | அற்றோணித் பிரதிகளை விநியோகித்தல் | 1,730 | 1,039,200.00 | 6,376 | 6,364,363.00 |

**வலய அலுவலகங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் (2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை)**

| தொ.இல | பிரதான அலுவல்கள் | சாதாரணச் சேவை | | ஒரு நாள் சேவை | |
|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட வருமானம் (ரூ) | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட வருமானம் (ரூ) |
| 01 | அற்றோணித்தத்துவப் பத்திரங்களை பதிவு செய்தல் | 18,434 | 32,030,727.00 | 12,907 | 39,318,000.00 |
| 02 | இருமடித்தாள் (சுருக்கப்பிரதி) விநியோகம் | 914 | 554,181.00 | 2,481 | 2,466,109.00 |
| 03 | அற்றோணித் பிரதிகளை விநியோகித்தல் | 2,572 | 1,601,672.00 | 3,529 | 3,506,400.00 |

## 7.3 உரித்துகள் அலகு

உரித்துப் பதிவு செய்தல் வேலைத்திட்டம் தற்போது 31 உரித்துப் பதிவு செய்தல் அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. காணி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பிம்சவிய தலைப்பு (122-2-3-4-2509) கீழ் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.

**உரித்துகள் பதிவுப் பிரிவின் முன்னேற்றம்**

- 2024 .01.01 முதல் 2024.12.31 வரையில் பதிவுசெய்யப்பட்ட அட்டவணைகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| அரசாங்க | - 23,376 |
| தனியார் | - 21,617 |
| மொத்தம் | - 44,993 |

- பதிவுசெய்யப்பட்ட பிற் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை - 72,676

**நிறைவேற்றப்பட்ட பணிகள்/ நிறைவேற்ற வேண்டியுள்ள பணிகள்**

**2024 ஆம் ஆண்டில் புதிதாக உரித்துகள் பதிவு அலுவலகங்கள் 06 ஸ்தாபிக்கப்படவுள்ளன**

கொழும்பு/ எம்பிலிப்பிட்டிய/நாரம்மல /நிக்கவெரட்டிய/ மட்டக்களப்பு/ அம்பாறை/ யாழ்ப்பாணம்/ வவுனியா/ முல்லைத்தீவு / கிளிநொச்சி/ மன்னார் / மத்துகம

- புதிய உரித்து அலுவலகங்கள் 12 ஐ ஸ்தாபிப்பதற்கான அடிப்படை தத்துவங்கள் சார் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- பிரயோக பயிற்சிகளுக்காக மிகவும் அருகாமையில் உள்ள உரித்து பதிவாளர் அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.
- புதிய அலுவலகங்களை ஆரம்பிப்பதற்கு தேவையான கணனிகள் / அலுவலக உபகரணங்கள் போன்ற பௌதீக வளங்களுக்கு தேவையான நிதி ஏற்பாடு காணி அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், கொள்வனவு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
- புதிய அலுவலகங்களை ஸ்தாபிக்கும்போது தேவையான (விசேடமாக வடக்கு/ கிழக்கு மாகாணங்களில்) அலுவலர் குழாமினை வழங்கிக்கொள்வது தொடர்பிலான சிக்கல்கள் இன்னும் காணப்படுகின்றது.

<u>**உரித்துப் பதிவு செய்தல் வருமானம்**</u>



- **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

உரித்துப் பிரிவிற்கு இணைக்கப்பட்ட புதிய உத்தியோகத்தர்களுக்காகவும், வடக்கு/ மத்திய/ ஊவா /சபரகமுவா/ வடமேற்கு/ வட மத்திய / கிழக்கு வலயங்களில் உரித்து அலுவலகங்களில் அலுவலர் குழாமிற்காக தெளிவூட்டல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் தேசிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.



1. உரித்துப் பதிவு செய்தல் பற்றிய தேசிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் -1 (இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்)









2. உரித்து பதிவு செய்தல் பற்றிய தேசிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் -2 (யாழ்ப்பாண மாவட்ட செயலகம்) (வடக்கு/ கிழக்கு வலயங்களின் புதிய உரித்து அலுவலகங்களுக்காக)



3. வடமேற்கு /வட மத்திய வலயங்களின் உரித்து அலுவலகங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ( குருணாகலை)



4. தெற்கு வலயத்தின் உரித்து அலுவலகங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ( காலி மாவட்ட செயலகம்)

5. உரித்துப் பதிவு செய்தல் அலுவலகங்களுக்களின் புதிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ( தலைமை அலுவலகம்)

6 . மத்திய /ஊவா சபரகமுவா வலயங்களில் உரித்து அலுவலகங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (எம்பிலிபிட்டிய தலைமைத்துவ பயிற்சி நிலையம்)

7. உரித்து அலுவலகங்களில் மென்பொருளினூடாக தினப்பதிவேட்டு ரசீது அச்சிடப்படல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (கம்பஹா மாவட்ட செயலகம்)

## மென்பொருள் அபிவிருத்தி

- 2000-2014 வரையான பதிவு அலுவல்கள் காணி அமைச்சின் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மென்பொருள் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னேற்றம் மற்றும் திட்டங்கள் 2024/2025

- 2014 - கொழும்பு பல்கலைக்கழகத்தினால் தரவுத் தொகுதி அபிவிருத்தி செய்யப்பட்டது.
- இம்மென்பொருளை மிகவும் மேம்படுத்தி தொகுதியினூடாக வழங்கக்கூடிய சேவைகளை விரிவுப்படுத்தும் நோக்கில் மென்பொருள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்குரியதாக மென்பொருள் அபிவிருத்திக்காக 60 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது.
- அத்துடன் சர்வதேச நிதியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட “Online Digital Land Registry” முறைமையை ஸ்தாபிப்பிக்கவும், இவ் E - உரித்துப் பதிவு மென்பொருளை 2024 டிசெம்பர் அளவில் அபிவிருத்தி செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மென்பொருள் அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமைய, நாட்டின் அனைத்து உரித்துப் பதிவாளர்களின் கருத்துகளை வலய மட்டத்தில் பெற்றுக்கொண்டு தேவைகள் இனங்காணப்பட்டன. (2024 ஜனவரி - மார்ச்)
- உரித்துப் பதிவு செயற்பாடுகளுக்கு நேரடியாக பங்களிப்பை வழங்கும் உரித்துப் பதிவாளர்கள், மேலதிக உரித்துப் பதிவாளர்களுடன் கலந்துரையாடி தொகுதியை அபிவிருத்தி செய்யும் தேவைப்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. (2024 மார்ச் - மே)
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை ( 2024 மே - ஜுலை )
- 2024.07.26 ஆம் திகதி இவ்வறிக்கை கொள்முதல் நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- 2024.08.12 ஆம் திகதி அமைச்சு மட்டத்தில் ஆலோசனை ரீதியான கொள்முதல் குழுவொன்றை நியமிப்பதற்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- 2024.10.24 மேற் குறிப்பிட்ட அமைச்சின் ஆலோசனை பெறுகைக்குழு முதற் தடவையாக கூடியது.
- இத்தொகுதி அபிவிருத்திக்காக 60 மில்லியன் ரூபா காணி அமைச்சினால் கிடைக்கப்பெற்ற போதிலும் இது வரையிலும் பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

**தொகுதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நலன்கள்**

1. தற்போது தொகுதி மேலும் மேன்மையடைதல்.
2. திருத்தங்களுக்காக செலவாகும் காலம் குறைவடைதல். (2 முதல் 3 வாரங்கள் வரை)
3. ஆவணங்கள் சார்ந்த வகையில் விநியோகிக்கப்படுகின்ற பிரதிகளுக்கு பதிலாக தொகுதியிலேயே பெற்றுக்கொள்ளப்பட்ட மிகவும் சரியான நம்பகத்தன்மையான பிரதிகளை விநியோகிக்கக்கூடியதாக இருத்தல்.
4. அதன் மூலம் பிரதிகளை விநியோகிப்பதற்கான காலம் மற்றும் வேலை படிமுறைகள் குறைவடைவதால் துரிதமாக சேவையை வழங்கக்கூடியதாக இருத்தல்.
5. பதிவிற்கு கிடைக்கப்பெறும் அட்டவணைகள் / பின் கொடுக்கல் வாங்கல் வேலைகள் பூர்த்தியடைந்தவுடனேயே நபருக்கு / நிறுவனத்திற்கு அறியப்படுத்தக் கூடியதாக இருத்தல்.
6. உரித்துகள் நிர்ணயத் திணைக்களம் / நிலஅளவை நாயகம் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் அலுவல்கள் விரைவுப்படுத்தப்படல்.
7. அரச முத்திரை வரி வருமானத்தை சரியாக, துரிதமாக கணக்கிட்டுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
8. நிகழ்நிலை முறைமையில் சேவையை வழங்கக்கூடியதாக இருத்தல்.
9. நபர்கள் உரித்து கோரும் அசையா சொத்துகள் பற்றிய தகவல்களை துரிதமாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
10. சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுடன் தரவுகளைப் பரிமாற்றிக்கொள்ளும் வசதிகளை வழங்கக்கூடியதாக இருத்தல்.

**உரித்துப் பதிவு செய்தல் "பிம்சவிய" செயற்றிட்டத்திற்கான செலவு தலைப்பின் கீழ் கிடைக்கப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளினால் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய செயற்றிட்டங்கள்.**

- எல்பிட்டிய உரித்து பதிவு செய்தல் அலுவலகத்தின் உரித்து பிரிவு குளிரூட்டி வசதிகள் பொருத்தப்பட்டமை.
- எல்பிட்டிய உரித்துப் பதிவு செய்தல் அலுவலகத்தின் உரித்துப் பிரிவிற்கு திரைச்சீலைகள் இடப்பட்டமை.
- நாரம்மல அலுவலகத்தின் உரித்துப் பிரிவு உட்பகுதியை துணைப் பிரிவுகளாகப் பிரித்தல் / குளிரூட்டி வசதிகள் பொருத்தப்பட்டமை.
- அத்தனகல்லை உரித்துப் பதிவு செய்தல் அலுவலகத்தின் உரித்துப் பிரிவிற்கு திரைச்சீலைகள் இடப்பட்டமை.
- உரித்து அலுவலகங்களுக்கு நிலையான உபகரணங்களை வழங்குதல். ( தற்போது இயங்குகின்ற 31 அலுவலகங்களுக்கு மேலதிகமாக புதிய 12 அலுவலகங்களுக்கு)
    - கணினி (Dsktop /Laptop)
    - UPS சாதனங்கள் (உதிரிப்பாகங்கள்)
    - Scanners
    - புகைப்பட பிரதி இயந்திரம்
    - அச்சு இயந்திரம் (உரித்து சானறிதழ்களை அச்சிடுவதற்கு/ பதிவேடுகளை அச்சிடுவதற்கு) இதுவரையிலும் விநியோகிக்கப்படவில்லை
    - பதவிநிலை மேசை/ கதிரைகள்
    - எழுது விளைஞர் மேசை/ கதிரைகள்
    - சேவைபெற சமூகமளிக்கும் பொது மக்களுக்கான கதிரைகள்
    - அலுமினிய கபர்ட் / அலுமினிய அலுமாரி
    - அலுமினிய இராக்கைகள்

**அலுவல்களை நிறைவேற்றிக்கொள்ளும் போது எழுந்துள்ள பிரச்சினைகள்.**

- **அனுமதிக்கப்பட்டுள்ள பணிக்குழு இன்மை**
    - பணிக்குழுவினை பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமங்கள் (விஷேடமாக வடக்கு மற்றும் கிழக்கு)
- **இணையத்தள வசதிகளிலுள்ள பிரச்சினைகள (தேவையான அளவு Access Points இல்லாமை)**
    - எதிர்வரும் காலத்தில் சகல காணிப் பதிவகங்களிலம் உரித்துப் பதிவு செய்தல் ஆரம்பிக்கப்படவுள்ளமையினால் இவ்விடயத்திற்கு தீர்வு வழங்கப்படல் மிக முக்கியமானதாகும்.
- கணினி மென்பொருள் ஒன்றின் ஊடாக பதவு செய்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் வலய மட்டத்திலேனும் தகவல் தொழில்ப உத்தியோகத்தர்களது தேவைப்பாடு காணப்படுகின்றமை.

## 1.2 இ - காணி அலகு

- **முன்னணி வரையறைகள்** இ-காணி மென்பொருளின் இரண்டாம் கட்ட கடமைகளை பூர்த்தி செய்து திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ளல்.
- **நோக்கு எல்லை** காணிப் பதிவாளர் அலுவலகங்களுக்கு மென்பொருளின் இரண்டாம் பகுதியில் பயிற்சி கட்டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதா என பார்த்தல்.
- **விசேட அடைவுகள்** 2024 ஆம் ஆண்டின் முதலாவது கட்டத்தின் கீழ் மேலும் 10 அலுவலகங்களுக்கும், இரண்டாம் கட்டத்தின் கீழ் பரீட்சார்த்த அலுவலகங்களுக்கும் ஸ்தாபித்தல்.

### 2025 ஆண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் (சாராம்சமாக)

| | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு ரூ.மி. | 2025 வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.மி. |
|---|---|---|---|
| **1** | இ-காணி செயற்றிட்டம் | 310 | உபகரணங்கள் - 100 மி.ரூ.<br>காகிதப் பொருட்கள் - 25 மி.ரூ.<br>பேணல் மற்றும் சேவைகள் - 25 மி.ரூ.<br>ஏனைய அலுவல்கள் - 10 மி.ரூ.<br>வருடு செய்தல் - 150 மி.ரூ. |

### பௌதீக முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)

- இவ்வருடத்தில் மென்பொருள் ஸ்தாபிக்கப்பட வேண்டிய 10 அலுவலகங்களில் பதுளை காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு மென்பொருளை ஸ்தாபித்தல்.
- இவ்வருடத்தில் மென்பொருள் ஸ்தாபிக்கப்பட வேண்டிய 10 அலுவலகங்களில் அடிப்படை தரவுகளை உரிய அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றினை மென்பொருளில் உள்ளீடு செய்வதற்காக குறித்த மென்பொருளினை அபிவிருத்தி நிறுவகத்திற்கு வழங்குதல்
- வருடு செய்யப்பட வேண்டிய 17 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் வருடு செயதல் நடவடிக்கைகளை செய்து முடித்தல்.
- இ-காணி மென்பொருளில் கட்டம் I மற்றும் கட்டம் II இற்கு உரிய UAT பரிசோதனையினை மேற்கொள்ளல்.

## சிவில் பதிவுப் பிரிவு

### 2024 ஆம் ஆண்டிற்குரிய முன்னேற்றம்

- பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவிற்குரிய 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பொது விவாகங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்து கட்டளைச் சட்டம் ஆகியவற்றை திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பிரிவுப் பதிவாளர்களின் ஒழுக்க நடத்தை அலுவல்களை முறையாக பேணும் பொருட்டு ஒழுக்க விடயக் கோவையொன்றை தயாரிப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளல்.
- சிவில் பதிவு மற்றும் அது தொடர்பான மாதிரிப்படிவங்களை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சிவில் பதிவிற்குரிய இதுவரையில் விநியோகிக்கப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளையும் உள்ளடக்கி பதிவாளர் நாயகத்தின் கைந்நூலில் III தொகுதி முதல் IX தொகுதி வரையான பகுதிகளில் திருத்தம் செய்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதனை தமிழ் மொழிபெயர்ப்புக்கு அனுப்புதல்.
- இ-சனத்தொகை செயற்றிட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு முதல் பிறந்த

- பிள்ளைகளுக்கு சர்வதேச தரத்திலான மற்றும் பாதுகாப்பான சாதனங்களை உள்ளடக்கிய தேசிய பிறப்புச் சான்றிதழை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நிகழ்நிலையினூடாக பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ் பிரதிகளை விநியோகித்தல்.

சிவில் பதிவிற்குரிய கணக்காய்வு விசாரணை அறிக்கைகள் மூலம் அனுப்பப்படுகின்ற அவதானிப்புகள், பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகள் அடிப்படையில் பிரதேச செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்ட மாவட்டப் பதிவாளர் பிரிவுகளுக்கு தேவையான ஆலோசனைகளையும், கட்டளைகளையும் வழங்கல்.

### பணி முன்னேற்றம் (2024.12.31)

| | பணி | மொத்த எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிககை |
|---|---|---|---|
| 01 | பதிவுபெற்ற தேவாலயங்களை திணைக்களத்தின் கீழ் விவாக அலுவல்களை மேற்கொள்ளும் பொருட்டு வர்த்தமானியில் வெளியிடல். | 8 | 5 |
| 02 | குழந்தை சான்றிதழ் விநியோகப் (B149) படிவத்தை விநியோகித்தல். | 1397 | 1220 |
| 03 | காணாமற்போனோர் மரணச் சான்றிதழ்களை மற்றும் கண்களால் காணாத நபர்களின் சான்றிதழ்களை விநியோகித்தல். | 59( மரணங்கள்)<br>380(கண்களால் காணாத சான்றிதழ்) | 59(மரணங்கள்)<br>380(கண்களால் காணாத சான்றிதழ்) |
| 04 | வெளிநாட்டவர்களுக்கும், உள்நாட்டவர்களுக்கும் இடையேயான விவாகப் பதிவிற்கு அங்கீகாரம் வழங்கல். | 1673 | 1659 |
| 05 | விவாகரத்து நிலையான தீர்வின் அடிப்படையில் விவாகரத்தை குறித்து வைத்தல். | 8460 | 6960 |

### நிதிசார் முன்னேற்றம் (2024.01.01 – 2024.12.31)

| | பணி | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பிரதிகளின் எண்ணிக்கை | வருமானம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01. | பிறப்பு, விவாகம், மரணச் சான்றிதழ்களை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்தல் - தலைமை அலுவலகம் | 17,715 | 28,824 | 17,294,400.00 |
| 02 | பிரதேச செயலகங்களில் பிறப்பு, விவாகம், மரணச் சான்றிதழ்களை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்தல். | 9,914 | 12,497 | 7,499,570.00 |
| 03. | சுஹுருபாயவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிறப்பு, விவாகம், மரணச் சான்றிதழ்களை விநியயோகிக்கும் கருமபீடத்திற்குரிய வருமானம் | 60,607 | 94,758 | 11,769,710.00 |
| 04. | பொதுவாக மற்றும் நிகழ்நிலை முறைமைனூடாக பிரதேச செயலகங்களில் பிறப்பு, விவாகம், மரணச் சான்றிதழ்களை விநியோகித்தல். | 4,787,059 | 7,551,425 | 975,739,400.00 |
| 05. | வெளிப்படுத்தல் பத்திரம் அடிப்படையில் அலுவல்களை மேற்கொள்ளல். | 92,957 | | 5,595,111.00 |
| 06. | சாதாரண விவாகங்களைப் பதிவுசெய்தல். | 138,612 | | 23,559,980.00 |
| 07. | முஸ்லிம் விவாகங்களைப் பதிவு செய்தல். | 18,874 | | 4,940,230.00 |

### 1.1.1 இ-சனத்தொகை ஆவணங்கள் வேலைத்திட்டம்

சிவில் பதிவு தொடர்பான தகவல்கள் மற்றும் இற்றைப்படுத்தல் தகவல்களை கணனி தரவுத் தொகுதிக்குள் உள்ளிட்டு, அதன்மூலம் கவர்ச்சியான, சரியான, அதிகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய, துரிதமாக பதிற்கிடைக்கும் குறியீட்டுடனான அச்சிடப்பட்ட சான்றிதழை வழங்கும் நோக்கில் இ-சனத்தொகை ஆவணங்கள் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கு எல்லைகளாக,

- பிறப்புகளைப் பதிவுசெய்தல் மற்றும் அதனூடாக ஒவ்வொரு பிறப்புகளுக்கும் ''எனது இலக்கம்'' ஆக அதனை அடையாளப்படுத்தும் இலக்கமொன்றை வழங்கல்.
- தற்றெடுத்து வளர்ப்பதை பதிவு செய்தல்.
- மரணங்களைப் பதிவு செய்தல்.
- விவாகங்களைப் பதிவு செய்தல்.
- பிறப்பு/விவாகம்/மரணச் சான்றிதழ்களில் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- சான்றிதழ்கள் / அறிக்கைகளை விநியோகித்தல்.
- சனத்தொகை ஆவணங்களுக்குரிள தகவல்களை உள்ளடக்கல் மற்றும் இற்றைப்படுத்தல் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும்.

இதன்போது ஆரம்பக் கட்டத்தின் கீழ் பிறப்புப் பதிவிற்குரியதாக மாத்திரம் அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் கீழ் 06 பிரதேச செயலகங்களை அடிப்படையாகக் கொண்டு (தெஹிவளை, கம்பஹா, ஹங்குரான்கெத்த, குருணாகலை, தமன்கடுவ மற்றும் இரத்தினப்புரி) நேரடி தரவுத் தொகுதியினுள் பரீட்சார்த்த செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் பிரதான மாவட்ட பரீட்சார்த்த செயற்றிட்டமாக களுத்துரை மாவட்டத்தில் 2021.01.01 ஆம் திகதி நடைபெற்ற பிறப்புகளுக்குரிய தேசிய பிறப்புச் சான்றிதழ்களை விநியோகிக்கும் அங்குரார்ப்பண வைபவம் 2023.12.05 ஆம் திகதி உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த அவர்களின் தலைமையில் இடம்பெற்றதுடன், களுத்துறை மாவட்டத்தின் தேசிய பிறப்புச் சான்றிதழ்

வழங்கும் அலுவல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம, கடுவெல, மஹரகம மற்றும் கெஸ்பேவ ஆகிய பிரதேச செயலகங்களில் தேசிய பிறப்புச் சான்றிதழ்களை விநியோகிக்கும் பணி




**2024.07.22 ஆம் திகதி கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலகத்திலும் தேசிய பிறப்பச் சான்றிதழ் விநியோகிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.**

## 1.2. புள்ளிவிபரவியல் பிரிவு

| செயற்பாடுகள் | பணியை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள திகதி | பணி பூர்த்தி செய்யப்பட்ட திகதி | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட பிறப்புகள், விவாகங்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையை கணக்கிடல் - 2023 | 2024.03.31 - 100% | 2024.03.31 | 100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| பதிவுசெய்யப்பட்ட பிறப்புகள், விவாகங்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையை கணக்கிடல் 2024 | 2024.12.31 - 50% | தயாரிக்கப் படுகின்றது. | 70% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| பிறப்பு, விவாகம் மற்றும் மரண தரவுக் கோவைகளைத் தயாரித்தல் - 2020 | 2024.12.31 - 100% | தயாரிக்கப் படுகின்றது. | தயாரிக்கப்பட்ட இறுதி தரவு கோவைகள் பரீட்சிக்கப்படுகின்றன. |
| பிறப்பு, விவாகம் மற்றும் மரண தரவுக் கோவைகளைத் தயாரித்தல் - 2021 | 2024.12.31 - 30% | தயாரிக்கப் படுகின்றது. | 50% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அனுப்பப்பட்ட கோவைகளில் தரவுகள் பரீட்சிக்கப்படுதல் மற்றும் பற்றாக்குறையான தரவுகளை எடுப்பித்துக்கொள்ளல் இடம்பெறுகின்றன. |
| பிறப்பு, விவாகம் மற்றும் மரண தரவுக் கோவைகளைத் தயாரித்தல் - 2022 | 2024.12.31 - 100% | 2024.12.31 | தயாரிக்கப்பட்ட இறுதி தரவு கோவைகள் பரீட்சிக்கப்படுகின்றன. |
| பிறப்பு, விவாகம் மற்றும் மரண தரவுக் கோவைகளைத் தயாரித்தல் - 2023 | 2024.12.31 - 30% | தயாரிக்கப் படுகின்றது. | 50% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அனுப்பப்பட்ட கோவைகளில் தரவுகள் பரீட்சிக்கப்படுதல் மற்றும் பற்றாக்குறையான தரவுகளை எடுப்பித்துக்கொள்ளல் இடம்பெறுகின்றன. |
| பிறப்பு, விவாகம் மற்றும் மரண தரவுகள் அட்டவணைத் தயாரித்தல் - 2020 | 2024.12.31 - 75% | தயாரிக்கப் படுகின்றது. | தயாரிக்கப்பட்ட இறுதி தரவு கோவைகள்/ தரவு அட்டவணைகள் பரீட்சிக்கப்படுகின்றன. |
| பிறப்பு, விவாகம் மற்றும் மரண தரவுகள் அட்டவணைத் தயாரித்தல் - 2022 | 2024.12.31 - 75% | தயாரிக்கப் படுகின்றது. | தயாரிக்கப்பட்ட இறுதி தரவு கோவைகள்/ தரவு அட்டவணைகள் பரீட்சிக்கப்படுகின்றன. |
| மரணத்திற்கான காரணத்தை குறியிடல் / அற்கிகையைத் தயாரித்தல் - 2020 | 2024.12.31 - 100% | 2024.12.31. | குறியிடல் பூர்ததி செய்யப்பட்டுள்ளதுடன், தயாரிக்கப்பட்ட இறுதி தரவு கோவைகள்/ தரவு அட்டவணைகள் பரீட்சிக்கப்படுகின்றன. |
| மரணத்திற்கான காரணத்தை குறியிடல் / அற்கிகையைத் தயாரித்தல் - 2021 | 2024.12.31 - 50% | தயாரிக்கப் படுகின்றது. | மரணத்திற்கான காரணத்தை குறியிடல் - 50% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| மரணத்திற்கான காரணத்தை குறியிடல் / அற்கிகையைத் தயாரித்தல் - 2018 | 2024.12.31 - 30% | தயாரிக்கப் படுகின்றது. | மரணத்திற்கான காரணத்தை குறியிடல் - 30% பூர்ததி செய்யப்பட்டுள்ளது. |
| நிலைபேறான அபிவிருத்தி சுட்டிகளைத் தயாரித்தல் - 2020<br>சுட்டிகள் இலக்கம் 3.1.1, 3.2.1, 3.2.2, 3.4.1, 3.7.2 | 2024.12.31 - 100% | 2024.12.31 | தயாரிக்கப்பட்ட இறுதி தரவு கோவைகள்/ தரவு அட்டவணைகள் பரீட்சிக்கப்படுகின்றன. |
| மத்திய வருடாந்த சனத்தொகை மதிப்பீடு - 2024 | 2024.08.31 - 100% | 2024.08.31 | மத்திய வருடாந்த சனத்தொகை 2024 செப்டெம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது. |

## 3 வருமானம் ஈட்டும் செயற்திட்டங்கள்

**254 செலவினத் தலைப்பிற்குரிய வருமானம் ஈட்டிக்கொள்ளல். (2024.12.31 ஆம் திகதிக்கு)**




| மொத்த வருமானம் 2024.12.31 ஆம் திகதி வரை | | | |
|---|---|---|---|
| **பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வருமானம்** | மில்லியன் | | |
| | 2023 | 2024 | அதிகரிப்பு |
| | 2,408.9 | 2,616.7 | 9 % |

| விபரம் | 2023<br>மில்லியன் | 2024<br>மில்லியன் | % |
|---|---|---|---|
| **பதிவு செய்தல் வருமானம்** | 2400 | 2,612 | 9% |
| Land | 1,502 | 1,581 | 5 % |
| BMD | 898 | 1,031 | 15 % |
| **நொத்தாரிசு வருமானம்** | 8.9 | 4.7 | -47% |
| **மொத்த வருமானம்** | **2,408.9** | **2,616.7** | **9%** |

# மாகாண சபைகள்
# மற்றும்
# உள்ளூராட்சிப்
# பிரிவு

# உள்ளடக்கம்

**பக்க இலக்கம்**


| | | |
|---|---|---|
| **1.** | **அறிமுகம்** | 1 |
| **2.** | **நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்** | 2 |
| **3.** | **உள்நாட்டு நிதியங்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்** | 2 -31 |
| 3.1. | அபிவிருத்திப் பிரிவு | 2-5 |
| 3.2. | தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையம் | 5-7 |
| 3.3. | மாகாண சபைகள் பிரிவு | 7-10 |
| 3.4. | உள்ளூராட்சிப் பிரிவு | 10-13 |
| 3.5. | சட்டப் பிரிவு | 13-15 |
| 3.6. | நிர்வாக மற்றும் பயிற்சிப் பிரிவு | 15-20 |
| | • தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு | 20-23 |
| 3.7. | நிதிப் பிரிவு | 24 |
| 3.8. | செலவினப் பகுப்பாய்வுப் பிரிவு | 25-26 |
| 3.9. | உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 26-28 |
| 3.10. | திட்டமிடல் பிரிவு | 29-30 |
| 3.11. | கருத்திட்ட மேற்பார்வை பிரிவு | 30-31 |
| **4.** | **வெளிநாட்டு நிதியங்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்** | 32-43 |
| 4.1. | புறனெகும (மேலதிக ஒதுக்கீடு) / உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் துறை வாரியான கருத்திட்டம் | 32 |
| 4.2. | கிராமிய பாலங்கள் கருத்திட்டம் (கட்டம் V) | 32-33 |
| 4.3. | பெருநகர் கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (GCWMP) | 34 |
| 4.4. | பெருநகர் கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - (GCWWIIMP) | 35 |
| 4.5. | அபிவிருத்தியடைந்துவரும் வலயங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம் (RIDEP) | 36-37 |
| 4.6. | போக்குவரத்து தொடர்புகள் மற்றும் சொத்து முகாமைத்துவக் கருத்திட்டம் | 37-38 |
| 4.7. | ஆரம்ப சுகாதார சேவைகள் தொகுதியை வலுவூட்டும் மாகாண அலகு (PSSP) | 38-40 |
| 4.8. | பிரதேச அபிவிருத்தி உதவிக் கருத்திட்டம் (LDSP) | 41-42 |
| 4.9. | சாதாரண கல்வி நவீனமயமாக்கல் (GEM) கருத்திட்டம் | 42-43 |
| **5.** | **உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் (LLDF)** | 43-48 |
| **6.** | **உள்ளூர் ஆளுகைக்கான இலங்கை நிறுவனம் (SLILG)** | 48-52 |
| **7.** | **2025 நடைமுறைப்படுத்த உத்தேசிக்கும் எதிர்காலத் திட்டங்கள்** | 52-59 |

# 1. அறிமுகம்

## 1.1. நிறுவனத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

### 1.1.1. நோக்கு

மாகாண மற்றும் பிரதேச ஆளுகைக்காக வலுவூட்டல்.

### 1.1.2. செயற்பணி

மக்கள் சார்பான சட்ட விதிகள் மற்றும் கொள்கைகளை வகுப்பதன் மூலம் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் உள்நாட்டு வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி வெளிப்படைத்தன்மையுடனும் வகைகூறும் விதத்திலும் நடவடிக்கை எடுப்பதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்குதல்.

## 1.2. பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் பணிகள்

2024.11.25 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட புதிய அமைச்சுக்களின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய அறிவித்தலுக்கு அமைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு,

I. மாகாண சபைக்கு ஏற்புடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்.

II. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்திற்கு அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஆய்வு செய்தல்.

III. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் குறைந்த வசதியுள்ள துறைகள் / பிரிவுகளை அடையாளம் கண்டு ஏற்புடைய வசதிகளை வழங்குவதற்காக விசேட கருத்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.

IV. மாகாண சபைகளின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களைப் பயிற்றுவித்தல்.

V. உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய அரசாங்கத்தின் செயற்பாடுகள்.

VI. பொது வசதிகள் அபிவிருத்திக்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்.

VII. உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களைப் பயிற்றுவித்தல்.

## 1.3. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள பிரிவுகள்

1. அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் அலுவலகம்
2. செயலாளர் அலுவலகம்
3. நிர்வாக மற்றும் பயிற்சிப் பிரிவு
   i. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு
4. மாகாண சபைகள் பிரிவு
5. உள்ளூராட்சிப் பிரிவு
6. அபிவிருத்திப் பிரிவு
7. கருத்திட்ட மேற்பார்வை பிரிவு
8. திட்டமிடல் பிரிவு
9. சட்டப் பிரிவு
10. நிதிப் பிரிவு
11. செலவுப் பிரிவு
12. உள்ளக கணக்காய்வுப் பிரிவு
13. தேசிய திண்மக் கழிவுகள் முகாமைத்துவ உதவி நிறுவனம்
14. உள்ளூராட்சி ஆளுகைக்கான இலங்கை நிறுவனம்
15. உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

## 2. ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 2024.01.01 முதல் 2024.12..31 வரை

ரூ.

| நிகழ்ச்சித்திட்டம் | 2024 திருத்திய வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு | 2024.12.31 ஆம் திகதி வரை நிதி முன்னேற்றம் |
|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **354,000,000** | **280,410,703** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 172,000,000 | 158,194,395 |
| வேறு மீண்டுவரும் செலவினங்கள் | | |
| தொழிற்பாட்டு | 166,000,000 | 114,853,994 |
| அபிவிருத்தி | 16,000,000 | 7,362,314 |
| **மூலதனச் செலவினம்** | **32,310,000,000** | **14,107,552,503** |
| தொழிற்பாட்டு | 88,000,000 | 42,345,518 |
| அபிவிருத்தி | | |
| வேறு மூலதனச் செலவினம் | 1,009,164,882 | 992,895,362 |
| உள்நாட்டு அபிவிருத்தி கருத்திட்டங்கள் | 1,520,960,317 | 686,895,186 |
| வெளிநாட்டு நிதியுதவி பெறும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் | 29,691,874,801 | 12,385,416,437 |
| **முழு மொத்தம்** | **32,664,000,000** | **14,387,963,206** |

**மாகாணங்களுக்கான பங்களிப்பு** ரூ.

| நிகழ்ச்சித்திட்டம் | 2024 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு | 2024.12.31 ஆம் திகதி வரை நிதி முன்னேற்றம் |
|---|---|---|
| **மூலதனச் செலவினம்** | **8,600,000,000** | **8,271,207,620** |
| வெளிநாட்டு நிதியுதவி பெறும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் | 8,600,000,000 | 8,271,207,620 |
| **முழு மொத்தம்** | **8,600,000,000** | **8,271,207,620** |

## 3. உள்நாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 வரை)

### 3.1. அபவிருத்திப் பிரிவு

- **குறிக்கோள்**

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார எல்லைக்குள் வாழும் சமூகங்களுக்குப் பயனளிக்கும் வகையில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு உள்நாட்டு நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் பொதுச் சேவைகளை திறமையாகவும் பயனுள்ளதாகவும் ஆக்குதல், அதன் மூலம் மாகாணங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க உதவுதல்.

**2. நடைமுறைப்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

1. உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (மூலதனம்)
2. பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (மீண்டுவரும்)
3. மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 2009 முதல் 2014 வரையிலான நிலுவைப் பட்டியல்களை தீர்த்தல்.

- **நிறைவேற்றப்படும் ஏனைய பணிகள்**

உள்ளூராட்சி மன்றங்களில் பிரஜைகள் பட்டயத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தல்.

1. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஏற்புடையவாறு திருத்திய பிரஜைகள் பட்டயமொன்றை அறிமுகம் செய்தல்.
2. பிரஜைகள் பட்டயம் உள்ளடக்கப்பட்ட வழிகாட்டல் கையேடு ஒன்றை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 3. 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை செயலாற்றுகை

| தொ. இல | நிகழ்ச்சித்திட்டம் | 2024 ஒதுக்கீடு (ரூபா) | 2024.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரூபா) | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 1 | உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் கருத்திட்டம் (மூலதனம்) | 384,125,199.00 | 194,533,208.89 | 51% | 98% |
| 2 | பிரதேச சபைகளை வலுப்படுத்தும் கருத்திட்டம் (மீண்டுவரும்) | 16,000,000.00 | 7,362,313.99 | 46% | 100% |
| 3 | மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிலுவையிலுள்ள பட்டியல்களை தீர்த்தல் | 972,039,928.69 | 972,039,928.69 | 100% | 100% |
| | **மொத்தம்** | **1,372,165,127.69** | **1,173,935,451.57** | **86%** | **99%** |

ஒவ்வொரு முக்கிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் 2024.12.31 ஆம் திகதிக்கு கருத்திட்டச் செயலாக்கத்தின் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1. உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (மூலதனம்)

2024 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.மில். 438.12 ஒதுக்கீடு பின்வருமாறு பயன்படுத்தப்பட்டுள்ளது.

- 2021 வருடத்தில் அனுமதிக்கப்பட்டு பகுதியளில் நிறைவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களில் 40% மேலான பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ள கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளல்.
- 2023 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய பொது மலசலகூட கருத்திட்டங்களின் எஞ்சிய வேலைகளை நிறைவுசெய்தல்.
- 2024 வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அத்தியவசிய புதிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய 2023 ஆம் ஆண்டில் எஞ்சிய 07 கருத்திட்டங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்த 85 புதிய திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன, இதனால் 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட மொத்த திட்டங்களின் எண்ணிக்கை 92 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில், 76 திட்டங்களின் பணிகள் 2024.12.31 ஆம் திகதி நிறைவடைந்தன. மேலும் 06 திட்டங்களின் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன. இந்த ஆண்டின் இறுதியில் நாட்டில் ஏற்பட்ட பாதகமான வானிலை மற்றும் கனமழை காரணமாக, மீதமுள்ள 10 திட்டங்களின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை.



நெலுவ பிரதேச சபையின் சுடலைக் கட்டிடத்தின் நிர்மாணிப்பு மற்றும் வெளி வேலைகள்
நெலுவ பிரதேச சபை – தென் மாகாணம்



கரமெடிய வாராந்த சந்தைக் கட்டிடம் -மீகஹகியுல பி.ச. – ஊவா மாகாணம்

| 2024 நிதி ஒதுக்கீடு (ரூ) | 2024.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரூ) | நிதி முன்னேற்றம் (%) | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| 384,125,199.00 | 194,533,208.89 | 51% | 98% |

**2. பிரதேச சபைகளை வலுப்படுத்தும் கருத்திட்டம் (மீண்டுவரும்)**

2024 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.மில். 16 பின்வருமாறு பயன்படுத்தப்பட்டது.

- 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எஞ்சிய வேலைகளை முடிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- பிரதேச சபைகளின் நாளாந்த கடமைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குத் தேவையான அத்தியவசிய நடவடிக்கைகள் பழுதுபார்ப்புகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.இந்தக் கருத்திட்டம் தொடர்பாக, 2023 ஆம் ஆண்டில் செயல்படுத்த 02 மாறாத திட்டங்களும், 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்த 17 புதிய திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டன, இதன் மூலம் 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட மொத்த திட்டங்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில், 16 திட்டங்கள் 2024.12.31 ஆம் திகதிக்குள் முடிக்கப்பட்டன, அதே நேரத்தில் ஒரு கருத்திட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் இறுதியில் நாட்டில் ஏற்பட்ட பாதகமான வானிலை மற்றும் கனமழை காரணமாக, மீதமுள்ள 2 கருத்திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை.

| 2024 நிதி ஒதுக்கீடு (ரூ) | 2024.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரூ) | நிதி முன்னேற்றம் (%) | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| 16,000,000.00 | 7,362,313.99 | 46% | 100% |




ரோலர் இயந்திரம் பழுதுபார்ப்பு –
வனகம்வெறா பி.ச. தென் மாகாணம்



கலவான பிரதேச சபை கட்டிட நிர்மாணம் மற்றும் வாகன தரிப்பிடம் - கலவான பி.ச. சப்பிரகமுவ மாகாணம்

**3. மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிலுவைப் பட்டியல்களைத் தீர்த்தல்.**

மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 2009 – 2014 காலப்பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைப் பட்டியல்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

| 2024 நிதி ஒதுக்கீடு (ரூ) | 2024.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரூ) | நிதி முன்னேற்றம் (%) | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| 972,039,928.69 | 972,039,928.69 | 100% | 100% |

4. **உள்ளூராட்சி நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான நடைமுறைகள் மற்றும் பிரஜைகள் பட்டயத்தை தயாரித்தல்.**

- அமைச்சு மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம் (CDLG) மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் துறையில் நிபுணர்களை உள்ளடக்கிய பட்டறைகளை நடத்தி, மிக முக்கியமான 30 துறைகளுக்கான நடைமுறைகளைத் தயாரித்தல்.
- பிரஜைகள் பட்டயம் உள்ளிட்ட வழிகாட்டி புத்தகங்களை அச்சிடுதல்.

| **உள்ளூராட்சி மன்றம்** | **மொழி** | **அச்சிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| மாநகர சபை / நகர சபை / பிரதேச சபை | சிங்களம் | 530 |
| | தமிழ் | 280 |

## 3.2. தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையம்

### 1. குறிக்கோள்

வெற்றிகரமான நடைமுறைகள் பற்றிய தகவலைப் பரப்புதல் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் கழிவு முகாமையை சிறப்பாக செயல்படுத்துவதற்குத் துணைபுரியும் தொழில்நுட்பப் பிரிவாகச் செயல்படுவதன் மூலம் தளம் சார்ந்த செயல்திறன் முகாமைத்துவக் கருத்திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல்.

### 2. பிரதான செயற்பாடுகள்

1. தேசிய செயல்திறன் முகாமைத்துவக் கொள்கையின்படி எதிர்காலத் திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்த உள்ளூராட்சி மன்றங்களை வழிநடத்துதல்.
2. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான நகர திண்மக்கழிவு முகாமை தொடர்பான பொருத்தமான திட்டங்களைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.
3. முடிக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டங்களின் பட்டியல் மற்றும் பின்தொடர்தல்.
4. கழிவு முகாமைத்துவ தரவு அமைப்பை நிறுவி இற்றைப்படுத்தல்.
5. அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் 3ஆர் அமைப்பை நிறுவி தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல்
6. உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தப்படும் உரக் கூடங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், உரம் விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுத்தல்.
7. உள்ளூராட்சி மன்றங்களில் மீள்சுழற்சி செய்யக்கூடிய செயல்திறனின் நிர்வாகத்தை நெறிப்படுத்துதல்.
8. மாகாண மட்டத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்தல்.
9. உள்ளூராட்சி நிறுவனங்களின் திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை வெற்றியடையச் செய்வதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்.
10. கழிவு முகாமைத்துவம் தொடர்பான மற்ற பங்குதாரர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பட்டறைகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு நேரடியாக பங்கேற்றல்.
11. உள்ளூராட்சி மன்றங்களின் திண்மக்கழிவு முகாமைத்துவ துறையில் பணிபுரியும் அதிகாரிகளின் திறன் மேம்பாட்டுக்கான பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.
12. கடற்கரைக்கு அண்மையில் உருவாக்கப்பட்ட அகற்றுவதற்கான செயல்திறன் முறைகளை அடையாளம் காணல்.
13. தற்போதுள்ள செயல்திறன் மலைகளை சீரமைக்கவும், புதிய செயல்திறன் மலைகள் உருவாவதை தடுக்கவும் நடவடிக்கை எடுக்க உள்ளூராட்சி மன்றங்களுக்கு உத்தரவிடுதல்.
14. USAID ஆதரவின் கீழ் தீவில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் கழிவு முகாமைத்தவ மதிப்பீட்டு முறையை தயாரித்தல்.

## 3. 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை செயலாற்றுகை

2024 ஆம் ஆண்டுக்கு தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்கு பின்வரும் செலவினத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| தொ இல | கருத்திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு 2024 (ரு) | 2024.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரு) | பௌதீக முன்னேற்றம் (%) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| 1 | திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் (130-2-21-016-2504) | 150,000,000.00 | 23,250,028.40 | 88% | 15.5% |
| 2 | உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்துதல் - உள்ளூராட்சி மன்றங்களில் கழிவு முகாமைத்துவம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு (130-2-21-019-2202) | 136,835,117.83 | 15,022,099.43 | 64.4% **குறிப்பு I** | 10.9% |
| 3 | Waste to Value கருத்திட்டம் (130-2-21-026-2504) | 275,000,000.00 | 35,000,000.00 (2024.10.31 முன்னேற்றம்) | 100% | 13% |
| | மொத்தம் | **561,835,117.83** | **78,697,673.42** | **84.1%** | **14.3%** |

குறிப்பு I: 2021 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் மூலம் செயல்படுத்தப்பட்ட முடிக்கப்படாத திட்டங்களில் பயன்படுத்தப்பட வேண்டிய அத்தியாவசிய மீதமுள்ள பணிகளை முடிக்க 130-2-21-019-2202 இன் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டன. முடிக்கப்படாத திட்டங்களைத் தேர்ந்தெடுப்பது திறைசேரியின் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. முடிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பான முந்தைய ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்படாததால், திறைசேரியிலிருந்து தேவையான ஒப்புதலைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர், மீதமுள்ள ஒதுக்கீடுகளுக்காக குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களின் திண்மக்கழிவு முகாமை மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய நவீனமயமாக்கல் மற்றும் பழுதுபார்ப்புகளுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த போதுமான நேரம் காணப்படவில்லை.

மேற்படி திட்டங்களில் செலவினத் தலைப்பு 130-2-21-016-2504 வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட திட்டங்களில், வென்னப்புவ உள்ளூராட்சி மன்றத்தின் சேதனப் பசளை தளத்தின் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மேலும், திருத்தப்பட்ட மதிப்பீட்டின் கீழ் பின்வரும் திட்டங்களின் மீதமுள்ள பணிகளை நிறைவுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. பன்னல பிரதேச சபையின் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பை நிர்மாணித்தல்
2. இப்பாகமுவ பிரதேச சபையில் கழிவறை நிர்மாணம்.
3. இப்பாகமுவ பிரதேச சபையின் உரம் உற்பத்தி கட்டிடத்தை நிர்மாணித்தல்.
4. இப்பாகமுவ பிரதேச சபையின் அலுவலக ஓய்வறையை நிர்மாணித்தல்.
5. பன்னல பிரதேச சபையின் மலசல கழிவுத் தொகுதி நிர்மாணித்தல்.
6. கொலன்ன பிரதேச சபையில் அழியாத சேமிப்பு நிலையத்தை நிர்மாணித்தல்.

மேலும், திண்மக்கழிவு முகாமைத்துவ ஒத்துழைப்பு மையத்தினால் பின்வரும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1. KOICA உதவியின் கீழ் பதுளை, வவுனியா மாவட்டங்களுக்கு ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டங்களை நிறுவுவதற்கான திட்டத்தின் ஒப்பந்தத்தை கைச்சாத்திடல்.
2. JICA உதவியின் கீழ் செயல்படுத்தப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளால் அகற்றப்பட்ட மண்ணை முகாமை செய்யும் திட்டத்தின் ஆரம்பப் பணிகளை மேற்கொள்ளல்.

3. மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை கண்காணித்து மதிப்பீடு செய்தல், கிழக்கு, தெற்கு, வடமேற்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
4. உள்ளூரட்சி மன்றங்களால் உற்பத்தி செய்யப்படும் உரத்தின் தரத்தை மேம்படுத்தும் வகையில் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாகாணத்திலும் உரம் தளத்துடன் பயிற்சி பட்டறைகள் ஏற்பாடு செய்யப்பட்டு இதுவரை வடமத்திய, சப்ரகமுவ, மத்திய, வடமேற்கு, ஊவா மற்றும் மேல் மாகாணத்தில் செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.
5. நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களிலும் நகர்புற திண்மக்கழிவு முகாமையை தரப்படுத்துவதற்கான ATLAS கருவியைப் பயன்படுத்துவது குறித்து 9 மாகாணங்களிலும் உள்ள மாகாண நடுவர் சபைகளுக்கு விழிப்புணர்வு திட்டங்களை நடத்தி நிறைவு செய்தல்.



பொருள் மறுசீரமைப்பு நிலையம் -- உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைத்தல் -- கெஸ்பேவ



கல்கமுவ பிரதேச சபையின் பிலாஸ்டிக் மற்றும் வெற்று போத்தல்களை சேகரிக்க சல்லடைகள் வழங்குதல்



பன்னலை பிரதேச சபையின் மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

### 3.3 மாகாண சபைகள் பிரிவு

**1. குறிக்கோள்**

மாகாண சபைகளின் செயற்பாடுகளை இலகுபடுத்துதல், மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி மாகாண சபைகளின் மனித வளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் பயனுள்ள மற்றும் வினைத்திறன் மிக்க மாகாண சபை முறைமையை உருவாக்குதல்.

**2. பிரதான செயற்பாடுகள்**

1. மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் முறையான ஒருங்கிணைப்புப் பொறிமுறையை ஏற்படுத்துதல், காலாண்டுக்கு ஒருமுறை மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் மத்திய அரசாங்க நிறுவனங்களை உள்ளடக்கிய மாகாணங்களுக்கு இடையிலான பாட ஒருங்கிணைப்பு மாநாட்டை நடாத்துதல்.
2. மாகாண சபைகள் மற்றும் உள்ராட்சி மன்றங்களுக்கான காணிகளை கையகப்படுத்துதல்.
3. மாகாண சபைகளுக்குத் தேவையான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல்.
4. மாகாண அரசாங்க சேவையில் 45 வயதைத் தாண்டியுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் பிரிவு 6 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.
5. பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2014 இன் பிரகாரம் மாகாண பொதுச் சேவையில் புதிய பதவிகளை உருவாக்குதல்.

6. 22/99 திருத்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் மாகாண சபைகளின் ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

7. உள்ளூராட்சி மன்றங்களில் உள்ளக கணக்காய்வுப் பிரிவுகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
8. உள்ளூராட்சி நிறுவனங்களில் GIS மற்றும் GPS முறைமையைப் பயன்படுத்தி பூகோளத் தரவுத் தொகுதியை அமைத்தல்.
9. மாகாண சபைகளின் விவகாரங்கள் தொடர்பான பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில்களை தயாரித்து பாராளுமன்றத்திற்கு அனுப்புதல்.
10. மாகாண சபைகளின் விவகாரங்கள் தொடர்பான ஆலோசனைக் குழுக்களிடமிருந்து பெறப்பட்ட கடிதங்களுக்கான பதில்களை அனுப்புதல்.
11. மாகாண சபைகளின் விவகாரங்கள் தொடர்பான பொது மனுக் குழுவிடமிருந்து பெறப்படும் கடிதங்களுக்கு பதில் தயாரித்து பாராளுமன்றத்திற்கு அனுப்புதல்.
12. மாகாண சபைக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
13. மாகாண சபைகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களால் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளைக் கையாளுதல்.

14. உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் மேற்பார்வை மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள்.

15. மாகாண சபை அதிகாரிகள் மற்றும் அதிகாரிகளின் தொடர்புத் தகவலை காலாண்டுக்கு ஒருமுறை புதுப்பித்தல்.

16. ஆளணி மீளாய்வு பற்றிய மாகாண மட்டத்தில் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

**3. 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை செயலாற்றுகை**

1. கௌரவ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் அவர்களின் தலைமையில், மாகாண பிரதம செயலாளர்களுடன் 02 சுற்றுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

2. காணி சுவீகரிப்பு தொடர்பான அனைத்து மாகாணங்களிலிருந்தும் 33 கோரிக்கைகள் மாகாண பிரதம செயலாளர்களின் சிபாரிசுடன் இந்த அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட 15 விண்ணப்பங்கள் மேலதிக பணிகளுக்காக காணி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. குறைபாடுகளுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள 11 விண்ணப்பங்கள், குறைபாடுகளை சரிசெய்து மீண்டும் அனுப்புமாறு மாகாண பிரதம செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 07 விண்ணப்பங்கள் காணி அமைச்சுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பிரிவு 04 இன் பிரகாரம் ஆட்சேபனை விசாரணைகளை மேற்கொள்வதற்கு மாகாண பிரதம செயலாளரின் சிபாரிசுகளுடன் 04 அதிகாரிகளை நியமித்தல், காணி அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டிய ஆட்சேபனைகள் அற்ற 04 பரிந்துரைகளில் 04 பரிந்துரைகள் காணி அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டும். ஆட்சேபனை விசாரணை அறிக்கைகள், காணி சுவீகரிப்பு நோக்கங்களுக்கான 01 திருத்தம் காணி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இடைக்கால உத்தரவு 38(அ) இன் கீழ் காணி சுவீகரிப்பு தொடர்பான 06 பரிந்துரைகள் காணி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பிரிவு 50 (1) இன் கீழ் 02 கையுதிர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

3. மாகாண சபைகளுக்குத் தேவையான 03 அமைச்சரவைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- மாகாண அரசாங்க சேவையில் நாற்பத்தைந்து (45) வயதிற்குப் பிறகு நிரந்தரமான ஓய்வூதியம் இல்லாத ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமைகளை வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தல்.
- உள்ளூராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் தற்காலிக, சாதாரண, மாற்று, ஒப்பந்த மற்றும் சலுகை ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம்.
- உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான முகாமைத்துவ சேவையை

நிறுவுவதற்கான அமைச்சரவை தீர்மானத்தை மீளாய்வு செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தல்.

4. மாகாண அரசாங்க சேவையில் 45 வயதுக்கு மேல் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஓய்வூதிய உரிமை வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அது தொடர்பில் அனைத்து மாகாணங்களையும் அறிவூட்டும் பொருட்டு சுற்றறிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

5. உள்ளூராட்சி அமைப்புகளில் பணிபுரியும் தற்காலிக, சாதாரண, மாற்று, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் 29.08.2023 அன்று 180 நாட்கள் சேவையை நிறைவு செய்த 8,435 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு 2542 பதவிகளை உருவாக்குவதற்கு மாகாணங்களிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (சப்ரகமுவ மாகாணம் 199, ஊவா மாகாணம் 337, கிழக்கு மாகாணம் 873, மத்திய மாகாணம் 174, மேல் மாகாணம் 587, வடமேல் 372) தென் மற்றுமு் வட மத்திய மகாணத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நி.ஒ. 71 விண்ணப்பங்கள் மற்றும் நியாயப்படுத்தல் அறிக்கைகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

6. திருத்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 22/99 இன் கீழ் மாகாண சபைகளின் ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக மாகாணங்களிலிருந்து பெறப்பட்ட 178 விண்ணப்பங்களில் குறைபாடுள்ள 20 விண்ணப்பங்கள் மாகாணங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டதுடன் 171 சரியாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் கிடைக்கப் பெற்ற 13 விண்ணப்பங்கள் கொள்கை, வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது.

7. உள்ளக கணக்காய்வு அலகுகளை நிறுவுவது தொடர்பாக மாகாணங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் 2023.06.28 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டன. மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மீண்டும் மாகாணங்களிலிருந்து பரிந்துரைகளை 2024.01.17 ஆம் திகதி கோரியுள்ளது. அதற்கமைய, மத்திய, சபரகமுவ, கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களுக்கான தகவல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்படும். அதே நேரத்தில் மேற்கு, வடமேற்கு, ஊவா, சபரகமுவ, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள். மத்திய மாகாணங்களில் அடக்கக்கூடிய பதவிகளைக் குறிப்பிட்டு பரிந்துரைகளை அனுப்புமாறு மீண்டும் பிரதம செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மாகாண சபைக்குள் தனியான உள்ளக கணக்காய்வு அலகை நிறுவுவது தேவையற்றது என்று கூறப்பட்டுள்ளது.

8. உள்ளூராட்சி மன்றங்களின் GIS மற்றும் GPS அமைப்பைப் பயன்படுத்தி புவியியல் தரவு அமைப்பை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், வடமேற்கு மாகாணம் தற்போது அந்த அமைப்பை உருவாக்கும் பணியையும், தெற்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களை வரைபடமாக்குவதற்கான செயல்முறையையும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. சப்ரகமுவ, வடக்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் பணிகள் நடைபெறுகின்றன. கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் எதிர்வரும் காலங்களில் இந்த செயற்பாடு ஆரம்பிக்கப்படவுள்ளன.

9. பாராளுமன்றத்தால் குறிப்பிடப்பட்ட 03 பாராளுமன்ற வினாக்களில் 01 பாராளுமன்ற வினாவுக்கு மாகாண பிரதம செயலாளர்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டு அதற்கான பதில்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுப்பப்பட்ட ஒரு வினா கலந்துரையாடலுக்கு எடுக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்ட காரணத்தினால் பதில் அனுப்பப்படவில்லை. 2024 இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வினாவுக்கு மாகாணங்களிலிருந்து தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

10. ஆலோசனைக் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 03 முன்மொழிவுகள் தொடர்பாக, மாகாண பிரதம செயலாளர்களிடமிருந்து தகவல்

கோரப்பட்டு, பதில்களைப் பெற்ற பின்னர், பதில்கள் ஆலோசனைக் குழுக்களுக்கு அனுப்பப்படும். அந்த முன்மொழிவுகள் தொடர்பில் மாகாணங்களிலிருந்து தகவல்கள் பெறப்பட்ட பின்னர் ஆலோசனைக் குழுவுக்கு பதில் அனுப்பப்படும்.

11. பொது மனுக் குழுவினால் அனுப்பப்பட்ட 09 பொது மனுக்களுக்கான அமைச்சின் பரிந்துரை பொது மனுக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

12. மாகாண சபைகளுக்குத் தேவையான வாகனங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக மாகாணங்களிலிருந்து அனுப்பப்பட்ட 05 விண்ணப்பங்கள் சிபாரிசு செய்யப்பட்டு, ஒப்புதலுக்காக கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

13. மாகாண சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், ஏனைய அமைச்சு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 126 முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

14. மாகாண சபை அதிகாரிகள் மற்றும் அதிகாரிகளின் தொடர்புத் தகவல் காலாண்டுக்கு ஒருமுறை இற்றைப்படுத்தப்படுகின்றது.

15. மாகாண மட்டத்தில் பணியாளர் மீளாய்வு தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இதுவரை வடமேற்கு மற்றும் தென் மாகாணங்களில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

### 3.4 உள்ளூராட்சிப் பிரிவு

#### 1. குறிக்கோள்

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்திறனை நிர்வகித்தல் மற்றும் அதன் செயற்பாடுகளை புதிய தொழில்நுட்பத்துடன் இணைத்து, விரைவான அபிவிருத்தி திசையில் மிகவும் பொதுமக்கள் நேயமிக்க திறமையான உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குதல்

#### 2. பிரதான செயற்பாடுகள்

1. உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகள் மற்றும் கொள்கை உருவாக்கம்.

2. புதிய உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுதல், எல்லை நிர்ணயம் செய்தல் மற்றும் கட்டமைப்பை நிர்ணயித்தல் தொடர்பான விடயங்கள்.

3. சகோதர நகரங்கள் / நட்பு நகரங்கள் என்ற கருத்தின் கீழ் வெளி மாகாணங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதில் தேவையான உதவி மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல்.

4. உள்ளூராட்சி மன்றங்களின் கட்டளைகள் மற்றும் சட்டங்கள் தொடர்பான தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல்.

5. பொதுக் கணக்குக் குழு நடவடிக்கைகளில் உள்ளூராட்சி மன்றங்களுடன் ஒருங்கிணைப்பு மற்றும் பங்கேற்பு.

6. பாராளுமன்றத்தின் பொது மனுக்குழு மற்றும் ஆலோசனைக் குழுக்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தல்.

7. உள்ளூராட்சி மன்றங்களுக்கு தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குதல்.

8. உள்ளூராட்சி மன்றங்களுக்கான கொள்முதல் வழிகாட்டி தொடர்பில் கொள்முதல் ஆணைக்குழுவுக்கு வரைவுகளை முன்வைத்தல்.

9. உள்ளூராட்சி மன்றங்களுக்கான செயல்திறன் கருவியை அறிமுகம் செய்து அதற்கேற்ப சுவர்ணபுரவர விருது வழங்கும் விழாவை நடத்துதல்.

10. நிரல் அமைச்சு என்ற ரீதியில் தேவையான இடங்களில் உள்ளூராட்சி ஆணையாளர்களையும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களையும் ஒருங்கிணைத்தல்.

11. உள்ளூராட்சித் துறையுடன் தொடர்புடைய விவகாரங்கள் பற்றி அமைச்சரவைப் பத்திரங்களை சமர்ப்பித்தல்.

12. உள்ளூராட்சி நிறுவனங்களின் பணி மற்றும் செயல்பாடுகளை சீரான ஒரே முறையில் பராமரிக்க தேவையான வழிகாட்டுதல்.

13. மத்திய அரசாங்க நிறுவனங்களுடன் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்புபடும் போது மத்தியஸ்தம் மற்றும் ஒருங்கிணைப்பு.

14. உள்ளூராட்சி மன்றங்கள் தொடபில் முன்வைக்கப்படும் மேலதிகக் கட்டண மேன்முறையீட்டுக் குழுக்களை நடத்துதல்.

15. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பொதுவான மனித வள மேம்பாட்டு மூலோபாயத்தை அறிமுகப்படுத்துதல்.

16. உள்ளூராட்சி அமைப்புகளின் சுய நிர்வாகத்திற்கான உத்தியை அறிமுகப்படுத்துதல்.

17. உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைக்குள் சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்த அடையாளம் காணப்பட்ட திட்டங்களை செயல்படுத்துதல்.

18. பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரித்து, தேவையான நடவடிக்கைகளுக்கு பொருத்தமான வகையில், சம்பந்தப்பட்ட மாகாண தலைமைச் செயலாளர்/உள்ளூராட்சி ஆணையாளர்/உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களுக்கு அனுப்புதல்.

## 3. 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை செயலாற்றுகை

### 1. அரச கணக்குகள் குழுவின் நடவடிக்கைகளுக்கு உள்ளூராட்சி மன்றங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்

உள்ளூராட்சி மன்றங்களில் கணக்காய்வு நடவடிக்கைகள் குறித்து உரிய வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

**முன்னேற்றம் :**

2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற கணக்குக் குழு கூட்டத்தின் பணிப்புக்கு அமைய அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் தயாரிக்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டுதல்கள் கொள்முதல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டு, கொள்முதல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் பிரகாரம் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு மீண்டும்.

பொருட்கள், பணிகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளை கொள்முதல் செய்வது தொடர்பான கொள்முதல் வழிகாட்டுதல்கள் மற்றும் கொள்முதல் கையேடு 2024.11.25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் தயாரிக்கப்பட வேண்டிய கொள்முதல் வழிகாட்டுதல்களில் வரவிருக்கும் திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன.

### 2. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களால் பாராளுமன்றத்தில் தொடுக்கப்படும் வினாக்கள்

**பாராளுமன்ற வினாக்கள்**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிக்கு பொறுப்பான கௌரவ அமைச்சர்களிடம் இருந்து பதில்களை எதிர்பார்த்து முன்வைக்கப்படும் வினாக்களை அந்தந்த மாகாண பிரதம செயலாளருக்கு அனுப்பி மாகாணங்களில் இருந்து பெறப்படும் அவதானிப்புகளின் அடிப்படையில் உரிய பதில்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

**முன்னேற்றம் :**

2024 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்ற வினாக்களின் எண்ணிக்கை 05 ஆகும், மேலும் அந்த அனைத்து வினாக்களுக்கும் பதில் அளிக்கப்பட்டுள்ளன.

**பொது மனுக்குழு / அமைச்சு ஆலோசனைக் குழு**

உள்ளூராட்சி நிறுவனங்களிடம் தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத குறிப்பிட்ட தனிநபர்கள் மற்றும் குழுக்கள் சமர்ப்பிக்கும் மனுக்களுக்கு அந்தந்த மாகாணங்களில் இருந்து தகவல்களைப் பெற்று நிவாரணம் வழங்குவதற்கு பொது மனுக்குழுவும் அமைச்சு ஆலோசனைக் குழுவும் இடைத்தரகர்களாகச் செயற்படுகின்றன.

**முன்னேற்றம் :**

2024 ஆம் ஆண்டுக்கான பொது மனுக் குழுவிலிருந்து 09 மனுக்கள் இந்த அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த 9 மனுக்களுக்கான பதில்கள் பொது மனுக் குழு அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆலோசனைக் குழுவினால் 08 முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றுறு க்கான பதில்கள் ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### 3. பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.

24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் என அமைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களினால் பொதுமக்களுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் அதிருப்தி இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் பொதுமக்களும் பல்வேறு நிறுவனங்களும் இந்த

அமைச்சுக்கு முறைப்பாடுகளை அனுப்ப முடியும். இவ்வாறு அனுப்பப்படும் முறைப்பாடுகள் உரிய மாகாண பிரதம செயலாளர் / உள்ளூராட்சி ஆணையாளர் / உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்து விசாரணை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

| மாகாணம் | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| மேல் | 1256 | உள்ளூராட்சி ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| மத்திய | 1074 | |
| தென் | 217 | |
| வடக்கு | 33 | |
| கிழக்கு | 52 | |
| வடமேல் | 249 | |
| வடமத்திய | 163 | |
| ஊவா | 310 | |
| சப்பிரகமுவ | 196 | |
| பொது | 105 | ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்புதல் |
| **மொத்தம்** | **3655** | |

### 4. மேலதிகக் கட்டணம் பற்றிய நடவடிக்கைகள்

உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதில், சட்டத்திற்கு எதிரான அனைத்து கணக்குகளும்

கணக்காய்வாளர் நாயகயத்தினால் நிராகரிக்கப்பட்டு, அந்த விடயங்களில் அதிகாரம் அளிப்பவர்களுக்கு அந்த விடயத்தின் மீது மேலதிகக் கட்டணம் விதிக்கப்படும்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் சட்டத்தின் 172 ஆவது பிரிவின்படி அவ்வாறு விதிக்கப்படும் மேலதிகக் கட்டணம் செலுத்த வேண்டியவர்கள் 30 நாட்களுக்குள் நிரல் அமைச்சின் செயலாளரிடம் முறையீடு செய்யலாம். மேலும், நகர சபை கட்டளைச் சட்டத்தின் அதிகாரம் 255 இன் படி 30 நாட்களுக்குள்ளும், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் அதிகாரம் 252 இன் படி 14 நாட்களுக்குள்ளும் ஒரு முறையீடு நிரல் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**முன்னேற்றம் :**

இதன்மூலம், இந்த அமைச்சுக்கு கிடைக்கப் பெறும் மேன்முறையீடுகள் மேல்முறையீட்டுக் குழுவால் முடிவு செய்யப்படும். இவ்வருடம் பெறப்பட்ட 40 முறையீடுகளில் 30 மேன்முறையீடுகளுக்கு தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 5. உள்ளூராட்சி மன்றங்களை டிஜிட்டல்மயமாக்கல்

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தின் செயல்திறன் மேலாண்மை உடன் சேர்வதன் மூலம், இது ஒரு வேகமான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் மற்றும் அதிகமான பொது மக்களுக்கு வழிவகுக்கும். இதன் முக்கிய நோக்கம் நட்பு மற்றும் திறமையான உள்ளாட்சியை உருவாக்குவதாகும். இதற்காக ரூ. 30 ஒதுக்கப்பட்டுள்ளது.

**முன்னேற்றம் :**

இத்திட்டம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், கடைக்கூலி, வரிப்பணம் போன்ற உள்ளூராட்சி மன்றங்களின் கட்டண மென்பொருளின் மூலம் இணைய வழியில் பணம் அறவிடலை மேலும் விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது. நிதி முன்னேற்றம் 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை ரூ.மி. 15.98 ஆகும்.

6. **உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைக்குள் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் 2024 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள்**

**முன்னேற்றம் :**

உள்ளூராட்சி பகுதிகளில் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட 1000 மில்லியன் ரூபாயில் 88 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு உள்ளூராட்சி அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. நிதி முன்னேற்றம் முன்னேற்றம் 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை நிதி முன்னேற்றம் ரூ.மில். 15.98 ஆகும்.

உள்ளூராட்சி நிறுவனங்களில் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை நிதி முன்னேற்றம் ரூ.மில். 4.9 ஆகும்.

7. **சுவர்ணபுற விருது விழா – 2023**

**முன்னேற்றம் :**

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினதும் இணக்கம், செயல்திறன், வினைத்திறன், அனைத்து குழுக்களையும் ஒன்றிணைத்து புத்தாக்கத்துறையில் அதிக செயல்திறனை வெளிப்படுத்திய உள்ளூராட்சி மன்றங்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு தரப்படுத்தப்பட்டன. அந்த நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

### 3.5 சட்டப் பிரிவு

### 1. குறிக்கோள்

நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் பொதுவான அபிலாஷைகளை அடைவதற்கு ஏற்ற விதத்தில் பயனுள்ள மற்றும் வினைத்திறனுள்ள பிரதேச ஆளுகையை இலங்கையில் பேணிவருவதை உறுதிசெய்யும் பொருட்டு சமமான நிலையான மானிட அபிவிருத்தியை அடைவதற்கும் வசதியளித்து ஆலோசனை வழங்குவதற்கும் அமைச்சின் சட்டப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது

### 2. பிரதான செயற்பாடுகள்

1. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கு ஏற்புடைய தேசிய மட்டத்திலான சட்டங்களை ஆக்கும் பணி.
2. கொள்கை உருவாக்கும் பணியில் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் / மாகாண சபைகள் தொடர்பான துணைச் சட்டங்களில் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் வளவாளராக செயற்படுதல்.
4. உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவதற்கான வர்த்தமானி அறிவித்தல்கள் உட்பட மத்திய அரசின் உள்ளூராட்சி அமைச்சரால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் தொடர்பான விடயங்கள்.


திருவில் பூங்கா – வெல்வெட்டிதுறை


**கத்தரிமுனை சுற்றுலா விடுதி – பூநகரி**







**சுவர்ணபுர விருது விழா - 2023**

5. பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள் / ஆலோசனைக் குழுக்கள் துறைசார் கண்காணிப்புக் குழுக்களில் அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.
6. அமைச்சு தொடர்பான வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைத்தல் / கீழ் நீதிமன்ற விவகாரங்களில் அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்துதல். (மனித உரிமைகள் / ஓம்புட்ஸ்மன் முறைப்பாடுகள் உட்பட)
7. அமைச்சுடன் தொடர்புடைய ஒப்பந்தங்களை ஆய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான சட்ட சிக்கல்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

### 3. 2024.01.01 முதல் 2024.12.31 வரை செயலாற்றுகை.

**1. மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தை திருத்துதல்.**

சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட வரைவுகள் அரசியலமைப்புக்கு அமைவானதா என்பது பற்றிய சான்றிதழைப் பெறுவதற்காக சட்டமா அதிபரின் திருத்தங்களுடன் தயாரிக்கப்பட்ட மகாநகர சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் இறுதி வரைவுகள் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், மாநகர சபை கட்டளைச் சட்டத்தை சட்டத்தின் இறுதி வரைவை அனுப்பி வைக்குமாறு சட்ட வரைஞருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1. அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துதல்.**

2023 ஆம் ஆண்டு நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை மீண்டும் அழைப்பதற்கான வரைவு உள்ளூராட்சித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை தயாரித்தல் மற்றும் புதிய வேட்புமனுக்களை அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது எனும் சான்றிதழைப் பெறுவதற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள 2024/12/01 அன்று அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் சட்ட வரைவாளரால் தயாரிக்கப்பட்ட வரைவு சட்டமூலத்தை 2024.12.20 ஆம் திகதி அமைச்சரவைப் பத்திரம் மூலம் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டது. பின்னர், மேற்படி அமைச்சரவைப் பத்திரத்திற்காக எடுக்கப்பட்ட முடிவின்படி, உள்ளூராட்சித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்காக அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

1. அரசாங்க வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க முன்மொழியப்பட்ட புதிய உள்ளூராட்சி நிறுவனங்களை நிறுவுவது தொடர்பான வர்த்தமானி அறிவிப்புகளைத் தயாரித்தல்.

வரவுசெலவுத் திட்டம் தோல்வியடைந்ததால் ஆளுநரால் கலைக்கப்பட்ட எல்பிட்டிய பிரதேச சபையை நிறுவி அந்த பிரதேச சபையின் பதவிக் காலம் 2024.11.05 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டு முன்னாள் கௌரவ பிரதமர்/அமைச்சர் 2024.11.01 ஆம் திகதிய 2408/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பை வெளியிடப்பட்டது.

**3. உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கணக்கியல் முறை தொடர்பான விதிகளை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம்.**

உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிமுகம் செய்யப்படவுள்ள புதிய கணக்கியல் முறைமைக்கு அமைவாக தற்போதுள்ள சட்டங்கள் புதுப்பிக்கப்படாமையால் மற்றும் புதுப்பிக்கப்பட்ட சட்டங்களில் சில பிழைகள் அடையாளம் காணப்பட்டதால் கணக்கியல் முறையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கலைப் போக்குவதற்கு நிரல் அமைச்சின் தலையீடு வழங்கப்பட வேண்டுமென அரச சேவைகள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக் குழுவில் முடிவு செய்யப்பட்டது.

அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட நிதி மற்றும் நிர்வாக விதிகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டளைகளின் மென் பிரதி, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்துடன் (துணை ஏற்பாடுகள்) வாசிக்கப்பட வேண்டிய மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 289, நகர

  

சபைகள் கட்டளைச் சட்டத்தின் 193 மற்றும் 194, பிரதேச சபைகள் சட்டத்தின் 171 மற்றும் 184 வது பிரிவுகளின் விதிகள், வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒவ்வொரு மாகாணத்திலும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மாண்புமிகு ஆளுநர்கள் மற்றும் தலைமைச் செயலர்களுக்கு உத்தரவை பிறப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய விதிகளால் வழங்கப்பட்டுள்ளபடி, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய கணக்கியல் முறையை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்த ஆசியா மன்றத்தின் ஒத்துழைப்புடன் ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கி மூன்று விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கொழும்பு, அனுராதபுரத்தில் நடைபெற்றன. மேலும் இறுதி நிகழ்ச்சி 2024.12.17 ஆம் திகதி ஓஹியாவில் நடைபெற்றது.

### 5. நீர்வெறுப்புக் கட்டளைச் சட்டத்தின் திருத்தங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

சட்டமூலத்தின் இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு, சட்டமா அதிபரின் சான்றிதழைப் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டதுடன், சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம், திருத்தியமைப்பதற்காக குறித்த வரைவு சட்டவரைஞருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞரின் இறுதி வரைவு கிடைத்த பின்னர் அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

சட்டமா அதிபரால் பல திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. மேற்கூறிய முன்மொழியப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கிய சட்ட வரைவாளர் தயாரித்த வரைவு, பரிந்துரைகளுக்காக கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு பரிந்துரைகளைப் பெற்றுக்கொள் 2024.11.26 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது.

## .36. நிர்வாகம் மற்றும் பயிற்சிப் பிரிவு

### 1. கடமைப்பொறுப்பு

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமை செய்வதே எமது முதன்மையான பணியாகும். நிர்வாகம் மற்றும் பயிற்சிப் பிரிவின் சுருக்கமான பங்களிப்பு யாதெனில், மனித வளங்களைப் பெறுதல், அந்தந்த பிரிவுகளுக்கு ஏற்ப அவர்களை சரியாக நிலைப்படுத்தல், அவர்களுக்கு பயிற்சி அளித்தல், அவர்களின் திறனை மேம்படுத்துவதற்கான பௌதீக வளங்களைத் தீர்மானித்தல் மற்றும் வழங்குதல் மற்றும் அதன் மூலம் திருப்திகரமான, திறமையான மற்றும் பயனுள்ள பணிச்சூழலை உருவாக்குதல் ஆகும்.

### 2. குறிக்கோள்கள்

தற்போதுள்ள பௌதீக வளங்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் அமைச்சின் உத்தேச இலக்குகளை அடைந்துகொள்ளல். அத்தோடு, மனித வளங்களை நிர்வகிப்பதற்கும் திறன்களை மேம்படுத்துவதற்கும் ஏற்ற உத்தியோகத்தர் குழுவை உருவாக்குதல்.

### 3. பிரதான செயற்பாடுகள்

- **மனிதவள முகாமைத்துவம்**

✓ அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களை இற்றைப்படுத்தல்.
✓ தேவை ஏற்படும் போது புதிய பதவிகளை உருவாக்குதல்.
✓ தனிப்பட்ட கோப்புகளை இற்றைப்படுத்தல், உத்தியோகத்தர்களின் ஓய்வு, இடமாற்ற நடவடிக்கைகள்.
✓ மாண்புமிகு அமைச்சர்களின் தற்காலிக பணிக்குழு மற்றும் ஆலோசகர்களை நியமிப்பது தொடர்பான நடவடிக்கைகள்.

- **மனிதவள அபிவிருத்தி**

✓ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்.

- **பொதுவான நிர்வாகக் கடமைகள்**

✓ பயன்பாட்டு சேவைகள் (பாதுகாப்பு சேவைகள், சுகாதார சேவைகள்) வழங்குவது தொடர்பான செயற்பாடுகள்.
✓ அமைச்சின் அனைத்து வாகனங்களையும் பதிவு செய்தல், இணைப்பு, காப்புறுதி, பராமரிப்பு, எரிபொருள் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் அமைச்சின் இருப்பு வாகனங்களை வழங்குதல்.
✓ அஞ்சல் நடவடிக்கைகளை முறையாகப் பராமரித்தல்.
✓ இயந்திரசாதனங்கள் பராமரிப்பு.
✓ தகவல் தொழில்நுட்ப பிரிவின் நடடிக்கைகள்.
✓ மொழிபெயர்ப்பு பணிகள்
✓ அமைச்சின் எல்லைக்குட்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் விவகாரங்கள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்களை அமைச்சரவைச் செயலாளருக்கு அனுப்புதல் மற்றும் அமைச்சரவைப் பத்திரங்களுக்கு அவதானிப்புரைகளை வழங்குதல்.

✓ அரசாங்க உத்தியோகத்தர்களின் மேலதிக சேவைகளை நிறைவேற்றுவதற்கான கொடுப்பனவுகள், மேலதிக நேர கொடுப்பனவுகள், பொது நிர்வாக சுற்றறிக்கை 22/93 இன் படி விடுமுறை ஊதியம், விபத்து இழப்பீடு, சீருடைகள் மற்றும் பல்வேறு கொடுப்பனவுகள் தொடர்பான நடவடிக்கைகள்.
✓ லீவு, பயணச் செலவுகள், புகையிரத ஆணைச்சீட்டுக்கள், ஒப்பந்தங்கள் மற்றும் பத்திரங்கள், அரச ஊழியர் கடன் திட்டங்கள், விபத்துக் காப்பீட்டுப் பலன்கள் போன்ற நிர்வாகப் பணிகள்.
✓ பொதுச் சேவைக்கு வெளியே உள்ள பதவிகளுக்கு விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகள்.
✓ சேவைமூப்புக்கு மற்றும் ஓய்வூதியத்திற்குப் பாதிப்பின்றி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சம்பளமற்ற லீவினைப் பெற்றுக்கொடுத்தல் பற்றிய நடவடிக்கைகள்.
✓ பணியாளர் கூட்டங்களை நடத்துவதற்கான ஆடிட்டோரியத்தை முன்பதிவு செய்வது தொடர்பான நடவடிக்கைகள்..

✓ பதிவேட்டு அறையைப் பராமரித்தல்.
✓ அமைச்சின் விசாரணைகள் கருமபீடத்தை மற்றும் தொலைப்பேசி பரிமாற்ற முறையை உரிய முறையில் பேணுதல்

## 4. ஆளணி விபரம்

**2024.12.31 ஆம் திகதிக்கு இற்றைப்படுத்தப்பட்ட ஆளணிதகவல்கள்**

| தொ. இல | பதவி | பிரிவு | வகுப்பு தரம் | அனுமதிக்கப்பட்ட பதவிகள் | துற்போது ள்ள எண்ணிக் கை | வெற்றிடங் கள் |
|---|---|---|---|---|---|---|
| **சிரேஷ்ட மட்டம்** | | | | | | |
| 1 | மேலதிக செயலாளர் | நிர்வாகம் மற்றும் பயிற்சி | விசேட | 1 | 0 | 1 |
| 2 | மேலதிக செயலாளர் | அபிவிருத்தி | விசேட | 1 | 1 | 0 |
| 3 | மேலதிக செயலாளர் | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | விசேட | 1 | 1 | 0 |
| 4 | பணிப்பாளர் நாயகம் | திட்டமிடல் | விசேட | 1 | 1 | 0 |
| 5 | பிரதம நிதி அலுவலர் | - | விசேட | 1 | 1 | 0 |
| 6 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | நிர்வாகம் மற்றும் பயிற்சி | 1 | 1 | 1 | 0 |
| 7 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | உள்ளூராட்சி | 1 | 1 | 1 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | மாகாண சபைகள் | 1 | 1 | 1 | 0 |
| 9 | பிரதம கணக்காளர் | - | 1 | 1 | 1 | 0 |
| 10 | கணக்காளர் | - | 1 | 1 | 0 | 1 |
| 11 | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | - | 1 | 1 | 1 | 0 |
| 12 | பணிப்பாளர் | பொறியியல்/ அபிவிருத்தி | 1 | 1 | 0 | 1 |
| 13 | பணிப்பாளர் | பொறியியல் / தே.தி.க.மு.அ.ம. | 1 | 1 | 1 | 0 |
| 14 | பணிப்பாளர் | திட்டமிடல் | 1 | 1 | 0 | 1 |
| 15 | பிரதம சட்ட அலுவலர் | - | 1 | 1 | 0 | 1 |
| 16 | உதவிச் செயலாளர் | நிர்வாகம் மற்றும் பயிற்சி | 111/11 | 1 | 1 | 0 |
| 17 | உதவிச் செயலாளர் | உள்ளூராட்சி | 111/11 | 1 | 0 | 1 |
| 18 | உதவிச் செயலாளர் | மகாண சபைகள் | 111/11 | 1 | 1 | 0 |
| 19 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | தே.தி.க.மு.அ.ம. | 111/11 | 1 | 1 | 0 |
| 20 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | கருத்திட்டம் | 111/11 | 1 | 0 | 1 |
| 21 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | - | 111/11 | 2 | 3 | 0 |
| 22 | உள்ளக கணக்காய்வாளர் | - | 111/11 | 2 | 0 | 2 |
| 23 | கணக்காளர் | கொடுப்பனவு | 111/11 | 1 | 1 | 0 |
| 24 | கணக்காளர் | வழங்கல் | 111/11 | 1 | 1 | 0 |
| 25 | பொறியியலாளர் | தே.தி.க.மு.அ.ம | 111/11 | 1 | 1 | 0 |
| 26 | பொறியியலாளர் | அபிவிருத்தி | 111/11 | 1 | 0 | 1 |
| 27 | சட்ட அலுவலர் | - | 111/11 | 1 | 1 | 0 |
| 28 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 111/11 | 1 | 1 | 0 |
| **மூன்றாம் மட்டம்** | | | | | | |
| 29 | நிர்வாக உத்தியோகத்தர் | - | அதியுயர் தரம் | 1 | 0 | 1 |
| 30 | மொழிபெயர்ப்பாளர் | - | 1/ விசேட | 2 | 1 | 1 |
| 31 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | - | 11/1 | 1 | 1 | 0 |
| **இரண்டாம் மட்டம்** | | | | | | |
| 32 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | 111/11/1 | 82 | 72 | 10 |
| 33 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | - | 111/11/1 | 1 | 1 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 34 | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | - | 111/11/1 | 40 | 20 | 20 |
| 35 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | - | 111/11/1 | 1 | 1 | 0 |
| 36 | ஆசையா புகைப்படக் கலைஞர் | - | 111/11/1 விசேட | 1 | 1 | 0 |
| 37 | புகைப்படக் கலைஞர் | | 111/11/1 விசேட | 1 | 1 | 0 |
| **ஆரம்ப மட்டம்** | | | | | | |
| 38 | சாரதி | - | 111/11/1/ விசேட | 1 | 1 | 0 |
| 39 | மின் தொழில்நுட்பவியலாளர் | - | 111/11/1/ விசேட | 18 | 14 | 4 |
| 40 | சுற்றுலா விடுதி பொறுப்பாளர் / பிரதம சமையல்காரர் | - | 111/11/1/ விசேட | 2 | 2 | 0 |
| 41 | அலுவலக உதவியாளர் | - | 111/11/1/ விசேட | 21 | 18 | 3 |
| 42 | கை உதவியாளர் | | 111/11/1/ விசேட | 1 | 1 | 0 |
| 43 | சுற்றுலா விடுதி உதவியாளர் | - | 111/11/1 | 1 | 1 | 0 |
| **மொத்தம்** | | | | **204** | **158** | **48** |

## கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு

| தொ. இல | பதவி | பிரிவு | வகுப்பு தரம் | அனுமதிக்கப்பட்ட பதவிகள் | துற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மேலதிக செயலாளர் | கருத்திட்ட மேற்பார்வை | விசேட | 1 | 1 | 0 |
| 2 | கொள்முதல் நிபுணர் | கருத்திட்டம் | (ஒப்பந்த அடிப்படையில்) | 1 | 0 | 1 |
| 3 | பொறியியல் ஆலோசகர் | கருத்திட்டம் | (ஒப்பந்த அடிப்படையில்) | 1 | 0 | 1 |
| 4 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | 111/11/1 | 7 | 7 | 0 |
| 5 | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | - | 111/11/1 | 2 | 2 | 0 |
| 6 | சாரதி | - | 111/11/1/ விசேட | 1 | 1 | 0 |
| 7 | அலுவலக உதவியாளர் | | 111/11/1/ விசேட | 1 | 1 | 0 |
| **மொத்தம்** | | | | **14** | **12** | **2** |

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014 (1) இன் கீழ் திணைக்கள நியமனங்களாக ஆட்சேர்க்கப்பட்டுள்ள போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அனுமதிக்கப்பட் ஆளணிக்குள் உள்ளடக்கப்படாத உத்தியோகத்தர்கள்.

| | |
|---|---|
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 20 |
| சாரதி | 12 |
| அலுவலக உதவியாளர் | 11 |
| **மொத்தம்** | **43** |

**5. 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை செயலாற்றுகை**

| தொ. இல | செயற்பாடு / செலவினம் | தேறிய ஒதுக்கீடு (ரூ) | செலவு செய்யப்பட்ட தொகை (ரூ) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 01 | இயந்திர பராமரிப்பு (இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சு) | 3,500,000.00 | 3,337,170.60 | 95% |
| 02 | வாகனச் செலவு (இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சு) | 22,000,000.00 | 19,370,107.69 | 88% |
| 03 | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி | 2,500,000.00 | 302,000.00 | 12% |
| 04 | எரிபொருள் வழங்கல் (இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சு) | 12,000,000.00 | 11,316,056.37 | 94% |
| 05 | கட்டிட பராமரிப்பு (இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சு) | 24,000,000.00 | 437,190.00 | 2% |
| 06 | நீர் மற்றும் மின்சார கட்டணம் செலுத்துதல் (இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சு) | 15,000,000.00 | 14,692,217.09 | 98% |
| 07 | அஞ்சல் மற்றும் தகவல் தொடர்பு கட்டணங்கள் (இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சு) | 5,500,000.00 | 4,049,655.09 | 74% |
| 08 | வெளி சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்<br>- துப்புரவு சேவை → | 11,000,000.00 | 10,132,598.16 | 92% |
| | - பாதுகாப்புச் சேவை → | 4,300,000.00 | 3,118,386.19 | 73% |
| 09 | ஊழியர்களின் சம்பள உயர்வு, பதவி உயர்வு/ஓய்வுபெறல் | - | - | 100% |
| 10 | ஊழியர்கள் தொடர்பான கடமைகள் | - | - | இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை= 17<br>இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை =12 |
| 11 | அமைச்சின் ஊழியர் நியமனங்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் | - | - | 100% |
| 12 | உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட நலன் மற்றும் குறைகளை நிர்வகித்தல் | - | - | வரையறைக்குள் உச்சமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| 13 | பாராளுமன்ற கேள்விகளுக்கு பதில் அளித்தல் | - | - | 100% |
| 14 | அமைச்சரவை குறிப்புகளின் நடவடிக்கைகள் | - | - | 100% |

- **சேவைமுப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பின்றி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான உள்நாட்டு / வெளிநாட்டு சம்பளமற்ற லீவு வழங்குதல்.**

| 2024.12.31 ஆம் திகதி தகவல்கள் | | |
|---|---|---|
| **பதவி** | **உள்நாட்டு லீவு பெற்ற உத்தியோகத்தர்கள்** | **வெளிநாட்டு லீவு பெற்ற உத்தியோகத்தர்கள்** |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | 06 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | - | 01 |
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 01 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 03 | 01 |
| அலுவலக உதவியாளர் | 01 | - |
| சாரதி | 01 | 02 |
| **மொத்தம்** | **07** | **10** |

✠ **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவுக்கு ஏற்புடைய தகவல்கள்**

**1. குறிக்கோள்**

உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்படும் பொது சேவைகளை இணையத்தளத்தின் ஊடாக வழங்குவதன் மூலம் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமைச்சின் பணிகளை எளிதாக்க உதவுவதன் மூலம் காகிதமற்ற சூழலைப் பேணுதல்.

**2. பிரதான செயற்பாடுகள்**

1. பயனாளர்களுக்கு தொடர்புடைய தகவலை வெளியிட அமைச்சின் இணையதளத்தை வாராந்த அடிப்படையில் புதுப்பித்தல்.
2. தகவல்களைச் சேகரிப்பதற்கான தரவுத் தளத்தை உருவாக்குதல்.
3. அமைச்சின் தற்போதைய தகவல் தொடர்பு வலையமைப்பை (தொடர்பு) மாற்றுதல் மற்றும் கண்காணித்தல்.
4. ஏனைய பிரிவுகளுக்கு தகவல் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
5. LGN 2.0 திட்டத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
6. அமைச்சில் காகிதமற்ற சூழலைப் பேணுதல்.
7. அமைச்சின் அனைத்து ஊழியர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்ப்பதற்கு தேவையான பயிற்சி திட்டங்களை திட்டமிட்டு நடத்துதல்.
8. பல்வேறு பிரிவுகளின் தேவைக்கேற்ப மென்பொருட்களைத் தயாரித்தல் அதன் மூலம் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.

**3. 2024.01.01 முதல் 2024.12.31 வரை செயலாற்றுகை**

| செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|
| உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்கு தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கும் பொருட்டு தயாரிக்கப்பட்ட Empowering Local Government - A Comprehensive Digitalization Project for Local Government கருத்திட்டம். | இந்தக் கருத்திட்டத்திற்கு இணையத்தளங்கள் இரண்டைக்கொண்ட மென்பொருள் அமைப்பு காணப்படுகின்றது.<br>**elgservices.lk**<br>• For online customers<br><br>**apps.elgservices.lk**<br>• For local government employees<br><br>பொதுமக்களுக்கு elgservices.lk மூலம் உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செய்யும் கொடுப்பனவுகளை (வரிப்பணம், கடைக்கூலி போன்ற) மற்றும் ஒதுக்கிக்கொள்ளல் போன்றவற்றை இணைய வழியில் வீட்டிலிருந்தே நிறைவேற்றிக்கொள்ள முடியும்.<br>apps.elgservices.lk உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து நிதி நடவடிக்கைகளும் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் |

வாடிக்கையாளர்களுக்கு சிட்டைகளை விநியோகித்தல் முதல் இறுதிக் கணக்கிற்குத் தேவையான அறிக்கைகள் வரையிலான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

தற்போது 3 மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த முறைமையை மத்திய மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் 40 இலும் சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் 28 இலும் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் 19 இலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதற்கிணங்க, மொத்த உள்ளூராட்சி மன்றங்களினதும் எண்ணிக்கை 87 ஆகும்.




மேலும் elgservices.lk இணையத்தளத்தின் ஊடாக இணைய வழியில் கொடுப்பனவுகளை செய்வதற்கு இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பவற்றில் Payment Gateway தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

## Payment Gateway

PEOPLE'S BANK
The Bank of the People

- Setup fee, other charges - waived off.
- Annual fee Rs. 25,000.00

BANK OF CEYLON

- Setup fee, other charges - waived off.
- No annual fee

**Convenience fee for customer 1.5% reduced to 1%**

மேலும், தற்போது மத்திய மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் 35 இல் மற்றும் சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் 10 இலும் இணையவழி கொடுப்பனவுகளுக்கு Payment Gateway வசதி வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**Central Province**




**Sabaragamuwa Province**




மேலும் இந்த மென்பொருள் CAT2020 மென்பொருளுக்குச் சமமான பணிகளை நிறைவேற்றுவதனால் CAT2020 மென்பொருளை கொள்வனவு செய்யும் போது ஒரு உள்ளூராட்சி மன்றத்திற்கு செலவாகும் ரூ.11.5 இலட்சம் தொகையை இந்தக் கருத்திட்டத்தின் மூலம் சேமித்துக்கொள்ள முடியும். அதற்கிணங்க, மேற்படி 87 உள்ளூராட்சி மன்றங்களிலும் தற்போது அரசாங்கத்திற்கு மீதப்படுத்திய தொகை (87 x 11.5) 1,000.5 இலட்சம் ரூபாவாகும்.

| | |
|---|---|
| | மேலும், CAT2020 மென்பொருளுக்கு வருடாந்த பராமரிப்புக் கட்டணமாக செலவாகும் 2.5 இலட்சம் ரூபா செலவாகின்றது. அதுவும் இந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலவாகாது. அதற்கமைய, 87 x 2.5= 217.5 இலட்சம் ரூபா வருடாந்தம் அரசாங்கத்திற்கு மீதப்படுத்துவதற்கு இயலுமாகியுள்ளது.<br>மேலும் இந்த முறைமையூடாக இவ்வாறு ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களும் பெற்றுக்கொள்ளும் வருமானம் பற்றிய தகவல்கள் எமது அமைச்சின் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு கண்காணிக்க முடியுமாக உள்ளது.<br>தற்போது கணக்கீட்டு முறைகளுக்குப் பயன்படுத்தப்படும் புதிய கணக்கு முறைகள் மற்றும் பழைய கணக்கு முறைகள் என்ற இருவகை முறையும் இந்த மென்பொருளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக நடத்தப்பட்ட செயலமர்வுகள் பின்வருமாறு நடத்தப்பட்டுள்ளன.<br><br>2024.01.19 யாழ்ப்பாணம் வடக்கு மாகாண சபையில்<br>2024.01.30 அநுராதபுரம் வடமத்தி மாகாண சபையில்<br>2024.02.06 கிழக்கு மாகாண சபையில்<br>2024.03.05 இரத்தினபுரி சப்பிரகமுவ மாகாண சபையில்<br>2024.04.04 Zoom தொழில்நுட்பத்தில் மத்திய மாகாண சபையில்<br>2024.06.18 மற்றும் 2024.06.19 ஆம் திகதிகளில் கிழக்கு மாகாண சபையில்<br>2024.07.02 இரத்தினபுரி சப்பிரகமுவ மாகாண சபையில்<br>உள்ளூராட்சி நிறுவனங்களால் சேகரிக்கப்படும் மதிப்பீட்டு வருவாயைக் கணக்கிடுவது தொடர்பான மென்பொருளை மேம்படுத்துவதற்குத் தேவையான தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் தகவல்களைச் சேகரிப்பதற்கும் 2024.09.03 ஆம் திகதி மாத்தளை மாநகர சபையில் ஒரு பட்டறை நடைபெற்றது.<br><br>மதிப்பீட்டு வருவாயைக் கணக்கிடுவதற்கான மேம்படுத்தப்பட்ட மென்பொருளை மதிப்பாய்வு செய்வதற்கான ஒரு பட்டறை 2024.10.30 ஆம் திகதி நவயலதென்ன உள்ளூராட்சி பயிற்சி மையத்தில் நடைபெற்றது.<br><br>உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பது மற்றும் புதிய மென்பொருள் மற்றும் புதிய வசதிகளை அறிமுகப்படுத்துவது குறித்த பயிற்சி நிகழ்ச்சிகள் 2024.09.10 ஆம் திகதி உள்நாட்டலுவல்கள் பிரிவில் நடைபெற்றன.<br><br>மேலும் மாகாணங்களுக்கான மென்பொருள் பாவனையின் போது பல்வேறுபட்ட வினவுதல்களுக்கு மற்றும் கேள்விளுக்கு அறிவுரை வழங்குவதற்கு WhatsApp Group 3 உருவாக்கப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் தற்போது 1,000 க்கும் மேற்பட்ட பிரச்சினைகளுக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது. |
| வன்பொருள் மற்றும் மென்பொருள் பிரச்சினைகள் உள்ளிட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப ரீதியில் உதவுதல். | பராமரிக்கப்படும் கணினிகளின் எண்ணிக்கை - 88<br>பராமரிக்கப்படும் அச்சுப்பொறிகளின் எண்ணிக்கை - 12<br>பராமரிக்கப்படும் ஸ்கேனர்களின் எண்ணிக்கை - 01<br>மொத்தம் 101<br><br>அதன் மூலம் அரசுக்கு மீதப்படுத்திய தொகை = ரூ.1,086,500.00 |
| அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல். | தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு அனுப்பியுள்ள அனைத்து தகவல்களும் நாள் அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| |  |
| அமைச்சின் முகநூல் பக்கத்தை இற்றைப்படுத்தல். | தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு அனுப்பியுள்ள அனைத்து தகவல்களும் நாள் அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.<br> |
| அமைச்சில் காகிதப் பாவனையற்ற சூழலொன்றை பேணுதல். | பதிவேட்டறைக்கு மென்பொருள் தொகுதியொன்றை தயாரித்து மேல் நடவடிக்கைக்காக நிர்வாகப் பிரிவுக்கு ஒப்படைத்தல். கையிருப்பு முகாமை தொகுதியை தயாரித்தல் மற்றும் அறிமுகம் செய்தல். |
| Zoom கூட்டங்களுக்கு தொடர்புகளை தயாரித்தல் மற்றும் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ளல் . | தயாரிக்கப்பட்ட zoom தொடர்புகளின் எண்ணிக்கை = 280<br>பங்குபற்றிய zoom / பௌதீக கூட்டங்களின் எண்ணிக்கை = 302 |

### 3.7. நிதிப் பிரிவு

**1. குறிக்கோள்**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் துறையின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியை அடைவதற்கு நிதி வசதிகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளை பயனுள்ள வகையிலும் வினைத்திறனுடனும் பயன்படுத்தி பொதுப் பணத்தில் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுதல்.

**2. பிரதான செயற்பாடுகள்**

1. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் பணமும் வெளிநாட்டுத் திட்டங்களின் கீழ் ஒதுக்கப்படும் பணமும் ஒதுக்கப்பட்ட அதே பணிகளுக்குப் பயன்படுத்தப்படுமிடத்து அவ்வாறு ஒதுக்கப்பட்ட தொகையில் மிகை இருப்பின் அனைத்துப் பணத்தையும் மற்றொரு அவசியமான செயல்பாட்டிற்கு மாற்றுவதன் மூலம் சிக்கனமாக செலவிடுதல் வேண்டும். இறுதிக் கணக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு (நிதி கூற்றுக்கள்) சமர்ப்பிக்க வேண்டிய திகதியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் துறையின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்கு தேவையான பௌதீக வளங்களை தாமதமின்றி வழங்குதல் மற்றும் அனைத்து சொத்துக்களையும் சரியான முறையில் முகாமைத்துவம் செய்தல்.
3. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திட்டங்களின் கணக்குகளை, மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டுதோறும் திறைசேரிக்கு சமர்ப்பித்து சரியான நேரத்தில் நிதியைப் பெறுதல்.
4. முற்பண பி கணக்கின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் அரச அலுவலர்களுக்குத் தேவையான கடன்கள் மற்றும் முற்பணங்களை தாமதமின்றி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மற்றும் அதற்கான கணக்குகளை உரிய திகதிக்கு முனனர் சமர்பித்தல்.
5. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி துறைக்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் உள்ளூராட்சி பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு தேவையான பொருட்கள் மற்றும் இயந்திரங்களை கொள்வனவு செய்தல்.
6. கணக்காய்வாளர் அதிபதியின் கணக்காய்வு வினவல்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு வினவல்களுக்கு உடனடியாகப் பதிலளித்தல். மற்றும் வெளிப்படுத்தப்படும் குறைபாடுகளை உடனடியாக சரிசெய்தல். அத்தோடு, அவசியமான சூழ்நிலைகளில் அரச கணக்குக் குழுவில் தோன்றுதல்.
7. உள்ளூராட்சி மன்றப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மற்றும் சேவைகளுக்கான நிதியை உடனடியாக விடுவித்தல்.
8. சிவில் ஒப்பந்தங்கள், ஆலோசனை சேவைகள் மற்றும் பிற செயல்பாடுகளை பயனுள்ள வகையிலும் வினைத்திறனுடனும் நடைமுறைப்படுத்த வெளிநாட்டு உதவித் திட்டங்களுக்கு தேவையான நிதி ஆலோசனைகளை வழங்குதல்.

**3. 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை செயலாற்றுகை**






## .38 .செலவுப் பகுப்பாய்வுப் பிரிவு

**1. குறிக்கோள்**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நிதி விவகாரங்களை ஒருங்கிணைத்து கண்காணித்தல்

**2. பிரதான செயற்பாடுகள்**

1. மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை விடுவித்தல் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கங்களின் நிதி விவகாரங்கள் மற்றும் பிரச்சினைகளை ஒருங்கிணைத்தல்.
2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்படும் வாகனங்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குதல் மற்றும் விபத்துக்கள் தொடர்பான பணிகளை முன்னெடுத்தல் / ஒருங்கிணைத்தல்.
3. மாகாண சபைகளுக்கு மத்திய அரசினால் வழங்கப்படும் வருடாந்த மானியங்கள் மற்றும் அதில் கிடைக்கும் வருமானங்கள் அந்த நிறுவனங்களால் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதற்கான தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல்.
4. அமைச்சினால் வழங்கப்படும் வாகனங்களை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மாற்றுதல் மற்றும் தொடர்புடைய பிற பணிகள் மற்றும் ஒருங்கிணைப்பு.
5. உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான முகாமைத்துவ தகவல் அமைப்பின் பகுப்பாய்வு.
6. பல்வேறு அரசாங்க, சட்டப்பூர்வ அமைப்புகள் மற்றும் வெளி தரப்பினரால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் தொடர்பான கோரப்பட்ட தரவு மற்றும் தகவல்களை வழங்குதல்.
7. மாகாண சபை நிதி விவகாரங்களை மதிப்பாய்வு செய்தல் மற்றும் காலாண்டு மதிப்பாய்வு அறிக்கைகளைத் தயாரித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சமர்ப்பித்தல்.

**3. 2024.01.01 முதல் 2024.12.31 வரை செயலாற்றுகை**

1. அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில், மதிப்பிடப்பட்ட செலவின எல்லைகளுக்கு உட்பட்டு மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை வருமானங்கள் வழங்கிய மானியங்கள் அந்த நிறுவனங்களால் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. இதன்படி, 2024 ஆம் ஆண்டின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டு வரை மாகாண சபையின் நிதி செயலாற்றுகை காலாண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே 2024 ஆம் ஆண்டின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 2024 மாகாண சபைகளின் நிதி செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக பேணப்படும் தரவுத்தளம் 2024 ஆம் ஆண்டில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

3. உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய தரவுத்தளம் 2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு, தகவல்களைப் பகுப்பாய்வு செய்த பின்னர் உள்ளூராட்சி மன்றங்களின் நிதி செயல்திறன் குறித்த 2024 அறிக்கை தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் அனுப்பப்பட்டது.

உள்ளூராட்சி ஆணையர்கள். மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பொது வசதிகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு, உரிய அறிக்கையில் தகவல் சேர்க்கப்பட்டுள்ளன.

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான நிதிச் செயலாற்றுை**






4. இந்த அமைச்சின் தலைமையில் செயற்படும் வெளிநாட்டு உதவித் திட்டங்களின் நிதிச் செயற்பாடுகள் தொடர்பிலான தகவல்கள் மாதாந்தம் பெறப்பட்டு மாகாண சபையின் நிதிச் செயற்பாட்டு அறிக்கையில் தகவல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5. மாகாண சபைகளின் நிதி விவகாரங்களை ஆராய்வதற்காக, கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல், வங்கி கணக்கிணக்கங்களை தயாரித்தல், முற்பணக் கணக்குகளை ஒப்பிட்டுதல், கட்டுநிதி கணக்குகளை ஒப்பிட்டுதல், 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு வரையிலான காலாண்டு அறிக்கைகளைத் தயாரித்தல்.

6. மாகாண சபைகள் மற்றும் பொது திறைசேரியை ஒருங்கிணைத்து மாகாண சபை மட்டத்தில் பாடசாலை உணவு வழங்கும் திட்டத்திற்காக பணம் செலுத்துதல்.

7. தரவு பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் அலகுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களின் நிதி மற்றும் பௌதீக தகவல் தொடர்பான முகாமைத்துவ தகவல் அமைப்பை செயற்படுத்தல்.

8. மாகாண மட்டத்தில் உள்ளுராட்சி அதிகாரிகளுக்கு அமைச்சினால் வழங்கப்பட்ட வாகனங்களை இறுதி செய்தல்.

9. உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான 2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஆவணங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைத் தரவை உள்ளடக்கிய தரவுத் தளத்தைப் பராமரித்தல்.

## .39. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

### 1. குறிக்கோள்

அமைச்சின் உத்தேச நோக்கங்களை அடைவதில் பௌதீக மற்றும் மனித வளங்களை பயனுள்ள வகையிலும் வினைத்திறனாகவும் நிர்வகிப்பதற்கு பயனுள்ள உள்ளக கட்டுப்பாடுகள் உள்ளதா என்பதை மதிப்பீடு செய்வதற்கும் அந்த கட்டுப்பாடுகளின் பெறுமதி கூட்டலை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

### 2. பிரதான செயற்பாடுகள்

1. கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய கணக்காய்வு அபாய துறைகளை கருத்திற்கொண்டு கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. ஆரம்கட்ட அறிக்கை சமர்ப்பித்தல்.
3. உள்ளக கணக்காய்வுப் பீரிவின் வருடாந்த செயல் திட்டத்தை தயாரித்து அதன்படி மாதாந்த முன்னேற்றத்தை அறிக்கையிடல்.
4. முகாமைத்துவ கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடத்துதல்.
5. கருத்திட்ட உள்ளக கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடத்துதல்.
6. அமைச்சு மற்றும் வெளிநாட்டு திட்டங்கள் தொடர்பான காலாண்டு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
7. அமைச்சின் கீழ் தற்போதுள்ள வெளிநாட்டு உதவித் திட்டங்கள் தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
8. உள்நாட்டுத் திட்டங்கள் தொடர்பான கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளல்.
9. அழைக்கப்படும் போது அரச கணக்குக் குழுவில் பங்கேற்றல்.
10. அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைகளை மேற்கொள்னல்.
11. ஏதிர்வரும் வருடத்திற்கான (2025) கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்.
12. எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வுப் பிரிவின் செயல்திட்டத்தை தயாரித்தல்.

### 3. 2024.01.01 முதல் 2024.12.31 வரை செயலாற்றுகை

1. ஆரம்ப அறிக்கை சமர்ப்பித்தல்.
2. திருத்தப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தை சமர்ப்பித்தல்.
3. வருடாந்த செயல் திட்டத்தின்படி 2024.12.31 வரை மாதாந்த முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்தல்.
4. 03 முகாமைத்துவ கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடத்துதல்.
5. 02 திட்ட உள் கணக்காய்வு மீளாய்வுக் குழு கூட்டங்களை நடத்துதல்.
6. (IV ஆம் காலாண்டின் கூட்டம் 2025.01.23 நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.)

7. அமைச்சு மற்றும் வெளிநாட்டு திட்டங்கள் (Iமற்றும் II) தொடர்பான காலாண்டு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைகளை மேற்கொள்ளல்.
   (i) இலங்கை உள்ளூராட்சி நிறுவனத்தில் விடுமுறை நாட்கள்
   (ii) அமைச்சின் ஆவணக் காப்பகத்தில் மென்பொருளைப் பராமரித்தல்.
   (iii) உள்ளூர் கடன் மற்றும் மேம்பாட்டு நிதி குறித்து விசேட விசாரணை நடத்துதல்.
8. 2025 உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய கணக்காய்வுகளை மேற்கொள்ளல்.

**வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய முன்னேற்றம் :-**

| தொ. இல | கணக்காய்வுத் துறை | முன்னேற்றம் (%) |
|---|---|---|
| **1 ஆம் காலாண்டு** | | |
| 01 | தனிப்பட்ட கோப்புகளின் பராமரிப்பு தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 02 | சம்பள நடவடிக்கைகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 03 | எதிர்வரும் ஆண்டிற்கான வருடாந்த செயல் திட்டம், செயல்திறன் அறிக்கை, வரவுசெலவுத்திட்டக் குழு அமர்விற்கான முன்னேற்ற அறிக்கை, நிறுவன முடிவுகள் கட்டமைப்பை தயாரிப்பது குறித்த உள்ளக கணக்காய்வு | 100 |
| 04 | கருத்திட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 05 | உள்ளூராட்சி மேம்பாட்டுத் துறை கருத்திட்டத்துடன் தொடர்புடைய உள்ளக கணக்காய்வு | 100 |
| 06 | போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவத் திட்டம் (மாகாண வீதிகள் திட்டம்) தொடர்பான உள்ளக கணக்காய்வு. | 100 (திட்டங்களை முடித்தல் மற்றும் சொத்துக்களை கையகப்படுத்துதல் ஆகியவற்றை தணிக்கை செய்ய வேண்டியிருப்பதால், தணிக்கை 4 ஆவது காலாண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது ) |
| 07 | அபிவிருத்தியடைந்து வரும் பிராந்தியங்களில் உள்ள கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களின் உள்ளக கணக்காய்வு | 100 |
| **1 ஆம் காலாண்டு** | | |
| 08 | சேவை ஒப்பந்தங்கள் மற்றும் பராமரிப்பு தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 09 | சொத்து முகாமைத்துவம் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 10 | ஊதிய நடவடிக்கைகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 11 | கட்டண வவுச்சர் முகாமைத்துவம் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 12 | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நிதி விவகாரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணிப்பது தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |

| தொ. இல | கணக்காய்வுத் துறை | முன்னேற்றம் (%) |
|---|---|---|
| 13 | உள்ளுராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் கருத்திட்டத்துடன் தொடர்புடைய உள்ளக கணக்காய்வு (மூலதனம் மற்றும் மீண்டுவரும்). | 100 |
| 14 | ஊரகப் பாலம் திட்டம் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 15 | பிராந்திய அபிவிருத்தி உதவித் திட்டத்துடன் தொடர்புடைய உள்ளக கணக்காய்வு | 100 |
| 16 | பொதுக் கல்வி புதுமைத் திட்டம் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| **3 ஆம் காலாண்டு** | | |
| 17 | அமைச்சின் வாகன நிர்வாகம் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 55 |
| 18 | அரசாங்க அதிகாரிகளின் பிணையெடுப்பு, பிணைப் பதிவேடுகளை பராமரித்தல் மற்றும் தனிப்பட்ட திறன் மேம்பாட்டு திட்டங்களை நடத்துதல் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 19 | சம்பள நடவடிக்கைகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 20 | கொள்முதல் முகாமைத்துவம் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 21 | வைப்புக் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 22 | இலக்கம் 04/2023 மற்றும் 03/2023 தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ திட்டங்களின் வேலைகளை நிறைவு செய்வது குறித்த உள்ளக கணக்காய்வு | 100 |
| 23 | உள்ளுராட்சி மன்றங்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் புதிய விதிகள், விதிமுறைகள் மற்றும் துணைச் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 24 | உள்ளுராட்சி மன்றங்களுக்கான தகவல் தொழில்நுட்ப அமைப்பை நிறுவுவது தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 25 | பெரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவத் திட்டம் (GCWWMP) பெரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டுத் திட்டம் - பகுதி 3 (GCWWMIP) திட்டங்கள் பெரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமை மேம்பாட்டு முதலீட்டு திட்டம் - பகுதி 3 (GCWWMIIP) திட்டங்கள் பற்றிய உள்ளக கணக்காய்வு | 100 |
| **4 ஆவது காலாண்டு** | | |
| 26 | நிதி முகாமைத்துவம் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 27 | சம்பள நடவடிக்கைகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 28 | கட்டண வவுச்சர் முகாமை தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |
| 29 | உள்ளுாராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் திட்டம் (மூலதனம்) கணக்காய்வு | 100 |
| 30 | மாகாண ஆளுநர்கள் மாநாடு, மாகாணங்களுக்கு இடையேயான பாட ஒருங்கிணைப்பு மாநாடு மற்றும் ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கு வாகன உரிமங்கள் வழங்குதல் ஆகியவற்றை கணக்காய்வு செய்தல். | 100 |
| 31 | பிராந்திய அபிவிருத்தி உதவி கருத்திட்ட கணக்காய்வு | 100 |
| 32 | பொதுக் கல்வி புத்தாக்கத் கருத்திட்ட கணக்காய்வு | 100 |
| 33 | கிராமப்புற பாலத் திட்டம் தொடர்பான உள்ளக கணக்காய்வு | 100 |

## 3.10 திட்டமிடல் பிரிவு

**1. குறிக்கோள்**

அமைச்சின் நோக்கங்களை அடைவது தொடர்பான திட்டங்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் உத்திகளைத் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்துதல் மற்றும் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் கொள்கைகள்/உத்திகள்/ நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல், நேரடியாக மதிப்பீடு செய்தல் மற்றும் அமைச்சுடன் தொடர்புடைய பிற பணிகளைச் செய்ய ஏனைய பிரிவுகளுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

| | |
|---|---|
| 1. வருடாந்த செயல் திட்டத்தை தயாரித்தல் | 2024 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, தேவைக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. |
| | • செயல் திட்டத்தின் படி, அந்தந்த பிரிவுகள் மற்றும் நிறுவனங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் மாதந்தோறும் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br><br>அமைச்சு 2025 ஆம் ஆண்டிற்கான அதன் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரிக்கத் ஆரம்பித்துள்ளது. |
| 2. செயலாற்றுகை அறிக்கையை தயாரித்தல்<br>3. 2025 குழுநிலை விவாதத்திற்கு அறிக்கைகளைத் தயாரித்தல். | 2023 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>அமைச்சு தற்போது 2024.12.31 நிலவரப்படி முன்னேற்றம் மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்களைக் கொண்ட அறிக்கையைத் தயாரித்து வருகிறது, இது 2025 வரவுசெலவுத்திட்ட குழு நிலை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். |
| 4. நிறுவன பெறுபேற்று கட்டமைப்பை உருவாக்குதல் | அமைச்சின் பெறுபேற்று கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 5. நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல். | • அமைச்சின் வருடாந்த செயற்திட்டத்தின் பிரகாரம், நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் அடையாளம் காணப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. |
| 6. உள்ளூராட்சி மன்றங்களின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் (CDLG) கீழ் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP) மற்றும் ஆசியான் அமைப்பு ஆகியவற்றின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியின் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துதல். | • திட்டமிடல் பிரிவின் கீழ் ஆதார அடிப்படையிலான கொள்கைகளை உருவாக்குவதற்கான தரவுப் பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் பிரிவை அமைப்பது தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. தொடர்புடைய முகாமைத்துவ தரவு அமைப்பின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடைகின்றது. ஆசிய அபிவிருத்தி மன்றம் தனது அபிவிருத்திப் பணிகளை நிறைவுசெய்து அமைச்சிடம் ஒப்படைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.<br><br>• அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் பின் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.<br><br>• அமைச்சின் ஆளணியினர் (500) பேருக்கு முகாமைத்துவ மற்றும் மதிப்பீட்டுத் துறையில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 22 |

| | |
|---|---|
| | நடாத்தப்பட்டுள்ளன.<br>• அமைச்சின் கணினி மற்றும் அச்சு இயந்திரங்களின் பராமரிப்புக்குத் தேவையான உபகரணத் தொகுதி (Tool Kit) மற்றும் அமைச்சின் பிரதான கேட்போர்கூடத்தின் சூட்டிகைப் பலகை (Smart Board) வழங்கப்பட்டுள்ளது. |
| 7. புதிய வெளிநாட்டுக் கருத்திட்டங்களின் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | • Capacity Building for Sustainable Management of Rural Water Supply Schemes under PS Managing Model (CapWass) - இந்தத் திட்டம் தொடர்பான செயல்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. அதன்படி, சம்பந்தப்பட்ட துணைத் திட்டங்களை பராமரிப்பது தொடர்பாக அந்தந்த தரப்பினரிடையே ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.<br>• சேமாவுல் திட்டம் - ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தின் கருத்துருவை தயாரித்து தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்புதல். கொரிய அரசாங்கத்தின் சார்பாக, Saemaul அறக்கட்டளை (Saemaul Foundation), இதன் மூலம் நிறுவப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் கீழ் 2026-2031 காலகட்டத்தில் செயல்படுத்தப்படும் ஐந்தாண்டு பிராந்திய அபிவிருத்தித் திட்டத்திற்கான (US$ 10 மில்லியன்) கருத்துருவைத் தயாரித்தது. அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு, அதற்கான திட்டங்களை தயாரித்து, திணைக்களத்தின் மற்றும் வெளிநாட்டு வளத்துறை அமைச்சினால் இணக்கம் பெறப்பட்டுள்ளது.<br>• இந்தக் கருத்திட்டத்தின் ஏற்புடைய தேசிய தொழிற்பாட்டு கூட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது. |

### 3.11 கருத்திட்ட மேற்பார்வை பிரிவு

#### 1. குறிக்கோள்

பல்வேறு சர்வதேச நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் கடன்கள் மற்றும் மானியங்களின் கீழ் செயல்படுத்தப்படும் வெளிநாட்டு உதவி திட்டங்கள் மற்றும் திட்ட நோக்கங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் வழிநடாத்தல்.

#### 2. பிரதான செயற்பாடுகள்

1. வெளிநாட்டு உதவித் திட்டங்களை நிர்வகிப்பதற்கான நிர்வாக முகவராக, வெளிநாட்டு உதவி நிறுவன ஒருங்கிணைப்பு (Doner Coordination) மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பாக அந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடல்.(Doner Negotiation).
2. கருத்திட்ட ஒப்பந்தங்களை ஆய்வு செய்தல், அந்த ஒப்பந்தங்களை தேசிய கொள்கைகளின்படி திருத்துதல், உரிய அனுமதிகளைப் பெற்று ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்.
3. கருத்திட்ட பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல், சேவை நீட்டிப்புகளை வழங்குதல் போன்ற மனித வள முகாமைத்துவம்.
4. வெளிநாட்டு உதவித் திட்டங்களுக்கு கொள்முதல் வழிகாட்டுதலை வழங்குதல்.
5. தேசிய வழிநடத்தல் குழு கூட்டத்தை ஏற்பாடு செய்தல் மற்றும் அதிலிருந்து கண்டறியப்பட்ட பிரச்சனைகளை தீர்ப்பதில் தலையிடுதல்.
6. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அதிலிருந்து கவனிக்கப்படும் பலவீனங்கள்/பிரச்சினைகளில் தலையிடுதல்.
7. பல்வேறு நிறுவனங்களால் கோரப்பட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், அந்த அறிக்கைகளைத் தயாரித்தல் தொடர்பான பகுப்பாய்வுகளை நடத்துதல்.

8. கருத்திட்டங்கள் தொடர்பான அமைச்சரவை ஆவணங்களை தயாரித்தல் மற்றும் அனுமதி பெறுவதற்கான ஏற்பாடுகள்.

9. நோக்கு கூட்டங்கள் (Mission) மற்றும் பிற கூட்டங்களில் பங்குபற்றுதல் (kik off Meetings, போன்றவை...)

10. வெளிநாட்டு உதவித் திட்டங்களில் பணிபுரியும் வெளிநாட்டு ஊழியர்கள் மற்றும் சார்ந்திருப்பவர்களுக்கு விசா வழங்குவதற்கான ஒருங்கிணைப்பு.

11. கருத்திட்டங்கள் தொடர்பான நிதி அமைச்சகம் உட்பட பல்வேறு நிறுவனங்களால் அழைக்கப்படும் கூட்டங்களுக்கு ஆவணங்களை தயாரித்து சமர்ப்பித்தல் மற்றும் பங்கேற்றல்.

12. தொழில் வழங்குநர் என்ற அடிப்படையில் ஒப்பந்ததாரர்களின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பில் Dispute Board தீர்ப்புச் சபையபக வழக்குகளை கையாளுதல்.

**3. 2024.01.01 முதல் 2024.12.31 வரை செயலாற்றுகை**

1. 2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உதவித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.35333.00 மில்லியன் ஒதுக்கீடு ஒவ்வொரு திட்டத்தினதும் அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்காக இயக்கப்பட்டு, டிசம்பர் மாத இறுதிக்குள் ரூ.20,751.18 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது

2. பின்வரும் கருத்திட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைந்த திட்ட செயலாக்கம் மற்றும் திட்ட கண்காணிப்பு செயல்பாடுகள்.
   - i. உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் துறைசார் திட்டம் (புரநெகும)
   - ii. கிராமப்புற பாலம் திட்டம் (கட்டம் 5
   - iii. 1. பெருநகர நீர் மற்றும் கழிவு நீர் முகாமை மேம்பாடு- முதலீட்டுத் திட்டம் (பகுதி 2)
     2 ) பெருநகர நீர் மற்றும் கழிவு நீர் முகாமை மேம்பாடு முதலீட்டுத் திட்டம் (பகுதி 3)
   - iv. மாகாண வீதி மேம்பாட்டுத் திட்டம்
   - v. வளர்ந்து வரும் பிராந்தியங்களில் கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்.
   - vi. ஆரம்ப சுகாதார அமைப்பு வலுப்படுத்தும் திட்டம்.
   - vii. பொது கல்வி கண்டுபிடிப்பு திட்டம்
   - viii. பிராந்திய அபிவிருத்தி உதவிக கருத்திட்டங்கள்

3. இந்தக் கருத்திட்டங்களில், உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான துறைசார் திட்டம் (புறநெகும), மாகாண வீதி அபிவிருத்தி திட்டம் மற்றும் ஆரம்ப சுகாதார அமைப்பு வலுவூட்டல் மற்றும் பிரதேச அபிவிருத்தி உதவிக் கருத்ததிட்டம் ஆகியவை இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

4. பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் மாகாணங்களுடன் தொடர்புடைய நிதி முகாமைத்துவம், கொள்முதல் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப உதவி மற்றும் தொடர்புடைய ஒருங்கிணைப்பு செயல்பாடுகளை வழங்குதல்.

5. வெளிநாட்டு உதவித் திட்டங்களில் சேவை நீட்டிப்புகளை வழங்குவது உட்பட பிற கருத்திட்ட நிர்வாக செயல்பாடுகளை மேற்கொள்ளல். அதற்கமைய, 2024 ஆம் ஆண்டு சேவைக் காலத்தை நிறைவு செய்த பதவிகளுக்கு 125 சேவை நீட்டிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

6. இந்த அமைச்சின் கீழ் செயல்படுத்தப்படும் வெளிநாட்டு உதவித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றம். இந்த வருடம் 15 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களும், 07 தேசிய வழிநடத்தல் குழுக் கூட்டங்களும், எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காணும் நோக்கில் நடத்தப்பட்டுள்ளன. எனவே, திட்டங்களின் சிக்கல்களைத் தீர்க்க உரிய தலையீடுகள் செய்யப்பட்டுள்ளன.

7. “கிராமிய பாலத் திட்டம், வளர்ந்து வரும் பிராந்தியங்களில் கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மாகாண வீதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம், பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி உதவித் திட்டம்” ஆகிய திட்டங்களுக்கு 08 அமைச்சரவைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு, அந்த 08 அமைச்சரவைப் பத்திரங்களுக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

8. 2024 வரை டிசம்பர் 14 பணிக் கூட்டங்களுக்கு ஒப்புதல் (Mission Clearance) வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

9. இந்த ஆண்டில் வெளிநாட்டு உதவித் திட்டங்களின் ஊழியர்களில் பணிபுரியும் 150

அதிகாரிகள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு விசா வசதிகளைப் பெறுவதற்கும் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

10. பெரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ திட்டத்துடன் தொடர்புடைய தற்போது மாகாண வீதி அபிவிருத்தி கருத்திட்டங்களுடன் தொடர்புடைய 04 வழக்கு, 03 நடுவர் மன்றம் மற்றும் 03 தகராறு சபை வழக்குகள் தொடர்புடைய சட்ட ஆவணங்களைத் தயாரித்தல், அது தொடர்பான விசாரணைகளில் பங்கேற்பது (விசாரணைகள்), சட்டமா அதிபர் திணைக்களத்தின் விவாதங்களில் பங்கேற்பது போன்றவை செய்யப்பட்டுள்ளன. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினாலும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

## 4. வெளிநாட்டு நிதியில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை)

### 4.1. புறநெகும (மேலதிக ஒதுக்கீடு) உள்ளூராட்சி மன்றங்களை மேம்படுத்தும் பிரிவுக் கருத்திட்டம்

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | 13,500 (USD 67.84 Mn) |
| 2 | கடன் உதவி மற்றும் நிதிகளை வழங்கும் நிறுவனங்கள் (ரூ.மில்) | ஆசிய அபிவிருத்தி வங்கி - 12,190 – (USD 60 Mn) |
| 3 | 3.1 கருத்திட்ட காலம் (ஆண்டுகள்) | 6 வருடங்கள் |
| | 3.2 ஆரம்பித்த ஆண்டு / இறுதி ஆண்டு | 2017 / 2024<br>*இந்தக் கருத்திட்டம் நிறைவடைந்துள்ளது. |
| 4 | திட்ட அமுலாக்கல் பிரதேசங்கள் | மேல், வடமேல், தென், ஊவா, மத்திய, வடமத்திய மாகாணங்கள் |

**5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்**

கருத்திட்டத்தின் பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

**6. நிதி முன்னேற்றம் (மில்லியன் ரூபா)**

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டுத் தொகை | 2023.12.31 வரை மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2024 ஆண்டுக்கு ஒதுக்கீடு | (2024.01.01-2024.12.31) மூன்றாவது காலாண்டு வரை முன்னேற்றம் | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 13,500.00 | 13,107.34 | 97% | 400.00 | 331.33 | 82% | 13,438.67 | 99.5% |

**7. 2024.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

2023.09.30 ஆம் திகதிக்கு கருத்திட்டத்தின் அனைத்து பௌதீக நடவடிக்கைகளும் 100% நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

### 4.2 கிராமியப் பாலங்கள் கருத்திட்டம் (கட்டம் V)

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | 14,112 |
| 2 | கடன் உதவி மற்றும் நிதிகளை வழங்கும் நிறுவனங்கள் (ரூ.மில்) | நெதர்லாந்து 14,112 |
| 3 | 3.1 கருத்திட்ட காலம் (ஆண்டுகள்)<br>3.2 ஆரம்பித்த ஆண்டு / இறுதி ஆண்டு | 3 வருடங்கள் 11 மாதங்கள்<br>2021 ஜூலை முதல் 2025 ஜூலை 05 |
| 4 | திட்ட அமுலாக்கல் பிரதேசங்கள் (மாகாணங்கள் / மாவட்டங்கள் / உள்ளூராட்சி நிறுவனங்கள் / பிரதேச செயலகப் பிரிவுகள் / கிராம அலுவலர் பகுதிகள் / கிராமங்கள்) | நாடு முழுவதும் |

## 5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்

1. தேசிய பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதி மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

2. கிராமிய மக்களின் பொதுப் பாதுகாப்பை விருத்தி செய்தல்.

3. கிராமியப் பிரதேசங்களில் இது வரையில் பயன்பாட்டுக்கு எடுக்காத வளங்களை உச்சமாகப் பயன்படுத்தல்.

4. இலகுவாகப் பயணிப்பதற்கு வசதியளித்து தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்.

## 06. நிதி முன்னேற்றம் (ரூ.மில்)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டுத் தொகை | 2023.12.31 வரை மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2024 ஆண்டுக்கு ஒதுக்கீடு | (2024.01.01-2024.12.31) மூன்றாவது காலாண்டு வரை முன்னேற்றம் | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 14,112 | 9,526.54 | 65% | 4500 | 947.82 | 21% | 10474.36 | 74% |

## 7. 2024.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

7.1 2023.12.31 ஆம் திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம் (A)

53 ஒற்றை வழிப் பாலங்கள் மற்றும் 4 இரட்டை வழிப் பாலங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

7.2 ஆண்டில் முன்னேற்றம் (2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை) (B)

106 பாலங்களின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 32 பாலங்களின் அடிப்படை கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 12 பாலங்களின் அடித்தளம் கட்டப்பட்டு வருகிறது.

7.3.2024.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B)



பாலம் இலக்கம் 5115, மொணராகலை கிரிந்திஓயா ஊடாக தெலுல்ல பாலம்



பாலம் இல. 5127, குருணாகல் கொஸ்தன்டா எல பாலம்

## 4.3 கொழும்பு பெருநகர் கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (GCWMP)

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | 22,189 |
| 2 | கடன் உதவி மற்றும் நிதிகளை வழங்கும் நிறுவனங்கள் (ரூ.மில்) | ஆசிய அபிவிருத்தி வங்கி – 13,647<br>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு – 8,542 |
| 3 | 3.1 கருத்திட்ட காலம் (ஆண்டுகள்) | 15 வருடங்கள் |
| | 3.2 ஆரம்பித்த ஆண்டு / இறுதி ஆண்டு | 2010 - 2025 |
| 4 | திட்ட அமுலாக்கல் பிரதேசங்கள் (மாகாணங்கள் / மாவட்டங்கள் / உள்ளுராட்சி நிறுவனங்கள் / பிரதேச செயலகப் பிரிவுகள் / கிராம அலுவலர் பகுதிகள் / கிராமங்கள்) | மேல் மாகாணம் / கொழும்பு மாவட்டம் / கொழும்பு மாநகர சபைப் பகுதி / கொழும்பு மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவுகள் / மோதர, மாதம்பிட்டிய, லுனுபொகுண, கோட்டை, மாளிகாவத்தை கிழக்கு, காலி முகத்திடல், வனாத்தமுல்ல, கொள்ளுப்பிட்டி, பொரளை தெற்கு, பம்பலப்பிட்டி, கிருள, வடக்கு, வெள்ளவத்தை வடக்கு, வெள்ளவத்தை தெற்கு கிராம அலுவலர் பிரிவுகள். |

### 5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்

1. மேம்படுத்தப்பட்ட கழிவு நீர் முகாமை சேவைகள் மூலம் சிறந்த நகர்ப்புற சூழலை உருவாக்குதல்.
2. பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் வசிப்பவர்களின் சுகாதார பிரச்சினைகளை தீர்த்தல்.
3. நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் மற்றும் கடல்/கடலோர நீரின் தரத்தை மேம்படுத்துதல்.
4. சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதன் மூலம் கொழும்பு நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் வசிப்பவர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல்.

### 6.நிதி முன்னேற்றம் (ரூ.மில்)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டுத் தொகை | 2023.12.31 வரை மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2024 ஆண்டுக்கு ஒதுக்கீடு | (2024.01.01-2024.12.31) மூன்றாவது காலாண்டு வரை முன்னேற்றம் | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 22,189 | 15,989 | 72% | 2,200 | 1300 | 59% | 17,289 | 77.9% |

### 7. 2024.12.31 ஆம் தகித்கு முன்னேற்றம்

7.1. 2023.12.31 ஆம் திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம் (A) – 96.8%.

7.2. வருடத்தில் முன்னேற்றம் 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை (B) – 1.2%

7.3. 2024.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) – 98%



திம்பிரகஸ்யாய பம்பியறை



பொரளை பம்பியறை

## .44. பெரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டம் – (GCWWIIMP)

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | 31,285 |
| 2 | கடன் உதவி மற்றும் நிதிகளை வழங்கும் நிறுவனங்கள் (ரூ.மில்) | ஆசிய அபிவிருத்தி வங்கி - 6,660<br>ஐரோப்பிய முதலீட்டு வங்கி – 16,500<br>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு – 8,125 |
| 3 | 3.1 கருத்திட்ட காலம் (ஆண்டுகள்)<br>3.2 ஆரம்பித்த ஆண்டு / இறுதி ஆண்டு | வருடங்கள் 11<br>2014 - 2025 |
| 4 | திட்ட அமுலாக்கல் பிரதேசங்கள் (மாகாணங்கள் / மாவட்டங்கள் / உள்ளூராட்சி நிறுவனங்கள் / பிரதேச செயலகப் பிரிவுகள் / கிராம அலுவலர் பகுதிகள் / கிராமங்கள்) | மேல் மாகாணம் / கொழும்பு மாவட்டம் / கொழும்பு மாநகர சபை பகுதி / கொழும்பு மற்றும் திம்பிரிகசாய பிரதேச செயலாளர் பிரிவுகள் / கிருள, நாரஹேன்பிட்டி, திம்பிரிகஸ்யாய, ஹெவ்லொக் டவுன், குருந்துவத்தை, கிருலப்பனை, பாமன்கட கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுகள் |

### 5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்

1. நகரம், அதன் நீர்வழிகள் மற்றும் கடல்களில் உள்ள மாசுபாட்டைக் குறைக்க சுகாதார சேவையின் செயல்திறனை அதிகரித்தல் மற்றும் இயளளவை விரிவுபடுத்தல்.
2. ஐக்கிய நாடுகள் சபையின் பேண்தகு அபிவிருத்தி இலக்கு (SDG) 6 (சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்) பங்களித்தல் மற்றும் மேம்பட்ட பொது சுகாதார சேவைகள் மற்றும் சிறந்த வாழ்வாதாரங்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தல்.
3. பாரிய கொழும்பு நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் சேவை அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் தொடர்புடைய நிதி அமைப்புகளின் நிலைபேர்தன்மையை மேம்படுத்தல்.

### 6. நிதி முன்னேற்றம் (ரூ.மில்)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டுத் தொகை | 2023.12.31 வரை மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2024 ஆண்டுக்கு ஒதுக்கீடு | (2024.01.01- 2024.12.31) மூன்றாவது காலாண்டு வரை முன்னேற்றம் | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| **தவணை 02** 1,743 | 1,741 | 99.89% | - | - | - | 1,741 | 99.89% |
| **தவணை 03** 29,542 | 6,367 | 21.55% | 5,500 | 18.3 | 0.33% | 6,385 | 21.61% |

### 7. 2024.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

7.1. 2023.12.31 ஆம் திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம் (A)

தவணை 02 – 57.27%

தவணை 03 – 20.18%

7.2 வருடத்தில் முன்னேற்றம் 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை(B)

தவணை 02 – கடன் வழங்கும் காலப்பிரிவு நிறைவடைந்துள்ளது.

தவணை 03 – 0.93%

7.3. 2024.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B)

தவணை 02 – 57.27%

தவணை 03 – 19.26%



நாராஹேன்பிட்ட பம்பியறை நிர்மாணம்



தலகொட்டுவ பூங்கா பம்பியறை நிர்மாணம்

## 4.5 அபிவிருத்தியடைந்துதுவரும் வலயங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருத்திட்டம் (RIDEP)

| | | |
|---|---|---|
| 1 | மொத்த முதலீடு (ரூ.மில்) | உள்நாடு = ரூ.மில். 3,474<br>வெளிநாட்டு = யென்.மில்.12,957<br>**மொத்தம் = ரூ.மில். 20,622**<br>(கடன் ஒப்பந்தத்தை கையொப்பமிடும் போது ரூ. 1= 0.706 யென் பிரகாரம்) |
| 2 | கடன் உதவி மற்றும் நிதிகளை வழங்கும் நிறுவனங்கள் (ரூ.மில்) | 12,957 JPY |
| 3 | 3.1 கருத்திட்ட காலம் (ஆண்டுகள்)<br>3.2 ஆரம்பித்த ஆண்டு / இறுதி ஆண்டு | 07<br>2017-2028 |
| 4 | திட்ட அமுலாக்கல் பிரதேசங்கள் (மாகாணங்கள் / மாவட்டங்கள் / உள்ளூராட்சி நிறுவனங்கள் / பிரதேச செயலகப் பிரிவுகள் / கிராம அலுவலர் பகுதிகள் / கிராமங்கள்) | வடக்கு மாகாணம்,<br>கிழக்கு மாகாணம்,<br>வட மத்திய மாகாணம், ஊவா மாகாணம் |

### 5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்

1. வறுமையை நேரடியாக அகற்றும் நோக்கத்தின் அடிப்படையில் அல்லது அது தொடர்பான அடிப்படை அளவுகோல்களின் அடிப்படையில் அந்தப் பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களின் அடிப்படை வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல்.
2. உயர்தர குடிநீரை வழங்குதல்.
3. நெல் அறுவடை மற்றும் இதர விவசாயப் பொருட்களை கொண்டு செல்வதற்கு கிராமப்புற வீதிகளை மேம்படுத்துதல். சிறுநீரகம் தொடர்பான நோய்களைத் தடுத்தல்.
4. நெல் விளைச்சலை அதிகரிப்பதற்காக தற்போது செயலற்ற நிலையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்துதல்.

### 6. நிதி முன்னேற்றம் (ரூ.மில்)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டுத் தொகை | 2023.12.31 வரை மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2024 ஆண்டுக்கு ஒதுக்கீடு | (2024.01.01-2024.12.31) மூன்றாவது காலாண்டு வரை முன்னேற்றம் | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 20,622.00 | 6,041.65 | 29.29% | 2,500.00 | 1,262.27 | 50.49% | 7,303.92 | 35.42% |
| .<br>வருடாந்த நிதி முன்னேற்றம் பணத்தின் அடிப்படையிலாகும். | | | | | | | |

### 7. 2024.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

7.1. 2023.12.31 ஆம் திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம்

(A) - 50.8% ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது 40% ஆக திருத்தியமைக்கப்பட்டது.

7.2. வருடத்தில் முன்னேற்றம் 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை (B) - JICA நிதியம் கிடைக்கப்பெறாத காரணத்தினால் முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

7.3. 2024.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) - %40



வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச செயலகப் பிரிவின் புதிய வேளார் சின்னக் குளம் நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் குழாய் பரத்தல்.



மொணராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச சபை எல்லையில் வெலன்ஹின்ன – கிரிகல்பொத்த வீதியின் U வகை பக்க கான் அமைத்தல்.



பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேச சபை எல்லைக்குள் மஹன்தேவல அணைக்கட்டு மற்றும் கால்வாய் புனரமைப்பு.



அநுராதபுரம் மாவட்டத்தின் கலென் பிந்துனுவெவ பிரதேச செயலகப் பிரிவில் ஹிம்புட்டுகொல்லாவ – கொலொன்கஸ்வெவ வீதி அபிவிருத்தியின் பின்னர்

**4.6 போக்குவரத்து தொடர்புகள் மற்றும் ஆதன முகாமைத்துவ கருத்திட்டம் - மாகாண வீதி அபிவிருத்திக் கூறு**

| | | |
|---|---|---|
| **1** | மொத்த முதலீடு (ரூ.மில்) | 16,352.3 |
| **2** | கடன் உதவி மற்றும் நிதிகளை வழங்கும் நிறுவனங்கள் (ரூ.மில்) | உலக வங்கி 16,352.3<br>இலங்கை அரசு 205.7 |
| **3** | 3.1 கருத்திட்ட காலம் (ஆண்டுகள்)<br>3.2 ஆரம்பித்த ஆண்டு / இறுதி ஆண்டு | 05<br>2019 **ஜனவரி** -2024 **ஜூன்** |
| **4** | திட்ட அமுலாக்கல் பிரதேசங்கள் (மாகாணங்கள் / மாவட்டங்கள் / உள்ளூராட்சி நிறுவனங்கள் / பிரதேச செயலகப் பிரிவுகள் / கிராம அலுவலர் பகுதிகள் / கிராமங்கள்) | **இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி நடைமுறைப்படுத்தப்படும்.**<br>*இந்தக் கருத்திட்டம் 2024.07.15 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. |

**5. கருத்திட்டத்தின் நோக்கங்கள்**

1. 09 மாகாணங்களில் வீதிகள் கி.மீ. 400 கார்பெட் (asphalt) மேம்பாடு.
2. மாகாண வீதிகள் அதிகாரசபை கட்டிடம் / திணைக்களப் பணியாளர்களின் திறன் விருத்தி.
3. மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்த வடிவமைப்பு மற்றும் வடிவமைப்பு பயிற்சி நிறுவனம் (Design Centre) இதன் மூலம் அனைத்து மாகாண பணிக்குழுக்களும் பயன்பெறவும் தேவையான தரவுகளை அமைப்பில் சேமிக்கவும் முடியும்.

**6. நிதி முன்னேற்றம் (ரூ)**

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டுத் தொகை | **2023.12.31 வரை மொத்த நிதி முன்னேற்றம்** | சதவீதம் (%) | **2024 ஆண்டுக்கு ஒதுக்கீடு** | **(2024.01.01-2024.12.31) மூன்றாவது காலாண்டு வரை முன்னேற்றம்** | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| FA 16352.3<br><br>DF 205.7 | 14,710.6<br><br>168.7 | 89.5%<br><br>82% | 1900<br><br>37 | 1641.7<br><br>37 | 86.4%<br><br>100% | 16352.3<br><br>205.7 | 100%<br><br>100% |

**7. 2024.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்**

7.1. 2023.12.31 திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம் (A) - 87 %
7.2. வருடத்தில் முன்னேற்றம் 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை (B) - 10 %
7.3. 2024.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) - 97 %



புத்தளம் வீதி



இஹலபுலியன்குலம வீதி கெகிராவ பிரதேச சபை

**4.7 ஆரம்ப சுகாதார பராமரிப்பு அமைப்புகள் அதிகாரமளித்தல் - மாகாண கூறு (PSSP)**

| | | |
|---|---|---|
| **1** | மொத்த முதலீடு (ரூ.மில்) | ரூ.மில். 27,994.95<br>அ.டொ.மில். **134**.15 |
| **2** | கடன் உதவி மற்றும் நிதிகளை வழங்கும் நிறுவனங்கள் (ரூ.மில்) | உலக வங்கி<br>ரூ.மில். 38,363.64 (அ.டொ.மில். **200**)<br>(அ.டொ.மில். 09 CERC நியதித்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டது.) |
| **3** | 3.1 கருத்திட்ட காலம் (ஆண்டுகள்)<br>3.2 ஆரம்பித்த ஆண்டு / இறுதி ஆண்டு | 05<br>2019 **ஜனவரி** -2024 **ஜூன்**<br>*இந்தக் கருத்திட்டம் 2024.06.30 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. |
| **4** | திட்ட அமுலாக்கல் பிரதேசங்கள் (மாகாணங்கள் / மாவட்டங்கள் / உள்ளூராட்சி நிறுவனங்கள் / பிரதேச செயலகப் பிரிவுகள் / கிராம அலுவலர் பகுதிகள் / கிராமங்கள்) | இலங்கையின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களை உள்ளடக்கி செயற்படுத்தப்படுகின்றது. |

**5. நோக்கம்**

தொற்றாத நோய்களின் அபாயத்தில் உள்ள குடிமக்களைக் கண்டறிந்து, அந்த நோய்களைக் கட்டுப்படுத்தி நிர்வகிப்பதன் மூலம் இலங்கையில் ஆரம்ப சுகாதார சேவையின் தரத்தை மேம்படுத்துதல்.

- **கருத்திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப்படும் பெறுபேறு**

1. 550 ஆரம்ப சுகாதார பிரிவுகளை கண்டறிந்து, 35 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 25% பேரை பதிவு செய்து, தொற்றாத நோய் தடுப்புக்கான பராமரிப்பு

சேவைகளை வழங்கி, அந்த நடவடிக்கைகளை தொடருதல்.
2. கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட 09 DLI இலக்குகளை அடைதல்.
3. மாகாண சுகாதார நிறுவனங்களின் புதிய கட்டிடங்கள் மற்றும் பிற கட்டுமானங்களை நிர்மாணித்தல் மற்றும் தற்போதுள்ள உள்கட்டமைப்பை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
4. ஆய்வகங்கள், ETU, மருந்து சேமிப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் புதிய கட்டுமானம்.
5. மருத்துவ மற்றும் மருத்துவம் அல்லாத உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
6. பணியாளர் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு.
7. சமூக விழிப்புணர்வு.
8. தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் பாகங்களை கொள்வனவு செய்தல்.
9. வழக்கமான ஆய்வக சோதனைக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துதல்.
10. பயன்பாட்டு வாகனங்களை கொள்வனவு செய்தல்.
11. குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், நோயாளிகளுக்கான காத்திருப்புப் பகுதி (Waiting Area Improvement) மேம்பாடு ஆகியவை நோயாளி பராமரிப்பு சேவையின் வசதிகளை அதிகரிக்கச் செய்தல்.

6. நிதி முன்னேற்றம் - வலயக் கூறு

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டுத் தொகை | 2023.12.31 வரை மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2024 ஆண்டுக்கு ஒதுக்கீடு | (2024.01.01-2024.12.31) மூன்றாவது காலாண்டு வரை முன்னேற்றம் | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 27,994.95 | 23,353.40 | 83% | 3,600.00 | 3,297.10 | 91.5% | 26,650.50 | 95% |




திரண்ட பௌதீக முன்னேற்றம் - மாகாண கூறு
2019-2024.12.31 வரை
120%
100%
80%
60%
40%
20%
0%
100%
5%
21%
45%
69%
95%
99.9%
1
கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்
2019.12.31 திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம்
2020.12.31 திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம்
2021.12.31 திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம்
2022.12.31 திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம்
2023.12.31 திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம்
2024.08.31 திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம்


350
300
250
200
150
100
50
0
124 129
308 308
132 132
108 108
174 174
71 71
195 196
57 57
6 6
11 12
79 79
புதிய நிர்மாணம்
பழுதுபார்ப்பு
மேம்படுத்தல்
அத்தியவசிய வர்த்தகப் பொருட்கள்
மருத்துவம் சாராத பொருட்கள்
விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
பயிற்சி மற்றும் திறன் விருத்தி
தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்
அச்சு நடவடிக்கைகள்
வாகனம் கொள்வனவு
வேறு செயற்பாடுகள்
வேலை நிறைவடைந்த உப கருத்திட்டங்கள்
அனுமதிக்கப்பட்ட உப கருத்திட்டங்கள்



தமன பிரதேச வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு



அவசர சிகிச்சைப் பிரிவு – ஆதார வைத்தியசாலை தம்புள்ளை

### 4.8 பிரதேச அபிவிருத்தி உதவிக் கருத்திட்டம் (LDSP)

| | | |
|---|---|---|
| **1** | மொத்த முதலீடு (ரூ.மில்) | ரூ.மில். 18,016<br>(அ.டொ. 100.84) |
| **2** | கடன் உதவி மற்றும் நிதிகளை வழங்கும் நிறுவனங்கள் (ரூ.மில்) | உலக வங்கி - ரூ.மில். 12,530<br>(அ.டொ.மில். 69.42 )<br>ஐரோப்பிய ஒன்றியம் - ரூ.மில் - 4,233<br>(அ.டொ.மில். 24.42)<br>இலங்கை அரசு ஸ்ரீ ரூ.மில். 1,253<br>(அ.டொ.மில். 7.00) |
| **3** | 3.1 கருத்திட்ட காலம் (ஆண்டுகள்)<br>3.2 ஆரம்பித்த ஆண்டு / இறுதி ஆண்டு | 5 வருடங்கள் 5 மாதங்கள்<br>2019.06.30 -2024.11.30<br>* இந்தக் கருத்திடடம் 2024.11.30 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. 2025.03.31 ஆம் திகதி வரை கருத்திட்டத்தின் இறுதிக் கணக்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன. |
| **4** | திட்ட அமுலாக்கல் பிரதேசங்கள் (மாகாணங்கள் / மாவட்டங்கள் / உள்ளூராட்சி நிறுவனங்கள் / பிரதேச செயலகப் பிரிவுகள் / கிராம அலுவலர் பகுதிகள் / கிராமங்கள்) | அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கிய வகையில் வடக்கு, வடமத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்கள் |

### 5. கருத்திட்டத்தின் நோக்கம்

உள்ளூராட்சி நிறுவனங்களின் திறன்களை வலுப்படுத்துவதன் மூலமும், அப்பகுதிகளில் பொருளாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலமும் பொதுமக்களுக்கு பொறுப்பான மற்றும் பொறுப்பு வாய்ந்த உள்ளூராட்சி சேவையை வழங்குதல்.

### 6. நிதி முன்னேற்றம் (ரூ.மில்)

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டுத் தொகை | 2023.12.31 வரை மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2024 ஆண்டுக்கு ஒதுக்கீடு | (2024.01.01-2024.12.31) வரை முன்னேற்றம் | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 18,016 | 6,943.15 | 38.5% | 7,050.00 | 6,751.33 | 95.7% | ***23,026.48**<br>(13,694.48 + 3332.00 +6000.00) | 76% |

(*மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ஆரம்ப அமெரிக்க டொலர் மாற்று விகிதத்தை (2019) அடிப்படையாகக் கொண்டது. எனவே, ரூபாயில் ஒட்டுமொத்த செலவு மொத்த மதிப்பிடப்பட்ட செலவை விட அதிகமாக இருக்கும். மேலும், ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 3,332.00 தொகையும் அடங்கும். கோவிட் நிதி மற்றும் பொருளாதார நெருக்கடிக்காக ஒதுக்கப்பட்ட தொகை. மேலதிகமாக ரூ.6,000.00 சேர்க்கப்பட்டதன் மூலம், ஒட்டுமொத்த முன்னேற்றம் ரூ. 23,026.43 ஆக உயர்ந்துள்ளது.)

**7. 2023.08.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

**7.1.** 2023.12.31 திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம் (A) – 70.14 %

**7.2.** வருடத்தில் முன்னேற்றம் 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை (B) – 29.86 %

**7.3.** 2024.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம் (A+B) - 100 %



BT4 – நிந்தவூர் முன்பள்ளிக் கட்டிடம்



PT 2 – பதுளை பிரதேச சபையின் உணவகத்தை மேம்படுத்தல்



வர்த்தக நிலையத்தை மேம்படுத்தல் - கல்னேவ

## 4.9 பொதுக்கல்வி நவீனமயமாக்கல் கருத்திட்டம் (GEM)

இந்தக் கருத்திட்டம் கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி அதிகாரிகளால் (PEAs) செயல்படுத்தப்படுகிறது. பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மாகாணங்களுக்கு நிதி முகாமை, கொள்முதல் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது.

| | | |
|---|---|---|
| **1** | மொத்த முதலீடு (ரூ.மில்) | அமெரிக்க டொலர் மில். 100 |
| **2** | கடன் உதவி மற்றும் நிதிகளை வழங்கும் நிறுவனங்கள் (ரூ.மில்) | உலக வங்கி 100 அமெரிக்க டொலர் |
| **3** | 3.1 கருத்திட்ட காலம் (ஆண்டுகள்)<br>3.2 ஆரம்பித்த ஆண்டு / இறுதி ஆண்டு | 06<br>2018/2019 – 2024/2025 |
| **4** | திட்ட அமுலாக்கல் பிரதேசங்கள் (மாகாணங்கள் / மாவட்டங்கள் / உள்ளூராட்சி நிறுவனங்கள் / பிரதேச செயலகப் பிரிவுகள் / கிராம அலுவலர் பகுதிகள் / கிராமங்கள்) | சகல மாகாணங்களும் |

**5. நோக்கம்**

ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் பொறுப்புடமையை வலுப்படுத்துதல்.

**6. நிதி முன்னேற்றம் (ரூ.மில்)**

இத்திட்டமானது கல்வி அதிகாரிகளாலும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சினாலும் மாகாணத் துறைகளுக்கான நிதி, கொள்முதல் மற்றும் சுற்றாடல் விடயங்களுக்காக தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது.

நமது அமைச்சகத்தின் மூலம் 2020,2021 மற்றும் 2023 வருடங்களுக்காக முறையே 400.92, 2672.32, 3613.69 மற்றும் 4998.86 தொகை செலவிடப்பட்டுள்ளது.

| A | B | B/A | C | D | D/C | B+D | (B+D)/A |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டுத் தொகை | 2023.12.31 வரை மொத்த நிதி முன்னேற்றம் | சதவீதம் (%) | 2024 ஆண்டுக்கு ஒதுக்கீடு | (2024.01.01-2024.12.31) மூன்றாவது காலாண்டு வரை முன்னேற்றம் | சதவீதம் (%) | திரண்ட முன்னேற்றம் | சதவீதம் (%) |
| 13,695.89* | 8,697.03 | 83% | 5,015.00 | 4,998.86 | 99% | 13,695.89 | 100% |

**7. 2024.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

7.1. 2023.12.31 ஆம் திகதிக்கு திரண்ட பௌதீக முன்னேற்றம் (A)

இந்தக் கருத்திட்டத்தின் நிதி ஒப்பந்தத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டுக்காக பின்வரும் பகிர்வு மற்றும் தொடர்பு சுட்டிகள் (Disbursement Link Indicators – DLIs)/ செயலாற்றுகைக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட நிபந்தனைகள் (Performance Based Conditions – PBCs) அடையப்பெற்றுள்ளன.

| | |
|---|---|
| ***DLI 1 - ஆங்கில மொழி கற்பித்தல் பெறுபேறு மேம்படுத்தல்*** | *இலக்கிடப்பட்ட 500 பாடசாலைகளில் குறைந்தது 60 சதவீத மாணவர்களுக்கு ஆங்கில மொழி கற்றல் முடிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கில மொழி கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதற்காக ஆங்கில மொழி கற்றல் (ELLE) திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 500 பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு நேரடியாக பயனடைவர்.* |
| ***DLI 2*** **- கணிதத்தில் கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல்** | இலக்கிடப்பட்ட 500 பாடசாலைகளில் குறைந்தது 80 சதவீத மாணவர்கள் தங்கள் கணிதம் மற்றும் மொழி கற்றல் விளைவுகளை மேம்படுத்தியுள்ளனர். குறைந்தபட்சம் 500 பாடசாலைகளில் உள்ள மாணவர்கள், கணிதம், மொழி கற்றல் விளைவுகளை மேம்படுத்த, கணிதம் கற்றல் மேம்பாடு (MLE) திட்டத்தின் கீழ் நேரடியாக பயனடைகிறார்கள் |
| ***DLI 3*** **- தொழில்ரீதியாகத் தகுதி பெற்ற புதிய ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்** | 20,000 ஆசிரியர்களுக்கு (50% பெண்கள்) மேலதிக தொழில்முறைத் தகுதிகளை வழங்குதல். |
| ***DLI – 4*** **விரிவாக்கப்பட்ட பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி முடிவுகளை அடையப்பெறுதல்.** | பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு பெறுபேறுகள் அடையப்பட்டுள்ளன - ஒவ்வொரு கல்வி வலயத்திலும் COVID-19 தொற்றுநோயைத் தடுப்பது மற்றும் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. |

**5. உள்நாட்டுக் கடன் மற்றும் மேம்பாட்டு நிதி (LLDF)**

**1. குறிக்கோள்**

மானியக் கடன் முறையின் கீழ் நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களில் பொதுப் பயன்பாட்டு சேவைகளை வழங்குவதற்கான உள்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வருமானம் ஈட்டும் திட்டங்களில் முதலீடு செய்வதற்குத் தேவையான நிதியை வழங்குதல் மற்றும் கடன் பணத்தையும் அது தொடர்பான மானிய வட்டியையும் திரும்பப் பெறுதல். மூலதன வடிவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தித் திட்டங்கள், கடன்களை வழங்குவதன் மூலம் அந்த நிறுவனங்களின் வலுவான சென்மதி நிலுவையை உருவாக்க ஒரு நிதி நிறுவனமாக செயல்படுகின்றது.

2. **பிரதான செயற்பாடுகள்**

**23** மாநகர சபைகள், **42** மாநகர சபைகள் மற்றும் **276** உள்ளுராட்சி சபைகள் உட்பட இலங்கையில் தற்போது நிறுவப்பட்டுள்ள **341** உள்ளுராட்சி மன்றங்களுக்குத் தேவையான நீண்ட கால நிதி வசதிகளை சலுகை வட்டி விகிதத்தில் வழங்குவது நிதியின் முதன்மை செயல்பாடாகும்.

3. **2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை செயலாற்றுகை**

2024 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நிதியானது உள்ளூராட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பு மற்றும் வருமானம் ஈட்டும் திட்டங்களுக்கு மானிய வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குவதுடன், குறிப்பாக நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வாக அந்த பாடப்பகுதிக்கு முன்னுரிமை அளித்து இத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பிரதமர் மற்றும் அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரின் முழு வழிகாட்டுதலின் கீழ், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திட்டங்கள், தகனக் கூடம் கட்டுமானத் திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் நூலகத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2024.08.30 ஆம் திகதி கடனுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திட்டங்களில் ஆணையர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் பின்வருமாறு.

| **தொ.இல** | **உள்ளூராட்சி மன்றம்** | **கருத்திட்டம்** | **பெறுமதி ரூ.** |
|---|---|---|---|
| 1 | அம்பகமுவ பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 5,000,000 |
| 2 | நுவரெலியா பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 4,480,000 |
| 3 | மஸ்கெலியா பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 1,760,000 |
| 4 | அக்குறணை பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 6,080,000 |
| 5 | மாத்தளை பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 4,800,000 |
| 6 | நாவுல பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 2,000,000 |
| 7 | கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 5,600,000 |
| 8 | மிஹிந்தலை பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 1,800,000 |
| 9 | கஹடகஸ்திகிலிய பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 6,000,000 |
| 10 | எலஹெர பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 4,800,000 |
| 11 | திம்புலாகல பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 11,648,000 |
| 12 | வெலிகந்த பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 3,299,280 |
| 13 | போப்பே போத்தல பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 7,280,000 |
| 14 | ஹபராதுவ பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 3,600,000 |
| 15 | கரந்தெனிய பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 2,400,000 |
| 16 | ரஜ்கம பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 2,400,000 |
| 17 | இமதுவ பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 3,600,000 |
| 18 | அக்மீமன பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 2,880,000 |
| 19 | அம்பலாங்கொட பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 7,200,000 |

| தொ.இல | உள்ளூராட்சி மன்றம் | கருத்திட்டம் | பெறுமதி ரூ. |
|---|---|---|---|
| 20 | அக்குரஸ்ஸ பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 5,600,000 |
| 21 | மாலிம்பட பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 4,800,000 |
| 22 | பிடபத்தர பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 4,800,000 |
| 23 | திஹகொட பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 4,800,000 |
| 24 | வீரகெடிய பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 4,800,000 |
| 25 | பதுளை மாநகர சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 14,000,000 |
| 26 | பேலியகொட நகர சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 2,400,000 |
| 27 | நாரம்மல பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 3,120,000 |
| 28 | வாரியபொல பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 8,800,000 |
| 29 | கலவானை பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 7,200,000 |
| 30 | கங்காவட்ட இஹல கோரலே பிரதேச சபை | வர்தத்தக கட்டிடம் | 30,000,000 |
| 31 | கடுகண்ணாவ நகர சபை | சுடலை | 20,000,000 |
| 32 | அனுராதபுரம் மாநகர சபை | இறுதிக் கிரியை மண்டபம் | 28,800,000 |
| 33 | போப்பே போத்தல பிரதேச சபை | சுடலை | 50,000,000 |
| 34 | கொட்டபொல பிரதேச சபை | வாராந்த சந்தை | 10,000,000 |
| 35 | அக்குரஸ்ஸ பிரதேச சபை | பொது நூலகம் | 12,000,000 |
| 36 | அக்குரஸ்ஸ பிரதேச சபை | இறுதிக் கிரியை மண்டபம் | 20,800,000 |
| 37 | திக்வெல்ல பிரதேச சபை | சுடலை | 20,000,000 |
| 38 | பதுளை மாநகர சபை | விளையாட்டு கட்டிடத் தொகுதி | 49,800,000 |
| 39 | ரிதீமாலியத்த பிரதேச சபை | மின்சாரம் வழங்கும் கருத்திட்டம் | 1,250,000 |
| 40 | பிபிலை பிரதேச சபை | வாராந்த சந்தை | 9,000,000 |
| 41 | சீதாவக்க பிரதேச சபை | அலுவலகக் கட்டிடம் | 100,000,000 |
| 42 | கெஸ்பேவ பிரதேச சபை | வர்தத்தக கட்டிடம் | 200,000,000 |
| 43 | பெல்மதுல்ல பிரதேச சபை | ஹெல பொஜுன் | 22,640,000 |
| 44 | எம்பிலிபிட்டிய பிரதேச சபை | அலுவலகக் கட்டிடம் | 48,000,000 |
| 45 | பலாங்கொடை நகர சபை | ஓய்வறை மண்டபம் | 16,000,000 |
| 46 | கஹவத்த பிரதேச சபை | நீர் கருத்திட்டம் | 21,280,000 |
| 47 | நீர்கொழும்பு மாநகர சபை | பொது நூலகம் | 118,800,000 |
| 48 | கொலன்னாவ நகர சபை | வர்தத்தக கட்டிடம் | 10,000,000 |
| | **மொத்தம்** | | **945,517,280** |

- **கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் பின்வருமாறு.**

| தொ.இல | உள்ளூராட்சி மன்றம் | கருத்திட்டம் | பெறுமதி ரூ. |
|---|---|---|---|
| 1 | கோட்டே மாநகர சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 50,000,000 |
| 2 | கடுவெல மாநகர சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 80,000,000 |
| 3 | கொட்டிகாவத்தை பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 20,000,000 |
| 4 | பன்வில பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 2,000,000 |
| 5 | உக்குவெல பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 7,000,000 |
| 6 | அலவ்வ பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 15,000,000 |
| 7 | உடுபத்தாவ பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 35,000,000 |
| 8 | கல்பிட்டிய பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 40,000,000 |
| 9 | ஆனமடுவ பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 20,000,000 |
| 10 | பலபிட்டிய பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 10,000,000 |
| 11 | ஹக்மான பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 10,000,000 |
| 12 | அகுனகொலபலஸ்ஸ பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 7,000,000 |
| 13 | மொனராகலை பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 20,000,000 |
| 14 | புத்தல பிரதேச சபை | சோலா தொகுதி கருத்திட்டம் | 15,000,000 |
| 15 | கொட்டிகாவத்தை பிரதேச சபை | சுடலை | 60,000,000 |
| 16 | பேலியகொட நகர சபை | இறுதிக் கிரியை மண்டபம் | 25,000,000 |
| 17 | தனமல்வில பிரதேச சபை | சுடலை | 20,000,000 |
| | **மொத்தம்** | | **436,000,000** |

- **புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களால் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொதுமக்களுக்கு பின்வரும் நன்மைகளை கொண்டு வரும் நோக்கத்துடன் பின்வரும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

i. புதிய ஆற்றல் உற்பத்தி செய்யப்படுவதால், மின்சார உற்பத்தி தொடர்பான தேசிய பிரச்சனைக்கு இது ஒரு தீர்வாகும்.

ii. தேசிய மின் தொகுப்பில் மேலதிக மின்சாரத்தை சேர்ப்பதன் மூலம், தேசிய உற்பத்தியை அதிகரிக்க 2024 முதல் 8 மாதங்களில் 1211 கிலோவாட் மின்சாரம் தேசியக் மின்கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

iii. உள்ளூராட்சி மன்றங்களில் உயரும் மின் கட்டணத்தை பூஜ்ஜியமாக்க முடியும்.

iv. சுற்றுச்சூழல் மாசடைதல் தடுக்கப்படுகின்றது.

v. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைக்கு உள்ளூர் அரசாங்கத் துறையில் உகந்த முதலீடுகளுடன் கூடிய சூழலை உருவாக்குதல் மற்றும் ஆற்றல்மிக்க பாதுகாப்பான நாட்டை நோக்கி நகர்வதற்கு இந்த நாட்டில் அதிகமான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

| தொ.இல | உள்ளூராட்சி மன்றம் | கருத்திட்டம் | பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| 1 | புத்தளம் நகர சபை | வர்த்தக கட்டிடத் தொகுதி | 3,430,000 |
| 2 | ஹக்மன பிரதேச சபை | சோலா தொகுதி | 6,360,000 |
| 3 | நுவரெலியா மாநகர சபை | வர்த்தக கட்டிடத் தொகுதி | 55,760,000 |
| 4 | பென்தோட்ட பிரதேச சபை | வர்த்தக கட்டிடத் தொகுதி | 8,130,300 |
| 5 | பாணந்துறை பிரதேச சபை | வர்த்தக கட்டிடத் தொகுதி | 2,855,300 |
| 6 | பலாங்கொடை பிரதேச சபை | வெலிஓய கருத்திட்டம் | 1,357,000 |
| 7 | வென்னப்புவ பி.எஸ். | சோலா தொகுதி கருத்திட்டம் | 17,557,768 |
| 8 | கேகாலை மக்கள் தொடர்பு | வர்த்தக கட்டிடத் தொகுதி | 1,043,390 |
| 9 | குலியலிதிய பி.எஸ். | வர்த்தக கட்டிடத் தொகுதி | 14,300,000 |
| 10 | நீர்கொழும்பு எம்.என்.எஸ். | நூலக நிர்மாணம் | 118,500,000 |
| 11 | கொட்டபொல பி.எஸ். | வர்த்தக கட்டிடத் தொகுதி | 5,500,000 |
| 12 | அனுராதபுரம் எம்.என்.எஸ். | இறுதிச் சடங்கு மண்டபம் | 9,398,612 |
| 13 | பேலியகொட என்.எஸ் | சோலா தொகுதி கருத்திட்டம் | 2,400,000 |
| 14 | பலாங்கொடை தேசிய நெடுஞ்சாலை | வர்த்தக கட்டிடத் தொகுதி | 5,000,000 |
| 15 | கங்கா இஹல கோரலே பி.எஸ். | வர்த்தக கட்டிடத் தொகுதி | 24,000,000 |
| 16 | எம்பிலிபிட்டிய பி.எஸ். | நூலக நிர்மாணம் | 2,700,000 |
| 17 | நாரம்மல பி.எஸ். | சோலா தொகுதி கருத்திட்டம் | 3,120,000 |
| | **மொத்தம்** | **345,642,370** | |

- நாடு முழுவதும் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் சேர்க்க முடியுமான இயளளவு கீழே காட்டப்பட்டுள்ளது.




- கடந்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட செயல் திட்டங்களுக்காக 2024.01.01 முதல் 2024.12.31 வரை வழங்கப்பட்ட கடன்களின் அளவு.

- **நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்த 2024 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஏனைய பணிகள்**

i. ஆசிய அறக்கட்டளையின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் உள்நாட்டுக் கடன் மற்றும் மேம்பாட்டு நிதிக்கான 2024 - 2028 வணிகத் திட்டத்தைத் தயாரித்து, அனுமதியளித்து செயற்படுத்தல்.

ii. புதிய கணினி அமைப்பை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

iii. ஆசிய அறக்கட்டளையின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் நிதி மற்றும் கடன் நடைமுறைகளின் குறியீடுகளைத் தயாரித்தல்.

iv. புதிய கடன் திட்டங்களின் அறிமுகம்.
   - சூரிய ஆற்றல் : சோலார் பேனல் திட்டங்கள்
   - சனிபா : ஆயுர்வேத மையங்கள்
   - அறிவு : நூலகக் கட்டுமானம்
   - நகர இணைப்பு: பயணிகள் போக்குவரத்து சேவைகள்
   - நிசல அரண : சுடலை

v. மாகாண மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆரம்பித்து 2024.08.14 ஆம் திகதி வடக்கு மாகாணத்தில் முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.

vi. மாகாண மட்டத்தில் தவணைக் கடன் மீட்புத் திட்டங்களை நடத்துதல்.

vii. உள்நாட்டுக் கடன் மற்றும் மேம்பாட்டு நிதி ஆணையை திருத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஒரு குழுவை நியமித்தல்.

viii. குறைபாடுகளைக் குறைக்கவும், செலவினங்களில் வெளிப்படைத் தன்மையை உருவாக்கவும் உள்ளக கணக்காய்வுப் பிரிவை உருவாக்குதல்.

## 6. இலங்கை உள்ளுர் ஆளுகை நிறுவனம்

### 1. அறிமுகம்

- இலங்கை உள்ளுர் ஆளுகை நிறுவனம் 1999 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ளது.
- இந்நிறுவனத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதற்கும் முகாமை செயவதற்கும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் உட்பட 8 உத்தியோகபூர்வ உறுப்பினர்களும், கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 5 உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
- இந்த நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகள் பிரதம நிறைவேற்று அதிகாரியான பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படும்.

### 6. நோக்கங்கள்

1. மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களின் நிறுவன பலப்படுத்தல் மற்றும் நிர்வாகத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவுகளுடன் இணைந்து வேலைத்திட்டங்களை தயாரித்தல்.

2. மாகாண சபைகள் மற்றும் மாகாண அரசாங்க நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்களை தயாரித்து நடத்துவதற்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுக்கு உதவியளிப்பதன் மூலம் திறன்களை அபிவிருத்தி செய்தல்.

7. உள்ளுராட்சி அரசாங்கத்தின் பங்குதாரர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பிற தகவல்களை வழங்குவதன் மூலம் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான வள மையமாக செயற்படுதல்.

ix. தம்புள்ளை மாநகரசபையின் கடன் தொகையான 106 மில்லியன் ரூபாவை 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை.

8. தொடர்புடைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்த மாகாணங்களுக்கு மத்தியில் ஒருங்கிணைத்தல்.
9. மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சிகளுக்கான மத்திய நிறுவனமாகச் செயல்படுதல்.
10. மனித வள மேம்பாட்டில், முகாமைத்துவ அமைப்புகளை மேம்படுத்துதல்.
11. துணை-தேசிய நிர்வாக அமைப்புகளில் நிறுவன மாற்றங்களை எளிதாக்குவதில் நிபுணத்துவ உதவிச் சேவைகளை வழங்குதல்.
12. மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களை வலுப்படுத்துவதற்குத் திறமையான மற்றும் பயனுள்ள பயிற்சி ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி சேவைகளை வழங்குவதற்கு இலங்கை மாகாண அரசாங்கத்தின் நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துதல்.

### 3. பிரதான செயற்பாடுகள்

1. மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள், அதிகாரத்துவம் மற்றும் பணியாளர்கள் தங்கள் கடமைகளை மிகவும் திறமையாகவும் திறம்படவும் செய்வதற்கு பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மாகாண மற்றும் உள்ளுராட்சி நிர்வாகத்துடன் தொடர்புடைய பயிற்சிப் பாடநெறிகளை நடத்துதல்.

2. நிறுவனத்தினால் நடத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகளை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல்.

3. நல்லாட்சியை ஸ்தாபிக்கும் நோக்குடன் நாட்டில் அனுபவம் வாய்ந்த மாகாண

மற்றும் உள்ளூராட்சித் துறையில் அதிகாரத்துவம் மற்றும் பணியாளர்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்தல்.

4. மாகாண மற்றும் உள்ளூராட்சி நிர்வாகத்தில் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஏற்பாடு செய்தல்.
5. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிறுவன முறைமைகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் அந்தந்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உதவுதல்.
6. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் துறையில் ஆலோசனைத் தகுதியில் பணிகளை ஏற்றுக்கொள்ளல்.
7. மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளின் நிர்வாக அமைப்புகள் மற்றும் நடைமுறைகளை விமர்சன ரீதியாக மதிப்பிடுவதற்கான வளாகங்களை நிறுவுதல்.

8. மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலகுகள் (MDTUs) மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக அபிவிருத்தி மற்றும் பணியின் தரங்களை நிறுவுதல், இழப்பீட்டுத் திட்டங்களைத் தீர்மானித்தல் மற்றும் பொதுவாக மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலகுகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயல்திறனை விருத்திசெய்தல்.
9. நிறுவனத்தின் நோக்கங்கள் போன்ற அதே நோக்கங்களைக் கொண்டிருக்கும் இலங்கை அல்லது வெளிநாட்டில் அமைந்துள்ள மற்ற வெளி நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல்.

10. மாகாணங்கள் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகம் பற்றிய மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் பற்றிய புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளை வெளியிடுவதற்கு நிதியுதவி செய்தல், நடத்துதல் மற்றும் வெளியிடுதல்.
11. உள்ளூராட்சி தொடர்பான தேசிய கொள்கைகளை தயாரிப்பதற்காக அமைச்சருக்கு தேவையான தரவு மற்றும் தகவல்களை வழங்குதல்.
12. நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே தகவல்களைப் பரப்புதல்.
13. மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளின் அனைத்து அம்சங்களிலும் ஆராய்ச்சிகளை நடத்துதல், ஊக்குவித்தல் மற்றும் ஆதரித்தல்.

**13. 2024.01.01 முதல் 2024.12.31 ஆம் திகதி வரை செயலாற்றுகை**

| பிரிவின் பெயர் | செயலமர்வின் பெயர் | பௌதீக முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|
| | | திட்டமிட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை | பௌதீக முன்னேற்றம் (%) |
| பௌதீக திட்டமிடல் மற்றும் சுற்றாடல் பிரிவு | சுற்றுச்சூழல் அனுமதிகள் மற்றும் சட்ட செயல்முறைகளை வழங்குதல் | 01 | 01 | 100% |
| | நூலக உதவியாளர்களுக்கு மூன்று நாள் பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| பொறியியல் பிரிவு | குளிரூட்டல் தொகுதியின் பராமரிப்பு குறித்த பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| | நீர் குழாய் பொருத்தல் தொழில்நுட்பம் மற்றும் நீர் மோட்டார் நிறுவுதல் பற்றிய பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| | கொள்முதல் பற்றிய அடிப்படைகள் | 01 | 01 | 100% |
| | நிலைப்பேர்தன்மைக்கு உள்ளூராட்சியை டிஜிட்டல் மயமாக்குவது குறித்த விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| சட்டப் பிரிவு | உள்ளூராட்சி சட்டம் குறித்த பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| | சட்ட வரைவு பற்றிய பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரிவிதிப்பு மற்றும் வருமனம் சேகரிப்பு குறித்த பட்டறை | 01 | 01 | 100% |
| | ஒப்பந்த செயல்முறை மற்றும் சொத்து முகாமைத்துவம் குறித்த பட்டறை | 01 | 01 | 100% |
| | உள்ளூராட்சி அமைப்புகளில் நீதிமன்ற விவகாரங்கள் குறித்த பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| | உள்ளூராட்சி சட்டத்தில் சான்றிதழ் பாடநெறி | 01 | 01 | 100% |
| பொது முகாமைத்துவப் பிரிவு | அரசாங்க ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் நியமன நடைமுறைகள் குறித்த செயலமர்வு | 01 | 01 | 100% |
| | களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் பதிவேட்டறை பராமரிப்பு குறித்த பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| | சுய விபரக் கோவை பராமரிப்பு பற்றிய பயிற்சி செயலமர்வு | 01 | 01 | 100% |
| தகவல் தொழில்நுட்பப்ப ிரிவு | Proramme on Computer Hardware and Preventive Maintenance | 01 | 01 | 100% |
| | Programme on Web Development Using Word Process | 01 | 01 | 100% |
| | Programme on Graphic Design Using Canva | 01 | 01 | 100% |
| | Programme on Google Workspace | 01 | 01 | 100% |
| நிதி முகாமைத்துவப் பிரிவு | உள்ளூராட்சி அமைப்புகளின் நிதிநிலை அறிக்கை தயாரித்தல் மற்றும் வழங்குதல் குறித்த பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| | உள்ளூராட்சி அலவலர்களுக்கான சம்பளப் பரிமாற்றம் குறித்த பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| | நிதி முகாமைத்துவ டிப்ளோமா | 01 | 01 | 100% |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு | EXCEL for E- Governance and Research இரண்டு நாள் செயலமர்வு | 01 | 01 | 100% |
| | உள்ளூராட்சி நிறுவனங்களின் வருவாய் துறையின் செயல்திறனை மேம்படுத்துவது குறித்த இரண்டு நாள் செயலமர்வு | 01 | 01 | 100% |
| பயிற்சி மற்றும் ஆய்வுப் பிரிவு | உள்ளூராட்சி பற்றிய டிப்ளோமா | 01 | 01 | 100% |
| | உள்ளூராட்சி மன்றங்களில் நிர்வாக சிக்கல்கள் குறித்த பயிற்சிப் பட்டறை | 01 | 01 | 100% |
| | உள்ளூராட்சி அமைப்புகளில் வருமான சேகரிப்பு பிரச்னைகள் குறித்த செயலமர்வு | 01 | 01 | 100% |
| | உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை செயல்படுத்துவதில் எழும் பிரச்சனைகள் குறித்த செயலமர்வு | 01 | 01 | 100% |








**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்கு ஏற்புடைய ஆர்ய்சித் தரவுகளை சேகரித்தல்.**

- உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளின் தரவுத்தளத்தை தயாரித்தல்

தகவலைப் பெறப் பயன்படுத்தப்படும் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை -262

பதிலளித்த உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை - 194

முன்பள்ளிகள் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை - 28

| மாகாணம் | மாவட்டம் | பதிலளித்த உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை | முன்பள்ளிகளின் எண்ணிக்கை | ஆசிரியர்கள் | ஆசிரிய உதவியாளர்கள் |
|---|---|---|---|---|---|
| மத்திய | கண்டி | 12 | 25 | 34 | 1 |
| | நுவரெலியா | 5 | 13 | 20 | |
| | மாத்தளை | 5 | 18 | 22 | |
| தென் | காலி | 11 | 81 | 109 | |
| | மாத்தறை | 9 | 19 | 34 | |
| | ஹம்பாந்தோட்டை | 9 | 27 | 53 | |
| வட மத்திய | அனுராதபுரம் | 7 | 13 | 30 | |
| | பொலன்னறுவை | 8 | 14 | 29 | |
| வடமேற்கு | குருநாகல் | 12 | 37 | 89 | 1 |
| | புத்தளம் | 11 | 81 | 183 | 3 |
| சப்ரகமுவ | இரத்தினபுரி | 8 | 28 | 55 | |
| | கேகாலை | 10 | 20 | 34 | 5 |
| ஊவா | பதுளை | 13 | 32 | 51 | 8 |
| | மொனராகலை | 8 | 12 | 34 | |
| மேல் | கொழும்பு | 10 | 53 | 99 | 5 |
| | கம்பஹா | 12 | 43 | 68 | 3 |
| | களுத்துறை | 16 | 68 | 109 | 33 |
| | **மொத்த தொகை** | **166** | **584** | **1053** | **59** |

- உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் நாளாந்த /வாராந்த சந்தைகளின் தரவுத்தளத்தை தயாரித்தல்.

தகவல் பெற பயன்படுத்தப்படும் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை -262

பதிலளித்த உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை - 173

வாராந்த / நாளரி கண்காட்சிகள் இல்லாத உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை – 27

| மாகாணம் | மாவட்டம் | பதிலளித்த உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை | நாளாந்த /வாராந்த சந்தைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மத்திய | கண்டி | 9 | 17 |
| | நுவரெலியா | 5 | 8 |
| | மாத்தளை | 7 | 10 |
| தென் | காலி | 10 | 19 |
| | மாத்தறை | 7 | 15 |
| | ஹம்பாந்தோட்டை | 7 | 21 |
| வட மத்திய | அனுராதபுரம் | 9 | 11 |
| | பொலன்னறுவை | 5 | 16 |
| வடமேற்கு | குருநாகல் | 11 | 31 |
| | புத்தளம் | 8 | 22 |
| சப்ரகமுவ | இரத்தினபுரி | 16 | 29 |
| | கேகாலை | 10 | 14 |
| ஊவா | பதுளை | 8 | 17 |
| | மொனராகலை | 8 | 19 |
| மேல் | கொழும்பு | 6 | 16 |
| | கம்பஹா | 10 | 33 |
| | களுத்துறை | 10 | 20 |
| | **மொத்த தொகை** | **146** | **318** |

## 7. 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கும் எதிர்காலத் திட்டங்கள்

### ❖ அபிவிருத்திப் பிரிவு

1. உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் திட்டத்தின் (மூலதனம்) கீழ், குறைந்த வருமானம் உழைக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் வருமான மட்டத்தை அதிகரிப்பதற்கு குடிநீர் விநியோகம், சந்தை வசதிகள் போன்ற பொது உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவது தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல்.

2. பிரதேச சபை வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் (மீண்டுவரும் செலவினம்) கீழ் உள்ளூராட்சி மன்றங்களில் வாராந்த சந்தை, வடிகால் அமைப்புகள், பக்க வீதிகள், வாகன தரிப்பிடங்கள், சிறுவர் பூங்காக்கள், பொது சுகாதாரம் மற்றும் கழிவறை வசதிகள் போன்ற அத்தியாவசிய சமூக உட்கட்டமைப்புகளை பராமரித்தல் மற்றும் திருத்துதல் தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

### ❖ தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ உதவி நிலையம்

1. உள்ளூராட்சி மன்றங்களில் திண்மக் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு ‘‘Clean Sri Lanka’’ நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
2. குறைந்த வருமானமுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் நகர்புற கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை தரம் உயர்த்துதல்.
3. ATLAS கருவியைப் பயன்படுத்தி நாட்டின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் கழிவு முகாமையை தரவரிசைப்படுத்தல்.
4. வவுனியா மற்றும் பதுளை மாவட்டங்களை மையமாகக் கொண்டு KOICA உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் மேலதிக பணிகளை மேற்கொள்ளுதல்.
5. JICA உதவியின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்புகளால் அகற்றப்படும் மண்ணில் இருந்து விவசாய முக்கியத்துவம் வாய்ந்த உரங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டத்தின் மேலதிக பணிகளை மேற்கொள்ளல்.
6. மாகாணங்களில் நகர்புற திண்மக் கழிவு பிரதான திட்டத்தை தயாரித்தல் பற்றிய வழிகாட்டல்களைத் தயாரித்தல்.
7. கழிவு முகாமைத்துவ தரவுத்தளத்தை தயாரித்தல்.
8. தற்போதுள்ள குப்பை மேடுகளை சீரமைத்து புதிய குப்பைக் குவியல்கள் உருவாகாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க உள்ளூராட்சி மன்றங்களுக்கு உத்தரவிடுதல் வேண்டும்.

9. உள்ளுராட்சி நிறுவனங்களில் கழிவு முகாமையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டங்களை தொகுத்தல்.

10. உள்ளூராட்சி மன்றங்களில் உற்பத்தி செய்யப்படும் உரங்களுக்கான சந்தையை உருவாக்குவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

11. JICA நிதி உதவியின் கீழ் தயாரிக்கப்பட்ட மேல் மாகாண திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்.

12. கழிவு முகாமை தொடர்பில் ஏனைய தரப்பினர்களுடன் ஒருங்கிணைப்புடன் செயற்படுதல்.

13. கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்.

### ❖ மாகாண சபைகள் பிரிவு

1. மாகாணங்கள் மிகவும் திறம்பட மற்றும் வினைத்திறனுடன் இயங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தேவையான போது ஆலோசனைகளை வழங்குதல்.

2. மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளுக்கு இடையே முறையான ஒருங்கிணைப்பு பொறிமுறையை உருவாக்குவதற்கு மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களை தொடர்பு கொண்டு, காலாண்டுக்கு ஒருமுறை மாகாணங்களுக்கு இடையேயான பாட ஒருங்கிணைப்பு மாநாட்டை நடத்தி, மாநாட்டில் எழும் பிரச்சனைகளுக்கு ஒன்பது மாகாணங்களுக்கும் பொருத்தமான ஒருங்கிணைந்த முறைகளை அறிமுகப்படுத்தல் வேண்டும்.

3. மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி மன்றங்களுக்கான காணி சுவீகரிப்பு தொடர்பான நடவடிக்கைகள்.

4. சட்ட கட்டமைப்பைப் பாதுகாப்பது தொடர்பான அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளுக்கான அமைச்சரவைப் பத்திரங்களை தயாரித்தல், அத்துடன் மாகாண சபைகளின் பணிகளை விரைவாகவும் இலகுவாகவும் மேற்கொள்ளுதல்.
5. இல. 03/2014 முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண அரசாங்க சேவையில் புதிய பதவிகளை உருவாக்குதல் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பணியாளர் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
6. மாகாண சபைகளுக்கு வாகனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் மாகாணம் முழுவதும் சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு கடமைச் சலுகையுடன் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான பரிந்துரைகளை வழங்குதல்.
7. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் மேற்பார்வை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

### ❖ உள்ளுராட்சிப் பிரிவு

1. உள்ளுராட்சி நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட செயல்திறன் கருவியின் (2.0) கீழ், அனைத்து உள்ளுராட்சி நிறுவனங்களையும் மதிப்பீடு செய்து, 2025 ஆம் ஆண்டில் தேசிய சுவர்ணபுற விருது வழங்கும் விழாவை நடத்துதல்.
2. உள்ளுராட்சி நிறுவனங்களின் வருவாயை சேகரித்து கணக்கு வைப்பதற்கான தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை அறிமுகப்படுத்துதல்.
3. பொதுச் செலவின மீளாய்வுக் குழு (PERC) அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் உள்ளுராட்சி நிறுவனங்களை வலுப்படுத்த தேவையான கொள்கைப் பின்னணியை அமைத்து நடைமுறைப்படுத்துதல்.
4. உள்ளுராட்சி மன்றங்களின் எல்லைக்குள் சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்தல் கருத்திட்டங்களை நிறைவு செய்தல்.
5. உள்ளுராட்சி மன்றங்களின் வரிப்பணம் மதிப்பீட்டு செயல்முறையை மதிப்பாய்வு செய்து, சரியான நேரத்தில் மீட்டெடுக்கும் பொறிமுறையை வலுப்படுத்துதல்.
6. உள்ளுராட்சி மன்றங்களுக்கு பொதுவான மனித வள மேம்பாட்டு உத்தியை அறிமுகப்படுத்துதல்.
7. உள்ளுராட்சி மன்றங்களை வெளிநாட்டு உள்ளுராட்சி மன்றங்களுடன் சகோதர நகரம், நட்பு நகர ஒப்பந்தங்கள் மூலம் உள்ளுராட்சி மன்றங்களுக்கு வெளிநாட்டு தொழில்நுட்பம், திட்டங்கள்

மற்றும் கருத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
8. உள்ளூராட்சி மன்றங்களுக்கு செயலாற்றுகை ஒதுக்கீடுகளை வழங்குதல்.
9. மத்திய அரசாங்கம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபை ஒருங்கிணைப்பு.

### ❖ சட்டப் பிரிவு

1. அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளின்படி உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்தல்.

2. அரசாங்கம் எடுக்கும் கொள்கை முடிவுகளுக்கு ஏற்ப மாகாண சபை சட்டத்தில் திருத்தம் செய்தல்.

3. உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் புதிய விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் துணைச் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.

4. உள்ளூராட்சி மன்றங்களினால் சுயமாக உருவாக்கப்படும் வருமானத்தில் அதிக சதவீதத்தை உள்ளடக்கிய நீதிமன்ற அபராதம் மற்றும் முத்திரைத் தீர்வை நேரடியாக உள்ளூராட்சி மன்றக் கணக்கிற்கு மாற்றப்படும் வகையில் மாகாண சபைச் சட்டத்தில் வரவிருக்கும் திருத்தங்களை நிறைவு செய்தல்.

5. நீர்வெறுப்பு கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல்.

6. உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட சிக்கல்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

7. தற்போது கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுதல் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக்காலம்.

8. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுமக்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு பதில் அளித்தல்.
9. உள்ளூராட்சி மன்றங்களின் வருமான சேகரிப்பு முறையை முறைமைப்படுத்தும் திட்டத்தை துரிதப்படுத்தல்.
10. பொதுமக்களின் பங்கேற்புடன் உள்ளூராட்சி மன்றங்களை உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை திருத்துதல்.
11. தெரிவுசெய்யப்படவுள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

### ❖ நிர்வாகம் மற்றும் பயிற்சிப் பிரிவு

1. கண்டலம சுற்றுலா பங்களா சுற்றுலாப் பயணிகளை கவரும் பிரதேசத்தில் அமைந்துள்ளதால் அதனை மேம்படுத்தி இத்துறையில் வருமானம் ஈட்டும் இடமாக மாற்றுதல்

2. உத்தியோகத்தர்களின் அடிப்படைப் பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்களை நடத்துவதன் மூலம் உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்துதல்.

3. கொள்முதல் திட்டங்களுக்கு உட்பட்டு செலவுகள் குறைக்கப்படும் வகையில் வாகனங்கள் உட்பட மற்ற பராமரிப்பு பணிகளை திறம்பட செயல்படுத்த தேவையான ஏற்பாடுகளை செய்தல்.
4. தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மிகவும் திறமையான மற்றும் முறையான உற்பத்தித்திறனை அடைதல்

5. விதிகள் / ஒழுங்குமுறைகளின் பிராகாரம் பிரிவுகளின் நிதிச் செலவுகளைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

### ➢ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு

1. Empowering Local Government - A Comprehensive Digitalization Project for Local Government கருத்திட்டத்தின் மென்பொருள் அபிவிருத்தி. மேல் மாகாணம், தென் மாகாணம், ஊவா மாகாணம் ஆகியவற்றில் இந்த முறையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல்.

2. எமது மென்பொருள் பயன்படுத்தப்படும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் Payment Gateway வழங்குதல்.

3. வன்பொருள் மற்றும் மென்பொருள் சிக்கல்கள் உட்பட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விடயங்களில் உதவி வழங்குதல்.

4. அமைச்சின் இணையத்தள இற்றைப்படுத்தல்கள்.

5. அமைச்சின் முகநூல் பக்கத்தின் இற்றைப்படுத்தல்கள்.

6. அமைச்சின் ICTA வின் LGN 2.0 திட்ட நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை.

7. அமைச்சின் ஊழியர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்ப்பதற்கு தேவையான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல்.

8. அமைச்சில் காகிதமற்ற சூழலைப் பராமரிக்க மென்பொருள் அமைப்புகளை உருவாக்குதல்.

9. Zoom சந்திப்புகளுக்கான குறிப்புகளைத் தயாரித்தல் மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.

## ❖ நிதிப் பிரிவு

1. இணையவழி வங்கிமுறையினூடாக கொடுப்பனவு முறைமையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அனாவசிய தாமதங்களைத் தவிர்த்தல்.
2. Slip முறை மூலம் தெரிவுசெய்யப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

**3.** கொள்முதல் நடவடிக்கைகளை நெருக்கமாகக் கண்காணிப்பதற்கும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கும் கூகுள் ஸ்ப்ரெட்ஷீட்களைத் தயாரித்து இற்றைப்படுத்தவும்.

## ❖ செலவு சிக்கனப் பிரிவு

01. 2025 ஆம் ஆண்டில், மத்திய அரசாங்கத்தினால் மற்றும் மாகாண சபையின் வருமானம் கிடைக்கும் நிறுவனங்கள் மூலம் மதிப்பிடப்பட்ட செலவின வரம்புகளுக்கு உட்பட்ட வகையில் அவை செலவிடப்படுகின்றதா என்பது தொடர்பில் அந்த நிறுவனங்களால் தொடர்ச்சியான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கான மாகாண சபை நிதி செயல்திறன் அறிக்கைகளைத் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல், 2024 ஆம் ஆண்டு மாகாண சபையின் வருடாந்த நிதி செயல்திறன் அறிக்கைகள் 2024 ஆம் ஆண்டு தரவுகளின் அடிப்படையில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது

02. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக பராமரிக்கப்படும் 2024 ஆம் ஆண்டின் தரவுகளின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டிற்கான இற்றைப்படுத்தல்..

03. உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட தரவுத் தளம் 2024 ஆம் ஆண்டில் இற்றைப்படுத்தப்பட்டது. மேலும் அந்தத் தகவலை பகுப்பாய்வு செய்வதன் மூலம், 2025 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்களின் நிதி செயல்திறன் அறிக்கையைத் தயாரித்தல்.

04. இந்த அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் செயற்படும் வெளிநாட்டு உதவித் திட்டங்களின் நிதிச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் மாதாந்தம் பெறப்பட்டு, மாகாண சபையின் நிதிச் செயற்பாட்டு அறிக்கையில் தகவல் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இப்பணி 2025 ஆம் ஆண்டிலும் தொடரும்.

05. மாகாண சபைகளின் நிதி விடயங்களை ஆராய்வதற்காக, கணக்காய்வு வினாக்களுக்கான பதில்களை வழங்குதல், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல், வங்கி கணக்கிணக்க கூற்றைத் தயாரித்தல், கடந்த கணக்குகளை ஒப்பிடுதல், மேம்பட்ட கணக்குகளை ஒப்பிடுதல் போன்றவற்றிற்காக, மாகாண சபைகளின் காலாண்டுத் தகவல்கள் படிவத்தில் விசேடமாக தயாரிக்கப்பட்ட படிவங்களில் காண்பித்தல். அந்தத் தகவலைப் பயன்படுத்தி, தொடர்புடைய பணிகளின் முன்னேற்றம் ஆராயப்பட்டு, அந்தப் பணிகள் தொடர்பாக தற்போதுள்ள தாமதங்கள் அல்லது சிக்கல் நிலைகள் குறித்து மாகாண நிதி நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டிலும் இந்தப் பணி தொடரும்

06. மாகாண சபைகளின் நிதி விடயங்களின் ஒருங்கிணைப்பின் அடிப்படையில் மாகாண பிரதி பிரதம செயலாளர்கள் (நிதி) மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பங்கேற்புடன் 2025 ஆம் ஆண்டில் கூட்டங்களை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

07. தரவுப் பகுப்பாய்வு மற்றும் வினவல் அலகுடன் உள்ளூராட்சி மன்றங்களின் நிதி மற்றும் பௌதீக தகவல்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்.

08. உள்ளூராட்சி நிறுவனங்களின் 2025 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஆவணங்கள்

மற்றும் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைகள் அடங்கிய தரவுத்தளத்தைப் பராமரித்தல்.

09. இந்த அமைச்சினால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு, ஆனால் அந்த நிறுவனங்களால் கையகப்படுத்தப்படாத வாகனங்களை முறையாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

10. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக பல்வேறு அரச நிறுவனங்கள், சட்டரீதியான அமைப்புகள் மற்றும் பிற நிறுவனங்கள் அவ்வப்போது கோரும் தகவல்களை வழங்குவதன் மூலம் தேசிய மட்டத்தில் தீர்மானம் எடுப்பதற்கு உதவுதல்.

**உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

01. அமைச்சின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்:-

- வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அதன்படி வருடாந்த கணக்காய்வுகளை நடத்துதல்.
- உள்ளக கணக்காய்வுப் பிரிவின் ஆரம்பகட்ட அறிக்கையை வழங்குதல்.
- ஆண்டு செயல் திட்டத்தை தயாரித்து அதற்கேற்ப மாதாந்த முன்னேற்றத்தை அறிக்கையிடுதல்.
- முகாமைத்துவ கணக்காய்வுக்குழு கூட்டங்களை நடத்துதல்.
- கருத்திட்ட உள்ளக கணக்காய்வுக்குழு கூட்டங்களை நடத்துதல்.
- அமைச்சு மற்றும் வெளிநாட்டு கருத்திட்டங்கள் தொடர்பான காலாண்டு அறிக்கைகளை வழங்குதல்.
- அமைச்சின் கீழ் வெளிநாட்டு உதவித் திட்டங்கள் தொடர்பான கணக்காய்வுகளை நடத்துதல்.
- உள்நாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பான கணக்காய்வுகளை நடத்துதல்.
- எதிர்வரும் வருடம் (2026) க்கு கணக்காய்வுத் திட்டத்தை தயரித்தல்.
- எதிர்வரும் வருடம் (2026) க்கு உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயரித்தல்.

02. பொதுக் கணக்குக் குழு கூடும் போது பங்கேற்றல்.

03. அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைகளை நடத்துதல்.

### ❖ திட்டமிடல் பிரிவு

1. 2025 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் செயல் திட்டத்தை தயாரித்தல்.
2. 2024 ஆண்டுக்கான அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
3. நிறுவன பெறுபேற்று கட்டமைப்பை விருத்தி செய்தல்.
4. நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
5. Saemaul அறக்கட்டளையுடன் இணைந்து Saemaul கருத்திட்டம் தொடர்பான ஐந்தாண்டு பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல்.
6. இலங்கையில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கி தற்போது உருவாக்கப்பட்டு வரும் தேசிய அளவிலான தரவு பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் முறையை நிறுவி பராமரித்தல்.
7. புதிய கருத்திட்ட முன்மொழிவுகளை அடையாளம் காண்பதற்கும் கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிக்கவும் பகுப்பாய்வு (Need Analysis) முறையைப் பயன்படுத்தல்.

### ❖ கருத்திட்ட மேற்பார்வை பிரிவு

| | செயற்பாடுகள் | 2025 வருடாந்த இலக்கு காலாண்டுகள் 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|
| 1 | இந்த அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டங்கள், கருத்திட்டத்தின் அடைவுகளை நோக்கி ஒருங்கிணைப்புச் செய்தல். | ✓ | ✓ | ✓ | ✓ |
| 2 | வெளிநாட்டு உதவித் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும் அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் அவற்றின் பிரச்சினைகள் மற்றும் பலவீனங்களைப் பற்றி மத்தியஸ்தம் செய்யவும் கூட்டங்களை நடத்துதல். | ✓ | ✓ | ✓ | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | அந்தந்தக் கருத்திட்டங்களுக்கு ஏற்புடைய தேசிய தொழிற்பாட்டுக்குழு (NSC) கூட்டங்களை நடத்துதல் மற்றும் அதனூடாக எழக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்தல். | ✓ | ✓ | ✓ | ✓ |
| 4 | கருத்திட்டத்தின் முன்னேற்றத்தை பின்னூட்டம் செய்தல் மற்றும் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல். | ✓ | ✓ | ✓ | ✓ |
| 5 | மூடப்பட்டுள்ள மற்றும் நடந்துகொண்டிருக்கும் திட்டங்கள் தொடர்பாக எழும் சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு தொழில் வழங்குநராக தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளல். | ✓ | ✓ | ✓ | ✓ |
| 6 | இந்த ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டு முடிக்கப்பட வேண்டிய திட்டங்களை முறையாக நிறைவேற்றுவது தொடர்பான பணிகள் மற்றும் ஆவணங்களை தயாரிப்பதற்கு தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல். | ✓ | ✓ | ✓ | ✓ |

### ❖ பெரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவத் திட்டம்

பொரளை, திம்பிரிகஸ்யாய, வெஸ்ட்விக், மாளிகாவத்தை ஆகிய நீரேற்று நிலையங்களை பூர்த்தி செய்தல் மற்றும் வெஸ்ட்விக் குழாய் பதிக்கும் பணியை நிறைவு செய்தல் மற்றும் கொழும்பு மாநகர சபையின் கட்டுப்பாட்டின் கீழ் அவற்றின் செயற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளை பேணுதல், பெரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ திட்டத்தின் பணிகளை திறம்பட நிறைவு செய்தல்.

### ❖ பெரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம்

1. “கிருலப்பனை பகுதிக்கான புதிய புவியீர்ப்பு சாக்கடை, அழுத்த குழாய்கள் மற்றும் நீரேற்று நிலையங்களின் கட்டுமானம்” ஆகியவற்றில் நிலுவையில் உள்ள கட்டுமான பணிகளை மீண்டும் தொடங்குதல் மற்றும் பராமரித்தல்.
2. “கிருள - நாரஹேன்பிட்டி கழிவுநீர் வலையமைப்பு அபிவிருத்தி” பகுதியின் கட்டுமானப் பணிகளைப் பராமரித்தல்.
3. “கொழும்பு நகரின் தெற்கு பகுதியில் உள்ள கழிவுநீர் அமைப்பை சீரமைத்து விரிவாக்கம் செய்தல்” ஒப்பந்தம் வழங்கப்பட்டு கட்டுமான பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### ❖ வளர்ந்துவரும் வலயங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம் ( RIDEP)

தொடர்புடைய இரண்டு ஆலோசனை நிறுவனங்களும் பணிக்கு அழைக்கப்பட்டு, பணியை நிறுத்திவிட்டு பணியிடங்களை விட்டு வெளியேறிய ஒப்பந்ததாரர்களுடன் கலந்துரையாடி மீண்டும் பணியிடங்களுக்குத் திரட்டப்பட்டனர்.

2025 ஆம் ஆண்டிற்குள் நிலுவையில் உள்ள 30% பணிகளை முடிக்க இவ்வாறு திரட்டப்பட்ட ஒப்பந்ததாரர்களை வழிநடாத்தல்.

இந்தக் கருத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, 2024.12.18 ஆம் திகதி அனுமதி கிடைத்துள்ளது. ஆலோசனை நிறுவனங்களிடமிருந்து திருத்தப்பட்ட மதிப்பீடுகளைப் பெறுதல்.

### ❖ பொதுக் கல்வி நவீனமயமாக்கல் (GEM) கருத்திட்டம்

| | |
|---|---|
| ***DLI 4 – பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசியர் அபிவிருத்தி*** (School Based Professional Teacher Development - SBPTD) | வலயங்களில் ஆகக் குறைந்து 85% பாடசாலைகள் SBPTD பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளல். |
| ***DLI 5 –*** புதிய தொழில் தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல். | மேலதிக தொழில் தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்கள் 27,500 ஐ உருவாக்குதல். (அவர்களில் ஆகக் குறைந்தது 50% பெண்களாக இருத்தல்) |

***DLI 6*** – பாடசாலை தரச் சான்றிதழ் வழங்கும் பொருட்டு தேசிய தரவுத்தளம் ஒன்றை நிறுவுதல்.

குறைந்தபட்சம் 3,500 பாடசாலைகளின் பாடசாலை சமூகம் சார்ந்த தர உறுதி சுய மதிப்பாய்வு மற்றும் வெளிப்புற மதிப்பாய்வுகளை நிறைவு செய்தல்.

***DLI 7*** – பாடசாலகளை விருத்திசெய்வதற்கு மேம்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் (Enhanced Program for School Improvement - EPSI)

வலயங்களில் ஆகக் குறைந்து 85% பாடசாலைகள் EPSI பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளல்.

❖ **கிராமியப் பாலங்கள் கருத்திட்டம்**

கிராமப்புற பாலம் திட்டம் V கட்டம் 162 பாலங்களின் கட்டுமானத்தை நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

❖ **உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நியம் (LLDF)**

1. கடன் வழங்குவதைத் தாண்டி பணிகளைச் செய்யக்கூடிய ஒரு நிறுவனமாக அதை உருவாக்குதல்
2. கடன் வழங்கல் செயல்முறையை நெறிப்படுத்தவும் பணிகளை திறமையாக மேற்கொள்ள சிறந்த ஒரு பொறிமுறையை அமைத்தல்.
3. சிறந்த கணக்காய்வுக் கருத்தை பராமரித்தல்.
4. செயல்பாட்டு மற்றும் நிதி செயல்முறையை திறமையாகவும் வெளிப்படையாகவும் பராமரிக்க முறையான ஒருங்கிணைந்த கணினி அமைப்பை உருவாக்கி அறிமுகப்படுத்துதல்.
5. உள்ளூராட்சி மன்றங்களுக்குஇடையே ஒருங்கிணைப்பை உருவாக்க டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.
6. நிதியின் நிதி வலிமையை அதிகரிக்க வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
7. தேசிய அபிவிருத்தி தேவைகளுக்கு ஏற்ப கடன் வழங்கும் பகுதிகளை பல்வகைப்படுத்துதல்.
8. பொது மக்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மத்தியில் நிதி பற்றிய நல்ல கருத்தை உருவாக்க மாவட்ட / மாகாண மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்..
9. நிதியை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கும் அதனை நவீனமாகவும் மாற்றுவதற்கு சட்டத்தில் திருத்தம் செய்தல்.
10. சுழற்சி முறையிலான நிதியத்தை வலுப்படுத்தல்.

❖ **இலங்கை உள்ளுர் ஆளுகை நிறுவனம்**

1. **உள்ளுராட்சித் திணைக்களம்**

- கொள்முதல் அடிப்படை முறைகள் பற்றிய செயலமர்வு
- தொழில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் குறித்த பயிற்சி பட்டறை
- பொது தனியார் கூட்டாண்மை குறித்த பயிற்சி பட்டறை
- கொள்முதல் சான்றிதழ் பாடநெறி (கட்டணம் அறிவிடப்படுகிறது)

2. **பௌதீகத் திட்டமிடல் மற்றும் பொறியியல் திணைக்களம்**

- தேசிய பௌதீகத் திட்டமிடல் கொள்கை பற்றிய விழிப்புணர்வு பட்டறை
- நகர திட்டமிடல் குறித்த பயிற்சிப் பட்டறை
- 3R எண்ணக்கரு குறித்த பயிற்சிப் பட்டறை
- ஒப்பந்த நிர்வாகம் பற்றிய பயிற்சிப் பட்டறை
- கருத்திட்ட முன்மொழிவு தயாரிப்பு பற்றிய பயிற்சி பட்டறை (கட்டணம் அறவிடப்படுகிறது)
- சுற்றுச்சூழல் அனுமதி வழங்கல் மற்றும் சட்டச் செயல்முறைகள் குறித்த பயிற்சி பட்டறை (கட்டணம் அறவிடப்படுகின்றது)
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் திண்மக்கழிவு முகாமைக்கான சான்றிதழ் பாடநெறி

**3. பொது முகாமைத்துவம் மன்றும் சட்டத் திணைக்களம்**

- அணுகுமுறை மேம்பாடு மற்றும் நேர்மறை சிந்தனை பற்றிய பயிற்சிப் பட்டறை
- ஆரம்ப விசாரணை மற்றும் குற்றப்பத்திரிகைகளை எவ்வாறு வழங்குவது என்பது குறித்த விழிப்புணர்வு பட்டறை
- அலுவலக முகாமைத்துவ குறித்த பயிற்சி பட்டறை
- உள்ளூராட்சி சட்டம் குறித்த பயிற்சி பட்டறை
- உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் மற்றும் வரிவிதிப்பு குறித்த பயிற்சி பட்டறை
- உள்ளூராட்சி மன்றங்களில் சபை பணிகள் குறித்த பயிற்சி பட்டறை
- அரசாங்க ஊழியர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகள் குறித்த விழிப்புணர்வு பட்டறை (கட்டணம் அறவிடப்படுகிறது)
- தனிப்பட்ட கோப்பு பராமரிப்பு குறித்த பயிற்சிப் பாடநெறி (கட்டணம் அறவிடப்படுகிறது)
- நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்த பயிற்சி பட்டறை (கட்டணம் அறவிடப்படுகிறது)
- உள்ளூராட்சி மன்றங்களில் சொத்து முகாமைத்துவம் குறித்த பயிற்சி பட்டறை (கட்டணம் அறவிடப்படுகிறது)
- உள்ளூராட்சி சட்டத்தில் சான்றிதழ் பாடநெறி (கட்டணம் அறவிடப்படுகிறது)

**4. தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதி முகாமைத்துவ திணைக்களம்**

- இ - உள்ளூராட்சி நிர்வாகத்தில் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா
- கணினி சான்றிதழ் பாடநெறி
- வேர்ட்பிரஸ் பயன்படுத்தி இணையதள வடிவமைப்பு பற்றிய பயிற்சி
- QGIS மென்பொருளைப் பயன்படுத்தி வரைபடம் தயாரிப்பதில் பயிற்சி
- நட்பு உள்ளீடுகள் மூலம் உள்ளூர் ஆளுகையின் புத்தாக்கம் பற்றிய பயிற்சி
- சபை நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான வழிமுறை திட்டத்தை தயாரிப்பது குறித்த பயிற்சி
- உள்ளூராட்சி மன்றங்களின் நிதிநிலை அறிக்கைகள் (இறுதி கணக்குகள் தயாரித்தல்) தயாரித்தல் மற்றும் வழங்குதல் குறித்த பயிற்சி பட்டறை
- உள்ளூராட்சி வரவுசெலவுத்திட்டம் குறித்த பயிற்சி பட்டறை
- உள்ளூராட்சி மன்றங்களின் நிதி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி (கட்டணம் அறவிடப்படுகிறது)

**5. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு**

- உள்ளூாட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் நாளாந்த/வாராந்ம சந்தைகள் பற்றிய ஆய்வு
- உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளின் ஆராய்ச்சி ஆய்வு
- உள்ளூராட்சி மன்றங்களின் செயல்திறனை அளவிடுவதற்கான முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை (KPIs) உருவாக்குவதற்கான விழிப்புணர்வு பட்டறை
- விசாரணைச் செயல்பாட்டில் சான்றிதழ் பாடநெறி (கட்டணம் அறவிடப்படுகிறது)
- நூலக முகாமையில் சான்றிதழ் பாடநெறி (கோஹா மென்பொருள்) (கட்டணம் அறவிடப்படுகிறது)
- Excel for e-Governance and Research இரண்டு நாள் பட்டறை (கட்டணம் அறவிடப்படுகிறது).